# நக்கீரம்

## NAKKEERAM 2015



சட்ட மாணவர் இந்து மகாசபை, இலங்கைச் சட்டக் கல்லூரி

The Law Students' Hindu Maha Sabha, Sri Lanka Law College

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavahaham.org

*With Best Compliments from*

**Wellawatte (Land Side Opp Arpico)**

# Akshaya Towers

*Wealthy Way of Life*

No:22A, 37th Lane Wellawatte, Colombo- 6

1 Room, 2 Rooms, 3 Rooms
4 Rooms
Apartments available
**79 Lakhs upwards..**

On going Project



**Reservation 10 Lakhs**

- Swimming pool
- Gym
- Sauna
- Elevator 2 (Bed lift 1)
- Centralized (Line) Gas
- Jogging track
- Kids Playing area
- CCTV
- 24 Hour Security
- Individual Car Park
- Stand by Generator

Installment plan available

**Loan can be arranged**
(3 - 20 years 9.5% p a)

Bookings now open
contact- 0772 534622,0772534623

## Akshaya Projects (Private) Limited

No: 22A, 37th Lane Wellawatte, Colombo 06.T.P: 0777 370 292
E.mail: akshayatowers@gmail.com| www.akshayatowers.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."

FIAT JUSTITIA

# இலங்கைச் சட்டக்கல்லூரி
# சட்ட மாணவர் இந்து மகாசபை

**நக்கீரம் - 2015** **பொறி - 16**

இதழாக்கம் :

## சட்ட மாணவர் இந்து மகாசபை

244, புதுக்கடை வீதி, கொழும்பு – 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by
The Law Students' Hindu Maha Sabha
Sri Lanka Law College

**DISCLAIMER**

All views expressed in this publication are those of the respective authors and do not represent the opinion of Law Students' Hindu Maha Sabha or Sri Lanka Law College. Unless expressly Stated, the views expressed are the authors' own and are not to be attributed to any institution he or she may represent.

**REVIEWS, RESPONSES AND CRITICISMS**

Law students' Hindu Maha sabha welcomes your reviews, responses and criticisms of the content published in this issue.

The Editor,
Law Students' Hindu Maha Sabha,
Sri Lanka Law College,
244, Hulftsdrop Street,
Colombo - 12,
Sri Lanka.
Tel : 011-2323759

Designed & Printed by:
Unie Arts (Pvt) Ltd.,
48B, Bloemendhal Road, Colombo - 13.
Tel : 011 - 2330195



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாவர்க்கும் ஒரே நீதி

நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே
எந்த இடுக்கண் வரினும் நீதி வெல்லுமே.
ஆழ்வது யாராகினும் வெல்வது நீதியே
காப்பவன் கடவுள் என்றாலும்
பொங்கி எழும் நீதி
மங்கி மறையும் அநீதி
வாள் கொண்ட மன்னனுக்கும் மருவாத நீதி
கோல் கொண்டு அளந்தாலும் பிறழாத நீதி
தாழ் பணியும் பரமனுக்கும் பணியாத நீதி
வேல் கொண்ட பகைவரையும் வேரறுக்கும் நீதி
சதுரங்க வேட்டையில் விதி மீறும் சாமான்யனோ சத்திரியனோ
பேதம் இல்லை நீதி முன்னே
பார்வையில் பாரபட்சமில்லை
வாளுக்குச் சலனமில்லை
சிரம் வீழும் புவி மீதிலே
கரம் உயரும் வெற்றிக் களிப்பினிலே
அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்
அநீதி இழைத்தோர்க்கு நீதியே அறமாகும்
சிவனுக்கே நீதி புகட்டினார் நக்கீரர் அன்று - இவ்
உலகிற்கே நீதி புகட்ட வருகிறது எம் **நக்கீரம்** இன்று.

அட்டைப்பட வடிவமைப்பு - வை.சுபாஸ்கரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



*திருச்சிற்றம்பலம்*

## தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே.

## திருவாசகம்

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளேபுகுந்து புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

என்றும் இன்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி உலகெலாம்

## வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உ
சிவமயம்
குருபாதம்





# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

முதலாவது குருமஹா சந்நிதானம்

ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**ஸ்தாபிதம் : 1966**

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

021 222 2870

## அருள் ஆசிச் செய்தி



இலங்கையில் சட்ட மாணவர் இந்து சமய மகாசபை ஒவ்வொரு ஆண்டும் வெளிவரும் நக்கீரன் இதழ் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். மனிதன் மனிதனாக வாழ்வதற்குச் சட்டமும் நீதியும் இன்றியமையாதது. இதனை முறையாக படித்த சட்ட மாணவர்கள் தாங்கள் கற்றுக் கொண்ட சட்டக் கல்வியை கற்க இருக்கும் மாணவர்களுக்கு கையளிக்கும் முகமாக பல அறிவு சார்ந்த செய்திகளை மலராக வெளிவருவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்து சமயம் நீதியையும் சட்டத்தையும் நெறிப்படுத்திய பல வரலாறுகளைக் கொண்டுள்ளது. இதனை நெறிப்படுத்திச் சட்டக் கல்லூரி மாணவர்களின் "நக்கீரம்" என்னும் நூல் ஒவ்வொரு ஆண்டும் வெளிவருவது பாராட்டுக்குரியது. இப்பணி தொடர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
இரண்டாவது குருமஹாசந்நிதானம்.

20.06.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඩී. එම්. ස්වාමිනාදන්
නැවත පදිංචි කිරීම, ප්‍රතිසංස්කරණය හා හින්දු ආගමික කටයුතු අමාත්‍ය

டி. எம். சுவாமிநாதன்
மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

D. M. SWAMINATHAN
Minister of Resettlement, Reconstruction and Hindu Religious Affairs

Office
146, Galle Road.
Colombo 03, Sri Lanka.
Tel : 011 - 2395109
Fax : 011 - 2395105

Residence:
No. 125, Rosmead Place,
Colombo 07,
Sri Lanka.
Mob : 0777 352585

# பிரதம அதிதியின் வாழ்த்துச் செய்தி



சட்டமாணவர் இந்துமகாசபையின் 52 ஆவது அகவையில் காலடி எடுத்துவைக்கும் இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட சட்டமாணவர் இந்துமகாசபையின் பெருமை மிக்க வெளியீடான "நக்கீரம்" இதழானது சட்டத்துறை மற்றும் இலக்கியசார் கட்டுரைகளைத் தாங்கி வெளிவருவது சட்ட மாணவர்களுக்கு மட்டுமல்லாது சட்டத்தரணிகளுக்கும் பொதுமக்களுக்கும் பயனுள்ளதாகவுள்ளது.

தமிழ் மாணவர்களின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்புமே ஆண்டுதோறும் இக்கலைவிழா நடைபெறுவதற்கும் "நக்கீரம்" வெளிவருவதற்கும் காரணமாக அமைகின்றது. இம்மன்றம் மென்மேலும் தழைத்தோங்க எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

டி. எம். சுவாமிநாதன்

**டி. எம். சுவாமிநாதன்**
மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்.


13.07.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHIEF JUSTICE'S CHAMBERS,
SUPREME COURT,
COLOMBO 12,
SRI LANKA.
Fax : ++94 (0) 11 2437534
Tele : ++94 (0) 11 2422142
E-mail : scjlib@sltnet.lk

අග්‍රවිනිශ්චයකාර නිලමැදිරිය,
ශ්‍රේෂ්ඨාධිකරණය,
කොළඹ 12,
ශ්‍රී ලංකාව.
ෆැක්ස් : ++94 (0) 11 2437534
දුරකථනය: ++94 (0) 11 2422142



I have great pleasure in sending this message to the Law Students' Hindu Maha Sabha on the occasion of the release of the "Nakkeeram" Magazine. The "Nakkeeram" magazine annually published by the Law Students' Hindu Maha Sabha not only contains articles on subjects of particular interest to lawyers and law students and of general interest to others, but also provides the students with a forum to engage in the research of the law. It is indeed laudable that a small number of members of the Hindu Maba Sabha have been able to keep up a long record of publication.

It is also worth observing on an occasion like this that Hindu jurisprudence is one of the oldest known systems of the world and well over two thousand years ago Hindu classics such as the Laws of the Manu had set out in much detail the procedures of the judicial process, the rules of conduct to be observed by judges and the equitable principles on which justice should be administered.

It is my prayer that every member of the Law Students Hindu Maha Sabha should be a symbol of justice in all his dealings.

I wish the Law Students' Hindu Maha Sabha all success in its endeavours and activities and also hope that these initiatives will stimulate the membership to take a greater interest in their rich juristic heritage.

**K. Sripavan**
Chief Justice

13.07.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

නීතිපති නිල මැදිරිය
කොළඹ 12. ශ්‍රී ලංකාව.
சட்டத்துறை அதிபதியின் கூடம்
கொழும்பு 12, இலங்கை.
**Attorney-General's Chambers**
Colombo 12, Sri Lanka.

දුරකථනය
தொலைபேசி
Telephone
0112327166

ෆැක්ස්
பெக்ஸ்
Fax
0112381171

# Message from the Attorney General



I am very pleased to be invited to pen a few words to this year's issue of the *Nakkeeram Magazine*. I note that the past issues of the journal have been of high quality, containing well-written articles which span a wide range of subjects in law. It is no easy task to prepare a publication of this nature and I appreciate the hard work of all those students and advisors who have been involved in the process. The law is a constantly developing area of knowledge and it is essential that students are kept up to date with the latest legal developments. As such, the *Nakkeeram Magazine* provides a significant contribution to the continuous education of law students. In fact, giving students themselves an opportunity to publish articles is itself an advancement of learning. Through this exercise, law students can enhance their research, analytical and writing skills, without facing the stresses of examination. Therefore, the Law Students' Hindu Maha Sabha, which has been at the forefront of this publication, can certainly stand proud of its commitment to academic progress. I am hopeful that the *Nakkeeram Magazine* will have a future as illustrious as its past. I extend my congratulations to the Editor of the journal and the Committee of the Law Students' Hindu Maha Sabha.

**Hon. Y. J. W. Wijethilake PC**
Attorney General



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සංස්ථාගත නීති අධ්‍යාපන සභාව - ශ්‍රී ලංකා නීති විද්‍යාලය
கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவை - இலங்கைச் சட்டக் கல்லூரி
The Incorporated Council of Legal Education - Sri Lanka Law College
244, අළුත්කඩේ වීදිය, කොළඹ 12.
244, புதுக்கடைத் தெரு, கொழும்பு 12.
244, Hulftsdorp Street, Colombo 12.
තැපැල් පෙට්ටි අංකය / தபாற் பெட்டி இல. / P.O. Box No. 1501

# Message from the Patron



It's my pleasure to send blessings for the Annual Kalavizla and 52nd Edition of `NAKKEERAM' Journal. Hinduism is the oldest religion in the world. Even now that is one of the four major religions in the world. Originated in the Indian subcontinent, it has spread all over the world and is being professed by a large number of people speaking different languages. The Hindutva concept, which has its origin in reason times, has been accepted as the concept of identity of India even though it is a secular republic. Even in Sri Lanka Hinduism has been a part and parcel of its culture. Hinduism is closely associated with Buddhism which is the religion having the foremost place according to the Sri Lanka constitution. A Knowledge of Hindu Law would be useful to all the Law students since it deals with things like joint Hindu family, various schools of Hindu law which are useful to understand Indian culture.

I have been associated with Hindu Maha Sabha originally as a student of this college in the 1960's, then as an examiner and lecturer in the 1970's, 1980's and 1990's. Now I have great pleasure in wishing your Hindu Maha Sabha in my capacity as principal of Sri Lanka Law College.

**Dr. Jayatissa De Costa, PC,**
Principal,
Sri Lanka Law College.

06.07.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி



சட்டமாணவர் இந்து மாமன்றம் வழமை போல் இம் முறையும் "நக்கீரம்" மலர் வெளியீட்டையும் கலைவிழாவையும் நடாத்த இருப்பதையிட்டு நாமெல்லாம் பெரு மகிழ்ச்சியும் பெருமையும் அடைய வேண்டும்.

தமிழ் மக்கள் இன்னலுற்றிருக்கும் இவ்வேளையில், இந்து மாமன்ற உறுப்பினர்கள் தமது சேவையை தனியே சமய பணிகளுடனும் சட்ட மாணவர்களிடையேயும் மட்டும் மட்டுப்படுத்தி விடாது எமது மக்களிடையே சென்று சமூகப் பணிகளையும் செய்துள்ளார்கள் என்பதையிட்டும் நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

இம்மாணவர்களின் செயற்பாடுகளும், முயற்சிகளும், திறமைகளும் பாராட்டுக் குரியவை. இந்து மாமன்றமும், அதன் உறுப்பினர்களும் எதிர்காலத்தில் மேலும் சிறப்புற எனது வாழ்த்துக்கள்.

நன்றி

இவ்வண்ணம்.

**வி. புவிதரன்**
பெரும் பொருளாளர்
(சட்டத்தரணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் உள்ளத்திலிருந்து....



தமிழும் சைவமும் இரு கண்ணெனக் கொண்டு தொன்று தொட்டு விளங்கி வந்த எம் பெருமை மிகு கலாசாரத்தை இலங்கை சட்டக் கல்லூரியிலும் கடந்த வருடங்களாக பிரதிபலித்து வந்த சட்ட மாணவர் இந்து மகாசபைக்காக சேவை செய்யும் வாய்ப்புக் கிடைத்தமைக்காக எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறிக்கொண்டு,

எம் மாணவரின் எழுத்தாற்றலை சமூகத்திற்கு வெளிக் கொணரும் வகையிலும், சமூகம் பயனுறும் வகையிலும் பல ஆக்கங்களைத் தாங்கியவாறு வருடாவருடம் வெளிவரும் "நக்கீரம்" இதழானது இவ்வருடமும் தொடர்ந்தும் தனது தரங்குன்றாமல் வெளிவருவதற்காக எம்முடன் தோளோடுதோள் நின்று உழைத்த அனைத்து இந்துமகாசபை உறுப்பினர்களுக்கும் ஏனைய அன்பு நெஞ்சங்களுக்கும் எனது நன்றியைக் கூறிக்கொண்டு,

தொடர்ந்தும் இவ்விதழானது தடையின்றி வெளிவர எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி.

R. Keerthanan

**இ. கீர்த்தனன்**

தலைவர்,

சட்ட மாணவர் இந்து மகாசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரிடமிருந்து....



'எல்லாம் வல்ல இறைவனை நெஞ்சிலேற்றி நக்கீரம் மலர்ந்திடப் போற்றி'

எந்தவொரு வெற்றியும் தடைகள், இடையூறுகளுமின்றி முழுமையடைவதில்லை என்பது யதார்த்தம். அந்தவகையில் எமது இந்து மகாசபையும் விதிவிலக்காகி விடவில்லை. பல தடைகளையும் தாண்டி இன்று இந்த வெற்றியின் "நக்கீரம்" வெளிவருவதில் பெருமிதமடைகின்றேன்.

சட்டம், சமூக, சமய, கலாச்சார, இலக்கிய, அரசியல் ஆகிய விடயங்களை உள்ளடக்கி கிட்டத்தட்ட அரைநூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்ட நக்கீரத்துக்கு இம்முறை வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

நீதிக்கு இருப்பிடமாய் திகழும் 'நக்கீரம்' மலரினை இம்முறை வெளியிட்டு வைத்திருப்பது எமது மன்ற உறுப்பினர்களின் ஒற்றுமையையும் அயராத உழைப்பினையும் பறைசாற்றி இருக்கின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அந்தவகையில் எமது மன்ற உறுப்பினர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறந்த முறையில் இக்கலை விழா இடம் பெறவும் 'நக்கீரம்' மேலும் பல வரலாறு காணவும் சட்ட மாணவர் இந்து மகாசபை பல உயர்வுகள் கண்டு தனது பணியைத் தொடரவும் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

நன்றி.

R. [signature]

**இராமேஸ்வரன் ரஜிந்தன்**
பொதுச்செயலாளர்
சட்டமாணவர் இந்துமகாசபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் எழுதுகோலிலிருந்து....



"ஓர்ந்து கண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை"

என்ற குறட்பாவிற்கு இணங்க குற்றங்களை ஆராய்ந்து எவரிடமும் கண்ணோடாது நடுநிலையில் நின்று தக்க தண்டனை வழங்குதல் தான் நீதி என்ற நக்கீரர் நாமம் தனைப் பின்பற்றி, "நக்கீரம்" என்ற இதழை 52ஆவது வருடத்தில் புதுப்பொலிவுடன் வெளிவருவதையிட்டு இதழாசிரியர் என்ற வகையில் எனதுள்ளம் பெருமிதமடைகின்றது.

சட்ட மாணவர் இந்து மகாசபையின் பிரதானமான செயற்பாடாக விளங்குகின்ற "நக்கீரம்" இதழ் வெளியீட்டினை இவ்வருடமும் இந்து மகாசபை வெகுசிறப்பாகவே நிறைவு செய்துள்ளது. சமூகத்தையும் மக்களையும் சீர்படுத்தக்கூடிய ஆயுதங்களாக விளங்குபவை சமயமும் சட்டமும் தான் என்பதற்கு மாற்றுக்கருத்தில்லை. சமயம் மற்றும் சட்டம் என்று சுருக்கிக் கொள்ளாமல் பரந்த அடிப்படையில் சமூகம்சார்ந்த பல துறைகளையும் உள்ளடக்கியதாக இவ்விதழ் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். இவ்விதழானது சட்டக்கல்லூரி மாணவர்கள் மட்டுமல்லாது சட்ட ஆர்வலர்கள் மற்றும் பல்துறைசார் வாசகர்களுக்கும் பயன்பெறும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை நம்புகின்றோம்.

இவ்விதழினை திறம்பட அமைப்பதற்கு எனது வேண்டுகோளினை ஏற்று இம்மலர் வாசம் வீசுவதற்கு பொன்னான நேரத்தை ஒதுக்கி ஆக்கங்களைத்தந்து உதவிய நீதிபதிகள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் மாணவர்களுக்கும், ஆலோசனை நல்கியவர்களுக்கும், இவ்விதழை சிறப்பாக வெளியிட பல்வேறு வழிகளில் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய என் தோழர்களுக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மிகவும் உவகையடைகின்றேன்.

நக்கீரம் இதழானது தொடர்ந்து வருகின்ற காலங்களிலும் மேன்மேலும் சிறப்புற அமைய வேண்டும். இவ் வருட கலைவிழாவும், நக்கீரம் - 2015 வெளியீடும் சிறப்புடன் நடைபெற எல்லாம் வல்ல இறைவனின் ஆசியினையும் அருளினையும் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

செ. றொஷானி
இதழாசிரியர்
சட்ட மாணவர் இந்து மகாசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட மாணவர் இந்து மகா சபை
# செயற்குழு உறுப்பினர்கள் – 2015

## Law Students' Hindu Maha Sabha
## Executive Committee - 2015

---

**President - R.Keerththanan**

தலைவர் - இ.கீர்த்தனன்

**Vice President - N.Niranjithkumar**

உப தலைவர் - நி.நிரஞ்சித்குமார்

**General Secretary - R.Rajinthan**

பொதுச்செயலாளர் - இ.ரஜிந்தன்

**Asst. Secretary - A.Thileepkanthan**

உபசெயலாளர் - அ.திலீப்காந்தன்

**Treasurer - T.Chandrasekaran**

பொருளாளர் - தி.சந்திரசேகரன்

**Asst. Treasurer - V.Subaskaran**

உபபொருளாளர் - வை.சுபாஸ்கரன்

**Education Secretary - R.Ramana**

கல்விச் செயலாளர் - ர.ரமணா

**Editor - S.Roshaniee**

இதழாசிரியர் - செ.றொஷானி

## Committee Members

**S.Lalithadhas Sarma**
**R.Pramila**
**T.Nirojini**
**P.Illamurugan**
**R.Mayuri**
**S.Mayoora Ragavi**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE LAW STUDENTS' HINDU MAHA SABHA - 2015



**Seated (L/R) -** V.Puvitharan (Senior Treasurer), T.Chandrasekaran (Treasurer), R.Rajinthan (General Secretary) Hon.Justice K.J.Sripavan PC, R.Keerththanan (President , Dr.Jayatissa De Costa PC (Principal), S.Roshaniee (Editor), A.Thileepkanthan (Asst.Secretary)

**Standing ( L/R)** - R.Pramila, R.Mayoora Ragavi, N.Niranjithkumar, S.Lalithadhas, R.Ramana, P.Illamurugan, V.Subaskaran , R.Mayuri , T.Nirojini

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


01. சாட்சியம் - அதன் அவசியம் ஓர் கருத்தோட்டம் 01-08
அன்னலிங்கம் பிரேமசங்கர்,
மேல் நீதிமன்ற நீதிபதி, வடமாகாண மேல் நீதிமன்றம், வவுனியா

02. The Combating Torture In Sri Lanka Through International Human Rights Law 09-20
M. Elancheleyan,
LL.B(Col)., LL.M (Col), LL.M(Hongkong), High Court Judge, Jaffna

03. Religion and rights of child an analysis 21-27
Manikkavasagar Ganesharajah,
District Judge, Point Pedro

04. சட்டமும் கோவிலில் விலங்கறுத்தலும் 28-35
S.Selvakunapalan LL.B,
(Colombo) LL.M. (Malta), Senior Assistant Legal Draftsman,
Visiting Lecturer – Sri Lanka Law College

05. கட்டுரை இலக்கிய வளர்ச்சி 36-42
பேராசிரியர் சபா. ஜெயராசா

06. உலகமயமாக்கமும் வளர்முக நாடுகளில் மனிதவள விருத்தியும் 43-49
சோ. சந்திரசேகரன்,
முன்னாள் பேராசிரியர்

07. Underground water pollution: An emerging challenge to human health 50-52
Dr.S.Balakumar,
Senior Lecturer, Faculty of Medicine, University of Jaffna.

08. Insecurity in Security: Militarization in Post-war Northern Sri Lanka 53-65
Rajaratnam Rukshan,
B.A. (Hons.), Dip – in – International Relations, M.A. , Visiting Lecturer,
Dept. of Political Science and Public Policy, University of Colombo




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. கவிதை இலக்கியத்தில் புதுக்கவிதையின் பங்கு 66-76
ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

10. Improving Productivity and Mental Skills
**by using Mind Maps** 77-80
**S. Thilaganathan BA,**
MBA, FCMA, FIB, MCIM

11. **No Good Governance Without Human Rights Protection And Economic Opportunities** 81-88
**Dr.M.A.M.H. Barry,**
PhD, LLM,MA, LLB, BA

12. **Inclusive Development : Government focuses to uplift the quality of life of the Plantation Community** 89-92
**Mr.V.Sivagnanasothy,**
Secretary, Ministry of Plantation Infrastructure Development

13. அத்துமீறப்பட்ட பராயமடையாதவர்களின் காணிகளை
கால விதிப்புக்கட்டளைச் சட்டத்திற்கு அமைய மீட்டெடுக்க முடியுமா? 93-96
அருணகிரிநாதன் திலீப்காந்தன்
BBA (Hons), இறுதி வருடம், சட்டக்கல்லூரி

14. பண்டைய தமிழ்ச் சமூகத்தில் சட்டம் 97-104
நிரோஷா நாகலிங்கம்,
இறுதி நிலையாண்டு, இலங்கை சட்டக் கல்லூரி

15. உண்மையான ஜனநாயகத்தையும், சமாதானத்தையும்
ஏற்படுத்த 19 ஆவது திருத்தம் வழிவகுக்குமா? 105-107
சிவசுப்பிரமணியம் சிவசூரியா,
இறுதிநிலை ஆண்டு, இலங்கைச் சட்டக்கல்லூரி

16. சட்டமும் ஒழுங்கும் திணித்தலா? அல்லது ஆர்வமூட்டலா? 108-129
சிவலிங்கம் புராதனி BA(Colombo)
இறுதியாண்டு, சட்டக் கல்லூரி

17. விகிதாசார பிரதிநிதித்துவம் தொடர்பான விரிவான ஒரு பார்வை. 130-135
எம்.பி. வசிமுள் அக்ரம்,
இறுதிநிலை ஆண்டு, இலங்கை சட்டக்கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. புலமைச்சொத்துச் சட்டத்தின் கீழ் வியாபார குறிகள் மற்றும் பெயர்கள் எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றன? 136-142
றொஷானி செந்தில்செல்வன்,
இறுதிநிலை ஆண்டு, இலங்கைச் சட்டக் கல்லூரி

19. திருக்குறளில் அரசியலும் தற்கால அரசியல் சட்டமும் 143-152
எம். பரமேஸ்வரி BA (HONS),
இறுதிநிலையாண்டு, இலங்கை சட்டக் கல்லூரி

20. இலங்கையில் பொது சட்டத்தின் கீழ் மகவேற்பு (Adoption under the General law in Sri lanka) 153-158
நிரோஜினி திருஞானசம்பந்தர்,
இறுதிநிலை ஆண்டு, இலங்கைச் சட்டக் கல்லூரி

21. சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம் - சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் சட்டங்களும் 159-174
A.M.M Firnas, S.M.F. Rahma & I. Farzana,
Final Year, SriLanka Law College

22. இலங்கை அரசியல் அமைப்பில் நீதித்துறைச் சுதந்திரம். 175-181
காளிமுத்து கமலதாசன்,
இறுதியாண்டு, இலங்கைச் சட்டக் கல்லூரி

23. பெண்ணினம் கடந்து வந்த பாதை - ஓர் பார்வை. 182-185
V. சுபாகரன்,
சட்டக்கல்லூரி இறுதியாண்டு மாணவன், இலங்கை சட்டக் கல்லூரி

24. செம்மொழி நோக்கில் தமிழ் 186-189
இ.அல்வின் கமல்ராஜ்,
மூன்றாம் ஆண்டு, இலங்கைச் சட்டக்கல்லூரி

25. சட்டமும் அறமும் (Law and Ethics) 190-192
க.ந.தயாசீலன்,
சட்டக்கல்லூரி இறுதியாண்டு, சட்டமாணி (திறந்த பல்கலைகழகம்)

26. இந்து சமயமும் தத்துவங்களும் 193-195
நடராஜா வாஹீஷன்,
முதலாம் ஆண்டு, இலங்கைச் சட்டக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. **Law is A Necessary Evil** 196-198
**Tharsika Thirukumaranathan**
Preliminary Year, Srilanka Law College

28. **குற்றவியல் தடயங்களில் முக்கிய பங்கினை வகிக்கின்ற DNA சான்று** 199-200
**R. Peranavahh,**
Second Year Department of Legal Studies, Faculty of Humanities and Social Science, The open University of Sri Lanka

29. **கும்பாபிஷேகமும் அதன் மகிமையும்** 201-204
**க.பரமேஸ்வரன்**
இறுதிநிலை ஆண்டு, இலங்கைச் சட்டக்கல்லூரி

30. **வாழ்வு தரும் நீதி** 205-208
**பத்மா சோமகாந்தன்**
எழுத்தாளர்

31. **இயற்கை இசையின் வலிமையும் பெருமையும்** 209-212
**கலாநிதி ஸ்ரீ. தர்ஷனன்,**
யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர்

32. **இன்றைய காலகட்டத்தில் குடும்பங்களின் முக்கியத்துவம்** 213-215
**F. Shifna Cassim**
Final Year, Sri Lanka Law College

33. **இலங்கையில் பிணைச் சட்டத்தின் பின்புலம்** 216-222
**யோகராஜா தீபிகா**
இறுதிநிலை ஆண்டு, இலங்கைச் சட்டக் கல்லூரி

34. **தமிழில் நீதி** 223-224
**அருட்பிரகாசம் நிறோஷன்,**
முதல்நிலை ஆண்டு, இலங்கைச் சட்டக் கல்லூரி

35. **பின்னிணைப்பு** 225-234



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்சியம் – அதன் அவசியம் ஓர் கருத்தோட்டம்



**அன்னலிங்கம் பிரேமசங்கர்**
மேல் நீதிமன்ற நீதிபதி
வடமாகாண மேல் நீதிமன்றம்
வவுனியா

கல்தோன்றி மண் தோன்றாக் காலந்தொட்டு **ஆதாரம்** தேடும் பண்பு காணப்பட்டுள்ளது. **நிகழ்வு (Fact)** அல்லது **விடயம் (Subject)** அல்லது **தகவல் (Information)** ஒன்று தொடர்பில் ஆதாரத்தைத் கோரும் பாங்கு பல்லாண்டு காலமாக நடைமுறையில் இருந்து வருகின்றது. மனிதனின் ஆரம்பமான ஆதாம் ஏவாள் காலத்திலிருந்து ஆதாரம் தேடும் பண்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் காணப்படுகின்றது. பண்டைய காலங்களில் பாமரனாக இருந்த மனிதன் தன் **நடத்தை (Conduct)**, **செயல் (Act)**, **கருத்து (View)** க்களுக்கு ஆதாரங்களையே அடிப்படையாகக் கொண்டிருந்தான் என்பது வரலாறாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட **ஆதாரம்** என்ற விடயமானது பல்வேறு நடைமுறைகள் ஊடாக வழக்கம் பெற்று இன்றைய யுகத்தில் **சான்று** அல்லது **சாட்சியம் (Evidence)** என்ற பரிணாமத்தைப் பெற்றுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. ஆரம்பத்தில் ஆதாரமாகக் கொள்ளப்பட்டவை சட்டத்தின் முன்னிலையில் சாட்சியம் என்ற உருவத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடப்படுகின்றது. அது

**தமிழிலே "சாட்சியம்" என்றும்,**

**ஆங்கிலத்திலே "Evidence" என்றும்,**

**சிங்களத்தில் "சாக்சிய" என்றும்,**

**இலத்தீன் மொழியில் "எவிடென்ஸ் எவிடெறா"**

என்றும் அழைக்கப்படுகின்றது. இதன் அர்த்தமாக **வெளிப்படையான அல்லது பிரசித்தமான அல்லது நேரிடையான என்பது** கொள்ளப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் உதாரணமாக மிகவும் சிறியதொரு விடயம் குறிப்பிடப்படுகின்றது. முரளி என்பவர் அவரது அயல்வாசியாகிய பிரபுவை இரவு வேளையில் தாக்குகின்றார். இதனால் பிரபு மிகவும் பாரதூரமாக காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றார். சம்பவம் குற்றத்துடன் தொடர்புடையதாக காணப்படுவதால் பொலிசாருக்கு அறிவிக்கப்படுகின்றது. பொலிசார் தமது நடவடிக்கைகளை முடுக்கி விடுகின்றனர். இவ்விடத்தில் சேகரிக்கப்பட வேண்டிய சாட்சியம் பிரதான பங்கை வகிக்கின்றது. தாக்குதல் நடந்த இடம், அதன் பின்னணி, அதன் பின்னான நிகழ்வுகள் அதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் முன்னாயத்தங்கள், தாக்குதலுக்கான காரணம் என்பன பிரதானமாக அமைகின்றது. இந்த சூழ்நிலையில் முரளி 1990களில் சவுதியில் கடமையாற்றினார். 1998ல் நோர்வே சென்றார். 2004ல் நோர்வேயிலிருந்து நாடு கடத்தப்பட்டார். 2006 வரை மறியலில் வைக்கப்பட்டிருந்தார் போன்ற நிகழ்வுகள் தொடர்பற்றதாகின்றது. அதாவது தேவையான நிகழ்வுகளை வகைப்படுத்தி நிரல்படுத்த சான்றியல் சட்டத்தின் ஏற்பாடுகள் முக்கியமாகின்றது. அல்லாதுவிடின் ஒரு வழக்கில் தீர்மானம் மேற்கொள்ள முடியாதளவிற்கு அனைத்து விடயங்களும் ஒப்புவிக்கப்படும் என்பது குறிப்பிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சியம் அல்லது சான்று எனப்படும்போது வழக்கு ஒன்றின் போதான அதன் வகிபாகம் கவனிக்கப்பட வேண்டிய- தாகின்றது. குற்றவியல்(கிரிமினல்) வழக்கொன்றாயின் **குற்றவியல் நடவடிமுறைச் சட்டக்கோவை(Code of Criminal Procedure Act No:15 of 1979)** அவ்வழக்கின் **வாகனம் (Vehicle)** ஆகக் கொள்ளப்படுகின்றது. அதேபோல குடியியல்(சிவில்) வழக்கொன்றாயின் **குடியியல் நடவடிமுறைச் சட்டக்கோவை(Civil Procedure Code No: 2 of 1889)** அவ்வழக்கின் வாகனம் (Vehicle) ஆகக் கொள்ளப்படுகின்றது. இதேபோல பிற வழக்குகளிலும் கொள்ளமுடியும். இந்தவாறான வாகனம் பயணிக்கின்ற **பாதை (Way)** அல்லது **மார்க்கம் (Route)** அல்லது **வீதி (Road)** அல்லது **வழி (street)** ஆக சான்றுக் கட்டளைச்சட்டம் அமைகின்றது.

ஓரிடத்திற்கு செல்வதற்கு பல வீதிகள் காணப்படலாம் அல்லது குறுக்கு மறுக்காகவும் செல்லலாம். உதாரணத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதாயின் கண்டி வீதியால் பயணிக்க முடியும். இதேபோல புத்தளம் ஊடாக பயணிக்கலாம். மேலும் தலாவ, தம்புத்தேகம ஊடாக பயணிக்கலாம் அல்லது திருகோணமலை சென்று அங்கிருந்தும் கொழும்பு செல்லலாம்.

இவ்வாறாக பல வித மார்க்கங்களில் பயணிக்கும் போது அந்தந்த விதிமுறைகளின் வழியே பயணித்தல் வேண்டும். கண்டி வீதியால் பயணிப்பதாக கூறிக்கொண்டு புத்தளம் நோக்கி பயணித்தால் அப் பயணம் கண்டி வீதியில் பயணித்ததாக அமையாது என்பது குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறே வழக்கு ஒன்று முன்னெடுக்கப்படும் மார்க்கம் சான்றியல் சட்டத்தின் ஏற்பாடுகளின் மீது அமைகின்றது. ஒரு நிகழ்வு(Fact) அது அவசியமான சாட்சியங்கள் (Relevant Evidences), அதனுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வு தொடர்பான சாட்சியங்கள் (Related Evidences),முன்பின் நடத்தைக் கோலங்கள் (Previous and Subsequent Conducts), ஆயத்த ஏற்பாடுகள் (Preparations) என்பன அவசியமான சாட்சியங்களாக அமைகின்றது. இந்த வகையில் வழக்கொன்று தொடர்பில் ஒரு மார்க்கம் தீர்மானிக்கப்பட்டு சாட்சியம் வகைப்படுத்தப்பட்டால் அவ்வழக்கினை முன்கொண்டு செல்வது இலகுவாக இருக்கும் என்பது குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையில் நடைமுறையில் உள்ள சாட்சியம் தொடர்பிலான அடிப்படைச் சட்டமாக 1895ம் ஆண்டின் 14ம் இலக்க சான்றுக் கட்டளைச்சட்டம் (Evidence Ordinance No: 14 of 1895) காணப்படுகின்றது. 01.01.1896ல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டிருந்த குறித்த சான்று கட்டளைச்சட்டமானது இதுவரை பத்து (10) தடவைகள் திருத்தப்பட்டுள்ளது என்பது ஆச்சரியத்திற்குரிய விடயமாகும்.

**1904ம் ஆண்டின் 15ம் இலக்க,**
**1925ம் அண்டின் 16ம் இலக்க,**
**1927ம் ஆண்டின் 25ம் இலக்க,**
**1928ம் ஆண்டின் 18ம் இலக்க,**
**1946ம் ஆண்டின் 1ம் இலக்க,**
**1961ம் ஆண்டின் 3ம் இலக்க,**
**1988ம் ஆண்டின் 10ம் இலக்க,**
**1995ம் ஆண்டின் 14ம் இலக்க,**
**1998ம் ஆண்டின் 33ம் இலக்க,**
**1999ம் ஆண்டின் 32ம் இலக்க,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2005ம் ஆண்டின் 29ம் இலக்க** சட்டங்களினால் திருத்தப்பட்டு, நூற்றாண்டிற்கு மேலான பழமையான சான்றுக் கட்டளைச்சட்டம் இன்றும் அனைத்து சூழலுக்கும் ஏற்றவாறாக நடைமுறையில் இருந்து வருகின்றது. அண்மையில் ஸ்ரீலங்காவின் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 2015ம் ஆண்டின் 4ம் இலக்க குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம், மிகுந்த சிறப்பான காலத்திற்கேற்ற ஏற்பாடுகளைக் கொண்டுள்ளதாகக் கருதப்படுகின்றது.

இலங்கையின் சான்றுக் கட்டளைச்சட்டமானது 01.01.1896ல் அத்தாட்சிப்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளது. குறித்த சட்டமானது அக்காலத்தில் **இலங்கையில் காணப்பட்ட சான்றியல் தொடர்பிலான சட்ட ஏற்பாடுகளை தொகுப்பதற்கும் (Consolidate) வரையறை செய்வதற்கும் (Define), திருத்துவதற்கும் (Amend)** என யாக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையில் இருக்கும் குறித்த சான்றுக் கட்டளைச்சட்டம் 01 தொடக்கம் 13 வரையான அத்தியாயங்களைக் கொண்டதாக காணப்படுகின்றது. அவை 01லிருந்து 167 வரை இலக்கமிடப்பட்ட பிரிவுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. இலகுவான பாவனை முறைக்காக சான்றுக் கட்டளைச்சட்டமானது மூன்று பகுதிகளைக் கொண்டதாக பிரிக்கப்பட்டுள்ளது.

சான்றுக் கட்டளைச்சட்டத்தின் முதலாம் பகுதி **(Part 1) நிகழ்வுகளின் தேவைப்பாடு (Relevancy of facts)** தொடர்பில் கூறுகின்றது. 01 தொடக்கம் 55 வரையான பிரிவுகளைக் கொண்டதாக குறித்த பகுதி அமைந்துள்ளது. இதே வேளை பகுதி இரண்டாவது **(Part 11) எண்பிப்புத் (of Proof)** தொடர்பில் விபரிப்புக்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. பிரிவு 56லிருந்து 100 வரையான பிரிவுகள் பகுதி இரண்டில் வைக்கப்பட்டுள்ளது. பகுதி மூன்றானது **(Part 111) சாட்சிய முன்வைப்பு மற்றும் விளைவு (Production And Effect of Evidence)** தொடர்பில் கூறுகின்றது. பிரிவு 101 லிருந்து பிரிவு 167 வரையிலான ஏற்பாடுகள் குறித்த விடயதானத்தினுள் அடங்குகின்றது.

1895ம் ஆண்டு 14ம் இலக்க கட்டளைச்சட்டமானது **சான்றுக் கட்டளைச்சட்டம் (Evidence Ordinance)**என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. **இந்த கட்டளைச்சட்டமானது இராணுவ நீதிமன்றம்(Court Martial) தவிர்ந்த எல்லா நீதிமன்றங்களின் முன் நடைபெறும் எல்லா நீதிமுறையான நடவடிக்கைகளிற்கும் (All Judicial Proceedings) ஏற்புடையதாகும். ஆயினும் நடுத்தீர்ப்பாளர் (Arbitrator) முன் இடம்பெறும் நடவடிக்கைகளிற்கு ஏற்புடையதாகாதென சான்றுக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு இரண்டு பகர்கின்றது.**

சான்றுக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு மூன்றானது பொருள்கோடல் **(Interpretation)** பிரிவாக காணப்படுகின்றது. நீதிமன்றம், நிகழ்வு, தொடர்பு, ஆவணம், சான்று போன்ற பல சட்டச் சொற்கள் தொடர்பில் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது. பிரிவு ஐந்திலிருந்து பிரிவு பதினாறு வரையான ஏற்பாடுகள் நிகழ்வுகளின் தேவைப்பாடுகள் தொடர்பில் விபரிப்புக்களை வழங்குகின்றது. **ஒரு வழக்கு நடவடிக்கையில் பிணக்கிலுள்ள ஒரு நிகழ்வின் (Fact in issue) இருப்பு(Existence) அல்லது இருப்பின்மை(Non Existence) மற்றும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அதனுடன் தொடர்புடைய நிகழ்வுகள்(Relevant facts) தொடர்பில் மட்டுமே சாட்சியம் வழங்கப்படலாம் என்பது அடிப்படைத் தேவையாகச் சான்றுக் கட்டளைச்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டுள்ளது.**

இவ்வத்தியாயத்தில் ஒரே செயற்பாட்டின் போதான நிகழ்வுகளின் தேவைப்பாடு, பிணக்கிலுள்ள நிகழ்வுக்கு காரணமான அல்லது அதன் விளைவாய் அமைகின்ற நிகழ்வுகள், நோக்கம், எண்ணம், ஆயத்தங்கள், முன் பின்னான நடத்தைகள், அவசியமான நிகழ்வுகளை விபரிக்கும் நிகழ்வுகள், பொதுக்கருத்தின் போதான நிகழ்வுகள், மற்றும் இன்னோரன்ன வகையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளின் தேவைப்பாடு பற்றி விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த அத்தியாயத்தில் சான்றியல் தொடர்பிலான அடிப்படையான நிகழ்வு பற்றிய போதிய விளக்கங்கள் காணப்படுகின்றது. ஒவ்வொரு வழக்கினையும் அதன் தன்மைகளுக்கேற்ப நிகழ்வுகளை நிரல்படுத்தி மேற்குறித்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளில் ஒன்றின் கீழோ அல்லது பலதின் கீழோ கொண்டுவருவதன் மூலம் குறித்த வழக்கின் முன்னேற்றத்தினை வழிப்படுத்த முடியும் என்பது குறிப்பிடப்படுகின்றது.

சான்றுக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 17லிருந்து பிரிவு 31 வரையான ஏற்பாடுகள் சிறப்பான நியாயமான விளக்கத்திற்கு (fair Trial) அவசியமானதாகக் காணப்படுகின்றது. ஏற்புகளும் (Admissions), ஒப்புதல்களும் (Confessions) என்ற தலைப்பில் குறித்த ஏற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. **ஏற்பு** எனப்படும் போது **கீழ்நிரல்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், எவராயினும் ஒருவரால் ஒரு பிணக்கிலுள்ள நிகழ்வு அல்லது அவசிய நிகழ்வு பற்றிய ஏதாவது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் எழுத்தில் அல்லது வாய்மூலமாகவோ செய்யப்படும் வாக்கு- மூலமேயாகும்.**

சான்றுக் கட்டளைச்சட்டத்தின் ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பிலான ஏற்பாடுகள் சிலாகிக்கத்தக்கதாக அமைகின்றது. நியாயமான விளக்கம் ஒன்றிற்குத் தேவையான அடிப்படைகளைக் குறித்த ஒப்புதல் தொடர்பான ஏற்பாடுகள் கொண்டுள்ளது. **ஒப்புதல் (Confession)** எனப்படும் பொழுது **குற்றஞ்சாட்டப்பட்டவரால் சம்பந்தப்பட்ட குற்றமானது இழைக்கப்பட்டதாக அல்லது இழைக்கப்பட்டதாகக் கொள்ளப்படக்கூடியதாக எந்தவொரு வேளையிலும் செய்யப்படும் ஏற்பே ஒப்புதலாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.** மேற்குறித்தவாறான ஒப்புதலானது எவ்வேளையில் எவருக்கு செய்யப்படலாம் என்பது தொடர்பில் நல்ல பல ஏற்பாடுகளை சான்றுக் கட்டளைச்சட்டம் கொண்டுள்ளது. சான்றுக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 25, 26, 27 என்பன பொதுவாக பொலிஸாருக்கு மற்றும் அதிகாரத்திலுள்ளவர்களுக்கும் செய்யப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என விதந்துரைத்துள்ளது. சான்றுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 ஒப்புதல் வாக்குமூலமானது எவ்வாறு பெறப்பட வேண்டுமென்பது தொடர்பில் தெளிவாகக் கூறுகின்றது.

**தூண்டல் (Inducement),**
**அச்சுறுத்தல் (Threat),**
**வாக்குறுதி (Promise)**

என்பவற்றின் மீது அன்றி சுயமாகவும், எந்தவித கலக்கமுமின்றிய நிலையில் மேற் கொள்ளப்படும் போதே குறித்த ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கக்கூடிய சான்றாகும் என்பது குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையில் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத தடுப்பு (தற்காலி ஏற்பாடுகள்) சட்டமானது மேற்குறித்த சான்று கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளைத் தவிர்த்து நியாயமற்ற முறையில் ஒப்புதல் வாக்குமூலங்கள் பதிவு செய்ய இடமளித்துள்ளமை வருந்தத்தக்கதாகும்.

ஒருவர் இறக்கும் தறுவாயில் செய்யும் வாக்குமூலம் மரண வாக்குமூலமென (Dying Declaration) அடையாளப்படுத்தப்பட்டு பெறுதி வழங்கப்பட்டுள்ளது.

நடவடிக்கைகளின் போது மேற்கொள்ளப்படும் வாக்குமூலம், உறவுப் பிணைப்புக்கள் தொடர்பிலான விடயங்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்காறுகள் தொடர்பிலான விடயங்கள்.

விசேடமான பெறுமதியைப் பெற்றுள்ளன. இவை தொடர்பில் சான்றுக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 32லிருந்து 39வரையான பிரிவுகள் கையாள்கின்றது.

சான்றுக் கட்டளைச்சட்டத்தின் விசேடமான ஏற்பாடுகளாக நீதிமன்ற தீர்ப்புக்கள், தீர்வைகள், கட்டளைகள் என்பன பிறிதொரு வழக்கின் சான்றாகப் பயன்படுத்தப்படுவது தொடர்பிலான ஏற்பாடுகள் காணப்படுகின்றது. இதனைவிட நிபுணத்துவ சான்று தொடர்பாக சான்றுக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 45, 46, 47, 48, 49, 50, 51 என்பன விளக்குகின்றது.

குணவியல்வு (Character) சான்று பொதுவாக வழக்கு நடவடிக்கைகளில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகக் காணப்படுகின்றது. அவை தொடர்பில் பிரிவு 52 தொடக்கம் 55 வரை விளக்கமளிக்கப்படுகின்றது.

சான்றுக் கட்டளைச்சட்டத்தின் பகுதி இரண்டு எண்பிப்பு தொடர்பானதாகக் காணப்படுகின்றது. நீதிநெறிக் கவனததிற் (Judicial Notice) கொள்ளப்பட வேண்டிய பலவிதமான நிகழ்வுகள் தொடர்பில் சான்றுக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 57 விளக்குகின்றது. ஸ்ரீலங்காவில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலான கன்சாட், அரச இலச்சனை, குடியரசின் பெயர், தேசியக்கொடி, வீதிகள், கடல்மார்க்கங்கள் போன்றன நீதிநெறிக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாக பட்டியல்படுத்தப்பட்டுள்ளன. மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் எந்தவிதமான சான்றுகளும் இன்றி நீதிமன்றம் அதனைக் கவனத்திற்கு எடுக்கலாம் என்பது சட்டத்தின் ஏற்பாடாகக் காணப்படுகின்றது.

சான்றுக் கட்டளைச்சட்டத்தின் நான்காம் அத்தியாயம் வாய்மூல சாட்சியம் (Oral Evidence) தொடர்பில் இருக்கின்றது. பிரிவு 59ன் பிரகாரம் எல்லா நிகழ்வுகளும் வாய்மூல சாட்சியம் வழியாக எண்பிக்கப்படல் வேண்டும். ஆவணம் ஒன்றின் உள்ளடக்கங்கள் தவிர்ந்த அனைத்து நிகழ்வுகளும் வாய்மொழி மூலமான சான்றாகவே முன்வைக்கப்படலாம் என்பது ஏற்பாடாகக் காணப்படுகின்றது. வாய்மொழிச் சான்றானது நேரடிச் சான்றாகவோ (Direct Evidence) அல்லது சூழ்நிலை சான்றாகவோ (Circumstantial Evidence) அமையலாம் என்பது ஏற்பாடாகக் காணப்படுகின்றது. கேள்விச் சான்றுகள் (Hearsay Evidence) பொதுவில் அனுமதிக்கப்படாத தன்மை காணப்படுகின்றது. ஆயினும் சந்தர்ப்பங்களுக்கேற்ப கேள்விச் சான்று அனுமதிக்- கப்படக் கூடிய சந்தர்ப்பங்களுக்கான ஏற்பாடுகள் சான்றுக் கட்டளைச்சட்டத்தில் காணப்படுகின்றது.

சான்றுக் கட்டளைச்சட்டத்தின் அத்தியாயம் ஐந்தானது ஆவணச்சான்றுகள் (Documentary Evidence) தொடர்பில் பகர்கின்றது. ஆவணச் சான்றானது முதன்மைச் சான்றாகவோ (Primary Evidence) அல்லது இரண்டாம்தர சான்றாகவோ (Seccondary Evidence) அமையலாம் என்பது பிரிவு 61ன் ஏற்பாடாக உள்ளது. முதன்மைச் சான்று எனப்படும் பொழுது மூல ஆவணமே முற்படுத்தப்படல் வேண்டும். இரண்டாம்தர சான்று எனப்படும் பொழுது அனுமதிக்கப்படக்கூடிய வகையில் மூலஆவணத்தில் இருந்து பெறப்பட்ட பிரதி ஆவணமாக அமைகின்றது. பொதுவாக ஆவணங்கள் முதன்மைச் சான்றாகவே அமைய வேண்டுமென்பது ஏற்பாடாகக் காணப்படுகின்றது. ஆயினும் விதந்துரைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் உரிய நடை- முறைகளைப் பின்பற்றி இரண்டாம்தர சான்று முற்படுத்தப்படலாம் என்பது சான்றுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்க ஆவணங்கள் (Public Documents) என்ற தலைப்பில் பலவித ஏற்பாடுகள் சான்றுக் கட்டளைச்சட்டத்தில் காணப்படுகின்றது. அவை எவ்வாறாக முற்படுத்தப்படல் வேண்டும், அவ் ஆவணத்தின் எண்பிக்கும் பாங்கு என்பன பற்றி பிரிவுகள் 74, 75, 76, 77, 78 என்பன பகர்கின்றன. மேலும் ஆவணங்கள் தொடர்பிலான ஊகங்கள் பல சான்றுக் கட்டளைச்சட்டத்தில் காணப்படுகின்றது. பிரிவு 79 தொடக்கம் 90 வரை ஆவணங்களின் ஊகம் தொடர்பில் குறிப்பிடப்படுகின்றது. தத்துவப் பத்திரம் (Power of Attorney) ஒன்று தொடர்பிலான ஊகம் அளவையாளர் அதிபதியினால் பிறப்பிக்கப்பட்ட வரைபடங்கள், முப்பது(30) வருடங்களுக்கு முன் நிறைவேற்றப்பட்ட ஆவணங்கள் என்பன தொடர்பிலான ஊகம் அனுமதிக்கப்படக்கூடியதாக சான்றுக் கட்டளைச்சட்டத்தில் காணப்படுகின்றது. வங்கியாளரின் பதிவுகள் தொடர்பில் விசேட பெறுமதி வழங்கப்பட்டு பிரிவு 90A லிருந்து 90Fவரையான பிரிவுகள் கையாளுகின்றது.

இவ்வாறாக ஆவணச் சான்றுகள் தொடர்பில் பிரிவு 61 லிருந்து 99 வரை விளக்குகின்றது. இலங்கை பிரித்தானிய தேசத்தின் ஆளுமைக்குட்பட்டிருந்த காலத்தில் அக் காலத்திற்கு ஏற்ப ஆங்கில சட்டத்தின் ஏற்பாடுகள் இலங்கையின் நீதி நடவடிக்கைகளில் பங்களிப்புச் செய்யக்கூடியதான ஏற்பாட்டை சான்றியல் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 100 கொண்டுள்ளது.

சான்றியல் கட்டளைச்சட்டத்தின் இறுதிப் பகுதியாகிய மூன்றாம் பகுதியில் சாட்சியத்தை எவ்வாறு நெறிப்படுத்துவது. அதன் விளைவுகள் என்ன என்பது தொடர்பில் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. எண்பிக்கும் பொறுப்பு எவரிடம் உள்ளது என்பது தொடர்பில் அவ் அத்தியாயத்தில் ஏற்பாடுகள் காணப்படுகின்றது. ஒரு நிகழ்வை முன்வைப்பவரே அதனை எண்பிக்க வேண்டுமென்பது அடிப்படையானதாகும். வழக்கொன்று முன்வைக்கப்படும் பொழுது அங்கே சாட்சியம் முற்படுத்தப்படாதவிடத்து எவர் தோல்வி அடைகின்றாரோ அவரே எண்பிக்கும் பொறுப்பை கொண்டவராகக் கொள்ளப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஏற்பாடுகளில் விசேடமாக பிரிவு 108ஐ குறிப்பிடலாம். பிரிவு 108ஆனது ஏழு(7) வருடங்களுக்கு மேல் ஒரு நபர் தொடர்பிலான எந்தவித தகவல்களும் இல்லாத நிலையில் அவர் இறந்துவிட்டதாக ஊகம் கொள்ளப்படலாம். அதனை மறுப்பவரே அந்த நிகழ்வை எண்பிக்கும் பொறுப்பைக் கொண்டவர் என்பது ஏற்பாடாகும். 1988ல் கொண்டுவரப்பட்ட திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் குறித்த ஏழு(7) வருடமானது ஒரு (1) வருடமாக குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்படுகின்றது. தற்போதுள்ள ஏற்பாடுகளின்படி ஒரு(1) வருடத்திற்கு மேல் ஒரு நபர் தொடர்பில் எந்தவித தகவல்களும் இல்லாத நிலையில் அந்த நபர் இறந்திருக்கலாம் என்ற ஊகம் கொள்ளப்படலாம் என்பது குறிப்பிடப்படுகின்றது.

சான்றுக் கட்டளைச்சட்டத்தின் அத்தியாயம் பத்தானது(10) முரண்தடை (**Estoppel**) தொடர்பில் குறிப்பிடுகின்றது. ஒருவாறான நிலைப்பாட்டை முன்வைத்த ஒருவர் பின்னொரு வேளையில் அதற்கு முரணான நிலைப்பாட்டை முன்வைக்க முடியாது என்பதே குறித்த முரண்தடை வாதமாகக் காணப்படுகின்றது. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்படக்கூடிய முரண்தடை தொடர்பில் சான்றுக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 115, 116, 117 குறிப்பிடுகின்றது. **ஓர் வதிவிடத்திற்கு வாடகை செலுத்தும் ஒருவராக வதிவிட உரிமையாளரின் அனுமதியுடன் சென்ற ஒருவர் பின்னான சந்தர்ப்பத்தில் அந்த வாடகைத் தன்மையை மறுத்து வேறு விதமான நிலைப்பாட்டை முன்வைக்க முடியாது** என்பது உதாரணமாக குறிப்பிடப்படுகின்றது.

சாட்சியம் எனப்படும் பொழுது அதனை வழங்குபவர்கள் யார், எவ்வாறான தகுதிகளைக் கொண்டவர்கள் என்பது தொடர்பிலாக சான்றுக் கட்டளைச்சட்டத்தின் அத்தியாயம் பதினொன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(X1) குறிப்பிடுகின்றது. பிரிவு 118ல் சாதாரணமாக எவரும் சாட்சியமளிக்க தகுதியானவர்கள் என்பதாக காணப்படுகின்றது. **முதுமை, நோய், இளமை, மனோநிலை என்பன காரணமாக முன்வைக்கப்படும் வினாக்களுக்கு யதார்த்தமான பதில் வழங்க முடியாத நபர்கள் சாட்சியமளிக்க தகுதியற்றவர்கள்** என்பது ஏற்பாடாகக் காணப்படுகின்றது. கணவனுக்கெதிராக மனைவி சாட்சியமளிக்கலாமா? மனைவிக்கெதிராக கணவன் சாட்சியமளிக்கலாமா? என்பது தொடர்பில் பிரிவு 120 விளக்குகின்றது. அலுவலக ரீதியான தொடர்பாடல்கள், தொழில் ரீதியான தொடர்பாடல்கள் என்பன விசேட தகுதிகளைப் பெற்றவைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. சான்றுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 134ன் பிரகாரம் ஒரு நிகழ்வை எண்பிப்பதற்கு இத்தனை சாட்சிகள் அழைக்கப்பட்டு சாட்சியம் முன்வைக்கப்பட வேண்டும் என்பது தேவைப்பாடாக இல்லை. தெளிவான முறையான ஒரு நபரது சாட்சியம் மூலம் ஒரு நிகழ்வு எண்பிக்கப்படலாம் என்பது குறிப்பிடப்படுகின்றது.

வழக்கு நடவடிக்கைகளின் பொழுது சாட்சியம் நெறிப்படுத்தும் முறை தொடர்பில் பிரிவு 135லிருந்து பிரிவு 166 வரை காணப்படுகின்றது. சாட்சியின் முதல் விசாரணை (Examination in chief), குறுக்கு விசாரணை (Cross Examination), மீள் விசாரணை (Re Examination) என சாட்சிய நெறிப்படுத்தல் வகைப்படுத்தப்பட்டுள்ளது. விடைதொனி வினா(Leading Question) என்பது விசாரணையின் பொழுதான ஓர் விடயமாகக் காணப்படுகின்றது. சாட்சியிடம் வினாவப்படும் பொழுது பதில் வெளிவரும் வகையில் வினா முன்வைக்கப்படக் கூடாதென்பது சான்றுக் கட்டளைச்சட்டத்தின் முக்கிய ஏற்பாடாகக் காணப்படுகின்றது. சாட்சியம் அளிக்கும்போது ஞாபகமூட்டல் என்ற விடயத்தை அடிப்படையாகக் கொண்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்படலாம் என்பது ஏற்பாடாகக் காணப்படுகின்றது. வழக்கை விசாரிக்கும் நீதிபதி சாட்சியத்தை கேட்கும்போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் சான்றுக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 165 தெளிவாக விளக்குகின்றது.

சான்றுக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 167 இறுதியான ஏற்பாடாக அமைந்துள்ளது. மேலே விபரிக்கப்பட்ட அனைத்து வழிமுறைகளையும் மீறி சாட்சியம் ஒன்று அனுமதிக்கப்பட்டிருந்தால் அல்லது நிராகரிக்கப்பட்டிருந்தால் அதன் காரணமாக புதிய விளக்கம் இடம்பெற வேண்டிய தேவை இல்லை என்பது வரையறைகளுடனான ஏற்பாடாகக் காணப்படுகின்றது.

சான்றியல் சட்டம் தொடர்பில் அதன் ஒவ்வொரு ஏற்பாடுகள் தொடர்பிலும் பற்பல முற்தீர்ப்புக்கள் (Precedents) காணப்படுகின்றது. அவை அனைத்தையும் இப்பந்தியில் முன்வைக்கவோ ஆராயவோ முடியாதென்பது குறிப்பிடப்படுகின்றது. ஆயினும் சாட்சியம் என்றதும் நினைவில் தட்டுப்படும் மறக்கப்படமுடியாத சில வழக்குத் தீர்ப்புக்கள் கீழ் விபரிக்கப்படுகின்றது.

**த குயின் எதிர் எஸ்.சதாசிவம்** 55 **என்.எல்.ஆர்** 255

என்பது மிகவும் புகழ்பெற்ற வழக்காகும். எதிரி சதாசிவம் அக்காலத்தில் மிகவும் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர். அவரது மணவாழ்வில் அதிருப்தி. மனைவி நோய்வாய்ப்பட்டவராகவும் காணப்பட்டார். இந்நிலையில் சதாசிவம் திட்டமிட்டு அவரது மனைவியைக் கொலை செய்கின்றார். வழக்கின் போது எந்தவித நேரடிச் சான்றுகளும் முன்வைக்கப்படவில்லை. எனினும் இறந்த மனைவியின் இறுதிக் காலத்தின் போதான சில கடிதப் போக்குவரத்துக்கள் கைப்பற்றப்பட்டது. சான்றுக் கட்டளைச்சட்டத்தின் பிரிவுகள் 8, 11, 32 என்பன பெருமளவில் ஆராயப்பட்டு குறித்த சாட்சியங்கள் அனுமதிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**த குயின் எதிர் லியனகேயும் மறுபேரும் 67 என்.எல்.ஆர் 193**

இலங்கை அரசுக்கெதிராக சதிசெய்ததாக லியனகேயும் மறுபேரும் குற்றஞ்சாட்டப்பட்டனர். கூட்டுக்குற்றவாளியின் சாட்சி- யத்தின் அனுமதி தொடர்பில் ஆராயப்பட்டது. சான்றுக் கட்டளைச்சட்டத்தின் பிரிவுகள் 10, 24, 114 என்பன விலாவாரி- யாக ஆராயப்பட்டது.

**த குயின் எதிர் புத்தரகித்தவும் மற்றும் இருவரும்**
**63என்.எல்.ஆர் 433**

இலங்கையின் பிரதமர் ஸ்ரீமத் பண்டாரநாயக்காவை சுட்டுக்கொன்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள் மீதான வழக்கு. இதில் ஒப்புதல் வாக்குமூலமும், எதிரிக்கூண்டிலிருந்தவாறான வாக்குமூலம், கூட்டுக் குற்றவாளியின் சாட்சியம் என்பன பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. சான்றியல் கட்டளைச்சட்டத்தின் பிரிவுகள் 21, 24, 25, 27, 30, 91, 120, 142, 143, 157 என்பன விலாவாரியாக ஆராயப்பட்டுள்ளது.

**சோமரத்ன ராஜபக்சவும் மறுபேரும் எதிர் சட்டமா அதிபர்**
(கிருஷாந்தி குமாரசாமி வல்லுறவு வழக்கு)
(2010)2**எஸ்.எல்.ஆர்** 113

சில இராணுவ வீரர்களால் கடத்தப்பட்டு வல்லுறவிற்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட கிருஷாந்தி குமாரசாமி வல்லுறவு வழக்கு என பெயர் பெற்ற இந்த வழக்கில் சான்றியல் சட்டத்தின் பல ஏற்பாடுகள் ஆராயப்பட்டுள்ளது. சான்றியல் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 25, 27 பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. இராணுவ பொலிசாருக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் செல்லுபடியாந்தன்மை தொடர்பில் ஆழமாக விபரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தோட்டம் சான்றுக் கட்டளைச்சட்டம் தொடர்பில் மேலான பார்வையை மட்டுமே கொண்டுள்ளது. சான்றியல் தொடர்பிலான பரந்தளவைக் கொண்ட விடயதானம் தொடர்பில் சிறு ஆராய்வே இக்கருத்தோட்டமாகும். அடிப்படையான விடயத்தெளிவுகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலதிக விளக்கங்களுக்கு தேவையான நூல்கள் உதவ முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Combating Torture In Sri Lanka Through International Human Rights Law



**M. Elancheleyan**
LL.B(Col)., LL.M (Col), LL.M(Hongkong)
High Court Judge, Jaffna.

## I) Introduction

In Sri Lanka, Torture is not only the violation of fundamental rights under Art 11 of the Constitution (1978), but also the Criminal Offence under the Torture Act. No. 22 of 1994. The Supreme Court has sole Jurisdiction to hear the Violations of torture under Art 11 read with Art 126 (2) of the Constitution. The Court of Appeal shall have the jurisdiction to refer the matter of infringement of fundamental rights to Supreme Court for determination under Art 126(3) of the Constitution. The High Court has a jurisdiction to hear the offence of torture under the Torture Act No.22 of 1994.

## II) Ratification Of International Human Rights Convention By Sri Lanka

Sri Lanka has acceded to the covenant on Civil and Political Rights on the 11th of June, 1980, and acceded Convention Against Torture and other Cruel, Inhuman and Degrading Treatment or Punishment on the 3rd of January, 1994. Sri Lanka has enacted Legislation Torture Act No. 22 of 1994. Sri Lanka has acceded the Optional Protocol to the covenant on Civil and Political rights in 1997. In Banda Vs S.I.Gunaratne[1] Justice Amarasinghe has analysed the UN Convention Against Torture with Torture Act No. 22 of 1994 SriLanka.

### Justice Amarasinghe stated that

"Judicial Condemnation and the imposition of sanctions by way of requiring transgressors to personally contribute toward compensation assessed by the Court as being just and equitable in the hope that other persons may be deterred from violating Art 11 of the Constitution has meant very little. The Court's sense has been openly expressed.............I had in Saman Vs Leeladasa [1989] 1 SLR 1 at pp-42-43 raised doubts about the appropriateness and effectiveness of awarding compensation as a punitive measure ....I am of the view that a comprehensive approach must be adopted if satisfactory results are to be achieved. Art 2.1 of the United Nations Convention on Torture, which entered into force for Sri Lanka with effect from 2nd February, 1994, requires the state to take "effective Legislative, administrative , Judicial, or other measures to prevent acts of torture. Sri Lanka has enacted Legislation (Act No.22 of 1994) making 'torture' an offence.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The united Nations Convention stresses the need for education and certain procedural steps the state should adopt"

## Torture in Sri Lanka

### Introduction

The constitution of Sri Lanka (1978) declares the provisions of fundamental rights in chapter III. The prohibition of torture is guaranteed under Art 11 of the constitution. Art 11 of the constitution reads as follows "No person shall be subjected to torture or to cruel, inhuman or degrading treatment or punishment".

### Justiciability

Art 17 of the constitution refers the legal remedy under Art 126 of the constitution, in respect of the infringement or imminent infringement by "Executive or Administrative action". It is justiciable. Art 17 interprets that the violation of fundamental rights guaranteed under the constitution shall be inquired by the Supreme Court of Sri Lanka under Art 126.

Velmurugu Vs AG. Sharavananda J [2] (Minority judgment) held "this court has been constituted as the protector and guarantor of fundamental rights against infringement by state action of such right"

### Ratification of international human rights conventions

Sri Lanka ratified the ICCPR and optional protocol in 1980. And 1997 respectively. Sri Lanka has ratified the Convention Against Torture and enacted the Convention Against Torture and Other Cruel, Inhuman or Degrading Treatment or Punishment Act No.22 of 1994 Sri Lanka.

Sri Lanka parliament has enacted the Torture Act in 1994. Any person who tortures any other person shall be guilty of an offence, trial by the High Court.

"வேள்வி" என அறியப்படும் மிருகங்களையும் பறவைகளையும் பலி கொடுத்தலானது, சமயத்திலிருந்து ஊற்றெடுத்த நம்பிக்கையா என்ற வினா எழுகின்றது. கனகரட்னம் மற்றும் ஏனையோர் எதிர் சிறி போதிராஜ மன்றம் மற்றும் ஏனையோர் (S.C. spl. L.A. No. 258/2013) வழக்கில் உயர் நீதிமன்றம் பிரேமலால் பெரேரா எதிர் வீரசுரியா மற்றும் ஏனையோர் (1985 2 Sri L.R. 177) வழக்கின் தீர்ப்பை மேற்கோள் காட்டியது. அதாவது மதத்தில் ஊற்றெடுத்த நம்பிக்கை பாதுகாக்கப்பட வேண்டும். மதசார் நம்பிக்கை பாதுகாக்கப்படுவதற்கு தர்க்க ரீதியானதாகவோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்ளகூடியதாகவோ, இசைவானதாகவோ அல்லது விசாலமானதாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. அத்தகைய கோரிக்கை இயல்புக்கு மீறியதாக அல்லது செயல் நோக்கத்தில் தெளிவாக மதசார்பற்றதாக இருந்தாலொழிய, குறித்த நம்பிக்கையின் வரையறையினுள் வருகின்றதா என விசாரிப்பது நீதிமுறைப்பணி அல்லது நீதிமுறை தகுதியாந்தன்மையினுள் வரவில்லை. உயர் நீதிமன்றம், மதம்சார் நடைமுறை காலத்தால் ஞாபகப்படுத்த முடியாத புராதன மூலத்தைக் கொண்டிருந்த போதிலும் மதம்சார் நடைமுறை அதாவது செயல் நோக்கில் உயர் நீதிமன்றத்தின் கருத்தில் மதம் சாராத கருப்பொருள் கோரிக்கை நாட்டுச்சட்டத்திற்கு பிழையாக இருப்பின் அது சட்டத்தினால் வலிதாக்கப்படுதல் வேண்டும் எனக் கூறியது.

சிறி போதிராஜ மன்றம் எதிர் பொலிஸ் தலைமையதிபதி (CA. No. 510/2011) என்ற வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் கோவில் வளவுகளில் விலங்குகளை அறுத்து விலங்குகளின் உடலை இறைச்சியாக மாற்றுகின்ற ஆள் இறைச்சிக்கடைக்காரரின் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதாக தீர்ப்பளித்ததுடன் அவர்கள் கோவில் வளவுகளில் விலங்குகளைக் கொல்வதைத் தொடர்வதானால் அத்துடன் அறுத்து விலங்குகளின் உடலை இறைச்சியாக மாற்றுவதானால் இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உரிமமொன்றைப் பெறுதல் வேண்டும் எனவும் எடுத்துக் கூறியது. இதனை மேலும் வலியுறுத்துவதாக சிறி போதிராஜ மன்றம் எதிர் பொலிஸ் தலைமையதிபதி வழக்கின் மேன்முறையீட்டில் உயர் நீதிமன்றம் கனகரட்னம் மற்றும் ஏனையோர் எதிர் சிறி போதிராஜ மன்றம் மற்றும் ஏனையோர் (S.C. spl. L.A. No. 258/2013) வழக்கில் விழா நாளில் விலங்கறுத்து இறந்த விலங்குடலை இறைச்சியாக மாற்றுகின்ற ஆள் இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறாக இறைச்சிக்கடைக்காரர் என்னும் வரைவிலக்கணத்திற்கு வெளியே வரமாட்டார் எனத் தீர்ப்பளித்தது.

4ஆம் பிரிவின் கீழ் உரிமம் வழங்கப்படுவதற்கு நீண்ட நடவடிக்கை முறைகள் பின்பற்றப்பட வேண்டும். அதாவது உரிமத்தைப் பெற விரும்புகின்றவர் விண்ணப்பத்தைத் தோதான உள்ளூராட்சி சபையான மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபைக்கு கையளித்தல் வேண்டும். அவ்விண்ணப்பத்தில் விண்ணப்பிப்பவர் தனது பெயரையும் எவ்விடத்தில் விலங்கறுக்கும் மனையை நடாத்த விரும்புகின்றாரோ அவ்விடத்தையும் குறிப்பிடுதல் வேண்டும். உரிமத்திற்கான விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்ட விடயத்திற்கேற்ப, மாநகர முதல்வர் அல்லது தவிசாளர் அது சம்பந்தமான விபரங்களை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும். அத்துடன் எவ்விடத்தில் விலங்கறுக்கும் மனையை நடாத்த விரும்புகின்றாரோ அவ்விடத்திலுள்ள ஆட்களிடமிருந்து ஆட்சேபனைகளையும் கோருதல் வேண்டும். பெறப்படும் ஆட்சேபனைகளை விண்ணப்பதாரருக்குச் சேர்ப்பித்து அதன் பின்னர் விண்ணப்பதாரருக்கும் ஆட்சேபனை தெரிவித்த ஆட்களுக்கும் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்ட பின்னர் உரிமத்தை வழங்கலாம் அல்லது நிராகரிக்கலாம். இத்தகைய வழங்குவதற்கான அல்லது நிராகரிப்பதற்கான கட்டளை தொடர்பான காரணங்களுடன் விண்ணப்பதாரருக்கும் ஆட்சேபனை தெரிவித்த ஆட்களுக்கும் சேர்ப்பித்தல் வேண்டும்.

அவ்வாறு வழங்கப்பட்ட உரிமம் அல்லது நிராகரிக்கப்பட்ட விண்ணப்பம் தொடர்பில் ஆட்சேபம் தெரிவித்தவர் அல்லது விண்ணப்பதாரர் 10 நாட்களுள் அமைச்சருக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பம் தோதான உள்ளூராட்சி சபை ஊடாக அமைச்சருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் அது தொடர்பான முடிவை எடுத்தல் வேண்டும். விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருப்பின் 12ஆம் பிரிவின் கீழ் விண்ணப்பதாரர் தற்காலிக உரிமத்திற்கு விண்ணப்பிக்கலாம். உரிமத்தைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர் இரண்டு போதுமான பிணைகாரருடனும் 500ரூபாவுக்கு மேற்படாத தொகைக்கு முறியொன்றை நிறைவேற்றுதல் வேண்டும். உரிமமொவ்வொன்றும் 5ரூபாவுக்கு குறையாததும் 25ரூபாவுக்கு மேற்படாததுமான முத்திரையைக் கொண்டிருத்தல் வேண்டும். முத்திரைப் பெறுமதியை விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டுள்ள தோதான உள்ளூராட்சி சபை தீர்மானிக்கலாம். மேற்கூறப்பட்ட அத்தகைய நடவடிக்கைமுறைகள் தற்காலிக உரிமம் வழங்குகின்ற போது ஏற்புடையதாகமாட்டாது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் (AR/847/14) வழக்கில் பின்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளது.

> "எந்தவொரு சட்ட ஏற்பாடுகளிலோ அல்லது முற்றீர்ப்புகளிலோ கோவிலில் ஆடு, சேவல் பலியிடுதல் தண்டனைக்குரிய குற்றம் என்று கூறப்படவில்லை. அத்துடன் அச்செயல் குற்றமானதோ அல்லது சட்டமுரணானதோ என்று கூறப்படவில்லை."

சிறி போதிராஜ மன்றம் எதிர் பொலிஸ் தலைமையதிபதி (CA. No. 510/2011) என்ற வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் உரிமம் பெறப்பட வேண்டும் எனத் தீர்ப்பளித்துள்ளது. அவ்வுரிமமானது விலங்குகளான மாடுகள், எருதுகள், பசுக்கள், கன்றுகள் மற்றும் பழக்கப்படுத்தப்பட்ட எருமைகள், செம்மறியாடுகள், ஆடுகள், பன்றிகள், மற்றும் ஆமைகள் தொடர்பில் வழங்கப்படலாம். எனவே மேற்கூறப்பட்ட எவ்விலங்கையும் கோவிலில் அறுப்பது குற்றமானதாகவோ அல்லது சட்டமுரணானதாகவோ இருக்கமாட்டாது. குறித்த விலங்கை மட்டும் அறுப்பதற்கு உரிமமளிக்க இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் கீழோ அல்லது மாநகர சபைக் கட்டளைச்சட்டத்தின், நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் அல்லது பிரதேச சபைச் சட்டத்தின் கீழோ உள்ளூராட்சி சபைக்கு தத்துவம் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உரிமமளிக்கப்பட்ட இறைச்சிக்கடைக்காரர் ஒவ்வொருவரும் தன்னால் அறுக்கப்பட்ட விலங்குகள் பற்றிய விபரங்களை ஒவ்வொரு மாதமும் 7ஆந் திகதிக்கு முன்பதாக உரிய உள்ளூ ரதிகார சபையில் பதிவு செய்தல் வேண்டுமென இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் 13ஆம் பிரிவு ஏற்பாடு செய்கின்றது. 13(அ) என்னும் பிரிவின்படி ஆளெவரும் மாகாணத்தின் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கமைய நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் மட்டுமே இறைச்சியை விற்கவோ அல்லது விற்க வெளிக்காட்டி வைக்கவோ சட்டம் இடமளிக்கின்றது. இதனை மீறிச் செயற்படுவது தவறொன்றாகும். பலி முடிவடைந்ததன் பின்னர் இறைச்சியை கோவிலில் வைத்து விற்க முடியாது. அவ்வாறு விற்பதாயின் 13(அ) என்னும் பிரிவின் கீழ் கோவிலானது இறைச்சி விற்பனைக்கேற்ற விதமாக நிருமாணிக்கப்படுதல் வேண்டும். ஒரு கோவிலை அல்லது புனிதமான வழிபாட்டிடத்தை இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் கீழ் இறைச்சியை விற்க அல்லது விற்க வெளிக்காட்டி வைக்கமுடியுமா என்பது சமயம்சார் நிகழ்வு சம்பந்தப்பட்ட வினாவாகும்.

உரிமமளிக்கப்பட்ட இறைச்சிக்கடைக்காரர் விலங்கறுப்பதற்கு 24மணத்தியாலத்திற்கு குறையாத காலப்பகுதிக்கு முன்னர் தோதான உள்ளூராட்சி சபையினால் நியமிக்கப்பட்ட வசதியான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் பொதுமக்கள் பார்வையிடுவதற்கென அத்தகைய விலங்குகளை வெளிகாட்டி வைத்தல் வேண்டும். உரிமமளிக்கப்பட்ட இறைச்சிக்கடைக்காரர் அவரால் செய்துகொள்ளப்பட்ட முறியின் நிபந்தனைகளை மீறுமிடத்து, அவரால் வைத்திருக்கப்படும் உரிமம் வெற்றும் வெறிதாகும்.

சிறி போதிராஜ மன்றம் எதிர் பொலிஸ் தலைமையதிபதி (CA. No. 510/2011) என்ற வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் 1988 ஒகஸ்ட் 23ஆந் திகதிய 520/7ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விலங்கறு மனை தொடர்பான துணைவிதிகளை எடுத்துக்காட்டியுள்ளது. துணைவிதியின் 6ஆம் விதியின் நியதிகளின்படி எந்த விலங்கும் வேறொரு விலங்கின் முன்னிலையில் அறுக்கப்படுதலாகாது அத்துடன் முன்னதாக அறுக்கப்பட்ட ஏதேனும் விலங்கின் உடல் விலங்கறு மனையிலிருந்து அகற்றப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது அறுக்கப்படவுள்ள விலங்கின் பார்வையிலிருந்து மறைக்கப்படுதல் வேண்டும். அறுக்கப்பட்ட இடமானது முன்னதாக அறுக்கப்பட்ட விலங்கின் அடையாளம் தெரியாத விதமாக துப்புரவு செய்யப்படுதல் வேண்டும். அதன் பின்னரே மற்றைய விலங்கு விலங்கறு மனையினுள் கொண்டு செல்லப்படுதல் வேண்டும். இது விலங்கறு மனை தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய விதியாகும் கோவில் விலங்கறு மனையாக அனுமதியளிக்கப்படின் இத்தகைய நடவடிக்கைமுறைகள் கோவிலில் பின்பற்றப்பட வேண்டியது கட்டாயமானதாகும்.

## உள்ளூரதிகார சபைகள் தொடர்பான சட்டத்தின் வரம்பெல்லையினுள் விலங்கறுத்தல்

மாநகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 145ஆம் பிரிவு, நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 128ஆம் பிரிவு மற்றும் பிரதேச சபைச் சட்டத்தின் 102ஆம் பிரிவு விலங்கறு மனைக்கான உரிமத்தை வழங்க ஏற்பாடு செய்கின்றது. மேற்படி சட்டங்களின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி விலங்கறு மனைக்கான இடத்திற்கான உரிமம் மட்டுமே வழங்கப்பட முடியும். மாறாக விலங்கறுப்பவருக்கான ஆண்டு உரிமம் அல்லது தற்காலிக உரிமம் என்பன இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் 4ஆம் அல்லது 12ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட முடியும். மாநகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 145ஆம் பிரிவு, நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 128ஆம் பிரிவு மற்றும் பிரதேச சபைச் சட்டத்தின் 102ஆம் பிரிவின்கீழ் விலங்கறு மனைக்கான ஆண்டுக்கான உரிமம் வழங்கப்படுமிடத்து, அது இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் சொல்லப்பட்ட நடவடிக்கைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் எனக் கொள்ளப்படலாம். மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபை தொடர்பான இயைபான சட்டத்தின்கீழ் விலங்கறு மனைக்கான உரிமத்தை வழங்கும்போது விண்ணப்பதாரர் விலங்கறுப்பவராக இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் வழங்கப்பட்ட ஆண்டுக்கான உரிமம் அல்லது தற்காலிக உரிமத்தைக் கொண்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இதேவேளை ஒரு கோவிலை அல்லது புனிதமான வழிபாட்டிடத்தை மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபை தொடர்பான இயைபான சட்டத்தின் கீழ் விலங்கறு மனையாக உரிமமளிக்கலாமா என்பது சமயம்சார் நிகழ்வு சம்பந்தப்பட்ட வினாவாகும்.

உரிமமளிக்கப்பட்ட இறைச்சிக்கடைக்காரர் எவரும் மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபையினால் நியமிக்கப்படாத இடத்தில் அல்லது பகிரங்க விலங்கறு மனை தவிர்ந்த இடத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் விலங்கை அறுத்தலானது தண்டனைக்குரிய தவறாகும். பகிரங்க விலங்கறுமனை என்பது இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் குறித்த கட்டிடம் பகிரங்க விலங்கறு மனையின் நோக்கத்திற்கு கட்டப்பட்டதென்றும் அக்கட்டிடம் பகிரங்க விலங்கறு மனையாக பயன்படுத்த போதியதாகவுள்ளதென தோதான உள்ளூராட்சி சபையினால் அமைச்சருக்கு சான்றுறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அமைச்சர் அக்கட்டிடம் பகிரங்க விலங்கறு மனை எனப் பிரகடனப்படுத்த வேண்டும்.

## குறித்த இடப்பரப்பில் விலங்கறுப்பதை தடைசெய்தலும் அதற்கு விதி விலக்களித்தலும்

இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் இறைச்சிக்கடைக்காரருக்கோ அல்லது விலங்கறுக்கும் மனைக்கோ உரிமமளிக்க முடியாது. மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபையானது குறித்த காலப்பகுதியில் குறித்த இடப்பரப்பில் ஏற்கெனவே உரிமமளிக்கப்பட்டிருப்பினும் விலங்கறுப்பதை தடைசெய்ய முடியும். அதற்கென வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அவ்வாறு செய்யப்பட முடியும். அவ்வாறு தடைசெய்யப்பட்ட இடப்பரப்பில் குறித்த நாளில் விலங்கறுப்பதை அனுமதிப்பதற்கென மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபையில் அறிவித்தலை வெளியிட்டு அத்தகைய தடைக்கு விலக்களிக்க முடியும். மதம்சார் விழா அல்லது விசேட நிகழ்வு என்ற அடிப்படையில் தடை விலக்களிக்கப்படலாம். உதாரணமாக கோவில் கொடியேற்றத்தைத் தொடர்ந்து அவ்விடப்பரப்பில் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் விலங்கறுப்பதை தடைசெய்ய முடியும். ஆனால் அக்கோவிலில் பலி கொடுத்தல் நடாத்தப்பட வேண்டுமாயின் உரிய உள்ளூரதிகார சபையினால் அறிவித்தல் வெளியிடப்பட்டு அத்தகைய தடைக்கு விலக்களிக்க முடியும். இதற்கு ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று உரிமம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

சிறி போதிராஜ மன்றம் எதிர் பொலிஸ் தலைமையதிபதி (CA. No. 510/2011) என்ற வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் 17ஆம் பிரிவின் பயன்பாட்டை விளக்கியுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றம் புத்தசமயத்தின் முக்கிய சமய நாட்களான வெசாக் போயா தினம் மற்றும் போஷன் போயா தினத்தில் உரிமமளிக்கப்பட்ட இறைச்சிக்கடைக்காரர் தனது உரிமத்தின் விளைவாக விலங்குகளை கொல்ல முடியுமா என ஆராய்ந்தது. அதே தினத்தில் முஸ்லீம்களின் பெருநாளான ஹஜ் வருமாயின் இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் தடைசெய்யப்பட்டிருப்பினும் காப்பு வாசகத்தின் கீழ் விலக்களிக்க ஏதுவாக இருக்கும். அத்தகைய காப்பு வாசகம் இல்லாதவிடத்து தடை தொடர்ந்து வலுவில் இருக்கும் என எடுத்துக்காட்டியது.

## விலங்குகளுக்கு கொடூரமிழைத்தல் தடுப்புக் கட்டளைச்சட்டம்

விலங்குகளுக்கு கொடூரமிழைத்தல் தடுப்புக் கட்டளைச்சட்டத்தின் 4ஆம் பிரிவானது ஆளெவரும் அவசியமற்ற கொடூரமான முறையில் ஏதேனும் விலங்கைக் கொன்றால் அவர் குற்றப்பணத்தினால் அல்லது மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என ஏற்பாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றது. மேலும் 2ஆம் பிரிவானது கொடூரமாக அடிக்கின்ற, விலங்குகளுக்கு அவசியமற்ற நோவு அல்லது துன்பத்தை விளைவிக்கின்ற அல்லது விலங்குகளுக்கு அவசியமற்ற நோவு அல்லது துன்பத்தை விளைவிக்கின்ற வகையில் இடம்பெயர்க்கின்ற ஆள் குற்றத்திற்குக் குற்றவாளியாவார் என ஏற்பாடு செய்கின்றது. விலங்குகளுக்குக் கொடூரமிழைத்தல் தடுப்புக் கட்டளைச்சட்டத்தின் 14ஆம் பிரிவின்படி விலங்கு என்பது, ஏதேனும் வீட்டு அல்லது கைப்பற்றப்பட்ட விலங்கு என்பதுடன் பிடித்து வைக்கப்படும் ஏதேனும் பறவை, மீன், ஊர்வனவற்றை உள்ளடக்கும் என்கிறது. கொடூரம் என்பது விலங்கிற்கு மட்டுமல்ல பறவைக்கும் ஏற்புடையதாகும். சிறி போதிராஜ மன்றம் எதிர் பொலிஸ் தலைமையதிபதி (CA. No. 510/2011) என்ற வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் கோவிலில் ஒரு விலங்கு அறுக்கப்படும் போது மற்றைய விலங்கு பார்ப்பதனால் அது, மற்றைய விலங்கிற்கு அவசியமற்ற நோவை விளைவிக்கின்றது. எனவே கோவிலில் அவசியமற்ற நோவு விலங்குகளுக்கு விளைவிக்கப்பட்டது என்பதுடன் அத்தகைய ஆடுகள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டதாக தீர்ப்பளித்தது. கோவில் பலியிடுதலில் சேவலும் அறுக்கப்படுவதால் பறவைக்கும் அவசியமற்ற நோவு விளைவிக்கப்படுதலாகாது. எனவே மேற்குறித்த வர்த்தமானியில் ஏற்பாடு செய்யப்பட்ட நடவடிக்கைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும்.

## கோவிலில் விலங்குகள் மற்றும் பறவைகள் அறுப்பதைத் தடுப்பதற்கான புதிய சட்டம்

ஆளொவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராக அல்லது மேற்கொள்வதற்கான சுதந்திரமுட்பட, சிந்தனை செய்யும் சுதந்திரம் உட்பட மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம் மத சுதந்திரம் என்பவற்றுக்கு உரித்துடையராதல் வேண்டும் என அரசியலமைப்பின் 10ஆம் உறுப்புரை உத்தரவாதம் அளிக்கின்றது. இதற்கு மட்டுப்பாடுகளை விதிக்கமுடியாது என்பதிலும் பார்க்க மட்டுப்பாட்டை விதிப்பதற்கு பாராளுமன்றத்தில் முன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் தீர்ப்பெடுப்பொன்றில் சாதகமான பெரும்பான்மையையும் பெறவேண்டியுள்ளது. இங்கு நம்பிக்கையானது என்பது கடவுள் இருக்கின்றார் என்ற நம்பிக்கையை அல்லது கடவுள் இல்லை என்ற நம்பிக்கையை குறிக்கின்றது. எதுவாயினும் ஒரு நம்பிக்கையைக் கொண்டிருத்தலைக் குறிக்கின்றது. ஐக்கிய இராச்சியத்தின் 2011ஆம் ஆண்டின் தருமங்கள் சட்டமானது ஒரு கடவுள் மீதான நம்பிக்கையை அல்லது கடவுள் இல்லை என்ற நம்பிக்கை மீதான நம்பிக்கைப் பொறுப்புக்களை ஏற்றங்கீகரிக்கின்றது. எனவே ஆளொவ்வொருவரும் ஏதோவொரு வகையில் நம்பிக்கையொன்றைக் கொண்டுள்ளனர்.

இத்தகைய தனது நம்பிக்கையை ஒவ்வொரு பிரசையும் தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து, பகிரங்கமாகவேனும் அந்தரங்கமாகவேனும் தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வழிபாட்டிலும் போதனையிலும், அனுசரிப்பிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரத்திற்கு உரித்துடையவர் அரசியலமைப்பின் 14(1)(உ) உறுப்புரை உத்தரவாதம் அளிக்கின்றது. இவ்வுரிமை பிரசைகளுக்கு மட்டும் உரித்தாவதுடன் மட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டவையாகும். மட்டுப்பாடுகளாக தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு என்பவற்றின் நலனுக்காக, அல்லது பொதுமக்கள் சுகாதாரம், ஒழுக்கம் என்பவற்றைப் பாதுகாப்பதற்கு மற்றவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்துக்கான உரிய அங்கீகாரம் மற்றும் மதிப்பைப் பாதுகாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கத்திற்கு அல்லது ஜனநாயக சமூகமொன்றின் பொதுவான சேமநலனின் நீதியான தேவைப்பாடுகளை எய்துவதற்காக சட்டம் அல்லது ஒழுங்கு விதிகளை உருவாக்கி அவற்றின் பிரயோகத்தை கட்டுப்படுத்தலாம். எனவே மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம் முழுமையானது ஆனால் அதனை பிரயோகிக்கும் உரிமை மட்டுப்பாட்டிற்கு உட்பட்டது. உயர் நீதிமன்றம் கனகரட்னம் மற்றும் ஏனையோர் எதிர் சிறி போதிராஜ மன்றம் மற்றும் ஏனையோர் (S.C. spl. L.A. No. 258/2013) வழக்கில் 14(1)(உ) உறுப்புரை பற்றிக் குறிப்பிட்டு 15(7)ஆம் உறுப்புரையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மட்டுப்பாடுகளையும் குறிப்பிட்டது. உள்ளூர் சட்டத்தினால் விதிக்கப்பட்ட மட்டுப்பாடுகள் 15(7)ஆம் உறுப்புரையின் வழிவந்தாக கூறுகின்றது.

எவ்வாறிருப்பினும், அரசியலமைப்பின் 16ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி எல்லா எழுத்திலான சட்டங்களும் எழுத்திலில்லாத சட்டங்களும் அடிப்படை உரிமை அத்தியாயத்துடன் முரண்படினும் அவை தொடர்ந்தும் வலிதானதாகவும் செயற்பாடுடையதாகவும் இருக்கும் என ஏற்பாடு செய்கிறது. எனவே வழக்காற்றுச் சட்டத்திலும் ஏனைய சட்டத்திலும் மதச் சடங்கு அல்லது கிரியைகளை அனுமதிக்கின்ற அந்தளவுக்கு அவ்வேற்பாடுகள் மேலோங்க அரசியலமைப்பு அனுமதியளிக்கிறது.

இதற்கு மேலதிகமாக, நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச்சட்டத்தின் 99(1)ஆம் பிரிவில் சமயத்தின் முன்னேற்றத்திற்காக, அல்லது சமய சடங்குகள் அல்லது கிரிகைகளைப் பேணுவதற்கான நம்பிக்கைப் பொறுப்புக்கள் தரும நம்பிக்கைப் பொறுப்புகளாக ஏற்கப்பட்டுள்ளன. சடங்குகள் அல்லது கிரியைகளுள் வேள்வி எனச் சொல்லப்படும் விலங்குகளைப் பலிகொடுக்கும் விடயம் உள்ளடங்குகின்றதா என்பது நிகழ்வு சம்பந்தமான வினாவாகும்.

சிறி போதிராஜ மன்றம் எதிர் பொலிஸ் தலைமையதிபதி (CA. No. 510/2011) என்ற வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் அரசியலமைப்பின் 10ஆம் உறுப்புரையின் கீழான மத சுதந்திரத்தை ஏற்றுக்கொண்ட போதிலும் ஆளெவரும் தனது மதத்தைப் பின்பற்றும் போது சட்டத்தை மீற உரித்துடையவர் அல்ல என எடுத்துக்காட்டியது. எனவே சட்டத்திற்கு அமைவாக பலி கொடுத்தல் நடாத்தப்படலாம். மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை அடியொற்றி தீர்ப்பு வழங்கியிருந்த போதும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கோவிலில் பலி கொடுத்தல் நடாத்தப்பட்டது.

முழுமையாக இவ்வாறான பலி கொடுத்தல்களை முற்றாக நிறுத்தவேண்டுமாயின், புதிய சட்டத்தினை அல்லது காணப்படுகின்ற சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். இந்திய குற்றவியற் கோவையின் 268ஆம் பிரிவு பொதுமக்களுக்கு ஏதேனும் பொதுவான ஊறு, ஆபத்து அல்லது தொந்தரவை விளைவிக்கின்ற ஏதேனும் செயலைச் செய்கின்ற ஆள் பகிரங்கத் தொல்லை குற்றத்திற்குப் பொறுப்பாவார். எனவே அந்நோக்கத்திற்கென பதிவு செய்யப்பட்ட இடம் தவிர்ந்த ஏதேனும் பகிரங்க இடத்தில் பலியிடப்படுதல் பகிரங்கத் தொல்லையாகக் கருதி தடை செய்யலாம். எவ்வாறாயினும், பலி கொடுப்பதைத் தடுப்பதற்கு வெளிப்படையான சட்டம் இல்லை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Church of the Lukumi Babalu Aye, Inc. v. Hialeah, 508 U.S. 520 (1993),[1]வழக்கில் 19ஆம் நூற்றாண்டில் கியூபா நாட்டில் ஆரம்பித்த சமயம் சனரேரியா என்பதாகும். அச்சமயத்தின் சடங்கில் விலங்குகளைப் பலி கொடுக்கும் சடங்கும் காணப்பட்டது. சனரேரியா சமயத்தில் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சடங்குகளில் விலங்குகளைப் பலி கொடுக்கும் சடங்கு காணப்படுகின்றது. இதைவிட நோயிலிருந்து விடுபடவும் வேறு வருடாந்த திருவிழாவிற்கும் விலங்குகளை பலி கொடுக்கும் சடங்கு காணப்படுகின்றது. அதை தடுப்பதற்கு புளோரிடா மாநிலத்தின் ஹியாலீயா நகரமானது புதிய பல கட்டளைச்சட்டங்களை 1987ஆம் ஆண்டு நிறைவேற்றியது. இக்கட்டளைச்சட்டங்கள் சுதந்திரமாக தமது சமயத்தை அனுபவிப்பதற்கான உரிமையை மீற முனைவதாக தேவாலயம் கருதியது. ஐக்கிய அமெரிக்க உயர் நீதிமன்றமானது புளோரிடா மாநிலத்தின் ஹியாலீயா நகரத்தினால் நிறைவேற்றப்பட்ட புதிய பல கட்டளைச்சட்டங்கள், பகிரங்க அல்லது தனிப்பட்ட சடங்குகளில் அல்லது விழாக்களில் விலங்கைக் கொல்லுவதை அவசியமற்ற வகையில் தடுப்பதானது அரசியலமைப்புக்கு முரணானது எனத் தீர்ப்பளித்தது.

இலங்கையில் மத சுதந்திரம் ஏற்கெனவே குறிப்பிட்டதற்கிணங்க பூரணமானதெனினும் அதன் பிரயோகம் மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவையாகும். மட்டுப்பாடுகளாக தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு என்பவற்றின் நலனுக்காக, அல்லது பொதுமக்கள் சுகாதாரம், ஒழுக்கம் என்பவற்றைப் பாதுகாப்பதற்கு மற்றவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்துக்கான உரிய அங்கீகாரம் மற்றும் மதிப்பைப் பாதுகாக்கும் நோக்கத்திற்கு அல்லது ஜனநாயக சமூகமொன்றின் பொதுவான சேமநலனின் நீதியான தேவைப்பாடுகளை எய்துவதற்காக சட்டம் அல்லது ஒழுங்குவிதிகளை உருவாக்கி அவற்றின் பிரயோகத்தை கட்டுப்படுத்தலாம். எனவே பலி கொடுப்பதைத் தடுக்கின்ற சட்டமானது, வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்ட மட்டுப்பாடுகளுக்கு அமைவாக புதிய சட்டமொன்றை அல்லது திருத்தச்சட்டமொன்றைக் கொண்டுவரலாம். இந்த மட்டுப்பாடுகளுள் அமையாதவிடத்து, அத்தகைய சட்டத்தை நிறைவேற்றுவதில் சில கடினமான நடவடிக்கை முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரை இலக்கிய வளர்ச்சி

**பேராசிரியர் சபா. ஜெயராசா**

கட்டுரை என்பது தனித்துவமான கலை வடிவம். அது உரைவடிவில் எழுதப்படும் ஓர் ஆக்கவடிவம் (A LITERARY COMPOSITION IN PROSE) ஆங்கில மரபிலே கட்டுரை இலக்கிய ஆக்கத்திலே முத்திரை பதிப்போர் கட்டுரையாக்குனர் அல்லது கட்டுரையாளர் (ESSAYIST) என அழைக்கப்படுகின்றனர்.

தமிழில் நாவல் சிறுகதை முதலாம் உரைவடிவங்கள் ஆராயப்பட்ட அளவுக்கு கட்டுரை இலக்கியம் ஆராயப்படவில்லை. அது மிகவும் சிக்கலான பணி என்பதனாற் கைவிடப் பட்டிருக்கலாம்.

கட்டுரையின் எடுத்தியம்பல் நிலையும் உள்ளடக்கப்பரப்பும் நீண்ட வீச்சுக்கொண்டவை. மனவெழுச்சிகளை உள்ளடக்கிய அகவய நிலையிலிருந்து இறுகிய தருக்கத்தை உள்ளடக்கிய புறவயநிலை வரை அதன் வீச்சு நீண்டு விரிந்தது. முற்றிலும் உணர்ச்சி மயமான கட்டுரைகளும் இருக்கின்றன. முற்றிலும் புறத்தருக்க முறையிலமைந்த கட்டுரைகளும் உள்ளன. அவ்வாறான இருவகைக் கட்டுரைகளும் சுவையூட்ட வல்லவை. மனவெழுச்சிச்சுவை ஒரு விதமானது. தருக்கச்சுவை இன்னொருவிதமானது.

மனவெழுச்சிச்சுவையும் தருக்கச் சுவையும் கிரேக்கர் காலத்திலிருந்தே கல்வி நிலையங்களிலே வளர்த்தெடுக்கப்பட்டன. கிரேக்க நாடகங்களிலே மனவெழுச்சிச் சுவையும், தருக்கச்சுவையும் ஒன்றிணைந்திருந்தன. அவை, அவர்களது உரைநடையிலும் நீட்சி கொண்டன. தொன்மையான வணிக வளர்ச்சி உரைநடை வளர்ச்சிக்கும் தருக்க வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்தது. உரைநடையின் வளர்ச்சியோடும் வரன் முறையான, கல்வி வளர்ச்சியோடும் கட்டுரை வடிவம் எழுகோலம் பெறத்தொடங்கியது.

வாய்மொழிக் கட்டுரைகள், எழுத்துவழிக் கட்டுரைகள் என்று இரு நிலைகளிலே கட்டுரை இலக்கியத்தை நோக்கலாம். வாய்மொழிக் கட்டுரைகள் வரன்முறை சார் (NON FORMAL) வகையைச் சார்ந்தது. ஒருவர் தமது அறிவையும் அனுபவங்களையும் வாய்மொழியிலாகத் தொகுத்து வழங்குகையில் வாய்மொழிக் கட்டுரைகள் தோற்றம் பெறுகின்றன. வாய்மொழிக் கட்டுரைகளின் நீட்சியாகவே பிரசங்கங்களும் சொற்பொழிவுகளும் தோற்றம் பெற்றன.

கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் மனத்தில் ஆழப்பதிவிக்கும் நோக்குடன் உரைநடையைக் கட்டமைப்புச் செய்தல் கட்டுரை இலக்கியத்தில் இடம்பெறுகின்றது. வாய்மொழிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையின் ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவமாகக் கருத்தாடற் கலை (RHETROIC) அமைந்தது. தொன்மையான கல்வியில் கருத்தாடற் கலை ஒரு தனிப்பாடமாகவும் கற்பிக்கப்பட்டது.

வாய் மொழிக்கட்டுரை என்பது மிகுந்த நெகிழ்ச்சி கொண்ட வடிவம். தொன்மையான சடங்குகளிலே சடங்கு நிகழ்த்தியோர் மேற்கொண்ட உரையானது வாய்மொழிக் கட்டுரையின் தொன்மையான வடிவங்களுள் ஒன்றாக அமைந்தது. சோக்கிரதீசின் கருத்தாடல்களும் வாய்மொழிக் கட்டுரை வடிவில் அடங்கும்.

வளர்ச்சிபெற்ற சமயக்கருத்துக்களும் சிந்தனைகளும் வாய்மொழிக் கட்டுரைகள் வாயிலாகவே எடுத்துச் செல்லப்பட்டன. ஜேசுவின் மலைப்பிரசங்கம் வாய்மொழிக் கட்டுரையின் உன்னதமான வடிவமாகக் கொள்ளப்படுகின்றது.

தமிழ் மரபில் நிகழ்ந்த தருக்கச்சிந்தனையின் ஒரு குறிகாட்டியாகத் தொல்காப்பியம் அமைந்தது. பகுத்தல், தொகுத்தல், விதிவருவித்தல், உய்த்தறிதல் முதலாம் அளவைச் செயற்பாடுகளை உள்ளடக்கிய நூலாகத் தொல்காப்பியம் அமைந்தது. ஆனால் அவற்றின் எடுத்துரைப்பு செய்யுள் வடிவிலே அமைந்தது.

உரையாசிரியர் மரபோடு தமிழில் எழுத்து வழிக்காட்டுரையாக்கம் முகிழ்க்கத் தொடங்கியது. ஆனால் அதற்கு முன்னரே உரைநடை வலுப்பெற்றிருந்தது. ஐரோப்பியர் வருகை, அச்சுப்பொறியின் பயன்பாடு, நூலாக்கம், இதழ்களின் வளர்ச்சி புதிய கல்வி முறை, சமயம் பரப்பும் செயற்பாடுகள், உரைநடை வளர்ச்சி முதலியவற்றுடன் இணைந்ததாக கட்டுரை இலக்கியம் விசைகொள்ளத் தொடங்கியது.

தமிழில் வரன்முறை சார்ந்த கட்டுரையாக்கத்தின் முன்னோடியாக நாவலர் விளங்கினார். வாய் மொழிக் கட்டுரைகள், எழுத்து வழிக்கட்டுரைகள் இரண்டினதும் ஆக்களில் ஈடுபடவேண்டிய தேவை அவருக்கு எழுந்தது. அவரது பிரசங்கங்கள் வாய்மொழிக் கட்டுரையின் ஒழுங்கமைப்பாக அமைந்தன. அக்காலத்திற் கட்டுரை என்ற சொல்லாட்சி நிலை “வசனம்” என்ற ஆட்சியே நிலைபெற்றிருந்தது. வசனம் என்பது வாக்கியத்தை மட்டும் குறிப்பிடவில்லை. வாக்கியம் கொண்டு அமைக்கப்பட்ட வியாசம் அல்லது கட்டுரையைக் குறித்து நின்றது. ஐரோப்பியர் காலக் கல்வியில் வியாசம் என்ற சொல்லாட்சியே இடம்பெற்றிருந்தது.

நாவலரைப் போன்று, தாம் கற்ற ஆங்கிலக் கல்வியால் கட்டுரை இலக்கியம் பற்றிய கண்ணோட்டம் சி.வை. தாமேதரம்பிள்ளையிடத்தும் காணப்பட்டது.

சமூகத்தின் பன்மை இயல்புகளும் அறிவின் பன்மை நிலைகளும் விரிந்து சென்ற நிலையில் கட்டுரை வடிவம் பல பலவகைப்பாடுகளைக் கொண்டதாக விரிந்து சென்றது. சமயக் கட்டுரையிலே தொடங்கி விஞ்ஞானக் கட்டுரை வரை இருபதுக்கு மேற்பட்ட கட்டுரை வகைப்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

இதழ்களில் எழுதப்படும் ஆசிரியர் தலையங்கங்களும் இதழ்க்கீலங்களும் (COLUMNS) கட்டுரைகளாகின்றன. நாவல் மற்றும் சிறுகதை வாசிப்பைக் காட்டிலும் கட்டுரை வாசிப்பே உலகம் முழுவதும் பிரவாகமெடுக்கத் தொடங்கியுள்ளது. அறிவின் வெளிப்பாட்டுடன் சமூகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்முகவெளிப்பாடுகளும் கட்டுரை இலக்கியத்தின் வழியாகவே மேற்கிளம்புகின்றன. தொடர்பாடலின் உன்னத வடிவங்களுள் ஒன்றாகவும் அது அமைவதால், மிகவும் விரிவான ஆய்வுக்குக் கட்டுரை இலக்கியம் உட்படுத்தப்படவேண்டியுள்ளது.

அறிவு மற்றும் அனுபவக் கையளிப்பில் வினா-விடை வடிவம் முக்கியமானது. ஆதிக்கிரேக்கக் கல்விமரபிலிருந்தே அந்த வடிவம் வளர்த்தெடுக்கப்பட்டு வந்தது. கட்டுரையாக்கத்திலே செல்வாக்குச் செலுத்திய நுட்பங்களுள் அது தொன்மையானது. அறிவு வளர்ச்சியோடு கண்டறியப்பட்ட தகவல் திரட்டல் நுட்பங்களும் ஆய்வு முறைகளும், திறனாய்வு முறைகளும் கட்டுரையாக்கங்களிலே செல்வாக்குகளை ஏற்படுத்தின.

சமயச் சிந்தனைகள், தத்துவச் சிந்தனைகள், புதிய புதிய கோட்பாடுகளின் ஆக்கங்கள் முதலியனவும் கட்டுரைகளின் புனைவுகளிலே தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கின. பல்வேறு பனுவல்களதும், சிந்தனைகளதும், கோட்பாடுகளினதும் உள்வாங்கலைக் கொண்ட ஊடுநூலியப் பணபு (INTERTEXTUALITY) அல்லது பனுவல் இடைத்தொடர்புப் பண்பைத் தாங்கியதாகக் கட்டுரைகள் உருவாக்கம் பெறுகின்றன.

விரிந்து செல்லும் சிந்தனை, (DIVERGENT THINKING) குவிந்து தொழிற்படும் சிந்தனை (CONVERGENT THINKING) ஆகிய இரண்டுக்குமிடையேயுள்ள பிரிகோடுகள் கட்டுரை இலக்கியத்திலே அழிக்கப்படுகின்றன. அதாவது, இரண்டும் இணைந்த செயற்பாடுகளுக்கு அங்கே இடமளிக்கப்படுகின்றது. கட்டுரை தவிர்ந்த ஏனைய இலக்கிய வடிவங்கள் விரிசிந்தனையுடனே பெருமளவில் தொடர்பு தொடர்பு கொண்டிருக்கும்.

அறிவை "தொழிற்படும் அறிவாக" மாற்றியமைப்பதற்குரிய ஆற்றலையும் கட்டுரைகள் கொண்டுள்ளன. கட்டுரைகள் வாசிப்புச் சுவையை மட்டும் ஊட்டி நிற்பதில்லை, அதற்கும் மேலான பிரயோகத்திறன்களையும் செயற்படும் ஆற்றல்களையும் வருவிப்பதற்குரிய வடிவமாகவும் அமைந்துள்ளது. கட்டுரை வாசிப்போரின் அறிகைத் தொழிற்பாடுகள் (COGNITIVE FUNCTIONS) வளம் பெறுகின்றன. அவர்களின் செயற்படும் ஆற்றலையும் அதிகரிக்கச் செய்கின்றன.

புதிய சிந்தனைகள் புதிய கலைச் சொற்கள் முதலியவை கட்டுரைகள் வாயிலாகவே வெளிப்பாடு கொள்கின்றன. அறிவின் பெருக்கெடுத்தல் கட்டுரைகளின் பெருக்கெடுத்தலுடன் தொடர்புடையது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையிலும் தமிழகத்திலும் நிகழ்ந்த கல்விச் செயற்பாடுகள் அறிவுப்பெருக்கோடுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தின. அறிவு பொருளீட்டும் கருவியாகவும் வர்த்தகப் பண்டமாகவும் மாறத்தெடங்கியது. படித்தவர்கள் அரச உத்தியோகங்களைப் பெறும் வாய்ப்பைப் பெற்றனர். வரன்முறையான கல்வியறிவோடு இணைந்த மத்திய தர வகுப்பினரின் உருவாக்கம் நிகழத் தொடங்கியது. அச்சுவழியான தொடர்பாடல் எழுச்சி கொண்டது. அத்தகைய பின்புலத்திலேதான் சிறுகதை, நாவல், கட்டுரை முதலான எழுத்து வடிவக் கலைகள் மேலெழுந்தன.

வாசனவழி அல்லது உரைவழித் தொடர்பாடலின் முக்கியத்துவத்தை அறிந்த ஆறுமுகநாவலர் அத்துறையில் ஊன்றிய கவனம் செலுத்தினார். பிரசங்க முறையின் செல்வாக்கு அவரது வசனங்களிலே ஊடுருவி நின்றது. அவரின் நீண்ட வசனங்கள் அதற்குச் சான்றாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி வளர்ச்சியோடும், தொடர்பாடல் வளர்ச்சியோடும் கட்டுரையாக்க முயற்சிகளிலே பலர் ஈடுபடலாயினர். இராமலிங்க அடிகளார், வீரமா முனிவர், அம்பிகைபாகர், சிவஞானமுனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், மயிலேறும் பெருமாள் பிள்ளை, தாண்டவராயர், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, சபாபதி நாவலர், யூரம் வேதநாயகம்பிள்ளை, கதிரவேற்பிள்ளை, பாரதியார் கனகசபாபதிப்பிள்ளை, கனகசுந்தரம்பிள்ளை, சுன்னாகம் குமாரசாமிப்புலவர், பரிதிமாற் கலைஞர், நாவலர் சோமசுந்தர பாரதியார், செல்வக் கேசவராய முதலியார், உ.வே. சாமிநாதையர், சதாசிவ ஐயர், வைத்திலிங்கம் பிள்ளை, திரு. வி. கல்யாண சுந்தரனார், ஏப்பிரகாம் பண்டிதர், வ.வே. சு. ஐயர், புதுமைப்பித்தன், கல்கி, வ.ரா, சுவாமி விபுலானந்தர் போன்றோர் தமிழிலே கட்டுரையாக்கத் தளங்களைப் பதித்தனர்.

அறிவியலை எடுத்தியம்பும் வடிவமாகத் தமிழிற் கட்டுரை வடிவத்தை முன்னெடுத்த முன்னோடியாக சுவாமி விபுலானந்தர் அமைகின்றார். கட்டுரை வளத்துக்குரிய புதிய கலைச்சொல்லாக்கம் அவரால் முன்னெடுக்கப்பட்டது. யாழ் நூலின் ஒவ்வோர் இயலும் அவரின் கட்டுரையாக்கத்திறனது ஆழங்களைப் புலப்படுத்தும் மேலோட்டமாக விடயங்களைக் கூறுதலை விடுத்து அறிவுக் கனதியுடன் கட்டுரை வடிவத்தை முன்னெடுத்தமை அவருக்குரிய தனித்துவம். கருத்தாழம் நோக்கிச் செல்வதன் சுவையைத் தமது கட்டுரைகள் வாயிலாக அவர் வெளிப்படுத்தினார்.

பொது "நயப்புக்குரிய கட்டுரைகள் சிறப்பு நயப்புக்குரிய கட்டுரைகள்" என்ற பாகுபாடு இவ்விடத்திலே முக்கியத்துவம் பெறுகின்றது. ஒவ்வொரு புலமைத்துறையிலும் எழுதப்படும் கட்டுரைகள் எழுத்தின் இயல்பு சிறப்புடையதாக இருக்கும் பட்சத்தில் அவ்வத்துறையினருக்கு அவை சுவையூட்டுவனவாய் அமைந்திருக்கும்.

ஆங்கில மரபில் ஒவ்வொரு துறை சார்ந்த எழுத்தாக்கங்களையும் "இலக்கியம்" என்று குறிப்பிடுதல் உண்டு. உதாரணமாக "மருத்துவ இலக்கியம் (MEDICAL LITERATURE) சட்ட இலக்கியம்" என்றவாறு துறை சார்ந்து எழுத்துக்கள் "இலக்கியம்" என்றே சுட்டப்படுகின்றன.

தருக்க முறைக் கருத்தாடல் நிலையிலும் சுவையுண்டு என்பதைக் கட்டுரை இலக்கியம் நிரூபணமாக்கியது. அந்நிலையில் கட்டுரை இலக்கியத்தின் செல்வாக்கு பிற இலக்கிய வடிவங்களிலும் நீட்சி கொண்டது. அறிவியலையும், அழகியலையும் இணைக்கக் கூடிய அகல்விரி வடிவமாகக் கட்டுரை வடிவம் வளர்ச்சி கொண்டுள்ளது.

உயர்கல்வி வளர்ச்சியோடு கட்டுரையாக்கம் விரிவும், வீச்சும், ஆழமும் கொண்டதாக ஏற்றம் பெற்றது. தமிழ் மொழி உயர்கல்வி மொழியாகியமை உயர் கல்வியை மக்களாட்சி மயப்படுத்தும் செயற்பாடாயிற்று. அந்தச் செயற்பாட்டில் தமிழகத்தைக் காட்டிலும் இலங்கையின் செயற்பாடுகள் வினைத்திறன் கொண்டவையாக அமைந்தன. தமிழ்ப்பயிற்று மொழியாவதற்கு முன்னர், வசதி படைத்த மேட்டுக்குடியினருக்கே உயர் கல்வி உரியதாயிற்று. தமிழ் மொழி பயிற்று மொழியானால் உயர் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து விடும் என்ற மாயைத் தோற்றத்தினையும் மேட்டுக்குடியினர் முன்வைத்தனர். அந்நிலையில் தாய் மொழியே படைப்பாற்றல் மலர்ச்சிக்குரிய மொழி என்பதைக் கல்வி உளவியல் நிரூபித்து வந்துள்ளது.

பல்கலைக்கழகத்திலே தமிழ்மொழிப் பயில்வு நிலை பேறு நிலைபேறு கொள்வதற்குப் பல்வேறு அறிஞர்கள் உயர்ந்த குறிக்கோளுடன் உழைத்தனர். அந்த வகையில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் வி. செல்வநாயகம், போராசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. செல்வநாயகம், பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன், பேராசிரியர் அமீர் அலி, பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் ப. சந்திரசேகரம், ச. முத்துலிங்கம், பேராசிரியர் கா. இந்திரபாலா பேராசிரியர் எஸ். பத்மநாதன், வண. பிதா. தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் சிவஞானசுந்தரம் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சமூகவிஞ்ஞானத் துறைகளில் தமிழ்மொழி உயர்கல்வி மொழியாகிய அதே காலகட்டத்தில் வேறுபல சமூக அரசியல் நிகழ்ச்சிகளும் விசைகொண்டிருந்தன. ஆரம்பம் மற்றும் இடைநிலைக் கல்விச் செயற்பாடுகளிலே நிகழ்ந்த விரிவாக்கம், தமிழ்த் தேசியச் சிந்தனையின் வளர்ச்சி, சுயமரியாதை இயக்கம், தீண்டாமை ஒழிப்பு, தனித்தமிழ் இயக்கம், ஊடகங்களின் வளர்ச்சி முதலானவை கட்டுரை இலக்கிய உருவாக்கத்திலே நேரடியான செல்வாக்குகளை ஏற்படுத்தின.

அதுவரை காலமும் சிறுகதை, கவிதைப்போட்டிகளை நடத்திய பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்கம் 1960 ஆம் ஆண்டைத் தொடர்ந்து கட்டுரை இலக்கியப் போட்டிகளையும் நடத்தத் தொடங்கியமை ஒரு முக்கியமான பதிவு. 1965 ஆம் ஆண்டில் பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள் வெளியிட்ட "கடலோசை" என்ற ஆக்கம் கட்டுரை இலக்கியத்தின் தரமான ஒரு காட்டுருவாகவும் (MODEL) சுட்டிக்காட்டப்படத்தக்கது.

அக்காலத்தில், பல்கலைக்கழகத்துக்கு வெளியேயும் தரமான கட்டுரையாக்க எழுத்துக்கள் இடம் பெறத்தொடங்கின. இ. முருகையன், மெழிபெயர்ப்பாளர் இ. இரத்தினம், க. பொ. இரத்தினம், இலட்சுமண ஐயர், மு. தளையசிங்கம், வித்துவான் அடைக்கலமுத்து, பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை, முகமது சமீம், பிரேம்ஜி, இளங்கீரன், கே. கணேஸ், சொக்கன், சோ. நடராஜன், பேராசிரியர் சு. ஜெபநேசன், ஏ. ஜே. கனகரட்ணா, யாழ்நங்கை, குறமகள் முதலியோரின் ஆக்கங்கள் குறிப்பிடத்தக்கவை.

அடுத்த தலைமுறையில் மேலும் பல கட்டுரையாளர்கள் உருவாக்கம் பெற்றனர். அறிவியல், சமூகவிஞ்ஞானம், கலைகள், திறனாய்வு, முதலாம் துறைகளில் புதிய உள்ளடக்கங்களும், எடுத்துரைப்பு எழு நடையும் (STYLE) தோற்றம் பெற்றன.

கல்வி வளர்ச்சியில் நிகழ்ந்த ஒரு முக்கியமான செயற்பாடு பள்ளிக்கூட இதழ்களின் பெருக்கமாகும். பெருந்தொகையானோரைக் கட்டுரை எழுதத்தூண்டும் செயற்பாட்டை அந்த இதழ்கள் முன்னெடுத்தன. தாய் மொழி பயிற்று மொழியாவதற்கு முன்னர் ஒரு சில பெரும் பள்ளிக்கூடங்களே ஆங்கில மொழி இதழ்களை வெளியிட்டன. தாய் மொழிக் கல்வி இதழ் வெளியீடுகளையும் கட்டுரையாக்க முயற்சிகளையும் மக்களாட்சி மயப்படுத்த உதவியது.

வயது வளர்ச்சி, அறிகை வளர்ச்சி (Cognitive Development) ஆக்க நுண்மதி (CREATIVE INTELLIGENCE) வளர்ச்சி என்பவற்றுக்கு ஏற்றவாறு கட்டுரை, வாசிப்பு முயற்சிகளும், எழுத்து முயற்சிகளும் இடம் பெறத் தொடங்கின. சிறுவர் நிலை, இளம் வளர்ந்தோர் (YOUNG ADULT) நிலை, வளர்ந்தோர் என்பவற்றுக்கு ஏற்றவாறு கட்டுரை இலக்கிய ஆக்கச் செயற்பாடுகள் வளர்ச்சியடையத் தொடங்கின.

புனைகதைகள், கவிதைகள், குறிப்பிட்ட வயது வீச்சினருக்கு எழுதப்படுவது போல் கட்டுரை இலக்கியங்களும் ஆக்கப்படுகின்றன. வயது மட்டங்களுக்கு ஏற்றவாறு மொழி நடையும், உள்ளடக்கக் கனதியும் பிரச்சினைகளும் தெரிவு செய்யப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையாக்கச் செயல்முறையில் உலகளாவிய செல்வாக்கைச் செலுத்திய கோட்பாடாக மார்க்சியமும், நவமார்க்சியச் சிந்தனைகளும் அமைந்தன. சமூகவியல், அரசியல் பொருளியல், அறிவியல் என்ற அனைத்துத் துறைகளிலும் மார்க்சியம் நீட்சி கொண்டது. எத்தகைய செயற்பாடுகளையும் சமூக நிலைவரங்களுடன் தொடர்புபடுத்திப்பார்கும் மார்க்சியத்தால் புதிய அறிகைப் (COGNITIVE FLASH) பளிச்சீடு உருவாக்கம் பெற்றது.

மார்க்சியத்தை ஏற்பவர்களிடத்து மட்டுமன்றி நிராகரிப்பவர்களிடத்தும் அதன் செல்வாக்கு ஊடுருவத் தொடங்கியது. கட்டுரை இலக்கியமும் மார்க்சியச் சிந்தனைகளால் வளம்பெறத் தொடங்கியது. சமூக இயங்கியல் தருக்கத்தின் வழியாகப் பிரச்சினைகளை அணுகும் பாய்ச்சல் நிகழத் தொடங்கியது. மார்க்சிய உளவியல் மற்றும் மார்க்சிய அழகியல் ஆகியவற்றின் வளர்ச்சி கட்டுரையாக்கங்களிலே ஆழ்ந்து விரிந்த செல்வாக்கை ஏற்படுத்தியது.

மார்க்சிய உளவியலாளராகிய வைக்கோட்சி முன்வைத்த "அண்மை விருத்தி வலயம்" (ZONE OF PROXIMAL DEVELOPMENT) "தாவல் கட்டல்" (SCAFFOLDING) முதலாம் கருத்துக்கள் கட்டுரையாக்கங்களிலே செல்வாக்குகளை ஏற்படுத்தி வருகின்றன.

"அண்மை விருத்தி வலயம்" என்பது ஒருவர் தமது முயற்சியினால் சுயமாக அறிவைத் தேடிக்கொள்ளும் எல்லைக்கும் ஆற்றலுள்ள ஒருவரால் அவர் எட்டப்படக்கூடிய எல்லைக்கும் இடைப்பட்ட வலயம். அதனை அடைவதற்குப் பல்வேறு தாவல்கட்டற் செயற்பாடுகள் உள்ளன. அவற்றுள் கட்டுரை புனைதலும் ஒரு முக்கிய செயற்பாடாக அமைகின்றது.

மார்க்சியத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒடுக்கப்பட்டோர் கல்வி, ஒடுக்கப்பட்டோர் அழகியல், விடுதலை இறையியல், ஒடுக்கப்பட்டோர் அரங்கு முதலியவை போலோ பிரேரியின் எழுத்தாக்கங்களால் எழுச்சி கொண்டு உலகம் முழுவதும் பரவலாயிற்று. நவீன கட்டுரையாக்கங்களில் அதன் செல்வாக்கும் இடம்பெற்று வருகின்றது.

மார்க்சியத்திற்குப் பின்னர் உலகளாவிப் பரவிய சிந்தனைகளுள் ஒன்றாக பின்னைய நவீனத்துவம் அமைந்துள்ளது. மார்க்சியம் போன்று அதுவும் அனைத்துத் துறைகளிலும் ஊடுருவிப் பரவலுற்ற சிந்தனையாகும்.

உண்மையின் சார்புடைமை, ஒவ்வோர் அறிவுத்துறைகளிலும் நிகழ்த்தப்படும் மொழி விளையாட்டு (LANGUAGE GAME) கட்டுமானக்குலைப்பு, அல்லது தகர்ப்பு, பன்மை நோக்கு, விளிம்பு நிலைகளைக் கருத்திற் கொள்ளல், மேலாதிக்க நுண் வடிவங்கள், நூலியத் தொடர்புகள் வழியாகப் புதிய படைப்புக்கள் தோன்றுதல், வாசகரின் எழுச்சி, சிதறித்தனித்த கூறுகளை முக்கியத்துவப்படுத்துதல், முதலாம் பின்னைய நவீனத்துவச் சிந்தனைகள் கட்டுரையாக்கங்களிலே செல்வாக்கைச் செலுத்தத் தொடங்கின.

சமகாலத்தைய திறனாய்வுகளில் கட்டுரையாக்கக் கலையில் நிகழும் அழகியல் இழப்பும் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆக்குவோரின் இயல்பை அடியொற்றி எல்லா இலக்கிய வகைகளும் இந்தப் பிரச்சினையைச் சந்திக்கின்றன.

உறுநேர்வுகளை (FACTS) எடுத்துக் கூறுவதால் கட்டுரைகளின் அழகியல் பாதிக்கப்படுதல் இல்லை. உறுநேர்வு கொண்ட நாவல்களும், சிறுகதைகளும், விவரணத் திரைப்படங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையழகு குன்றாத வகையில் உருவாக்கம் பெறுகின்றன. அந்நிலையிற் கட்டுரைகளின் அழகியல் ஆற்றல் அவற்றை எழுதுவோரின் ஆற்றலுடன் தொடர்புபட்டிருத்தலைக் குறிப்பிடவேண்டியுள்ளது.

கட்டுரையாளர்கள் தமக்குரிய கருத்தியலோடு உறவாடுபவர்களாயும் இருக்கின்றனர். கட்டுரைகளுக்குரிய பொருள் தெரிவும் எடுத்தியம்பல் முறையும் கருத்தியலோடு தொடர்புபட்டிருக்கும். ஆழ்ந்த வாசிப்புத் தரிசனமும் அறிவு வளர்ச்சியும் கருத்தியல் தழுவிய "பார்க்கும் முறையினை" மேலும் கூர்மைப்படுத்தும் அத்தகைய கூர்மைப்பாடு சித்திரிப்பு முறைமையிலும் செல்வாக்கைச் செலுத்தும். பேராசிரியர் கா. சிவத்தம்பி, மு. தளையசிங்கம் ஆகியோரது கட்டுரைகளை வாசிக்கும் பொழுது அவர்கள் வரித்துக் கொண்ட கருத்தியலின் கூர்மைப்பாடும், அவர்கள் மேற்கொண்ட நிறைந்த வாசிப்பு முறைமையின் விளைவு கொண்டு நிற்பதைக் காணலாம்.

விஞ்ஞான வளர்ச்சி தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவை வாழ்க்கையைப் பல நிலைகளிலும் ஊடுருவி நிற்க, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் சார்ந்த கட்டுரைகள், நாள் இதழ்களிலும், பருவ இதழ்களிலும் வெளிவரத் தொடங்கின. அந்நிலையில் தமிழ்க்கட்டரையாக்கப்பரப்பளவு மேலும் விரிவு பெறத் தொடங்கியது.

உலக அறிவுப் பெருக்கம் பெருமளவில் ஆங்கிலநூல்கள் வழியாகக் கிடைக்கப்பெறும் நிலையில், அதன் வழியாக அறிவூட்டங்களைப் பெற்றோர் நவீன உலக அறிவுப் பெருக்கோடு இணைந்த கட்டுரைகளைத் தமிழில் எழுதி வருகின்றனர். வாசிப்பு நிலையில் புதிய அறிவினது குதூகலிப்பையும், சுவையையும் ஏற்படுத்த வல்லது. அந்நிலையில் சுவை பற்றிய மரபுவழியான மதிப்பீடுகளிலே தகர்ப்பு ஏற்படுகின்றது.

கட்டுரை இலக்கியவளர்ச்சி சுவை பற்றிய எண்ணக்கருவிலும் அழகுபற்றிய நோக்கிலும் மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. அத்தகைய மாற்றங்கள் கட்டுரை இலக்கிய வளர்ச்சியால் மட்டும் நிகழ்ந்தவையன்று. சமூகமாற்றங்கள், சமூகத்தில் நிகழ்ந்து வரும் பெறுமான மாற்றங்கள் (VALUE CHANGES) பொருள்களைப் பார்க்கும் முறைமையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் முதலியவற்றுடன் தொடர்புடையவை.

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் அழகுசாராப்புறவயப் (OBJECTIVE) பொருட்களாகவே முன்னர் கருதப்பட்டன. அவற்றிலும் அழகு உண்டு என்பது பின்னைய வளர்ச்சி அவற்றை அடியொற்றியே புதிய அழகியற்கோட்பாடு உருவாக்கப்படுகின்றது. கட்டுரை இலக்கிய வளர்ச்சி புதிய அழகியலோடு நிறைந்து நிற்கின்றது. ஆக்கச்சிந்தனையும் ஆக்க மலர்ச்சியும் கலைகளுக்கு மட்டும் உரியவையன்று. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களும், அவற்றின் பயன்பாடுகளும் ஆக்கச் சிந்தனையின் நீட்சிகளாகவே அமைகின்றன.

சமகாலத்தில் நிகழ்துவரும் அறிவுப் பிரவாகம், அழகு மற்றும் சுவை பற்றிய நோக்குகளில் நிகழ்ந்து வரும் மாற்றங்கள், முதலியவற்றுடன் இணைந்ததாகக் கட்டுரையாக்கங்கள் எழுகோலம் பெறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமயமாக்கமும் வளர்முக நாடுகளில் மனிதவள விருத்தியும்


சோ. சந்திரசேகரன்

முன்னாள் பேராசிரியர்


இன்று பொருளாதாரம், வர்த்தகம், கைத்தொழில், கலாசாரம் போன்ற விடயங்களை மட்டுமன்றி கல்வி, மனிதவள விருத்திக்கான கல்வி ஏற்பாடுகள் என்பவற்றைத் தெளிவுற விளங்கிக் கொள்ள உலகமயமாக்கம் பற்றிய கருத்தாக்கத்தை நாட வேண்டியுள்ளது. உலகமயமாக்கம் என்ற எண்ணக்கருவின் வரையறை பல முக்கிய விடங்களை உள்ளடக்கின்றது.

- உலகளாவிய ரீதியில் சமூகங்கள் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளன.
- தூரப்பிரதேசங்களுக்கிடையிலான தொடர்புகளை ஏற்படுத்துகின்றன.
- பொருட்களையும், சேவைகளையும் உற்பத்தி செய்வதில் இன்று ஏற்பட்டு வரும் பிரதான மாற்றங்களைப் பொருளாதார உலகமயமாக்கம் குறிக்கின்றது.
- சர்வதேச தொழிற்பிரிவு முறையானது ஒன்றினைக்கப்பட்டுள்ளதையும் இது குறிக்கும்.

தேசிய பொருளாதார முறைகள் இன்று தமது தேசியத்தன்மையை இழந்து பிராந்திய அமைப்புக்களுடன் இணைக்கப்பட்டு வருகின்றன. இவ்வொன்றிணைப்பை ஒன்றுபடுத்தவே தகவல் தொழில்நுட்பக் கருவிகள் உதவுகின்றன. ஒருவர் செயற்கைக் கோள்களுக்கூடாகத் துரிதமாக இலகுவாக முழு உலகுடன் தொடர்பு கொள்ள முடிவதுடன், பொருளுற்பத்தியின் பல்வேறு கட்டங்களை இணைத்து முழுப் பொருளையும் இலகுவாக உருவாக்க முடிகின்றது. அத்துடன், தொழில்வாய்ப்புக்களைப் பெறவும், உலகப் பொருளாதார முறையில் இணைந்து கொள்ளவும் இன்று ஆங்கில மொழி அவசியமாக உள்ளது. மேலை நாடுகளில் ஆங்கிலத்தையம், கணினியையும் கற்றுக்கொள்ளுங்கள் என்னும் சுலோகம் பரவலாகப் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறான உலகமயமாக்கம் விரிவான முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் வழி வகுக்கும். கம்பனிகளுக்கு விரிவான சந்தை வசதி கிடைப்பதால் அவை சிக்கனமாக இயங்க முடியும். வறிய நாடுகள் செல்வந்த நாடுகளை விட வளர்ச்சியடைய முடியும். இக் கொள்கையின் வெற்றி நிச்சயம் என்பதை வலியுறுத்தும் உலகமயமாக்கக் கொள்கையின் ஆதரவாளர்கள் எதிர்காலத்தில் தேசிய அரசுகளின் முக்கியத்துவம் குறைந்தது. "உலகக் கிராமம்" பெரு வளர்ச்சி பெற்று சந்தைப் பொருளாதாரம் செல்வச் செழிப்பை ஏற்படுத்தும் என வலியுறுத்துவர். சுருங்கக் கூறுமிடத்து, பொருளாதார உலகமயமாக்கம் வர்த்தகத் தடைகளை நீக்கிப் பரந்த உலக சந்தையொன்றையும் தொழில் நிறுவனங்களுக்கிடையிலான போட்டியையும் ஏற்படுத்துவதால் உலகலாவிய ரீதியில் உற்பத்திப் பெருக்கம், நிறுவனச் சிக்கனம், வேலைவாய்ப்பு, வருமான அதிகரிப்பு என்பன ஏற்பட வாய்ப்புண்டு. இவ்வாதத்தின்படி வளர்முக நாடுகளின் வருமானம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வந்த நாடுகளை விட அதிகமாகப் பெருகும். உலகமயக் கோட்பாட்டைப் பின்பற்றினால் ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றி சித்தாந்தரீதியாகப் பலவாறு கூறப்பட்டாலும், இக் கொள்கை பற்றிய பல விமர்சனங்களும் கண்டனங்களும் உண்டு. இப்பகுதியில் அவை தொகுத்து சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

மார்க்சிய ஆய்வாளர்கள் உலகமயமாக்கம் என்பது முதலாளித்துவத்தின் இறுதிக்கட்டம் என வர்ணிப்பர். லெனின் இப்போது இருந்தால் இந்நிலைமையை முதலாளித்துவத்தின் வளர்ச்சியாகவே கருதியிருப்பார். முதலாளித்துவம் சர்வதேச மயமாக்கப்பட்டுள்ளமையையே உலகமயமாக்கம் சுட்டுகின்றது என்பது அவருடைய கருத்தாக இருந்திருக்கும்.

உலகமயமாக்கத்தில் பல சீர்கேடுகளை அவதானிக்க முடியும் உதாரணமாக

- ★ இன்று 300 கோடி மக்களின் நாளாந்த வருமானம் 250 ரூபாவுக்கும் குறைவேயாகும்.
- ★ 80 நாடுகளில் தனியாள் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது.
- ★ 1990 தொடக்கம் 30 நாடுகளில் மக்களின் ஆயுட் காலம் குறைந்துள்ளது.
- ★ இயற்கை வளங்கள் அபிவிருத்திக்கு கண்மூடித்தனமாகப் பயன்படுத்தப்படுவதால், சுற்றாடல் சீரழிவு ஒரு முக்கிய பிரச்சினையாகி உள்ளது.
- ★ தாராளமாய்க் கொள்கையால் வளர்முக நாடுகளுக்கு வந்து சேர்ந்த பல் தேசியக் கம்பனிகள் சனநாயக அரசாங்கங்கள் மீது மேலாதிக்கம் செலுத்துகின்றன.

இன்று அனைத்துலகரீதியாகப் பேசப்பட்டும், நடைமுறைப்படுத்தப்பட்டும் வரும் உலகமயமாக்கச் சிந்தனை, உலக நாடுகளின் கல்வி முறைகளிலும் மனித வள விருத்திச் செயற்றிட்டங்களிலும் பல தாக்கங்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்தி வருகின்றது. குறிப்பாக உலகமயமாக்கத்தின் முக்கிய அம்சங்களான சந்தைத் தத்துவம், தனியார் மயமாக்கல் என்பன கல்வித்துறையில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. கல்வி முறைகளின் மரவுவழி நோக்கங்களை நோக்குமிடத்து, நவீன உலகமயமாக்கத்தின் அம்சங்கள் இன்றைய கல்வி முறையுடன் பொருந்தி வராதன போலத் தோன்றும்.

- ★ காலங்காலமாகக் கல்வி முறைகள் உலகளாவிய ரீதியில் சமூகத்தின் பண்பாட்டையும் விழுமியங்களையும் தொடர்ந்து பேணி வந்தன.
- ★ அவற்றை இளந்தலைமுறையினருக்கு உணர்த்தி அவர்களைச் சமூகத்துடன் இசைந்து வாழச் செய்யவும் கல்வி நிறுவனங்கள் பயன்பட்டு வந்தன.
- ★ ஜேர்மன் நாட்டுச் சமூகவியலாளரான Durkhim வலியுறுத்திக் கூறிய சமூகமயமாக்கம் இன்றும் கூட பாடசாலைக் கல்வியின் முக்கிய குறிக்கோளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

இந்நிலையில் இன்று உலகமயமாக்கத்தின் விளைவாக தேசியக் கல்வி முறைகள் தமது தனித்துவ அம்சங்களை இழந்து உலகளாவிய கல்வி முறைகளை ஒத்த அம்சங்களைப் பெற்று வருகின்றன. தேசிய பாடசாலைகளில் காணப்பட்ட சுதேச அம்சங்கள் மங்கி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் நோக்கங்கள், கொள்கைகள், கல்வித்துறையின் முதன்மையும் முன்னுரிமையும் பெறும் அம்சங்கள் முக்கியமாகப் பாட ஏற்பாட்டு அம்சங்கள் என்பன உலகளாவிய கல்வி முறைகளை ஒத்தனவாய் ஒரு சீர்த்தன்மையைப் பெற்று வருகின்றன.

★ இதுவரை காலமும் கல்வி முறைகளில் ஏகபோக உரிமையைக் கொண்டிருந்த அரசாங்கங்கள், இன்று கல்வித்துறையிலிருந்து பின்வாங்கி வருகின்றன. பாடசாலைகளைத் தனியார்மயப்படுத்தும் செயற்பாடு மேலோங்கி வருகின்றது.

★ அரசாங்கப்பாடசாலைகள் வர்த்தக, தொழில் நிறுவனங்கள் போன்று சந்தைக் கேள்விகளுக்கு - பெற்றோர்களின் கோரிக்கைகளுக்கு (Market Demands) ஏற்பத் தம்மை மாற்றி வருகின்றன.

★ வர்த்தக நிறுவனங்கள் போன்று பாடசாலைகளும் நுகர்வோரைக் (பெற்றோர்களைக்) கவரும் முறையில் போட்டித் தத்துவத்தை ஏற்றுக்கொண்டுள்ளன.

ஒரு காலத்தில் பாடசாலைக் கல்வியின் முன்னேற்றங்கள் பற்றிய ஆய்வுகள் உள்நாட்டுப் பிரதேசங்கள்/மாகாணங்கள்/மாவட்டங்கள் என்பவற்றுக்கிடையிலான ஒப்பீட்டு ஆய்வுகளாக (Intra - Country or inter - District) விளங்கின. ஆனால் இன்று உலகமயமாக்கத்தின் விளைவாக ஒரு நாட்டின் கல்வித் தராதரங்களை ஏனைய உலக நாடுகளின் கல்வித் தராதரங்களுடன் ஒப்பிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக இலங்கையின் கல்வித்தராதரங்கள் இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா முதலிய நாடுகளின் தராதரங்களை எட்டியுள்ளனவா என்று ஆராயவேண்டியுள்ளது. புதிய நூற்றாண்டில் உலக நாடுகளின் இளைஞர்கள் தேசிய தொழிற் சந்தையில் மட்டுமன்றி சர்வதேச தொழிற்சந்தையில் வேலைவாய்ப்புக்களுக்காகப் போட்டியிட வேண்டிய நிலையை உலக மயமாக்கம் உருவாக்கியுள்ளது. இதனால் மனிதவள அபிவிருத்திக்கான பாடசாலைக் கல்வியானது முதலில் பின்வரும் அம்சத்தில் கவனஞ்செலுத்த வேண்டியுள்ளது.

> மாணவர்கள் உலகப் பிரஜைகளாகும் வகையில் பாடசாலைக் கல்வி அமைதல் வேண்டும். தமது அயல் நாடுகள் பற்றிய அறிவை மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டும். தனது பிராந்தியத்தின் புவியியல், வரலாறு, அரசியல் பற்றியும் பிராந்திய மொழிகள் பற்றிய அறிவும் இதிலடங்கும்.

திறந்த பொருளாதாரக் கொள்கையும் அதன் விளைவாக வளர்முக நாடுகளுக்கு வந்து சேர்ந்துள்ள பன்னாட்டுக் கம்பெனிகளும் உள்நாட்டில் வளர்ச்சி பெற்றுள்ள தனியார்துறை நிறவனங்களும் வேலைவாய்ப்புக்களை உருவாக்கி இருப்பதும் உண்மையே! ஆனால் வசதிகுறைந்த குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களின் வேலைவாய்ப்புப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. புதிய பொருளாதார ஒழுங்குமுறை வேண்டி நிற்கும் திறன்கள் அவர்களிடம் காணப்படவில்லை. சந்தைப் பொருளாதாரத்திற்குப் பொருத்தமான தேவையான திறன்களை வழக்கும் முறையில் வளர்முக நாடுகளின் மனிதவள விருத்திக்கான கல்விமுறை மாற்றப்பட வேண்டிய அவசியம் உண்டு.

மரபுவழியான நூற் கல்வி தேவையான திறன்களை வழங்கித் தொழிற் தராதரங்களை மேம்படுத்தத் தவறிவிட்டது. கல்வி முறையானது இளைஞர்களுக்குப் பொதுக்கல்வியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதுடன் நின்றுவிடாது, அவர்களை மனிதவளமாக விருத்தி செய்ய வேண்டும் என்பது புதிய உலகமயமாக்கம் விதிக்கும் நிபந்தனையாகும்.

ஒரு நாட்டில் கிடைக்கப்பெறும் தரமான ஊழியர்களும் அவர்களுடைய தொழிற்தேர்ச்சியும் இருவகையான முக்கியத்துவத்தைக் கொண்டவை.

1. ஊழியர் தராதரங்கள் (Labour Quality) கல்வி முறையின் வெளிநிலை வினைத்திறனை (External efficiency) அதிகரிக்க உதவும் (வெளிநலை வினைத்திறன் என்பது கல்வி கற்று வெளியேறுபவர்கள் பிரதான பொரளாதார நடவடிக்கைகளுடன் தம்மைப் பொருத்திக் கொள்வதைக் குறிக்கும்). இன்றைய கல்வி முறையானது இவ்விடயத்தில் தோல்விகண்டு விட்டது.
2. சிறந்த ஊழியர் தராதரங்கள் வெளிநாட்டு மூலதனத்தைக் கவருவதற்கு அவசியமானவை.

வளர்முக நாடுகள் "கல்வியும் மனிதவள விருத்தியும்" என்ற அம்சத்தைக் கருத்திற் கொள்ளவில்லை. திறந்த சந்தைப் பொருளாதாரம் வளர்முக நாடுகளின் ஊழியர்களைப் பயன்படுத்தி முதலீடுகளை ஊக்குவிப்பதுடன் வளர்முக நாடுகளுக்கு வெளியே உள்ள பொருளாதார முறைகளுக்குத் தேவையான ஊழியர்களையும் வழங்கி உதவுகின்றது. இவ்வாறு குடியகலும் ஊழியர்கள் வளர்முக நாடுகளுக்கு ஏராளமான வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்துக் கொடுக்கின்றனர். ஆயினும் குடியகன்று செல்லும் ஊழியர்களின் தொழில் தேர்ச்சி மிகவும் குறைவானதே! வளர்முக நாடுகள் மிகச் சாதாரணமான, மலிவான ஊழியர்களை வைத்துக் கொண்டே வெளிநாட்டு மூலதனத்தைத் கவர முயலுகின்றன.

வளர்ச்சியுறும் பொருளாதார முறைகளின் ஊழியர் தராதரங்கள் சிறப்பாக அமையுமானால்

– ஊழியர்களுக்கு உயர்ந்த வேதனங்கள் கிட்டும்
– கற்ற இளைஞர்களுக்கத் தொழில் வாய்ப்புக்கள் கிட்டும்
– உயர் தொழில்நுட்பக் கம்பெனிகள் கவர்ந்திழுக்கப்படும்
– பொருளாதார மாற்றமும் வளர்ச்சியும் இலகுபடுத்தப்படும்

இலங்கையில் தனியார்துறை நிறுவனங்கள் இளைஞரிடம் எதிர்பார்க்கும் மனிதவளத் திறன்கள்.

– ஆங்கில மொழித் தேர்ச்சி
– தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சி
– சிறந்த தொடர்பாடல் திறன்
– தலைமை தாங்கும் திறன்
– குழுவில் சுமூகமாகப் பணியாற்றும் திறன்
– பிரச்சினை தீர்க்கும் திறன்
– புத்தாக்கச் சிந்தனை
– இடர்களை எதிர் நோக்கும் ஆற்றல்
– புதிய கருத்துக்களை ஏற்கும் மனப்பாங்கு

**ஆதாரம் :** இலங்கைத் தனியார் துறையினரிடம் செய்யப்பட்ட ஆய்வுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த. சா/நி, உ/நி பரீட்சைகள் மனனம் செய்தல் போன்ற குறுகிய நோக்குகளை முக்கியத்துவப்படுத்துகின்றன. பிரச்சினை தீர்க்கும் திறன், இடமாற்றம் செய்யக்கூடிய திறன்கள் என்பவற்றை வலியுறுத்துவதில்லை... பல்கலைக்கழகப் பட்டதாரிகள் வேலையில் அமர்த்தப்பட முடியாதவர்கள் (Unemployable) கம்பெனிகளின் உயர் நிர்வாக பதவிகளில் இளைஞர்கள் பற்றாக்குறை உண்டு... பல்கலைக்கழகப் பட்டதாரிகளிடம் உயர் தொழில்நுட்ப அறிவு உண்டு. ஆனால் அவற்றைப் பிரயோகிக்கும் ஆற்றல், பகுப்பாய்வுத் திறன், மனிதத் தொடர்புத் திறன் என்பன அவர்களிடம் இல்லை.

★ பெந்தோட்டையில் நடைபெற்ற இலங்கை வர்த்தக சபை நடாத்திய கல்வி மகாநாட்டில் கூறப்பட்டவை.

வளர்முக நாடுகளின் பாடசாலைக் கல்வியும் பல்கலைக்கழகக் கல்வியும் மனிதவள விருத்தியை ஏற்படுத்தி புதிய உலகமயமாக்கச் சூழலுக்கு, குறிப்பாகத் தனியார் துறை, பல்தேசிய நிறுவனங்கள் வழங்கும் வேலைவாய்ப்புக்களுக்குப் பொருத்தமான இளைஞர்களை உருவாக்கக் கருத்திற் கொள்ள வேண்டிய திறன்களைச் சுருக்கமாக நோக்குவோம்.

ஆங்கில மொழித்தேர்ச்சி புதிய பொருளாதார ஒழுங்கு முறையானது ஆங்கிலத்தின் உலகளாவிய தேவையை உறுதிப்படுத்தியுள்ளது. முன்னொரு போதும் இல்லாதவாறு சீனா, தென்கொரியா, தாய்லாந்து, இந்தோனேசியா, மொசாம்பிக், வியட்னாம் முதலிய நாடுகளில் ஆங்கிலம் கற்போர் தொகையும் கற்பிக்கும் நிலையங்களும் அதிகரித்துள்ளன. ஆங்கிலக் குடியேற்றங்களாக இருந்த இலங்கை போன்ற நாடுகளில் ஆங்கிலக்கல்விக்கு ஊக்கமளிக்கப்படவில்லை. சுயமொழிகள் போதன மொழிகளாக்கப்பட்டு அதன் பயனாகப் பொதுக்கல்வியும் எழுத்தறிவும் மக்கள் மத்தியில் துரிதமாகப் பரவிற்று. ஆனால் இன்று ஆங்கிலம் ஒரு முக்கிய தேவையாகி விட்ட நிலையில் இலங்கை போன்ற நாடுகள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. இன்று ஆங்கில மொழிக்கல்வியில் புதிதாக அக்கறை செலுத்தப்படுகின்றது. இலங்கை போன்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்களும் மனிதவள அபிவிருத்திக்கொள்கைகளும் ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியுள்ளது. இலங்கையில் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள

**புதிய முயற்சிகளாவன:-**

★ சகல ஆசிரியர் கல்வி நிலையங்களில் ஆங்கில பாடத்தைச் சகல ஆசிரியர் பயிலுனர்களும் பயில வேண்டும்.

★ பாடசாலைகளில் தரம் 1 இலிருந்து ஆங்கில மொழி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

★ க.பொ.த உ/நி வகுப்புக்களில் சகல மாணவர்களும் ஆங்கில மொழியைப் பயில வேண்டும்.

★ க.பொ.த உ/நி வகுப்புக்களில் விஞ்ஞான பாடங்களை ஆங்கில மொழியில் கற்பிக்க அனுமதியுண்டு.

★ பல்கலைக்கழக மட்டத்தில் ஆங்கில மொழி வழிப் பயிற்சி நெறிகளுக்கு ஊக்கம் வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில்நுட்பம்

தொழில்நுட்ப அறிவின் துரிதமான வளர்ச்சியின் காரணமாக, வழமையான எண்ணறிவு, எழுத்தறிவு என்பன எதிர்காலத்துக்குப் பொருத்தமற்றனவாகிவிட்டன. ஆயினும் வளர்முக நாடுகளின் அடிப்படைக் கல்வியில் தொழில்நுட்பக் கல்விக்கு எதுவித இடமும் அளிக்கப்படவில்லை. மேலை நாட்டுத் தொழில்நுட்பத்தை வளர்முக நாடுகளில் பரவச் செய்ய பாடசாலைக் கல்வியே துணையாக அமையும்.

தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது தொடர்பாடலை இன்று பெரிதும் துரிதப்படுத்தியுள்ளது. "பூகோளக் கிராமம்" என்னும் எண்ணக்கரு இன்று நடைமுறையில் சாத்தியமாகி விட்டதென்றால் அதற்குத் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட துரிதமான மாற்றங்களே முக்கிய காரணம்.

(c) 4,000 housing program under Indian Government Grant Fund – This program is implemented in Nuwaraeliya and Badulla districts; Contracts will be awarded for construction of 1,400 houses in phase-I and the preliminary investigations have been completed for balance 2,600 houses. Priority is given to landslide affected families.

(d) Implementation of "new life" housing program - under the new life housing programme, families living in line-rooms will be provided with individual houses. Currently, 747 houses are under construction at various stages.

(e) Granting title deeds for estate houses- The Ministry of Plantation Infrastructure Development is working closely with the Ministry of Plantation Industries to issue initially the possessional deeds and finally freehold title deeds for estate houses to grant ownership rights to the beneficiaries enabling them to mobilize funds from financial institutions.

(f) Re-roofing 1,000 line rooms which are in dilapidated conditions as an interim measure till new houses are provided. This is being implemented with the contribution of the estate management.19 new water projects, Construction of 700 latrines and Renovation of 21 Child Development Centers for the needy plantation community are implemented with Government of Sri Lanka funds.

Under the World Bank programme special focus has been given to water supply and sanitation and early childhood development. Accordingly the following two projects are under implementation to uplift the quality of life of the plantation community.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) **Water Supply and Sanitation Project** – under this project 150 water supply projects are being identified for implementation in Hatton and Nuwara eliya regions. Further, 10,000 latrines are scheduled to be constructed to improve sanitary conditions of the plantation community. Estimated Cost of the project is US$ 14 Mn

(ii) **Early Childhood Development (CDCs) Project** – The objective of the projects is to improve the quality of early childhood development activities of 3-5 years children in the plantation areas. Estimated Cost of this programem is US$ 10 Mn. Project will commence in October 2015. Number of New CDCs to be constructed is 140 with building, playground, equipment for building and playground; CDCs to be upgraded (from C&D grading) in the plantation sector is 175 . Construction of new play area with equipment is 175 and renovation of existing play area with equipment is 210. The project includes conduct of Diploma programmes for ECD teachers, advanced refresher training and Parents awareness.

## Ten Year National Plan of Action for Inclusive Development

The Ministry is formulating a Ten Year National Plan of Action for the social development of the plantation community covering 2015 to 2025 with the support of the UNDP. The objectives of the National Plan of Action are to improve the Millennium Development Goals (MDGs) and Sustainable Development Goals (SDGs) of the plantation community. The major goals of the NPA are to reduce the level of poverty of the plantation community; raise the living standards of the estate community in par with the others; and enable the plantation community to fully enjoy the political, social and economic rights.

The Government's focus is to ensure an inclusive development whereby the plantation community is brought into the mainstream of the economic development and ensure the fruits of development and the rights are equally enjoyed by the plantation community.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறப்பட்ட பராயமடையாதவர்களின் காணிகளை காலவிதிப்புக்கட்டளைச் சட்டத்திற்கு அமைய மீட்டெடுக்க முடியுமா?

பொது நூலகம் யாழ்ப்பாணம்

**அருணகிரிநாதன் திலீப்காந்தன்** BBA (Hons)
இறுதி வருடம், சட்டக்கல்லூரி

சிறுவர்களின் பெயர்களில் காணிகளையோ அல்லது அசையாத சொத்துக்களையோ எத்தனை வயதிலும் எழுதி வைக்க முடியும் அதற்குக் கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் பருவ வயதை அடைந்திராத காலத்தில் அவர் காணி ஒன்றிற்கு உரிமையாளராக இருப்பின் அக்காணியில் எவரேனும் அத்துமீறிப் பிரவேசித்து ஆட்சியுரிமை கோரினாலும் அத்தகைய ஆட்சியுரிமை அக்குறித்த உரிமையாளர் பருவ வயதை அடையும் காலம் வரை செல்லுபடியாகாது என தீர்க்கப்பட்டுள்ள பல வழக்குகள் கூறுகின்றன.

இத்தகைய நிலைமைகளில் அவ்வாறு அத்துமீறி ஆட்சியுரிமை கோருவோரின் ஆட்சியுரிமைக்காலம் அவ் இளம்பராயங்கள் பருவ வயதை அடையும் தினத்திலிருந்தே ஆரம்பமாகின்றது. எனவே அக்காணியில் அதன் இளம் பருவ உரிமையாளர் பருவ வயதை அடையும் தினத்திலிருந்து

1. தொடர்ச்சியான
2. இடையூறற்ற
3. குழப்பப்படாத

தொடர் ஆட்சியுரிமையைப் பத்து ஆண்டுகள் கொண்டிருந்தால் அவர் அக்காணிக்கு ஆட்சியுரிமை மூலம் உரித்துக்கோர முடியும்.

காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தின் மூன்றாம் (03) பிரிவில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> "ஏதேனும் வழக்கில் குறிக்கப்பட்ட காணியில் அல்லது அசையாத ஆதனத்தில் குழப்பப்படாத, இடையூறுகளற்றதுமான உடைமையை அவ்வழக்கு தொடுக்கப்படுவதற்கு முந்திய பத்தாண்டுகளாக எதிராளி அல்லது அவர் எவரின் கீழ் உரிமை கோருகின்றாரோ அவர், சகலருக்கும் எதிரான அல்லது சுதந்திரமான உரித்துக்கொண்டிருந்தார் என்ற நிரூபணமானது அவ்வெதிராளிக்கு சார்பாக செலவுத்தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுவதற்கு அவரை உரித்துடையவராக்குதல் வேண்டும்."

மேற்கூறியவாறு ஒருவர் தான் உடைமை கொண்டுள்ள சிறுவர் ஒருவரது காணிக்கு ஆட்சியுரிமை மூலம் உரித்தைக் கோருவதாயின் அதற்கான பத்தாண்டு காலம் அச்சிறுவன் பருவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதை அடைந்த தினத்திலிருந்து ஆரம்பமாகும் என்பதைக் கருத்தில் கொள்ளல் அவசியம். இங்கு பருவ வயது எனக் குறிப்பிடுவது 18 வயது ஆகும். எனவே சிறுவன் ஒருவன் 18 வயதை அடைந்த தினத்திலிருந்து இது நடைமுறைக்கு வருகின்றது. உதாரணமாக இப்போது ஒருவருக்கு 32 வயது எனக் கொள்வோம். இவருக்கு 12 வயதாக இருக்கும்போது இவரது தந்தை 2 ஏக்கர் காணியை இவரது பெயரில் எழுதி வைத்துவிட்டு மரணித்துவிட்டார். அப்போது அவர் சிறுவயதில் இருந்த காரணத்தினால் அந்தக் காணியை அவரால் பராமரிக்க முடியவில்லை. இதனால் அக்காணியில் உறவினர்கள் எவ்வித அனுமதிகளுமின்றி வீடுகள் கட்டிவிட்டார்கள். எனினும் இவரது கையில் இப்போதும் அக்காணியின் முழு உறுதியும் ஏனைய சான்றுகளும் கைவசமுள்ளன தற்போது சுமார் 20 வருடங்களின் பின்னரும் அக்காணியை மீளப்பெற்றுக்கொள்வதற்குக் கால விதிப்புச்சட்டத்தில் இடம் உண்டா? அவ்வாறான நிலையில் காணியை மீளப்பெற நாம் என்ன செய்யவேண்டும் என நோக்குவோம். இவ்வாறான சூழ்நிலையில் குறிப்பிட்ட நபருக்கு 18 வயது ஏற்பட்டு இப்போது மேலதிகமாக 14 ஆண்டுகள் கழிந்துள்ளன. இதனால் அக்காணியில் தற்போது அத்துமீறிக் குடியிருப்பாளர்களுக்குக் காலவிதிப்பு உரிமை கோரும் உரிமை உருவாகியுள்ளது என்றே கொள்ளவேண்டும். எனினும் பராயமடையாதவர் 18 வயதினை அடைந்த பின்னர் உடமையைக் கோருபவர்கள் பாதுகாவலனாக அல்லது உறவினராக குறித்த காணியில் குடியிருப்பின் அவ்வாறானவர்கள் பாதகமான உடைமையை கோருவதாயின் அவர்கள் பாதகமான உடைமையைக் கோருவதை எவ்வகையிலேனும் அப்பராயமடையாதவர் 18 வயதைக் கடந்த பின்னர் அவரிற்கு உணர்த்திய காலத்திலிருந்தே அவர்களுடைய பாதகமான உடைமைக் காலம் ஆரம்பமாகும் என்பதாகும்.

சில்வா Vs. லெட்சுமன் செட்டி (23 N. L. R 372) எனும் வழக்கில் இரண்டு பராயமடையாதவர்களின் ஆதனத்தை விற்பனை செய்த தந்தை அதற்கான பிரதிபலனையும் பெற்றதுடன் பராயமடையாதவர்கள் பருவ வயதை அடைந்ததும் உறுதி சாதனம் நிறைவேற்றித் தரப்படும் எனும் உடன்படிக்கையின் அடிப்படையில் ஆதனத்தை ஒப்படைத்தார். எனினும் பராயமடையாதவர்கள் பருவ வயதை அடைந்ததும் 15 வருடங்கள் கழிந்த பின்னர் தமது உடைமையைப் கேட்டு வழக்குத்தாக்கல் செய்தனர். இங்கு தீர்ப்பளித்த நீதிபதி கொள்வனவாளரின் உடைமை எதிர்முறையானது (Adverse) என்பதுடன் அவர் காலவிரிப்பு உரித்தைக் கொண்டுள்ளதாகவும் தீர்ப்பளித்தார்.

எனினும் இவ்வாறு கால விதிப்புச் சட்டத்தின் பிரிவு 3 இற்கான விதிவிலக்காகக் காணப்படுகின்ற பிரிவு 13 இலுள்ள சிறுபராயம் என்பது தொடர்பிலும், அது எவ்வகையான பராயமடையாதவர்களுக்கு பொருந்தும் என்பது தொடர்பிலும் ஆராய்கின்றபோது, பராயமடையாதவரைப் பொறுத்தவரை முதலாவது பிள்ளை பராயமடையாத காலத்திற்கு மட்டுமே ஆட்சியுரிமை ஆரம்பிக்கப்படமாட்டாது என்பதாகும். மேலும் ஏற்கனவே தொடங்கப்பட்ட ஆட்சியுரிமை பிணக்கு விடயமான ஆதனத்துக்கு வழியுரிமையாளராக பராயமடையாதவர் வந்துள்ள காரணத்தில் நிறுத்தப்படமாட்டாது என சின்னத்தம்பி எதிர் வைரவி எனும் வழக்கில் எட்டப்பட்டது.

அதேபோன்று 13ம் பிரிவில் காணப்படுகின்ற ''ஆயினும் வேறு ஒருவரது இயலாமை தொடர்பில் மீண்டும் காலம் கொடுக்கப்படமாட்டா'' எனும் வாசகம் திலகசிறி மெலிக்கே எதிர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிங்கிரி பண்டா (74 N.L.R. 296) எனும் வழக்கில் ஆராயப்பட்டது A என்பவர் B க்கு சொந்தமான காணியில் உடைமை கொண்டார் அப்போது B பராயமடையாதவராகக் காணப்பட்டார். அப்போது பராயமடையாத B இருக்க பராயமடையாத C வழியுரிமையாக வந்தவர். இங்கு தீர்ப்பளித்த நீதிபதி பிரிவு 3 க்கான A யின் பாதக உடைமை (Adverse Possession) பராயமடையாத B யின் இறப்பின் பின் ஆரம்பிக்கின்றதுடன் C பராயமடையாதவராக காணப்படினும் தொடர்ந்து செல்லும் வேறுவகையில் C A யின் உடைமையை குழப்பாத / இடையீடை ஏற்படுத்தாத வரை என்பதுடன் காலவிதிப்புச் சட்டம் பிரிவு 13 இன் படி மேலதிக காலம் கொடுக்கப்படமாட்டாது பராயமடையாத B யைத் தவிர வேறு எவருக்கும் என தீர்க்கப்பட்டது.

எனினும் காணியின் உண்மையான உரிமையாளர் தான் பதினெட்டு வயதை அடைந்த பிறகு

1. குறித்த காணியில் அத்துமீறிக் குடியிருப்போரிடம் தனக்குச் சொந்தமான காணியைத் திரும்பித் தரும்படி எழுத்துமூலம் கேட்டிருந்தால் அல்லது
2. அவர்கள் தனது காணியில் குடியிருப்பதற்கு எழுத்துமூலம் எதிர்ப்புத் தெரிவித்திருந்தால்
3. அவர்களை அக்காணியிலிருந்து வெளியேற்ற எந்த வகையிலாயினும் முயற்சிகள் ஏதும் செய்திருந்தால்,

இத்தொடர்ச்சியான பத்தாண்டு கால உடைமைக்கு அவற்றின் மூலம் இடையூறு அல்லது எதிர்ப்பு அல்லது தடை ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

அவ்வாறான ஏதேனும் ஒரு நிகழ்வைச் செய்ததாகக் காணி உரிமையாளர் நிரூபிக்கக் கூடியதாக ஆதாரத்துடன் இருந்து அதன் மூலம் அக்காணியில் குடியிருப்பவர்களது ஆட்சியுரிமைக் காலம் தொடர்ச்சியான இடையூறற்ற குழப்பப்படாத உடைமையல்ல என நிரூபிக்க முடியுமாயின் அக்கணியை மீளப்பெற முடியும். இதற்காக உரிய மாவட்ட நீதிமன்றத்தில் அக்காணியில் பலவந்தமாக குடியிருப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரும்போது அவ்வழக்கில் அவர்களால் மேற்கூறியவாரான குழப்பப்படாத, இடையூறற்ற, தொடர்ச்சியான பத்தாண்டு கால உடைமையை நிரூபிக்க முடியாமல் போனால் அவர்களைச் சட்டப்படி காணியிலிருந்து வெளியேற்றலாம்.

இவையனைத்திற்கும் மிக முக்கியமாகத் தேவைப்படுவது பருவ வயதை அடைந்த தினத்தின் பின்னர் தனது உரித்தை நிலை நிறுத்துவதற்கான செயற்பாடுகள் இடம் பெற்றதை நிரூபிக்க ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பதே மேற்கூறியவாறான இத்தகைய நடவடிக்கைகள் எதனையும் எடுக்மாமல் வெறுமனே காலத்தைக் கடத்தியிருந்தல் காணியை மீட்க முடியாது.

அக்காணியில் குடியிருப்பவர்கள் குறைந்த பட்சம் பத்து ஆண்டுகள் தொடர்ச்சியான ஆட்சியுரிமையை நிரூபிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். அதனால் அவர்கள் காலவிதிப்புச் சட்டத்தின் கீழ் காலவிதிப்பு உரித்தைக் கோரும் உரிமை பெற்றவர்களாகவும் மாறிவிடுவார்கள். இக்காணியில் குடியிருப்பவர்கள் இக்கால விதிப்பு உரித்தைக் கோருகின்றார்களா? என்பதைக் கண்டறிய விரும்பினாலோ அல்லது காணியை மீள ஒப்படைக்கத் தயாராக உள்ளவர்களா என்பதை அறிந்து கொள்ள விரும்பினாலோ மத்தியஸ்த சபையின் உதவியை நாடலாம். எனினும் 250,000/= குறைந்த பெறுமதியுடைய காணி எனின் மத்தியஸ்த சபைக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாயம் செல்ல வேண்டும் என்பதாகும். அதன் பின்னர் நீதிமன்றிற்கு செல்ல முடியும். ஆனால் பராயமடையாத ஆட்களின் ஆதனம் தொடர்பான வழக்கு நடவடிக்கையை மத்தியஸ்த சபை கேட்டு இணங்கமுடியாது. இதற்காக உரிய பகுதி மத்தியஸ்த சபைக்கு இக்காணி தனக்கு உரித்தானது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் பலவந்தமாக குடியிருக்கின்றார்கள் என்றும் அவர்களிடமிருந்து தமது காணியைப் பெற்றுத்தர வேண்டுமென்று கோரி விண்ணப்பிக்கலாம். அவ்விண்ணப்பத்தை ஏற்று மத்தியஸ்த சபை இரு சாராரையும் அழைத்து விசாரணை செய்யும். அங்கே காணி உரிமையாளர் தம்மிடமுள்ள உறுதி ஆவணங்கள் போன்றவற்றைக் காட்டி தமது உரித்தை எடுத்துக்கூறலாம். அப்போது அத்துமீறி இருப்பவர்கள் அதனை ஏற்றுக் கொள்கின்றார்களோ அல்லது ஒரு இணக்கப்பாட்டுக்கு வருகின்றார்களோ என மத்தியஸ்த சபை தீர்மானிக்கும். இதன்மூலம் காணியில் குடியிருப்பவர்களின் உண்மையான நிலைப்பாட்டை அறிந்து கொண்டு அதற்கேற்ப சட்ட நடவடிக்கை முன்னெடுக்கலாம்.

எனினும் மத்தியஸ்த சபையில் எதிராளி ஒரு இணக்கப்பாட்டுகவு வராவிட்டால் அதற்கான சான்றிதழை மத்தியஸ்த சபையில் இருந்து பெற்று மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவேண்டிய அவசியம் ஏற்படும். அத்தகைய வழக்கில் அக்குடியிருப்பாளரால் மேலே விபரித்துள்ளவரான தொடர்ச்சியான பத்தாண்டு கால ஆட்சியுரிமையை நிரூபிக்க முடியாமல் போனால் அல்லது வேறு வகையிலான தமது உரித்தை நிலை நாட்டத் தவறினால் அக்காணியை உரியவர் மீளப்பெற நீதிமன்றம் தீர்ப்பளிக்க இடமுண்டு.

எனவே அத்துமீறப்பட்ட பராயமடையாதவர்களின் காணிகளை / ஆதனங்களை கால விதிப்புச்சட்டம் பிரிவு 3 இற்கு அமைவாக பிரிவு 13 இல் கூறப்பட்ட விதிவிலக்கான சந்தர்ப்பங்களின் அடிப்படையில் அத்துமீறப்பட்ட பராயமடையாதவர்களின் காணிகளையோ / ஆதனங்களையோ மீட்டெடுக்க முடியும்.

உசாத்துணை


1. Prof. G. L. Peris, - The Law of Property in Sri Lanka
2. Wijayadasa Rajapaksha - PC, The Law of Property - I
3. 1871 ஆம் ஆண்டின் 22ம் இலக்க காலவிதிப்புக் கட்டளைச் சட்டம்
4. மத்தியஸ்த சபைக் கட்டளைச் சட்டம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய தமிழச் சமூகத்தில் சட்டம்

**நிரோஷா நாகலிங்கம்**

இறுதி ஆண்டு

## I. சட்டம் ஓர் அறிமுகம்

நாகரிக சமுதாயத்தின் இன்றியமையாத கூறுகளில் ஒன்றாகச் சட்டம் காணப்படுவதுடன் அது குற்றவாளிகளைத் தண்டித்துச் சமுகத்தின் அமைதியைப் பாதுகாப்பதைப் பிரதான நோக்கமாகவும் கொண்டு செயற்படுகிறது. சட்டமானது மனிதனின் நடத்தை மீது கட்டுப்பாட்டை விதிக்கிறது. அவனுடைய நடத்தை நல்ல விதமாக இருக்க வேண்டும் என சட்டம் எதிர்பார்க்கிறது. எனவே, மனித வாழ்வில் ஒழுங்கையும், கட்டுப்பாடையும் விதிப்பது சட்டம் எனலாம்.

அந்த வகையில் சட்டத்தின் தோற்றுவாய் பல வகைகளை உள்ளடக்கியுள்ளது. அது அரசினால் உருவாக்கப்படலாம், நீதிமன்ற தீர்ப்புக்களால் உருவாக்கப்படலாம், வழக்காறுகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள் போன்ற இன்னொரன்ன காரணிகளால் தோற்றம் பெற்றவையாக இருக்கலாம்.[1] அவை பொதுவாக அவ்வக் காலகட்டத்தை அடிப்படையாகக் கொண்டமைகின்றன.

சங்ககாலத்தில் வரையறுக்கப்பட்ட சட்டங்கள் இயற்றப்பட்டிருப்பதை அறிவதென்பது சற்று கடினமாகவே உள்ளது. ஆயினும் பண்டைய தழிழ்ச் சமுதாயத்தில் சமுக வழக்காறுகளே சட்டங்களாக விளங்கியுள்ளன. மூவேந்தர்களின் ஆட்சிக் காலத்தில் அரசுரிமை பரம்பரையாக பெறப்பட்டது. தேர்தல் இடம்பெற்றதாக தெரியவில்லை. அனைத்து அதிகாரங்களும் அரசனிடமே காணப்பட்டன. அக்காலத்தில் முடியாட்சியே நிலவியது. வேறு முறையிலான ஆட்சி முறை இருந்ததற்கான சான்றுகள் இல்லாதபோதிலும் அரசனுக்கு சிறப்பு செய்வது அக்கால வழக்காகவும் இருந்தது. அரசன் மக்களுக்கு நன்மை செய்வதனை குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்நாட்டில் கவலைகள் நீங்கி மகிழ்ச்சி நிலவும், மக்கள் மன்னனை போற்றுவார்கள். இதனை வேந்தன் நன்குணர்ந்து செயற்பட வேண்டும்.[2]

மேலும் அரசனின் ஐந்து கடமைகள் பற்றி தொல்காப்பியம் கூறுவதையும் நோக்கலாம். இதனை இளம்பூரனார் ஓதல், வேண்டல்,ஈதல், படைவழங்குதல், குடியோம்புதல் என்னும் ஐந்து கடமைகள் அரசனுக்குரியது என பொருள் விளக்குகிறார்.[3] இதன்மூலம் அக்காலத்தின் அரசனில் கடமைகள் பற்றி அறிய முடிகிறது.

---

1 சிறின் சிறிவர்தன, (2012), "சட்டத்தின் மூலங்கள்" பயிற்சி நெறி கைந்நூல், கொழும்பு,.ப.15.

2 இராமலிங்கம், அ. (2013),சங்க இலக்கியத்தில் வேந்தர்,சென்னை, மோனார்க் கிரா/பிக்ஸ், பக்.33-5.

3 இராமலிங்கம், அ. (2013), மேகு.நூல், ப.214.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைத் தமிழ்ச்சமுகத்தில் நீதியை விளக்கும் நூல்களில் ஒன்றாக தர்மசாஸ்த்திரமும் காணப்பட்டுள்ளது. இந்நூலில் வழக்காறுகளின் உபயோகம் பற்றி ஆட்சியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.[4]**"ஒப்பீட்டு அரசியல்"** எனும் நூலில் தமிழ்மாறன் பண்டைய தமிழ் சமுகத்தில் சட்டம் தொடர்பாக பின்வருமாறு கூறுகின்றார்.

> "யாதேனும் ஒரு தேசத்தை குறித்த மன்னனோ இல்லையேல் ஆட்சியாளனோ கைப்பற்றும்போது அந்நாட்டில் ஏலவே இருந்த வழக்காறுகளுக்கும், மரபுகளுக்கும் முன்னுரிமை வழங்கி செயற்படவேண்டும். புதிய சட்டங்களோ, நெறிமுறைகளோ கொண்டுவரப்பட்டாலும் கூட இவற்றுக்கான முக்கியத்துவத்தைக் கட்டாயம் வழங்க வேண்டும்" என குறிப்பிடுகின்றார்.

மேலும் அக்காலத்தில் வடவரும், தென்னவரும் மரபுகளையும் வழக்காறுகளையும் சட்டமாக பின்பற்றி வந்துள்ளனர். அவையே அக்காலத்தில் மரபுவழிச் சட்டங்களாகவும் காணப்பட்டுள்ளன.[5]மேற்கூறப்பட்ட கருத்துக்கு மேலான ஒரு விளக்கத்தை **ஞாக்ய வல்யரின் ஸ்மிருதியில்** இவ்வாறு குறிப்பிடுகின்றார். அதாவது குறித்த ஆட்சியாளன் நாட்டைக் கைப்பற்றும்போது அந்நாட்டில் காணப்பட்ட மரபுகள், பழக்கவழக்கங்களில் எவ்வித மாறுதல்களையும் மேற்கொள்ளாது ஏற்கனவே காணப்பட்ட மரபுகளை பின்பற்ற வேண்டும் என்கிறார்.[6]

**உதாரணம்:**

நீதிமன்ற நடவடிக்கை முறைகள்
குடும்ப பழக்கவழக்கங்கள்

ஆனால் இந்த வழக்காறுகளானவை வேதங்கள் அல்லது ஸ்மிருதிகள் ஆகியவற்றுக்கு மாறுபடின் பின்னையவையே மேலோங்கும் என்றும் **அபஸ்தம்பா தர்ம சூத்திரத்தில்** அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பண்டைய தழிழத்தில் சட்டவழக்குகளை நடாத்திய விதமும் நீதி நிர்வாக நடவடிக்கை முறைகளின் ஒழுங்கும் **சுக்கிர நீதி சாஸ்திரத்தில் அத்தியாயம் இரண்டில்** விரிவாக கூறப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது[7].

அக்காலத்தில் தற்போதுள்ளது போல் சட்டம் இயற்றுவதற்கான சட்டமன்றம் இருந்ததாக தெரியவில்லை. அன்று மன்னரே நீதி, நிர்வாகம் முதலிய பல பொறுப்புக்களுக்குத் தலைவராக இருந்துள்ளார். அரசருக்கு ஐம்பெரும் குழு, எண்பேராயிரம் என்ற பல்வேறு துறைகளில் அனுபவம் கொண்ட அமைப்புக்கள் உதவியாக இருந்தன.[8] இவர்கள் தொன்று தொட்டு இருந்த மரபுகளை சட்டவடிவில் பயன்படுத்தி ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

---

4 தமிழ்மாறன்,வி.ரி. (1998),ஒப்பீட்டு சட்டம், கொழும்பு,unie arts previte limited, பக்.127-141.

5 தமிழ்மாறன்,வி.ரி. (1998), மே.கு.நூல்,ப.126-127.

6 தமிழ்மாறன்,வி.ரி. (1998), மே.கு.நூல், ப.127.

7 தமிழ்மாறன்,வி.ரி. (1998), மே.கு.நூல், ப.141.

8 சந்திரன், வி.(2002),சட்டமொழிப்பெயர்ப்புக் கொள்கைகளும் செயல்முறைகளும், சென்னை, கேசர் ஆப்செட், ப.47.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் இந்த அமைப்புக்களில் நீதி நிர்வாகத்திற்குப் பொறுப்பானவரிடம் பொறுப்பை ஒப்படைத்து விடுவார். இவர்களே விசாரணை செய்து தீர்ப்பு வழங்குவர். தீர்க்க முடியாத பிரச்சினைகள் மாத்திரமே மன்னரிடம் கொண்டு செல்லப்படும். இங்கு நீதி வழங்கும் கூடத்தை **'அறக்களம்'** என அழைத்துள்ளனர். இதன் முலம் அறக்களம் இருந்ததே தவிர சட்டமன்றம் காணப்பட வில்லை என்பது புலனாகிறது. மேலும் சோழர் தலைநகரில் இருந்த கூறையுர்ச்சபை நீதிமன்ற முன்மாதிரியாக விளங்கியது என புறநானூறு கூறுகின்றது.

இந்த சபையானது நீதிமுறையில் பழந்தழிழ் நாட்டு மரபு வழிச் சட்டத்திற்கு ஏற்பவே நீதி வழங்கியதும் குறிப்பிடத்தக்கது. அறத்தினை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டதே பண்டைய தழிழ் மன்னர்களின் அரசியல் சட்டமாகும்.மேலும் அக்காலத்தில் வேந்தர்கள் போரையும் அறத்தில் நின்றே புரிந்திருக்கின்றனர் என புலவர் செந்துரைமுத்து என்பவரால் "தமிழர் போரியல்" என்ற நூலில் கூறியுள்ளார்.

இவ்வாறாக அறத்தில் நின்று போர் புரிந்தமை, வழக்காறுகளை புறக்கணிக்காமல் ஏற்றுக் கொண்டமை மூலம் அவர்கள் சட்டத்திற்கு கொடுத்த முக்கியத்துவம் புலனாவதுடன், சட்டப்படியான ஒரு ஆட்சி முறை பண்டைய சமுகத்தில் நிலவியிருக்கிறது என்பதும் புலனாகிறது.

## 2. பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நீதி

நீதி எனப்படுவது இயங்குதல், வழிக்காட்டுதல், செயலாட்சி, நடத்தை, தகுதி, நடுநிலமை தவறாமை, மரபொழுங்கு, ஒழுக்கம், அறம் என்ற பல பொருட்களை உணர்த்துகிறது.[9] நேர்மை, உண்மை போன்ற சொல்லாடல்களையும் குறிப்பிடலாம். சங்க இலக்கியம் நீதி எனப்படுவது எம்மவர் என்று இரங்காது அவர் செய்த குற்றத்துக்குத் தக்க தண்டனை வழங்க வேண்டும் என்கிறது.

நீதி என்ற சொல்லுக்கு பல்வேறுபட்ட கருத்து விளக்கங்கள் காணப்படுகின்றன. இது சட்டத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. நீதியை குறிக்கோளாகக் கொண்டு தான் சட்டம் இயங்குகிறது. நீதி என்பது வெறுமனே வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்குவது மட்டுமன்றி மக்களின் வாழ்வின் பல துறைகளிலும் அவர்களுக்கு நீதி கிடைக்க செய்வது தான் அரசின் உயர்வான நீதியாகும்.

அரசநீதி என்பது மக்களைத் துயரங்களில் இருந்து காப்பதே ஆகும். நீதி வழுவாமையே "கொற்றம்" என அழைத்தனர்.[10]பண்டைய தமிழ் சமுகத்தில் அரசன் நீதி தவறாது ஆட்சி செய்ய வேண்டும் இல்லையெனில் மக்கள் மன்னன் மீதே குற்றம் சுமத்துவர் ஆகையால் மன்னன் முறையாக நீதியாக நடந்துக் கொள்ள வேண்டும் என புலவர்கள் பாடல்களினூடாக வலியுறுத்தியுள்ளனர்.

சங்ககாலத்தில் மன்னனே நாட்டில் தலைமை நீதிபதியாக விளங்கினான். அவனுடைய அவையே தலைமை நீதிமன்றமாகவும் இருந்தது. அதாவது மக்கள் முறை வேண்டியும், குறை

9 ஜமாஹிர்.எம்.பீ, (2010), மெய்யியல் பிரச்சனைளும் பிரயோகங்களும்,மாவனல்ல,அ.த.அ offset printers, g.181.

10 இராமலிங்கம், அ. (2013), மே.கு.நூல், பக்.216.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியும் மன்னனை அணுகும்போது அவன் காட்சிக்கு எளியவனாக இருக்க வேண்டும் என சான்றோர் அறியுறுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.[11]

நீதி வழங்குதல் **"முறை செய்தல்"** எனப்பட்டது. அறநெறி தவறாமைக்கு செங்கோலே ஆதாரமாக இருந்தது. மன்னன் அரசனிடம் குற்றம் கண்டால் தீர ஆராய்ந்து அவனை தண்டிக்க வேண்டும் என புலவர்கள் பாடல்களினுடாக வலியுறுத்தினார்கள்.

அன்றைய தமிழ்ச் சான்றோர் மன்னனை மதிப்பிடுவதற்கு நீதிமுறையே அடிப்படையாக இருந்தது என்பதினை அறியலாம். அன்றைய மன்னர்கள் நீதி தவறிய போது உயிரை விடவும் துணிந்தவர்களாகக் காணப்பட்டனர். எடுத்துக்காட்டாக மனிதனுக்கு மட்டுமன்றி விலங்குகளுக்கும் கூட நீதி வழங்க வேண்டும் என வற்புறுத்தி மனுநீதி சோழன் தன் மகனைக் கொன்றான். நீதிக்காகத் தன்னையே கொடுத்த சிபி வேந்தனையும் குறிப்பிடலாம்.[12]

ஒரு விடயத்தினை நன்றாக ஆராயாது தீர்ப்பு வழங்கிக் கோவலனைக் கொன்ற பாண்டிய மன்னனின் உயிர் மனம் வருத்தப்பட்டு உடனே பிரிந்தது. இதுவும் நீதிக்காக அரசன் தன் உயிரையும் கொடுத்தான் என்பதை சிலப்பதிகாரம் காட்டுகிறது[13].

குற்றம் செய்தமைக்காகத் தன் கையைக் குறைத்துக் கொண்டான் பொற்கை பாண்டியன். இவ்வாறான சம்பவங்கள் ஊடாக பண்டைய தமிழ்ச் சமுகத்தில் எவ்வாறு நீதி பேணப்பட்டு வந்திருக்கிறது என்பதும் அரசர்கள் நீதிக்காக தங்களை தியாகம் செய்து ஆட்சி நடவடிக்கையினை மேற் கொண்டிருக்கின்றனர் என்பதும் புலனாகிறது.

பண்டைய தமிழ் வேந்தர்களின் ஆட்சிக்காலத்தில் சிற்றூர்களில் நீதியை நிர்வகிக்க **முறைவழங்கும் அவைகள், பொதியில், மன்றம், அம்பலம், அவை, அவைக்களம்** என பலப்பெயர்களில் நிறுவனங்கள காணப்பட்டன. ஊர்களில் நிகழும் குற்றங்களை அறிந்த இவ் அவையினர் குற்றம் புரிந்தோரைத் தண்டித்தவர்களாகவும் உள்ளனர்.[14] அக்காலத்தில் தலை நகரங்கள் தோறும் நீதி வழங்கும் அவைகள் அரசர்களால் அமைக்கப்பட்டிருந்தன.

அவை நீதியை நிர்வகிப்பதில் சிறப்பாகச் செயற்பட்டதோடு குற்றவாளிகளை இனங்கண்டு தண்டனை வழங்குவதினையும் விட்டுவிடவில்லை.[15] கள்ளுர் வழக்கொன்றில், அறன் பிறழ்ந்தவன் ஒருவன் இளமங்கையினைக் கற்பழித்து விட்டு,"அவளை நான் கண்டதே இல்லை" எனக் கூறினான். இவ் வழக்கை அந்த பெண் ஊர் மன்றத்தாரிடம் முறையிட்டாள். ஊர் அவை இக்குற்றத்தை தீர விசாரித்து இனங்கண்டு அவளை கற்பழித்த அவனை விசாரித்து குற்றவாளியென இனங்கண்டு அவனை பெரிய மரத்தில் கட்டி அவன்மேல் சாம்பலைக் கொட்டி தண்டனை வழங்கியப்போது கூடியிருந்த மக்கள் அவன் நாணும்படி ஆரவாரம் செய்தனர்.

---

11 மே.கு.நூல், ப.217.

12 தட்சணாமூர்த்தி,அ.(1994),தமிழர் நாகரீகமும் பண்பாடும், மெட்ராஸ்,M.S.printing works, பக்.12-28.

13 சோமசுந்தரனார், பொ.வே. (1969), சிலப்பதிகார மூலமும் உரையும் மெட்ராஸ், அப்பர் அச்சகம்.

14 சந்திரன், வி.(2002), மே.கு.நூல்,ப.48.

15 சந்திரன், வி.(2002), மே.கு.நூல், ப.49.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிகழ்ச்சியினை மதுரைத் தமிழ் கூத்தனார் கடுவன் மன்னனார் குறிப்பிட்டுள்ளதை உதாரணமாகக் கொள்ளலாம்.[16] இதன் மூலம் இவ் அவைகள் நீதிக்காகப் போராடியுள்ளன என்பதினை அறிய முடிகிறது.

இத்தகைய நீதி வழங்கும் மன்றங்கள் நீதி வழங்குவது மட்டுமல்லாமல் மக்கள் உள்ளத்திலே உள்ள அச்சத்தினையும், வருத்தத்தையும், பொருட்கள் மேல் கொண்ட பற்றினையும் நீக்கி செற்றமும், உவகையும் செய்யாமல் மக்களை பாதுகாக்குமென மதுரைக்காஞ்சி கூறுகின்றது.[17]

நீதி வழங்க ஆவண சான்றுகளும்,சாட்சிகளும் ஆதாரமாக அமைந்தன .அதனை **"கரி"** என்பர். பொய்யாக சான்று கூறுபவன் இழிந்துரைக்கப்பட்டான். அவனுக்கு நாக்கு அழுகி விடும் என சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகிறது. அக்குற்றத்திற்கு தண்டனையும் உண்டு.[18]

அதுமட்டுமன்றி பிறன்மனை நயத்தவர்கள் கால் வெட்டப்பட்டனர். அல்லது கொல்லப்பட்டனர் என நாலடியார் கூறுகின்றது.[19] அயல் நாட்டை சேரந்தவர்கள் ஒற்றறிய வந்து சிக்கிக் கொண்டால் அவர்களது தலையைத் துண்டிக்குமாறு ஆணையிடப்பட்டது. இளந்தத்தன் என்னும் புலவன் ஒற்றன் எனத் தவறாகக் கருதப்பட்டுக் கொல்லப்பட இருந்த வேளையில் கோவூர்கிழார் வந்து காப்பாற்றியதைப் புறநானுறு கூறுகிறது.[20]

இவ்வாறாக குற்றங்களைப் புரிந்தோருக்கு அரசன் வழங்கிய தண்டனை கொடுமையாக இருந்தபோதிலும் அது தவறாகக் கருதப்படவில்லை. மாறாக அது மன்னனுடைய கடமையாக கருதப்பட்டது.

பண்டைய தமிழகத்திலே நீதி நூலாக விளங்கிய மனுதர்ம சாஸ்திரத்திலும் நீதிக்கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. அதாவது மனு என்றால் நீதி என்றனர். இதில் பிராமணன்,சூத்திரியன், வைசியன், சத்திரியன் என நால்வகை வர்ணப்பாகுப்பாடு காணப்பட்டாலும் உயரந்தவனுக்கு ஒரு நீதி, தாழ்ந்தவனுக்கு ஒரு நீதி என்ற நிலைப்பாடு காணப்பட்டது. உதாரணமாக பிராமணன் எத்தகைய கொடிய குற்றங்களைச் செய்தாலும் அவனுக்குத் தூக்குத் தண்டனை ஏற்பட்டால் துக்கில் இடக் கூடாது.

அவன் தலையை மொட்டை அடித்தால் போதுமானது. அதுவே அவனுக்குத் தூக்குத் தண்டனைக்கு ஒப்பாகும். மற்றவர்ணத்தாருக்கு கொலையே தண்டனை(அ-8.சு379) எனக் கூறப்பட்டுள்ளது.[21]

இவ்வாறான ஒரு நீதி முறையும் பண்டைய சமுகத்தில் நிலவியிருந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஏனெனில் "மனு தர்ம சாஸ்திரம்" என்ற நூலும் பண்டையத்

---

16 மே.கு.நூல், ப.50.

17 வித்தியானந்தன், சு. (1954),தமிழர் சால்பு, கண்டி, சன்தா விலாச அச்சகம், ப.58.

18 தட்சணாமூர்த்தி,அ.(1994), மே.கு.நூல், ப.458.

19 சந்திரன், வி.(2002), மே.கு.நூல்,ப.48.

20 சந்திரன், வி.(2002), மே.கு.நூல்,ப.48.

21 இறையனார்,(1949),திருக்குறள் ஆராய்ச்சி, திருச்சிராப்பள்ளி, நகர அச்சகம்,பக்.101-107.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் தோற்றம் பெற்ற ஒன்று என்பதனாலே இவ்விடயத்தில் இந்நூலில் கூறப்பட்டுள்ள நீதி முறைகளை விதி விலக்காகக் குறிப்பிட வேண்டும். எனெனில் திருக்குறள் ஒரு குலத்தின் நீதிநுலாக இல்லாமல் சமுதாயத்தின் அனைவருக்கும் பொது நீதிநூலாக விளங்கியது.

அதுமட்டுமன்றி தமிழ் சமுகத்தில் குற்றம் புரிந்தோருக்கு சிறைத்தண்டனையும் வழங்கியுள்ளனர் என்பதினை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. குற்றவாளிகளை சிறையில் இடும் இடம் **"சிறைக்கோட்டம்"** என அழைத்தனர்.[22] குற்றவாளிகளை மட்டுமன்றி போரில் தோற்ற பகைவர்களையும், பகை மன்னர்களையும் சிறையடைக்கும் வழக்கம் இருந்தது. மேலும் சிறைச்சாலைகளும், சிறை அதிகாரிகளும் இருந்தனர்.

அரசனின் பிறந்த நாள் பெருவிழாவின் போது கைதிகளை விடுதலை செய்வது அக்காலத்தில் மரபாகவும் இருந்தது. எடுத்துக்காட்டாக பத்தினி தேவிக்குக் கோயில் கட்டி விழா எடுத்தப்போது கனக விசயரை சேரன் சிறையிலிருந்து விடுவித்த சான்றும் உள்ளது.[23] எனவே இவ்வாறாக பண்டைய தமிழ்ச் சமுகத்தில் நீதியை நிர்வகிக்க சிறைக்கோட்டம் காணப்பட்டதோடு குற்றங்களும், அதற்கேற்ற தண்டனை முறைகளும் காணப்பட்டிருக்கிறது என்பதனை அறியலாம்.

பண்டைய தமிழ்ச் சமுகத்தில் அரசன் வேண்டியவர், வேண்டாதவர் என்று பாராமல் தன்னிடம் நீதி வேண்டி வருவோர்க்கு நன்றாக ஆராய்ந்து இருப்பக்கமும் சமன் செய்து குற்றம் புரிந்தோர்க்கு நடுநிலமையோடு தீர்ப்பு வழங்கி நீதியை நிலைநாட்டியுள்ளனர் என்பது புலனாகின்றது.

## 3. நீதியும் ஒழுக்கமும்

நீதியை ஆங்கிலத்தில் justice என்பார்கள். justice என்ற சொல் "அறம்" என்ற பொருளிலும் பயன்படுகிறது. பொதுவாக, "அறம்" என்ற பொருளில் அச்சொல்லைப் பயன்படுத்தும் பொழுது, யெவரசயட justice "இயற்கை நீதி" என்று கூறுவார்கள்.[24]

நீதி (justice), நேர்மை (just) என்றசொற்கள் எந்த அடிப்படைக் கருத்தைக் குறித்து நிற்கின்றன? அச்சொற்களில் அடங்கும் உட்பொருள் என்ன? என்பது பற்றி மேலைநாட்டுச் சட்ட அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து பல நூல்களை எழுதியுள்ளனர். "அறம்" என்ற சொல்லின் பொருளைப்போன்றே "நீதி" என்ற சொல்லின் கருத்தும் ஒரு வரையறையான இலக்கணத்தில் எளிதில் அடங்குவதன்று.[25]

பொதுவாக, நீதியை ஒரு தெய்வப் பண்பாகவே நம் முன்னோர்கள் போற்றினர். கடவுளை"நீதியாகவும் நேர்மையாகவும் கண்டனர். "நீதியை நிறைவை" என்றும், நீதியாய் நிலனாகி நெருப்பாய் நீராய்" என்றும், நெறியதனை விரித்துரைத்த நேர்மையாளன் என்றும் நாவுக்கரசர் இறைவனைப் போற்றிப் பாடுகின்றார். **"கடவுளை நீதியின் உருவாகக் கண்டதால் கடவுள் மீதுள்ள வேட்கை நீதி மீதான வேட்கையாகவே அமைந்திருந்தது"** என்று சட்ட அறிஞர் கெல்சன் கூறுகிறார்.[26]

22 சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகத்தார். (1985)இ மணிமேகலை, சென்னை, அப்பர் அச்சகம்.

23 சந்திரன், வி.(2002), மே.கு.நூல், ப.48.

24 சண்முக சுப்பரமணியம்.மா, (1921),குறள் கூறும் சட்ட நெறி, அப்பர் அச்சகம், டி.வி.சி. பிரஸ், ப.174.

25 மே.கு.நூல், ப.175.

26 மே.கு.நூல், ப.175.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் செய்துக்கொண்ட ஓர் ஒப்பந்தத்தை ஒருவர் மீறும் செயலை நேர்மையற்ற செயல் என்பர். ஆனால் அதை ஒழுக்கத்துக்கு மாறானது என்று கூறுவதில்லை கள்ளுண்ணலை ஒழுக்கத்துக்கு மாறான செயல் என்பர். ஆயினும் நீதிக்கு மாறானது என்று கூறுவது இல்லை. அன்புடைமையும் அடக்கமுடைமையும் நல்லொழுக்கங்கள் அவற்றை நீதிப்பண்புகள் என்று கூறுவது பொருந்தாது. புறங்கூறுவோரையும் சூதாடுவோரையும் ஒழுக்கமில்லாதவர்கள் என்கிறோம். ஆனால் அவர்களை நியாயத்திற்கு முரணாக நடப்பவர்கள் என்று கூறுவதில்லை.[27]எனவே ஒழுக்கம் வேறு, நீதி வேறு எனக் கூறலாம்.

## 4. குற்றங்களும் தண்டனையும்

தண்டிப்பதன் நோக்கம் குற்றவாளிகளை மனிதனாக செய்வது தான். மனிதன் மனிதனாக்கப்படும் போது சமுதாயம் நன்மை அடைகிறது. பண்டைய தமிழ்ச் சமுதாயத்தில் குற்றம் செய்தவருக்கு தண்டனைகள் வழங்கப்பட்ட செய்திகளை இலக்கியங்கள் வாயிலாக அறிய கிடைக்கிறது. எடுத்துக்காட்டாக கன்றினை இழந்த தாய் பசுவுக்கு நீதி வழங்குவதற்காக தன் மகனை தேர் காலில் இட்டுக் கொன்ற மனுநீதி சோழன் கதையை குறிப்பிடலாம். நீதியின் பேரொளி திணை கடந்துசென்ற பொழிவையும், அஃறிணை உயிர்களின் துன்பங்கள் கூட அரசனின் உள்ளத்தைத் தொடப்போதுமானவையாக இருந்தன என்பதனையும் இக்கதை காட்டுகிறது.[28]

கௌடில்லியரின் அர்த்த சாஸ்திரத்தில் தண்டனை விதிப்பதன் நோக்கம் பற்றி குறிப்பிடுகிறார். அத்துடன்

- தண்டம் விதித்தல்
- அபராதம் கட்ட முடியாவிட்டால் விரல்கள் வெட்டப்படல்
- பொருள் கவர்ந்த கள்வருக்கு சித்தரவதை தண்டம்
- நவரத்தினங்களை அனுபவித்துனுக்கு கொலை தண்டனை
- சிறுப்பொருளை திருடுகிறவர்களை ஊரம்பலத்தில் நிறுத்திச் சாணத்தைக் கரைத்துத் தலையில் ஊற்றிப் பறை அறைந்து விரட்டி விட வேண்டும்.
- குற்றவாளிகளுக்கு பச்சை குற்றி அடையாளம் காட்டல்.

என்பனவும் கூறப்பட்டுள்ளன.[29] மேலும் சங்ககாலத்தில் எப்படிப்பட்ட தண்டனை முறை நிலவிற்று என்பதற்கு மிகுதியான சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை. அநியாயமான தண்டனைகளை எதிர்க்கும் எதிர்ப்புணர்ச்சி மட்டும் மக்களிடம் இருந்தது என்பதனைப் புலவர்கள் ஒன்றிரண்டு இடங்களில் பதிவு செய்து காட்டியுள்ளார்.

இதுபோன்ற கேவலம் ஒரு மாம்பழத்திற்காக ஒரு பெண்ணுக்கு மரண தண்டனை விதித்தான் நன்னன் என்ற கொடுங்கோலன். அவனைப் பெண் கொலை புரிந்த நன்னன் என்றே புலவர்கள் கடிந்துரைக்கின்றனர்[30].

தண்டனையின் நோக்கம் மிக உயர்ந்தது. மிக தூய்மையானது. அதனை நெறியோடு பயன்படுத்தாவிட்டால், அதுவே பயங்கரமான விளைவுகளைத் தோற்றுவித்துவிடுகிறது.

---

27 மே.கு.நூல், ப.176.

28 அண்ணாமலை. மு, (1961),வள்ளுவர் தனித்தன்மை, சென்னை, முத்தையா அச்சகம், ப.82.

29 மே.கு.நூல்,ப.91.

30 மே.கு.நூல்,ப.99.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலத்தில் கடுமையான தண்டனை முறைகள் வழக்கில் இருந்திருக்கலாம். ஆனால், புலவருலகமும் மக்களும் எதிர்பார்த்ததெல்லாம் குற்றத்தின் அளவிற்கேற்ற தண்டனைதான். அவர்கள் பொதுவாக அத்தண்டனை முறைகள் கூடாதவை என்றோ கடுமையானவை என்றோ கூற விழைந்தவர்கள் அல்லர். கண்ணைப் பிடுங்குவது, கையை முறிப்பது, யானையின் காலில் கிடத்தி நசுக்குவது, கொலைப்படுத்துவது போன்ற தண்டனை முறைகளே கூடாதவை என்று அவர்கள் கூறியதாகத் தெரியவில்லை.[31]

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுவரை வாழுந்தவர்களாகக் கருதப்படுபவர்கள் பெரிய புராண அடியார்களாவர். அவர்களின் வாழ்விலும் சில தண்டனை முறைகளைக் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக, சுண்ணாம்பு நீற்றறையில் இடுவது, கல்லோடு பிணைத்துக் கடலில் எறிவது, பூவை எடுத்த கையை வெட்டுவது, நுகர்ந்த மூக்கை அரிவது என்பன போன்றவையாகும். எந்த உறுப்பு குற்றத்தை செய்ததோ அதனைத் தண்டிப்பது அல்லது அதனைக் களைத்து விடுவது என்ற போக்கு, தண்டனை முறையில் ஒன்றாக உலகெங்கிலும் காணப்பட்டு வந்திருக்கிறது.[32]

மேலும் தலையில் சுட்ட செங்கல்களை ஏற்றி ஊரம்பலத்தைச் சுற்றிவரச் செய்வதும் ஒரு தண்டனை முறையாகக் காணப்பட்டது. பரத்தையர்கள் அளவுக்கு மீறி வஞ்சித்தும் ஏமாற்றியும் வாழ்ந்தால் அரசாங்கம் தலையிட்டு அவர்களைத் தண்டனைக்கு உட்படுத்தும் என்று மணிமேகலை கூறுகிறது.

செங்கல்லைச் சுமந்துக்கொண்டு ஊரம்பலத்தைச் சுற்றி வரும் தண்டனை பெற்று விட்ட கணிகை அக்குலத்திலே மிக இழிந்தவள் என்று கருதப்பட்டாள். பரத்தையர்களே அவளை மிக இழிந்தவள் என்று ஒதுக்கி வைப்பார்கள். மேலும் கிட்டி போடுதல், குதிகால் நரம்பை வெட்டுதல், தீயினால் சூடு போடுதல், தொழுவிற் கட்டுதல் போன்ற பல தண்டனை முறைகளும் பண்டைய தமிழ்ச் சமுகத்தில் நிலவியிருந்திருக்கின்றது.

31 மே.கு.நூல்,ப.100.

32 மே.கு.நூல்,பக்.100-102.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையான ஜனநாயகத்தையும், சமாதானத்தையும் ஏற்படுத்த 19 ஆவது திருத்தம் வழிவகுக்குமா?

**சிவசுப்பிரமணியம் சிவசூரியா**
இறுதிநிலை ஆண்டு
இலங்கைச் சட்டக்கல்லூரி

கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் நாள் நீண்ட இழுபறிக்குப் பின்னர் 19 ஆவது சட்ட திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. கடைசி நேரம் வரை 19 ஆவது சட்ட திருத்தம் 2/3 பெரும்பான்மையோடு நிறைவேற்றப்படுமா இல்லையா என்பது தெரியாமல் இருந்தது. ஆனால் யாரும் எதிர்பாராத விதத்தில் 19 ஆவது சட்ட திருத்தம் 211 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. மே 14 ஆம் நாள் சபாநாயகர் 19 அவது சட்ட திருத்தத்துக்கு கையெழுத்து இட்டார். இப்போது அது சட்டமாகிவிட்டது.

19ஆவது அரசியலமைப்புத்திருத்தத்தில் பல முக்கிய விடயங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இந்நாட்டு தமிழ், முஸ்லிம் மக்கள் அதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்களை நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள். அவை நல்லிணக்கம் தொடர்பான கருத்துக்களாக இருப்பதே அதற்குக்காரணமாகும். 19 ஆவது சட்ட திருத்தம் நிறைவேற்று சனாதிபதி ஆட்சி முறையை முற்றாக ஒழிக்கவில்லை. முற்றாக ஒழிப்பதானால் பொதுமக்கள் மத்தியில் பொதுவாக்கெடுப்பு (Referendum) நடத்த வேண்டும். அது இப்போது சாத்தியமில்லை என்பதாலேயே 19 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டம் 18 ஆவது சட்ட திருத்த மூலம் ஒழிக்கப்பட்ட 17 ஆவது சட்ட திருத்தத்துக்கு மீள் உயிர் கொடுத்திருக்கிறது எனச் சொல்லலாம்.

19 ஆவது திருத்தத்தின் முக்கிய நோக்கம் நிறைவேற்று அதிகாரம் படைத்த சனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதே. சனாதிபதியின் அதிகாரங்கள் சில நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறும் அமைச்சரவைக்கு அளிக்கப்பட்டுள்ளது. 1978 க்குப் பின்னர் இதுவே முதல்தடவையாக சனாதிபதியின் அதிகாரங்கள் சில குறைக்கப்பட்டுள்ளன. முக்கியமாக பின்வரும் அதிகாரங்கள் சனாதிபதியிடம் இருந்து அகற்றப்பட்டுள்ளன.

(1) சனாதிபதி, நாடாளுமன்றம் இரண்டின் பதவிக் காலம் 6 ஆண்டுகளில் இருந்து 5 ஆண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(2) சனாதிபதி இருமுறைதான் பதவி வகிக்கலாம்.

(3) சனாதிபதி பாராளுமன்றத்தை 4 1/2 ஆண்டுகள் கழிந்த பின்னரே கலைக்கலாம். முன்னர் ஓர் ஆண்டு முடிந்தவுடன் கலைக்க முடியும்.

(4) சனாதிபதியே தொடர்ந்து அமைச்சரவையின் தலைவராக இருப்பார். ஆனால் அமைச்சர்களை பிரதமரின் ஆலோசனையைக் கேட்டே நியமிப்பார். சனாதிபதி தொடர்ந்து அரசாங்க தலைவர், நாட்டின் தலைவர், முப்படைகளின் தளபதி ஆக இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) சனாதிபதி மீது அவர் பதவியில் இருக்கும் போது அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மனுக்களை தாக்கல் செய்ய முடியும்.

(6) யாப்பு அவை உருவாக்கப்பட்டுள்ளது. அதில் அவைத்தலைவர், பிரதமர், எதிர்க்கட்சி உட்பட 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் 3 சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் மொத்தம் 10 உறுப்புரிமை வகிப்பர்.

(7) 18 ஆவது சட்ட திருத்தத்தின் மூலம் சனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் பின்வரும் ஆணையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் ஜனாதிபதிகளே உச்ச நீதிமன்ற நீதிபதிகள், தேர்தல் ஆணையாளர், தூதுவர்கள் போன்ற உயர்அரச அதிகாரிகளை நியமனம் செய்தனர்.

தேர்தல் ஆணைக்குழு
அரச சேவைகள் ஆணைக்குழு
தேசிய காவல்துறை ஆணைக்குழு
கணக்காய்வு ஆணைக்குழு
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
இலஞ்ச ஊழல் ஆணைக்குழு
நிதி ஆணைக்குழு
எல்லை நிர்ணய ஆணைக்குழு
தேசிய திட்டமிடல் ஆணைக்குழு
பல்கலைக்கழக நிதி ஆணைக்குழு
அரச மொழிகள் ஆணைக்குழு

ஆனால், வாக்குறுதியளித்தபடி ஜனாதிபதி, நீதிமன்றத்துக்கு வகைசொல்லும் வகையிலான ஏற்பாடுகள் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் இல்லை. தற்போதைய அரசியலமைப்பில் உள்ள வாசகங்களே அதிலும் உள்ளன. தொழில் ரீதியாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ ஜனாதிபதி செய்த எந்தவொரு செயலுக்கு எதிராகவும் நீதிமன்றத்துக்குச் செல்ல முடியாது என்றே அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு திருத்தத்தில், ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை விபரிக்கும் பகுதியில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி, சமய மற்றும் இன ஐக்கியத்தை உறுதிப்படுத்துவதும் அவற்றை பாதுகாப்பதற்கான வசதிகளை வழங்குவதும் ஜனாதிபதியின் கடமைகளில் ஒன்றாகும்.33(2),ஆ (ஆ) மதம்சார் மற்றும், இனம்சார் ஒற்றுமைபேணப்படுதலை உறுதிப்படுத்துதலும் வசதியளித்தலும்

அதேபோல், ஜனாதிபதி, தேசிய நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் மேம்படுத்த வேண்டும் என திருத்தத்தின் மற்றொரு வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை நல்ல விடயங்கள்தான். ஆனால், ஜனாதிபதி இதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்ற பொறிமுறை அதில் குறிப்பிடப்படாததால், இந்த திருத்தத்தின் மூலம் எதிர்காலத்தில், ஜனாதிபதி ஒருவர் நிச்சயமாக இன மற்றும் சமய நல்லிணக்கத்துக்காக செயற்படுவார் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக, ஜனாதிபதியை நீதிமன்றத்துக்கு வகைசொல்லும் நிலைக்கு கொண்டு வருவோம் என தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதியும் தற்போதைய அரசாங்கத்தின் தலைவர்களும் கூறினர். இது, தென்பகுதி அரசியல்வாதிகளுக்கு மட்டும் முக்கியமான விடயம் அல்ல. சிறுபான்மை மக்கள் தொடர்பாக ஜனாதிபதி எடுக்கும் ஒரு நடவடிக்கை, அம் மக்களுக்கு பாதகமானதாக இருந்து அம்மக்கள், ஜனாதிபதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் வாய்ப்பு இருந்தால் அது அம்மக்களை பாதுகாத்துக்கொள்ள உதவாதா?

நிறைவேற்று ஜனாதிபதி முறை, 18ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்தல், 17 ஆவது அரசிலமைப்புத் திருத்ததின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களை மீண்டும் நடைமுறைப்படுத்தல் மற்றும் தகவல் அறியும் உரிமையை சட்டமாக்குதல் ஆகியவையே அவையாகும். ஆனால், அரசாங்கம் மிகவும் அழுத்தமாக வாக்குறுதியளித்த தேர்தல் முறை தொடர்பான மாற்றங்கள் இதில் குறிப்பிடப்படவில்லை. தற்போதைய விகிதாசார தேர்தல் முறையை இரத்துச் செய்வதை சிறு கட்சிகளும் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு வெளியே வாழும் சிறுபான்மை இனக்கட்சிகளும் விரும்புவதில்லை.

## முடிவுரை

நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடர்பாகவும் அரசாங்கம் தாம் வாக்குறுதியளித்ததை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை. நிறைவேற்று ஜனாதிபதியின் சில அதிகாரங்களை குறைக்கவே 19ஆவது அரசியலமைப்பு திருத்தம் சிபாரிசு செய்கிறது. அதன் பிரகாரம், அமைச்சர்களை நியமிக்கவோ அல்லது அமைச்சர்களுக்குரிய விடயங்களை தீர்மானிக்கவோ ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை. இந்த வரைவின் மூலம் அந்த அதிகாரம் பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளது.

திருத்தத்தின் மூலம் இல்லாதொழிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களும் அவற்றை நியமிக்கும் அரசியலமைப்புச் சபையும் 19ஆவது திருத்தத்தின் மூலம் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, ஜனாதிபதி நினைத்தவாறு நாட்டின் பிரதான பதவிகளுக்கு ஆட்களை நியமிக்க முடியாது. அதற்காக அவர் அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்தை பெற வேண்டும். ஆனால், மாகாண ஆளுநர்களை நியமிப்பதில் ஜனாதிபதி சுயமாக இயங்க முடியும்.

எனவே எதிர்காலத்தில் 19ஆவது திருத்தச்சட்டம் உண்மையான ஜனநாயகம் மற்றும் சமாதானம் என்பவற்றைக் கொடுப்பதில் போதுமானதாகாதென்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமும் ஒழுங்கும் திணித்தலா? அல்லது ஆர்வமூட்டலா?

**சிவலிங்கம் புராதனி**
BA(Colombo)
இறுதியாண்டு
சட்டக் கல்லூரி

## அறிமுகம்

சட்டமும் சமூகமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்து காணப்படாத ஓர் அலகாகக் காணப்படுகின்றது. சட்டத்தின் தோற்றத்திற்கும் சமூகத்தின் தோற்றத்திற்கும் தனிமனிதனும் காரணமாக அமைகின்றான். பல மனிதர்களின் இணைப்பில் உதயமான சமூக வலைப்பின்னலுக்கு சட்டம் அவசியமாக காணப்படுகின்றது. அத்துடன், ஒவ்வொரு மனிதனும் சமூகத்தின் அங்கம் (Man is a social animal) என்ற வகையில் ஒரு மனித சமூகம் ஒழுங்காகவும் கட்டுக்கோப்பாகவும் நிலை பெறுவதற்கும், மக்கள் அறநெறி செயல்களைப் பின்பற்றுவதற்கும் "சட்டம்" அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்றது. எனினும், மனிதன் மனிதனாக வாழ சட்டமும் ஒழுங்கும் ஓர் அடிநாதமாக செயற்படுகின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

சட்டமும் ஒழுங்கும் சமூகத்தின் மத்தியில் திணிக்கப்பட்டு மக்களை தன் கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்கின்றது. இது தொடர்பில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் காணப்பட்டபோதும், ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி என்பவற்றின் இருப்புக்கு சட்டமும் ஒழுங்கும் இன்றியமையாதது என்பதற்கிணங்க சட்டமும் ஒழுங்கும் ஆர்வமூட்டப்பட்டும் வருகின்றன என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எனவேதான், அரசியலறிஞரான **அரிஸ்டோட்டில் மக்களின் அரசாங்கத்தைக் காட்டிலும், சட்டத்தின் கீழான அரசாங்கம் மகோன்னதமானது எனக் குறிப்பிட்டிருந்தார்.**

சமூகத்தில் பயமின்றியும், அமைதியாகவும், சுமூகமாகவும் வாழ விரும்புபவர்கள் தங்களுக்கு எழும் பூசல்களையும், வழக்குகளையும் தீர்க்க சட்டமும் ஒழுங்கும் தேவை என்பதை உணர்கின்றனர். "வலியோர் எளியோரை வாட்டுவதோ பணக்காரன் ஏழையை மிரட்டுவதோ ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொள்வதோ ஆகாது" என்பது பொதுவாக சமூகத்தின் கருத்து. சமூகத்தில் வலுத்தவன் கை ஓங்கினால் நாடு நாடாகாது காடாகும். மக்கள் இதனை நன்கு உணர்ந்ததன் விளைவுதான் சட்டம்.

சிறப்பான சட்டம், ஒழுங்கு, மற்றும் பராமரிப்பு என்பன ஒரு நாட்டில் நடைபெறும் சட்டத்தின் ஆட்சி எவ்வாறு நடக்கின்றது, தனிமனித பாதுகாப்பு மற்றும் அவர்களின் சொத்துக்கள், உடைமைகளின் பாதுகாப்பு எவ்வாறு உள்ளது என்பதைப் பொறுத்தும் சட்டத்தினை அமுல்படுத்தும் பொலிஸாரின் சுதந்திரமான செயற்பாட்டைப் பொறுத்தும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் சட்ட ஒழுங்குகளை அடிநாதமாக கொண்ட அரசியல் மறுசீரமைப்பை நோக்கிய திசைமுகத்தில் பயணிக்கக் கூடிய அறிகுறிகள் தென்படுவதாக தெரிகின்றன. இந்தப் பின்புலத்தினின்றே, இவ்வாய்வுக் கட்டுரையானது, பின்வரும் ஆய்வுக்கேள்விகளுக்கு விடை காண முற்படுகிறது. சட்டம் ஒழுங்குளை நிலைநிறுத்துவதற்கான முகவர்கள் யாவர்? இலங்கையின் அரசியல் நிறுவனங்கள் மற்றும் கட்டமைப்புகள் சட்ட ஒழுங்குகளை பராமரிக்க கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளனவா? ஏன் அரசாங்கம் யுத்தம் முடிவடைந்த பின்னரும் சட்ட ஒழுங்குகளை அமுல்படுத்தும் நிகழ்ச்சி நிரலை பூர்த்தி செய்யாமல் இன்றும் இழுத்தடித்து வருகிறது? எந்தெந்தப் பரப்புகளில் நிலைநிறுத்தப்பட சட்ட ஒழுங்குகளை எந்தப் பரப்பெல்லைகளில் உறுதிப்படுத்த வேண்டும்?

இந்த ஆய்வுக் கேள்விகளுக்கு விடை தேடுவதாக ஒரு நாட்டில் அல்லது சமூகத்தில் சட்டம் ஏன் இருக்கின்றது? இது ஏன் திணிக்கப்படுகின்றது? அல்லது அது ஏன் ஆர்வமூட்டப்படுகின்றது? என்பதனை இவ் ஆய்வுக் கட்டுரை பரிசீலனை செய்ய முற்படுகின்றது.

இந்தப் பின்னணியின் பகுதி I இல் ஆர்வமூட்டப்பட்டும் வருகின்றன. இந்தப் பின்னணியின் பகுதி I இல்

I. சட்டம், ஒழுங்கு என்பவற்றிற்கான பொருள் விளக்கம்.
II. சட்டத்தின் தோற்றம்.
III. சட்டத்தின் தன்மை, குறிக்கோள்

பகுதி I இல் சட்டம் ஒழுங்கு பற்றிய ஒரு தெளிவான கண்ணோட்டத்தை ஆராய்கிறது. இவ் நோக்கத்தினை அறிந்து கொள்ள சர்வதேச மற்றும் கோட்பாடு ரீதியான நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் ஆய்வுக்குப்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வுக் கட்டுரையின் II பகுதியில்

1) சட்டமும் ஒழுங்கும் ஏன் சமூகத்தில் திணிக்கப்படுகின்றன அல்லது ஏன் இவை ஆர்வமூட்டப்படுகின்றன
2) இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் திணிக்கப்படுகின்ற அல்லது ஆர்வமூட்டப்படுகின்ற
3) இலங்கையில் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளை முன்னெடுத்து செல்லல்

என்பவற்றை சட்ட அறிஞர்களின் சட்டக் கோட்பாடுகள், இலங்கையின் அரசியல்அமைப்பு மற்றும் முறதீர்ப்புக்களையும் வைத்து தெளிவாக ஆராய்கின்றது

## பகுதி – I

## I. சட்டத்தினதும் ஒழுக்கத்தினதும் பொருள் விளக்கம்

நாகரீகமடைந்த சமூகத்தின் வாழ்விற்கு சட்டமும் ஒழுங்குகளும் மிக அத்தியாவசியமாக உள்ளதுடன், மனிதர்களுக்கிடையில் ஏற்படுகின்ற பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதில் மிகவும் உதவியாகவும் உள்ளது.

அந்தவகையில், சட்டம் என்றால் என்ன என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டாலும் இன்றுவரை பூரணத்துவமான ஒரு வரைவிலக்கணத்தை திட்டவட்டமாக வரையறை செய்ய முடியவில்லை. ஆனால், சட்டம் குறித்து பல்வேறு கால கட்டங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு அறிஞர்களினால் வியாக்கியானப் படுத்தப்பட்டதால் இது குறித்து பொருள் விளக்கம் பன்நிலைப்படுத்தப்பட்டதாக நோக்கப்படுவது உண்டு.

சட்டம் என்ற பதத்தின் தோற்றத்தை எடுத்துக்கொள்வோமாயின், இது ஜன்கர் (junger) என்ற பதத்துடன் தொடர்புடைய ஜஸ் (jus) என்பதிலிருந்து தோற்றம் பெற்றதாக கூறப்படுகின்றது. இவ்விரண்டு பதங்களும் லத்தீன் மொழிப் பதங்கள் ஆகும். இவை **கட்டு** என்னும் கருத்துடையவை என்ற வகையில் இவற்றிலிருந்து தோற்றம் பெற்றதான சட்டம் (Law) பெருமளவிற்கு **கட்டுப்படுத்தல்** என்பதையே சுட்டி நிற்கின்றது. மக்களின் பொதுவான நோக்கில் சட்டம் மனித செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் விதிகளின் தொகுதி அல்லது பொதுவாக பின்பற்றப்படுகின்ற ஒத்த கோட்பாடுகள் என வர்ணிக்கப்படலாம்.

> பௌண்ட் (Pound) என்பவர் சட்டத்தை பின்வருமாறு வரையறை செய்கிறார்:
> பொதுமக்களினாலும் நீதிமன்றங்களினாலும் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தும் அடிப்படை கொள்கைகளின் தொகுதி சட்டமாகும்.

இவரைப் பொறுத்தவரை, சட்டத்திற்கான மக்களினதும் நீதிமன்றங்களினதும் அங்கீகரிப்பின் அவசியத்தை முதன்மைப்படுத்துகின்றார்.

> கிறின் (Green) என்பவர் கூறுகையில்,
> சட்டம் என்பது நீதி நிர்வாகத்தில் அரசினால் அங்கீகரிக்கப்பட்டு பிரயோகிக்கப்படும் கோட்பாடுகளின் தொகுதி என்றார்.

Hood Phillips கூறுவது பாரம்பரிய விடயமாகும். சட்டவாட்சி என்பது சான்றுவிதி ஆகும். ஒவ்வொருவரும் சட்டத்தின் முன் முதற்தோற்றத்தளவில் சமமானவர்களாவர். ஆளொருவர் நிருவாக அலுவலரோ அல்லது சாதாரண பிரசையோ விசேட தத்துவங்கள், சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டுரிமைகளுக்கு உரித்துடையவராக இருக்கலாம். அதனை அவர் எண்பிக்கவேண்டும். அதாவது சட்ட ரீதியான ஆதாரம் காணப்பிக்கப்பட வேண்டும். எனவே அரசாங்கம் சட்டத்திற்கு அமைவானது. பல சட்டவறிஞர்களால் ஆரம்பம் தொட்டு வலியுறுத்தப்பட்டுவரும் விடயமானது சட்டத்திற்கு அப்பால் எவரும் இருக்கமுடியாது. அரசன் உட்பட எல்லோரும் சட்டத்திற்கு அமைவானவர்களே என்பதாகும்.

ஆகவே, சட்டம் என்பது அரசின் ஆணை என்றும் நீதியின் கருவி என்றும் அறத்தின் வழிகாட்டி என்றும் கூறலாம். இவ்வாறு பல்வேறு கோணங்களில் பார்க்கும்போது, சட்டத்தின் உண்மையான அர்த்தத்தையும் பொருள் விளக்கத்தையும் அறிந்து கொள்ளலாம்.

## II. சட்டத்தின் உருவாக்கம்

சமூகம் தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் சமூகத்தில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்க்கவும் குற்றங்களைக் கட்டுப்படுத்தி சமூகத்தை அமைதியாக இயங்க செய்வதற்கும் சட்டத்தையும் ஒழுங்கையும் தோற்றுவித்தது. பாராளுமன்றம் சட்டத்தை ஆக்குகின்றது. ஒவ்வொரு தனிமனிதனும் பாராளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதனூடாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தை ஆளுகின்ற சட்டத்தை உருவாக்குவதில் பங்கெடுக்கின்றான். பாராளுமன்றத்தினுடைய நடவடிக்கை மக்களின் விருப்பத்தை நிறைவு செய்வதாகக் காணப்படுகின்றது. இவ்வாறு சட்டமானது சட்டத்தை ஆக்கியவர்களைக் கட்டுப்படுத்துகின்றது.

இலக்கியம் மற்றும் சினிமா என்பன போலவே சட்டமும் தான் தோன்றிய காலத்தின் சமூக நிலைகளை தெளிவாகக் காட்டும் காலத்தின் கண்ணாடியாகக் காணப்படுகின்றது. இதனை ஆரம்ப காலங்களில் தோன்றிய சட்டங்களுக்கும் இன்றைய காலச் சட்டங்களுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடுகளின்மூலம் அறிய முடியும். இவ்வேறுபாடுகள் அந்த காலத்தில் நிலை பெற்றிருந்த சமூகத்தினைப் பிரதிபலிப்பதாக அமைகின்றன.

சட்டம் பற்றிய ஆய்வியல் மூலம் பல்வேறு சிந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோட்பாடும் சட்டத்தை வெவ்வேறு கோணங்களில் அணுக முற்படுவதுடன், வேறுபட்ட விளக்கங்களையும் அளிக்கின்றன. அவ்வகையில் இயற்கைக் கோட்பாடு, ஆய்வுக் கோட்பாடு, வரலாற்றுக் கோட்பாடு, தத்துவக் கோட்பாடு, ஒப்பீட்டுக் கோட்பாடு, சமூகவியல் கோட்பாடு என்பன முக்கியமானவை ஆகும்.

**இயற்கைக் கோட்பாடு:** இக்கோட்பாட்டின் சாராம்சம் யாதெனில், சட்டம் முடிவற்றது உலகளாவியது, மாற்றமடையாதது, நிலையானது என்பதாகும். சட்டம் முடிவற்றது என்ற வகையில், எக்கால கட்டத்திலும் சக்தியுடையது. அது உலகளாவியது என்ற வகையில், எங்கும் வியாபித்துள்ளது. ஒரே சூழ்நிலைகளிலும் அது முழுத் தன்மையுடையது. மாற்றமடையாது என்ற வகையில், அது எந்த ஒரு சக்தியினாலும் மாற்றக் கூடியதன்று என்பது இயற்கை கோட்பாட்டாளர்களின் கருத்து ஆகும். இவர்கள் இயற்கை சட்டமே எல்லா சட்டங்களிலும் மேலானது எனவும், பொதுச்சட்டங்கள் இயற்கை சட்டத்திற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் எனவும் கருதுகின்றனர். இக்கோட்பாடு 19ஆம் நூற்றாண்டில் அனேக கண்டங்களை எதிர்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஜெரமி பென்தம் இயற்கைச் சட்டத்தை கருத்தற்றது ஆபத்தானது என நிராகரிக்கின்றவேளை, ஒஸ்டினின் சட்டம் இறையின் ஆணை என கூறியமை குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுக் கோட்பாடு:** சட்டம் பற்றிய ஆய்வுக் கோட்பாடு தீவிரமாக இயற்கைக் கோட்பாடுடன் முரண்படுவதை இங்கு காணலாம். போடின், ஹொப்ஸ் பென்தம், ஒஸ்டின் போன்ற இக்கோட்பாட்டுவாதிகள் நிச்சயிக்கப்பட்ட அரசியல் அதிகாரத்தின் கட்டளை என்ற கருத்துடன் அணுகியுள்ளனர். இக்கோட்பாட்டுவாதிகள் சட்டத்தின் ஊற்றாக சட்டத்துறையை கருத்துடன் சட்டம் வரம்பற்றது. பிரிக்க முடியாது. அது இறைமையின் கட்டளை எனக் கருதினர். ஆய்வுக் கோட்பாட்டாளர்கள் தமது கருத்துக்களை முன்வைக்கும்போது, வரலாற்று ரீதியான கருத்துக்களை எடுக்கவில்லை. மரபுகள், வழக்காறுகள், மதம் போன்ற காரணிகளை சட்ட ஆக்கத்தில் புறக்கணிக்க முடியாதவையாக உள்ளமையும் இவர்களின் கவனத்தைப் பெறவில்லை. எனவே, இவ்வாய்வுக் கோட்பாடு சட்டத்தின் வரலாற்று ரீதியான அம்சங்களையும் அதன் வளர்ச்சி முறைகளையும் இட்டு எவ்வித கவனமும் செலுத்தாததால் இது பழைமை வாதத்தை வற்புறுத்துகின்றது என கண்டிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரலாற்றுக் கோட்பாடு:** சட்டவியல் குறித்த சிந்தனைகளில் வரலாற்றுக் கோட்பாடும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இக்கோட்பாட்டுவாதிகளின் சட்டம் பற்றிய கருத்து யாதெனில், அது சமூகத்தில் செயற்படும் மறைமுகமான காரணிகளின் விளைவே அன்றி, இயற்கையுடையதோ இறைவனுடைய பிரதிபலிப்போ அல்ல. அதேசமயம், சட்டம் அரசினால் ஏற்படுத்தப்பட்டதுமல்ல என்பதால் சட்டம் சமூக அபிவிருத்தியின் விளைவாக தோன்றியது என்பதாகும். இக்கோட்பாட்டினை கடைப்பிடித்தவர்களில் முக்கியமானவர்களாக சவிக்னி (Savigny) இ எவ். டபிள்யு. மெயிட்டிலண்ட் (கு.று. Maitiland)இ எஸ். எவ். பெலாக் (S.F Pollock) போன்றவர்களைச் சுட்டிக் காட்டலாம்.

**சமூகவியல் கோட்பாடு:** சட்டவியலின் சமூகக் கோட்பாடு வரலாற்றுக் கோட்பாட்டின் ஒரு வளர்ச்சிக் கட்டமே எனலாம். இவ்வணுகுமுறையை மேற்கொண்ட சிந்தனையாளர்கள் சட்டம் சமூகசக்திகளின் உற்பத்தியே என்றும் அதனால் சமூகதேவைகளின் அடிப்படையில் ஆராயப்படவேண்டும் என கூறியிருந்தனர்.

இவர்கள் சட்டம் அரசினால் உருவாக்கப்பட்டது. மேலான மனிதனின் கட்டளையேசட்டம் என்பதையும் முற்றாக நிராகரித்தனர். இவர்கள் சட்டம் சமூகத்தின் மனிதனை வழி நடத்துகின்ற கோட்பாடுகளை குறிக்கின்றது. சட்டம் பொதுவானதோ அன்றி குறிப்பானதோ, எழுதப்பட்டதோ அன்றி எழுதப்படாததோ அது மனித உணர்வுகளில் இருந்து தோற்றம் பெறுகின்றது என குறிப்பிட்டனர்.

இங்கு சட்டத்தின் அடிப்படையாக சட்ட ரீதியான அம்சங்களிலும் அதிகமாக அதன் உலகியல் அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகவும் அவ்வகையில் சூழ்நிலைகளின் தன்மையை முக்கியத்துவப்படுத்துவதாகவும் உள்ளது. சவிக்னியின் கருத்துப்படி, சட்டம் மக்கள் உரிமையின் தொகுதி என்றார். இக்கோட்பாடு சட்டவியல் ஆய்வில் வளர்ச்சி பற்றிய கருத்தை புகுத்தியதன் மூலம் சட்டவியலுக்கு பெரும் சேவையாற்றி உள்ளதாக வர்ணிக்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் ஒழுக்க நெறிகள் பின்னர் சமயச் சித்தாத்தங்கள் தற்போது தியாகச் சட்டங்கள் என காலத்தின் தேவைக்கேற்ப சட்டமும் தன்னிலை மாற்றி மனித வர்க்கத்தினை போதித்து வருகின்றது. அதேபோல சட்டத்தின் தற்காலப் பரிமாண வளர்ச்சிக்கு மனித சமூகத்தில் ஏற்பட்ட சடுதியான பல மாற்றங்களே உந்து சக்திகளாக இருந்துள்ளன. இன்னொரு வகையில் கூறுவதென்றால், சமூக அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் சமாந்தரமாகச் சட்டம் பயணித்ததே இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப வெற்றிக்கும் நவநாகரிக மனித வர்க்கத்தின் தோற்றத்திற்கும் அடிப்படைக் காரணியாகும். எனவே, சட்டத்தின் செல்வாக்கு ஒவ்வொரு மனிதனதும் வாழ்விலும் பிரிக்க முடியாத கூறாக இணைந்து காணப்படுகின்றது. இவ்வாறு சட்டத்தின் செல்வாக்கின்றி வாழ முடியாத மனிதனிடம் சட்டத்தினதும் ஒழுங்கினதும் செயற்பாட்டின் அறிவினை வளர்க்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

சட்டங்கள் பெரும்பாலும் மதங்களையும் மத கலாசாரங்களையும் மையமாகக் கொண்டே தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்துள்ளன. பண்டைய காலங்களில் சட்டமே சமயம் சமயமே சட்டம். மக்கள் சட்டத்தை இறைவனின் ஆணையாக மதித்தனர். பல மதக் கோட்பாடுகளும் சித்தாந்தங்களும் மக்களுக்கு இறைவனின் ஆணையாக வழங்கப்பட்டிருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய காலங்களில் அரசர்களால் உருவாக்கப்பட்ட சட்டங்களே பல்வேறு வழி முறைகளில் மக்களுக்கு அறிவிக்கப்பட்டன. முரசறைந்து அரச கட்டளைகளை அறிவிக்கும் முறை அக்காலத்தில் பொதுவானது. கால நீரோட்டத்தில் பெரும்பாலான நாடுகளில் அரச ஆட்சி முறை ஒழிக்கப்பட்டது. அரசனின் சர்வதிகாரத்தை எதிர்த்து மக்கள் போரிட்டு பல புரட்சிகள் மூலம் தமது அடிப்படை உரிமைகளை வென்றெடுத்தனர். இந்த உரிமைப் போராட்டங்கள் மனித உரிமைகள் பற்றிய கோட்பாட்டை பிரபலப்படுத்தியதுடன், ஜனநாயக ஆட்சி முறையின் தோற்றத்திற்கும் இவை வழிவகுத்தன. அத்துடன், விஞ்ஞான தொழில்நுட்ப அறிவும் அதனால் ஏற்பட்ட பகுத்தறிவு வாதமும் சமயவாதிகளுடன் முரண்பட்டதனால் சட்டம் சமய சித்தாந்தங்களில் இருந்து விலகி தனக்கென்றொரு தனித்துவ பண்புடன் பயணிக்க ஆரம்பித்தது. இது மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட ஒரு மாற்றம் ஆகும்.

இம்மாற்றம் சட்டத்துறையின் பரிணாம வளர்ச்சியில் பெரும் பங்காற்றியதுடன், சட்டங்களின் நவீனமயமாக்கலிற்கும் அடிப்படை உரிமைகளை மையமாகக் கொண்டு ஏனைய சட்டங்கள் உருவாவதற்கும் வழிவகுத்தன.

## III. சட்டத்தின் தன்மை, குறிக்கோள்

சட்ட நூலறிஞரான பிட்ஸ் ஜெரால்டு (Fitz Gerrald) என்பவர் சட்டத்தின் தன்மையினை மூன்று வகையாக அணுகுகின்றார்:

1. சட்டம் என்பது மனிதனின் இயல்பான அறவுணர்வு என்று கூறும் கொள்கை. இது இயல்பான அறநெறியே சட்டம் என்னும் கொள்ளையாகும்.
2. அரசின் ஆணையே சட்டம் எனும் கொள்கை
3. நீதி வழங்குவதற்கு உதவும் கருவியே சட்டம் எனும் கொள்கை

இயல்பான அறவுணர்வே சட்டம் என்ற கொள்கையையே அரிஸ்டோட்டில், பிளேட்டோ போன்ற கிரேக்க மேதைகளிலிருந்து இன்றையச் சட்ட நூலறிஞர்கள் வரை பலர் ஆதரிக்கின்றனர்.

ஜஸ்டினியன் (Justinian), ப்ளாக் ஸ்டோன் (Black Stone), அக்குவைனாஸ் (Aquinas) ஆகியோர் இறைவன் வகுத்த நீதி நெறியாகிய அறவுணர்வை எட்டிய விதிகளே உண்மையான சட்ட விதிகள் என்ற கோட்பாட்டினை ஆதரித்தனர். எனவே, மனிதனின் இதயத்தில் இயல்பாக எழும் ஒழுக்க உணர்வுகளே சட்டநெறியாகும் என்பது இக்கொள்கையின் அடிப்படைக் கருத்து ஆகும்.

சட்ட விதிகளில் அடங்கியுள்ள அறக் கொள்கைகளை உணரும்போதுதான் சட்ட விதிகளின் உண்மையினை நாம் நன்கு உணர முடியும். ஒழுக்க நெறியை ஒட்டிச் சட்டநெறி அமைவதாலேயே சட்டநெறி தனிச் சிறப்பு பெறுகின்றது. எனவே இங்கு சட்டமும் ஒழுக்கமும் சமூகத்தில் இணைந்து காணப்படுகின்றன.

நல்லனவே செய்தல் வேண்டும் தீயன விலக்கல் வேண்டும். இவையே அறநெறியின் அடிப்படையாகும். இவற்றில் இருந்து மற்ற நெறிகள் எழுந்தன என தோமஸ் அக்குவைனாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Thomas Aquinas) என்ற கிறிஸ்தவஞானி குறிப்பிடுகின்றார். **"அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை நாடி இனிய சொலின்"** என்பது வள்ளுவம். சட்ட விதிகளுக்கு மக்கள் பணிந்து நடப்பது அச்சத்தால் மட்டும் அன்றி அறவுணர்வால் தான் என்பது உண்மையாகும். சட்ட விதிகளுக்கு அடிப்படையாக அறநெறி அமைந்துள்ளதால் தான் மக்கள் மனதில் இயல்பாய் எழுகின்றது. அதை ஒட்டி ஒழுக வேண்டும் என்ற எண்ணமும் மக்களிடம் இயல்பாகவே உள்ளது. எனவே அறநெறியை எடுத்து எழும் சட்டத்தினையும் ஒழுங்குகளையும் பணிந்து நடக்க வேண்டும் என்ற கடமையுணர்வு தோன்றும் போது அவை சமூகத்தில் ஆர்வமூட்டப்படுகின்றன.

சட்டமும் அறமும் எவ்வாறு சமூகத்தில் காணப்படுகின்றன என்பதை பிளாக் ஸ்டோன் (Black Stone) என்ற ஆங்கில நாட்டு சட்ட வல்லுநர் கூற முனைகின்றார். ஒழுக்கம் என்றாலும் அறம் என்றாலும் ஒன்றுதான். சட்ட விதிகள் எல்லாம் அறத்தின் அடிப்படையில் தோன்றி அதனால் தனி ஆற்றலையும் மக்கள் பணியச் செய்யும் மாட்சியையும் பெறுகின்றன என்றார். ஒரு சட்ட விதி ஒழுக்கநெறிக்கு மாறுபட்டதாகக்கூட இருக்கலாம். ஆயினும், அது சட்டமேயாகும். அத்தகைய சட்ட விதிகளுக்கு பணியாமல் இருப்பதே நமது ஒழுக்க கடமையாகவும் இருக்கலாம். எனினும், அது சட்ட விதி என்பதை மறுக்க முடியாது என ஒஸ்டின் என்ற அறிஞர் கூறுகின்றார்.

சட்டமும் அறமும் இணைந்து சமுதாய இன்பத்தினையே நோக்கமாக கொண்டு இயங்கினாலும் இவை செயற்படும் முறையிலும் தன்மையிலும் வேறுபட்டுக் காணப்பட்டாலும் சட்டமும் ஒழுங்கும் சமூகத்தில் ஆர்வமூட்டப்பட்டு வருபவையாக காணப்படுகின்றன.

## பகுதி-11

## I. சமூகத்தில் சட்டமும் ஒழுங்கும் எவ்வாறு திணிக்கப்படுகின்றது?

உயிரில்லாமல் ஓர் உடலானது நிலைத்திருக்க முடியாது. அதே போல சட்டமின்றி சமூகமும் சமூகமின்றிச் சட்டமும் நிலைத்திருக்கவோ அல்லது ஒன்றையொன்று பிரிந்திருக்கவோ முடியாது. இவ்வாறு சமூகத்தை ஆளும் தொகுதியாகச் சட்டம் கருதப்பட்டாலும் சமூகத்தில் சட்டத்தின் தாக்கம் எவ்வாறு உணரப்படுகின்றது என்பது இன்னமும் விடைகாண முடியாத வினாவாக காணப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பியோ விரும்பாமலோ சட்டத்திற்கு கட்டுப்படுகின்றான். காரணம், சட்டத் தவறை ஓர் மன்னிப்பாக எமது நீதிமன்றங்கள் ஏற்பது இல்லை. உதாரணமாக, ஒருவர் சட்டம் பற்றி அறிந்து கொள்ளாமல் தவறு செய்தார் என்ற காரணத்திற்காகத் தண்டனை பெறுவதில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. எனவே, சட்டத்தின் தாக்கமானது ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் ஓர் பிரிக்க முடியாத கூறாக காணப்படுகின்றது. இருப்பினும், சமூகத்தில் சட்டத்தினை மீறினால் தண்டனை வழங்கப்படும் என்ற அச்சுறுத்தலின் அடிப்படையில் மக்களை சட்டம் நல்வழிப்படுத்துகின்றது என்ற அடிப்படையில் சட்டம் திணிக்கப்படுகின்றது என்று கருதப்படலாம்.

**Eg:** ஓர் குழந்தை கருவில் உருவானவுடனேயே அக்குழந்தையின் உயிரிற்கு சட்டம் இன்று பாதுகாப்பு வழங்குகின்றது.

இவ்வாறு கருவில் உருவானவுடனேயே மனிதனில் ஆரம்பிக்கும் சட்டத்தின் ஆதிக்கம் மனிதனுடைய மரணம் வரையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இவ்வாறு மனிதனின் சமூக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் சட்டமானது பின்னிப் பிணைந்து காணப்படுவதால் சட்டமும் ஒழுக்கமும் சமூகத்தில் திணிக்கப்பட்டாலும் பின்பற்ற வேண்டிய கடப்பாடு காணப்படுகின்றது.

சமூகத்தில் சட்டவாட்சியானது தனிமனிதனின் சர்வாதிகார ஆட்சியிலிருந்து வேறுபடுகின்றது. உதாரணமாக, தனிமனிதன் தனக்கேற்றபடி விதிகளை உருவாக்கி சம அந்தஸ்தில் உள்ள ஒருவரை ஒரு முறையிலும் இன்னொவரை வேறொரு முறையிலும் நடாத்த முடியும். மனிதனே சட்டத்தை தனது தேவை கருதி உருவாக்குகிறான். தனக்கென ஒரு வாழ்வைச் சமூகத்தில் சட்டமானது பெற்றுக் கொடுக்கின்றது. இதனால் அதிகாரத்திலுள்ளவர்களுடைய அதிகார துஷ்பிரயோகம் தவிர்க்கப்பட்டு தனிமனிதனுடைய உரிமைகளும் சுதந்திரங்களும் பாதுகாக்கப்படுகின்றன.

சட்டம் சமூகத்தில் நடைபெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபடுகின்றது. ஒவ்வொரு தனிமனிதனையும் தான் விரும்பியவாறு குற்றச் செயல்களை செய்வதனைச் சட்டம் தடை செய்வதன் ஊடாக உடல், பணம், பதவி ரீதியாக பலம் குறைந்தவர்களை மட்டுமன்றி சமூகத்தில் அனைவரையும் பாதுகாக்கின்றது. ஆகவே, சட்டமும் ஒழுங்கும் இன்றிய சமூகம் குழப்பகரமானதாகவே காணப்படும்.

மேலும், குற்றவாளிகள் தப்பித்துவிட்டார்கள். சட்டம் அதிகாரத்தில் இருப்பவர்களைக் கட்டுப்படுத்தவில்லை. சமூகத்தின் வளர்ச்சியைத் தடுக்கின்றது. தனிமனித உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கத் தவறிவிட்டது. சமூகத்தில் சட்ட ஒழுங்கு குறைந்துவிட்டது எனக் கருதுவதால் இத்தகைய சட்டங்களை மக்கள் கெட்ட சட்டங்கள் என்று குறைவுபடுத்திக் கூறுகின்றனர். ஆனால் சட்டமானது குற்றவாளியையும்கூட சமூகத்தின் அங்கமாகவே பார்க்கின்றது. மாறாக அக்குறிப்பிட்ட நபரைத் தீண்டத் தகாதவன் என ஒதுக்குவதில்லை.

## II. ஓர் சமூகத்தில் சட்டமும் ஒழுங்குமும் எவ்வாறு ஆர்வலூட்டப்படுகின்றது?

கற்களை உரசித் தீயைக் கண்டதில் ஆரம்பித்த மனிதனின் ஆராய்ச்சி, இன்று அணுவைப் பிளந்து வலுவைப் பிறப்பிக்குமளவிற்கு முன்னேற்றம் கண்டுள்ளது. கற்காலம் முதல் இன்றைய கணினி யுகம் வரை மனித சமூகத்தின் அபிவிருத்திக்கு மனிதனின் சிந்தனைத் திறன், கடின உழைப்பு, விடாமுயற்சி, விஞ்ஞான தொழில்நுட்பம் என்பன எவ்வளவு காத்திரமான பங்களிப்பை வழங்கியனவோ அதேஅளவு பங்காற்றிய பெருமை சட்டம், ஒழுங்கு என்பவற்றிற்கும் உண்டு.

மனித முன்னேற்றப் பாதை ஒரு யுகத்தில் இருந்து இன்னொரு யுகத்திற்குள் பயணித்த வேளைகளிலும் சரி, புதிய அபிவிருத்திப் பாதைகளில் மனிதன் பயணித்தபோதும் சரி, புதிய விஞ்ஞான தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்களை புழக்கத்தில் விட்டபோதும் சரி சட்டம் அச்சந்தர்ப்பங்களில் அவ்விடயங்களில் தன்னிச்சையாக நுழைந்து அவை அனைத்தையும் நெறியாள்கை செய்தமையே இன்றைய உச்சக் கட்ட அபிவிருத்திக்கு அடிப்படைக் காரணம் ஆகும்.

சட்டம் ஒரு முறை நிறைவேற்றப்படின் அது அமுலுக்கு வந்துவிடும். அதில் பின்பு ஏதேனும் மாற்றம் அல்லது திருத்தம் செய்ய வேண்டியிருப்பின், அரசியலமைப்பிலும் நிலையியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளைகளிலும் எடுத்துக் கூறப்பட்ட வழிமுறைகளிலேயே செய்யப்பட வேண்டும். ஆனால் பாராளுமன்ற உறுப்பினர்களும்கூட ஏற்கனவே ஆக்கப்பட்ட சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுவர். சட்டம் சமுதாயத்தில் பாரிய அதிகாரத்தைக் கொண்டிருப்பதற்கான காரணங்கள் வருமாறு:

- ஒருவர் தனது தேவைக்கு ஏற்ப மாற்ற முடியும்.
- சட்டம் எல்லாரையும் கட்டுப்படுத்தும்.
- சமயத்துடனும் ஒழுக்கத்துடனும் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றமை.

மனித சமூகத்தில் சட்டமும் ஒழுக்கமும் பல்வேறு செயற்பாடுகளுக்கு காத்திரமான பங்களிப்பினை செய்து வருகின்றன. உதாரணமாக, தனிமனிதனின் குணநலனை உயர்த்தி அதன் வழி சமுதாய நலனாக அறம் பேணுகின்றது. சமுதாய நலனுக்கு இடர் விளைவிக்காத வகையில் தனிமனிதனின் செயல்களைச் சட்டம் நெறிப்படுத்துகின்றது. தனி மனிதப் பண்பினை மையமாகக் கொண்டு அறம் இயங்குகிறது. சமுதாய நலத்தினை உரைக்கல்லாகக் கொண்டு சட்டம் இயங்குகின்றது.

**தனி மனிதப் பண்பினை உயர்த்துகிறது. அறம்**
**சமுதாய நலப் பண்பினைக் காக்கிறது சட்டம்.**

அறம் தனிமனிதப் பண்பினை உயர்த்துகின்றது. சட்டம் மக்களிடையே எழும் உறவுகளை மட்டுமே ஒழுங்குறச் செய்கிறது என்று ரொஸ்கொயி பவுண்ட் (Roscoe Pound) குறிப்பிடுகின்றார். இன்னா செய்தாருக்கும் இனியவை செய்ய வேண்டும் என்பது உயர்ந்த அறநெறிக் கொள்ளை. ஆனால் தமக்கு தீமை இழைத்தவருக்கும் ஒருவர் நன்மையே செய்ய வேண்டும் என்று சட்டம் கூறுவதில்லை. ஒவ்வொருவரும் உயர்ந்த நெறியில் வாழ்ந்தால் சமுதாய இன்பம் தானே தோன்றி நிலைத்துவிடும் என்ற அடிப்படையில் அறம் இயங்குகிறது. ஆனால் சட்டத்தின் முறை வேறு. சமுதாய நலன் எது என்பதை வரையறை செய்து கொண்டு அந்நலனுக்கு மாறான செயல்களை மக்கள் செய்யாதவாறு சட்டம் கண்காணிக்கின்றது. பிறருக்கு தீங்கு இழைக்காதவாறு ஒருவரது செயல் இருக்க வேண்டும் என்பதே சட்டநெறி. நன்மை செய் என்று அறம் கூறுகிறது. தீமையையே செய்யாதே என்று சட்டம் விதிக்கிறது. நன்மையை வளர்க்கின்றது அறம். தீமையை ஒடுக்குகின்றது சட்டம்.

**அறம் நன்மையைப் பெருக்குகிறது**
**சட்டம் தீமையை ஒடுக்குகிறது.**

சட்டத்தின் நோக்கம் வெறும் ஒழுங்கையும் அமைதியையும் காப்பது மாத்திரமல்லாமல் நல்ல சமுதாயம் அமைப்பதற்கு வழிகாட்ட வேண்டுமென்பதுதான். சட்டம் சமுதாயத்தில் நல்லவர்களால் போற்றப்படும் பண்பாடுகளையும், நாகரிகத்தையும், தேவைகளையும் எதிரொலிக்க வேண்டுமென்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர். அத்தகைய சட்டம் ஒரே சீராகவும், வலுவுடனும், நடுநிலையுடனும் மக்கள் மத்தியில் அமுலாக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும். எனவே வெகு வேகமாக முன்னேறும் சமூகத்திற்கு சட்டம் துணையாக இருப்பதால் சட்டம் எல்லோராலும் ஆர்வமூட்டப்பட்டு வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரட்மன் (Friedman) என்ற அறிஞர் (law and culture by m.c.Satavad) கூறுகின்ற மாதிரி வளரும் சமுதாயத்திற்கும் சட்ட மன்றத்திற்கும் இடையே ஒன்றுபட்ட நோக்கம் இருப்பது தேவையானதாகும். காரணம், சமுதாயத்தில் மாற்றங்கள் எழும்பொழுது சட்டமும் மாற்றங்களை ஒட்டி விரைந்து செல்ல தவறினால் சமுதாயத்திற்கும் சட்டத்திற்கும் பெரும் இடைவெளி ஏற்படும். எனவே, இங்கு பல அறநெறிகள் சட்டத்துக்கு அடிப்படையாக அமைகின்றன. அறம் சமூகப் பாதையை செப்பனிட்டு தருகின்றது. சட்டம் அதில் நடைபோடுகின்றது.

தனி மனிதனை ஒழுங்குபடுத்தி சமுதாயத்தில் அவனை நல்ல அங்கமாக்குவது தேவையானதொன்றாகும். இந்தப் பணியை அறநெறி ஆற்றும் சட்டம் அயலாருக்குத் துன்பம் செய்யாதே என்று ஆணையிடும் போது சமுதாயமே முன் நிற்கின்றது. தனிமனிதனை அறநெறியில் செலுத்தலும் சமுதாயத்திலுள்ள தீமைகளை சட்டத்தின் மூலம் நீக்குதலும் ஒரே பொது நோக்கத்துடன் செயற்படுகின்றன. இரண்டுக்கும் குறிக்கோளாக இயங்குவது சமுதாய இன்பம்.

**"அறத்தான் வருவதே இன்பம்"** என்று திருக்குறள் அறுதியிட்டு கூறுகின்றது. சட்டத்தின் நோக்கமும் அதுவேயென்றால் சட்டம் அறநெறிகளைவிட்டு விலகக்கூடாது. அறநெறிகளையொட்டியே செல்ல வேண்டும். சட்ட ஆட்சியைவிட அன்பாட்சியே (Rule to love) மேலானது. அதனால் மனித இயல்பு அன்பாட்சியையும் விரும்புகின்றது. சட்ட ஆட்சியையும் வேண்டுகின்றது. ஆகவே இரண்டும் இணைந்த ஆட்சி மனித சமுதாயத்திற்கு இன்றியமையமையாததாகும். சமூகத்தில் சட்டமும் சமயமும் நல்ல சிந்தனைகளையும் கருத்துக்களையும் உணர்த்துகின்றன. இவ்விரண்டும் பொது அம்சமாகிய மனசாட்சி, நீதி, நியாயம் என்பவற்றை சோதிப்பது மட்டுமன்றி வலியுறுத்துகின்றது. சமயநெறி கூறும் நல்ல சிந்தனைகளை சட்டமும் போதிக்கின்றமையினால் சட்டம் மக்களினால் விரும்பியோ, விரும்பாமலோ பின்பற்ற வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இதனால் சட்ட ஒழுங்குமுறைகள் மக்களால் ஆவமூட்டப்படுகின்றன. உதாரணமாக, பொய் சொல்லாதே, திருடாதே, இன்னோர் உயிரைப் பறிக்காதே, பிறர் பொருளை அபகரிக்காதே போன்ற கொள்கைகளை பஞ்சசீலம் போதிக்கின்றது. ஆனாலும் சட்டமானது மேலதிகமாக, கொலை செய்யாதே, கொள்ளை அடிக்காதே. இவைகளைச் செய்தால் தண்டிக்கப்படுவாய். சிறை வாசமும் தூக்குக் கயிறும் உனக்கு பரிசாக வழங்கப்படும் என எச்சரிக்கின்றது. இவ்வாறு சட்டமும் ஒழுங்கும் திணிக்கப்பட்டாலும், மக்கள் மத்தியில் ஒழுங்காக பின்பற்றப்பட்டு வருகின்றன.

சமயத்தினை மதிப்பவன் நிச்சயம் சட்டத்தினையும் மதித்தே தீருவான். இதனால்தான் நீதிமன்றங்களில் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு அதாவது நீதிமன்றத்தில் **"நான் சொல்லுவதெல்லாம் உண்மை. உண்மையினைத் தவிர வேறு ஒன்றுமில்லை"** எனக் கூறி சத்தியம் செய்கின்றோம். இதனால்தான் சத்தியம் செய்தபின் பொய் சொன்னால் தண்டிக்கப்படுவாய் என்ற அச்சத்தினையும் பயத்தினையும் உருவாக்குகின்றது.

நீதியினைப் பெறும் மார்க்கமே சட்டமாகும். இச்சட்டத்தின் முன் யாவரும் சமம். ஆயிரம் குற்றவாளிகள் தப்பிச் செல்லலாம். ஆயினும், ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித தத்துவமும் இச்சட்டத்தினுள் அடங்கியுள்ளது. ஆனால் சட்ட நடைமுறைகளில் உள்ள சில ஓட்டைகளினால் சிலவேளை குற்றவாளி தப்பி சென்றுவிடலாம். ஆனால் நிரபராதி ஒருவர் தண்டிக்கப்படக்கூடாது என்று சட்டம் வலியுறுத்துகின்றது. மனுநீதி கண்ட சோழன் பற்றி அறிந்திருப்பீர்கள். இம்மன்னனின் மைந்தன் தேரோட்டி செல்லும்போது தேர்ச்சில்லில் அகப்பட்டு கன்றினை இழந்த பசு ஆராய்ச்சி மணி அடித்தது. நீதி கேட்டபோது தன் மகனையே தேர்க்காலில் நசித்து கொன்ற சம்பவமானது சாதாரண பிரஜையாக இருந்தாலும் பெற்ற மகனாக இருந்தாலும் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற அருமையான தத்துவத்தினைச் சட்டம் உணர்த்தி நிற்கின்றது. சட்டம் தனி மனித ஒழுக்க வகுதிக்குள் தலையிடக்கூடாது என்று கூறி சமயங்கள் கடுமையாகப் பின்பற்றிய பல ஒழுக்கநெறிகளைச் சட்டம் புறந்தள்ளியது.

அதேவேளை சட்டத்தின் முன் சகலரும் சமம் என்ற கோட்பாட்டினை அடிப்படையாக கொண்டு ஒவ்வொரு மனிதனதும் உரிமைகள் பேணப்பட வேண்டும். அவனது சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் மனித உரிமைகள் தொடர்பான கொள்கைகள் பிறந்தன. இவற்றின் மூலம் அடிமைகள் என்ற வர்க்கம் அழிக்கப்பட்டது. இவ்வாறு மனிதனை தனித்துவமாகச் செயற்பட சுதந்திரமளித்தமையானது மனித சமூகத்தின் பல வெற்றிகளிற்கு அனுமதித்தது. கைத்தொழில் புரட்சி, பசுமைப் புரட்சி, விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி என்பன இவ்வுரிமைகளை அனுபவித்ததால் பெறப்பட்ட வெற்றிகளாகும். இதே காலத்தில் தோன்றிய இன்னொரு உரிமை கருத்து சுதந்திரம் ஆகும். மக்கள் தமது எண்ணத்தை வெளிப்படுத்த அவர்களிற்கு இருந்த உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டன.

தனி மனிதனின் சிந்தனையை பிறருடன் பகிர வாய்ப்பு வழங்கப்பட்டது. ஒரு துறையின் அபரிமிதமான வளர்ச்சி மற்றைய துறையையோ அல்லது இயற்கை சூழலையோ அல்லது தனிமனித உரிமையையோ அல்லது மனித உணர்வையோ, கலாசாரத்தையோ, பாரம்பரியத்தையோ பாதிக்காத வண்ணம் சட்டம் எல்லாத் துறைகளையும் பாதுகாத்து நெறியாள்கை செய்தது. விஞ்ஞானத் துறையினை நோக்கின், ஆயுதத்தின் மூலம் மேலும் அழிவுகள் தொடராமல் இருக்க சட்டம் இன்றும் கடும் முயற்சி மேற்கொள்கின்றது. மரபணு பரிசோதனைகள், குளோனிங் என்பவை மனித மாண்புகளிற்கு மாசு ஏற்படாத வகையில் மட்டுமே நடைபெற வேண்டும் என சட்டம் கட்டுப்பாடு விதிக்கின்றது. தொழில்நுட்பக் கழிவுகளை அகற்றும்போது அது இயற்கைக்கும் மனிதனுக்கும் ஏன் பிரதேசங்களிற்கும் பாதிப்பையோ மாசுபடுத்தலையோ உண்டு பண்ணாமல் சட்டம் தடுக்கின்றது.

சட்டமானது சமூகத்தில் வாழும் தனிமனிதனுடைய உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதில் பங்களிப்பு செய்கின்றது. பொது நிர்வாக அதிகாரிகள் தமது அதிகாரத்தினை நியாயமானதாக தம் முறையானதாகவும் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துகின்றது. இதனூடாக சமூகத்தில் மனிதனுடைய சுய கௌரவம் பேணப்பட்டு சமூக அமைதியை ஏற்படுத்த சட்டமும் ஒழுங்கும் தனது குறிக்கோளை நிறைவேற்றுகின்றன. உதாரணம்:- இந்திய உச்ச நீதிமன்றம் Rural Litigation Entitlement Kendra VS UP என்ற வழக்கில் முதன் முறையாக சுகாதாரமான சூழலில் வாழ்வதற்கு மக்களுக்குள்ள உரிமையினை அங்கீகரித்து பேருடன் பள்ளத்தாக்குப் பகுதியில் நடைபெற்று வந்த சுண்ணாம்பு அகழிக்கல் சுரங்கத் தொழிலினால் ஏற்பட்ட மண்ணரிப்பு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகள் அழிப்பு போன்ற சுற்றுச்சூழல் பிரச்சனைகளை கவனத்தில் கொண்டே உச்சநீதிமன்றம் அத்தகைய சுரங்க தொழிற்சாலையை மூடுமாறு உத்தரவிட்டது.

அந்த உத்தரவில் சூழல் சமநிலை பாதிக்காத சுகாதாரமான சூழலில் மக்கள் வாழ்வதற்கான உரிமை உண்டு என எடுத்தியம்பியது. சாதாரண வியாபாரங்கள் முதல் சர்வேதச வர்த்தகங்கள் வரை சட்டத்தினால் நெறிப்படுத்தப்படுகின்றன. ஏன் ஒரு மனிதனது சிந்தனைக்கும் அவனது புலமையின் மூலம் உருவான படைப்புகளிற்கும் கூட இன்று சட்டம் பாதுகாப்பு வழங்குகின்றது. புலமைச் சொத்துச் சட்டம் மூலம் இன்று ஒருவனது புலமையினால் உருவான படைப்புக்கள் யாவும் அவனது சொத்து என்று சட்டம் பிரகடனப்படுத்துவதனால் மற்றவ்ரகள் நியாயமற்ற முறையில் ஒருவரது திறமையினால் நன்மையடைவது தடுக்கப்படுகிறது.

இதன் மூலம் நாம் சட்டத்தினதும் சட்டவியலாளர்களினதும் சிறப்புத் தன்மையை அல்லது தனித்துவத்தை அறிந்து கொள்ளலாம். மற்றைய துறைகளைப் பொறுத்தவரை அவை தம்மை மட்டும் கருத்தில் கொண்டு தமது முன்னேற்றப்பாதையில் அபரிமிதமான வேகத்தில் பயணிக்கலாம். ஆனால் சட்டம் அவ்வாறு பயணிக்க முடியாது. அனைத்துத் துறைகளையும் சீராக நெறிப்படுத்துவதுடன் அத்துறைகளிற்கிடையேயான இடைத்தாக்கங்களை சீராக்குவது மட்டுமன்றி மனித உரிமைகள், உணர்வுகள் என்பவற்றையும் கருத்தில் கொள்வதோடு இயற்கைச் சூழலையும் பாதுகாக்க வேண்டிய பாரிய கடமை சட்டத்திற்கு உண்டு.

எடுத்துக்காட்டாக, இந்திய நீதிமன்றங்கள் சூழற் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும் ஏனைய சட்டங்களைவிட அவை எவ்வளவு தூரம் மனித வாழ்வுடன் முக்கியத்துவம் பெறுகின்றன என்பதையும் பரந்த அளவில் நிலைநிறுத்தி இருப்பதைக் காணலாம். அதேவேளை நமது நாட்டின் சூழற் சட்டம் தொடர்பாக நீதிமன்றங்களின் போக்கு எத்தகையது என ஆராய்ந்தோமானால், இன்று சூழல் தொடர்பான வழக்குகள், பொதுமக்கள் அக்கறை வழக்காடல்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எனவே, சட்டம் சமூகத்தை ஆளும் விதிகளின் தொகுப்பு என்பது இதிலிருந்து புலனாகின்றது. ஒரு சமூகத்தின் அபிவிருத்திக்கும் சட்டத்தின் காத்திரமான பங்களிப்பு அவசியம். சட்டத்தை இயற்றுபவர்கள்கூட பல துறைகளில் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் பன்னோக்கு, தூரநோக்கு உடையவர்களாகவும் இருக்க வேண்டும். அப்போது தான் அச்சட்டங்கள் சமூகத்தை ஆளும். அச்சட்டங்களால் சமூகங்களும் பலனடையும்.

சமூகத்தில் மனிதனின் உடலுணர்ச்சியுடனும், மன உத்வேகத்துடனும் பின்னிப்பிணைந்துள்ள காம உணர்வுக்கு உரிய முறையில் வடிகாலற்றுப் போகும் போதும் வெறும் தூண்டுகைகளும், அடைந்துக்கொள்ளல் வழி முறைகளற்று இருக்கும் போதும், காமவெறி மனிதனை மனிதன் என்ற நிலையிலிருந்து தடம்புரளச் செய்கின்றது. தன்னிலை மறந்த மனிதன் குற்றச்செயல்களை புரிகிறான். மேலும், ஆணாதிக்க சமூகத்தின் கோரப்பிடியினுள் சிக்குண்டிருந்த பெண்மை தன் விடுதலைக்காக, தமது உரிமைகளுக்காக தொடுத்துள்ள உரிமைப்போராட்டம் வரவேற்கத்தகு முன்னேற்றங்களை சமூகத்தில் உட்புகுத்தியிருந்தாலும், அதன் பக்க விளைவாய் திறந்த பாலுறவு உட்புகுந்துள்ளது. இதுவும் சமூகத்தின் குற்றச்செயல்களைத் தூண்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் முதல் வாதப் போக்கும், அதற்கு துணை செய்வதாக அமைந்துவிடும். திறந்த பாலுறவு நிலையும், நுகர்வோர் கவர்ச்சிக்காக காமத்தின் பிரயோகத்தைப் பயன்படுத்த உதவியாக அமைகிறது. இதன் தொடராக பலவாறான குற்றச்செயல்கள் அரங்கேறுகின்றன.

இத்தகைய குற்றச்செயல்களைக் குறைக்க வேண்டுமெனின் சட்டமானது ஒழுக்கத்தையும் மனித மனச்சாட்சிகளையும் (Human conscience) மாற்றிக்கொண்டு இருக்கக்கூடாது. மாறாக அதன் தன்னாண்மை பன்மைத்துவ அங்கீகாரம் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் மனிதர்களின் இயல்பான சுதந்திர விருப்பத்துக்கான வரையறைகளாக அமைந்துள்ள பிறவிக்குணநலன், பரம்பரை, வாழ்விடச்சூழல், இயற்கை ஆகியவற்றை மாற்ற முனையக்கூடாது. இவை மாற்றமுறா நியமங்களாதல் வேண்டும்.

மனித சமுதாயமொன்றில் சட்டம் ஒழுங்கு முறையாகச் செயற்படுவதற்கு அங்கு சமுதாயத்தில் வாழும் ஒவ்வொரு தனியன்களினதும் உயிர், உடமை, மானம் என்பன மதிப்பளிக்கப்பட்டு போற்றிப் பாதுகாக்கப்படல் வேண்டும். இந்த நியமம் பேணப்படாவிட்டால் தனியன்களின் போராட்டம் சட்டத்தைக் கேலிக்குள்ளாக்கும்.

ஒரு சமூகமாக அல்லது நாடாக தேசியமாக நோக்குகையில் அந்த அமைப்பிலே நீதி, உண்மை, ஞானம், விசுவாசம் என்பனவற்றுடன் இணைந்து ஐக்கியப்பாடு காணப்படல் வேண்டும். இலங்கை போன்ற பன்மைத்துவமிக்க தேசியங்கள் வாழும் நாடுகளில் இத்தகு நியமங்கள் கவனிக்கப்படல் வேண்டும். இவற்றில் ஏற்பட்ட பிறழ்வுகள் தான் இரண்டு தசாப்தகால யுத்த நிலைக்கான காரணங்களாயின. இப்போது தீர்வுக்கான முயற்சிகளின் போதும் ஒவ்வொரு தேசியமும் உரிய முறையில் கவனிக்கப்படத் தவறும் பட்சத்தில் எதிர்காலமும், கடந்தகால நிகழ்கால அவலங்களைச் சுமக்க நேரிடலாம்.

இறுதியாக ஒரு சட்ட முறைமையானது தனது அடிப்படை நியமங்களாக, கொள்கை, உயிர்களைப் பாதுகாத்தல், சிந்தனைச் சுதந்திரமும் பாதுகாப்பும், பரம்பரையைப் பாதுகாத்தல், செல்வங்களைப் பாதுகாத்தல், சமூக நீதிகளையும், சுதந்திரத்தையும் பேணல் என்பவற்றைக் கொண்டு இவை ஒன்றுக்கொன்று முரண்படுகின்ற நிலை தவிர்த்து சமநிலை பேணி முன் கொண்டு செல்லப்படுமாக இருந்தால் அந்தச் சட்டமுறை நிச்சயமாக வெற்றி பெற்றதாகும். அப்போது சட்டம் வெறும் சட்டமாக அன்றி சக்தியாக மாறி இயக்கியாக நின்று சமூகத்தை இயங்கு நிலைக்குட்படுத்தும்.

## III. இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் திணிக்கப்படுகின்றதா அல்லது ஆர்வ மூட்டப்படுகின்றதா?

இலங்கையில் கடந்த முப்பது ஆண்டுகளாக வன்முறையாக இடம்பெற்ற யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதன் மூலம் வன்முறைக் கலாசாரத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டதாக அரசாங்கம் வெற்றி முழக்கமிட்டு வருகின்றது. எனினும், யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு ஆண்டுகள் ஐந்து உருண்டோடிவிட்ட நிலையில் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் எவ்வாறு காணப்படுகின்றது என நோக்குவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் திருப்திகரமாக செயற்படவில்லை என சர்வதேச அமைப்பு தெரிவித்த கருத்தாடலை பார்க்க வேண்டியது அவசியமாகிறது. அந்தவகையில், டிரான்பெரன்சி இன்டர்நெஷனல் (Transparency International) அமைப்பு கருத்து தெரிவிக்கையில்,

- நீண்ட காலம் இடம்பெற்று வந்த யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் சட்டம், ஒழுங்கை நாட்டில் நிலைநாட்டுவதற்கு பல நெருக்கடிகள் காணப்படுகின்றன.
- நாட்டில் ஜனநாயக மரபுகளைக் கட்டிக் காத்தல், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டல், குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குதல் போன்ற விடயங்களில் இலங்கை அரசாங்கம் காட்டும் அக்கறை போதுமானதல்ல.
- ஊடக சுதந்திரம், மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் திருப்தி அளிக்கும் வகையில் இல்லை.
- 2004ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை 34 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளது.
- சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் இடையே உறவுகளை வலுப்படுத்தும் ஜனநாயக ஆட்சி முறையை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக ஆட்சிமுறையினை சீராக நடாத்துவதற்கு சட்டமும் ஒழுங்கும் சமூகத்தின் மத்தியில் திணிக்கப்பட்டோ அல்லது ஆர்வமூட்டப்படுவதன் மூலமோ முன்னெடுக்கப்படுவது இன்றியமையாததாகும். இலங்கையில் மூன்று தசாப்த காலமாக நீடித்த யுத்தம் முடிவடைந்துள்ளபோதிலும், சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகின்றது. சமாதானத்தை வென்றெடுப்பதனைக் காட்டிலும் யுத்தத்தை வென்றெடுப்பது சுலபமானதாகவே நோக்கப்படுகின்றது.

இலங்கை மீது சர்வதேச விமர்சனங்கள் காரசாரமாக முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து வருகின்றது என முன்னாள் கட்சியின் தலைமைத்துவ பேரவைத் தலைவர் கரு ஜயசூரிய 2013ஆம் ஆண்டின் இறுதியில் வெளியிட்ட கருத்துக்கள் இக்கருத்தாடலில் ஈண்டு நோக்கற்குரியது. சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ளமை ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். மேலும் அவர் குறிப்பிடுகையில் 17ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்து நாட்டின் சட்டம், ஒழுங்கின் நிலைமையை வலுப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி முயற்சி எடுத்துள்ளபோதிலும், அந்த முயற்சி தோல்வியடைந்துள்ளது என மேற்கோள் காட்டியிருந்தார்.

நாட்டின் சட்டம், ஒழுங்கு குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டம், ஒழுங்குப் பிரிவு தலைவர் விஜநாயக்க குறிப்பிட்ட கருத்தினை இங்கு பகிர்ந்து கொள்ள வேண்டிய தேவையுள்ளது:

> காவல் துறையினரின் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது. உதாரணமாக, 2012 டிசம்பரில் றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள்மீது தாக்குதல் நடாத்தப்பட்டபோது காவல் துறையினர் நடந்து கொண்ட விதம் ஏற்றுக் கொள்ள கூடியது அல்ல. அரசியல்வாதிகள் குற்றச் செயல்களில் ஈடுபடும்போது காவல் துறையினர் வெறுமனே வேடிக்கை பார்த்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றினை வைத்துப் பார்க்கும்போது, சட்ட, ஒழுங்குகளை பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு படை சட்டத்தினை கையில் எடுத்து தமக்கு ஏற்புடைமையாக மாற்றி மக்கள் மத்தியில் திணிப்பதன் மூலம் தப்பிக் கொள்கின்றனர்.

சர்வதேச ஜரிகள் சபை இலங்கையில் சட்ட ஒழுங்கு தொடர்பாகக் குறிப்பிடுகையில், நீதிமன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையில் முரண்பாடு காணப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்காவிற்கு எதிராகக் குற்றவியல் பிரேரணைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை நாட்டின் உயர் மற்றும் மேன்முறையீட்டுத் தீர்ப்புக்களை உதாசீனம் செய்யும் வகையில் அமைந்துள்ளது என தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. மிகக் குறுகிய கால அரசியல் நலன்களுக்காக ஒட்டுமொத்த நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மைக்கும் களங்கம் ஏற்படும் வகையில் இலங்கையில் நடைபெறும் நடவடிக்கைகள் காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாது பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்காவிற்கு எதிராகக் குற்றவியல் பிரேரணை விவகாரம் சர்வதேச தரநிர்ணயங்களுக்கு அமைய நடைபெறவில்லை என குறை கூறியுள்ளன.

நம் நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கே தமிழர்கள் அதிகம் வசிக்கும் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாண தீபகற்ப பகுதியில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது அவர் கூறிய கருத்தாடலை இங்கு குறிப்பிடுவது சாலச் சிறந்தது:

> நாட்டின் அமைதியையும் ஸ்திரத்தன்மையையும் பாதுகாக்க வேண்டும் என்றால் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண வேண்டியது மிகுந்த அவசியமாகும். போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிப்போரைக் கைதுாக்கிவிடவும் அவர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கும் எங்களது அரச உறுதி பூண்டுள்ளது. இப்பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் மின்சாரமும் சுத்தமான குடிநீரும் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். அதேபோல் இப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றில் மிகுந்த கவனம் செலுத்தப்படும். போரின்போது சேதமடைந்த காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயன தொழிற்சாலை மற்றும் பல்வேறு பெரும் தொழிற்சாலைகள் மீண்டும் தொடங்கப்பட்டு அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும். அத்தோடு, அன்றாட சட்ட ஒழுங்கு பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டு அதற்கான தீர்வுகளை மேற்கொள்ள 400 தமிழ் இளைஞர்கள் பொலிஸ் அதிகாரிகளாக நியமிக்கப்படவுள்ளனர்.

சட்டமும் ஒழுங்கும் ஆர்வமூட்டப்பட்ட நீதிமன்றத்தின் சுயாதீனமான தன்மை மிகவும் அவசியம் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய குறிப்பிட்டிருந்தார். அத்தோடு சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றதும் நேர்மையுமான நீதிமன்ற கட்டமைப்பு மிகவும் அவசியம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டின் சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவது நீதிமன்றத்தின் முதன்மைக் கடமை என சுட்டிக்காட்டினார். மேலும் இவர் அண்மையில் அளுத்கமை பிரதேசத்தில் இடம்பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்களின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு முன்னணியில் இருந்து செயற்பட்டு வருகின்றார். அவ்வாறான ஒருவருக்கு பாரிய அச்சுறுத்தல்கள் விடுவிக்கப்பட்டது என்பது யாவரும் அறிந்ததொன்று. இதனால் நம் நாட்டில் சட்டம், ஒழுங்கை பேணுவதில் உள்ள பாரிய தடங்கல்களும் குறைபாடுகளும் அப்பட்டமாக வெளிப்படுகின்றன. குறிப்பாக, உயர்மட்டத்தில் உள்ளோரின் அனுதாபிகளுக்கு வளைந்து கொடுக்கும் வகையிலே சட்டமும் நீதித்துறையும் செயற்பட்டு வருகின்றது அல்லது ஆர்வமூட்டப்படுகின்றது. இதனால் நாட்டில் சட்ட ஆட்சியின் அடித்தளம் ஆட்டங்கண்டு வருகின்றது. சில பேர் சட்டத்தின் முன் நிறுமத்தப்படாமல் எல்லோரையும்விட அதிகரித்த பக்கசார்பையும் சலுகைகளையும் அனுபவித்து வருவது பகிரங்க இரகசியம்.

ஜனநாயகப் பெறுமானங்கள் பலவீனமடைந்து செல்லும் வகையில் தனிமனிதரின் கையில் எல்லையற்ற அதிகாரத்தை குவித்து வைத்திருக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நம் சட்ட ஏற்பாடாக அரசியல் அமைப்பு உள்ளடக்கமாகவும் கொண்டுள்ளோம். அரசியல் அமைப்பும், சட்ட ஏற்பாடுகளும் ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் வலுப்படுத்தவே வடிவமைக்கப்படுகின்றன. ஆனால் அதே சட்ட ஏற்பாடுகள் ஜனாநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு சர்வாதிகாரப் பாதைக்கு வழி திறக்குமாயின் வீழ்ச்சிக்கான பாதையில் செல்கின்றோம் என்பதே யதார்த்தமாகும்.

## IV. இலங்கையில் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளை முன்னெடுத்து செல்லல்.

ஒரு நாட்டில் சட்டமொன்றை உருவாக்குவதாகவிருந்தால், அது இறைமையிலிருந்து வெளிப்படல் வேண்டும். அந்த இறைமை ஏனைய சாதாரண குடிகளைவிட உயர்ந்ததோர் அந்தஸ்தில் இருப்பதுடன் சட்டத்தை இயற்ற, நீக்க, திருத்த, பரிபாலிக்க கட்டற்ற பூரண அதிகாரம் அதனிடம் இருக்க வேண்டும். அப்போதுதான் அங்கு உண்மையான நீதி நிர்வாகம் பிரதிபலிக்கும். இதற்கு சிறந்த உதாரணமாக எமது பாராளுமன்றத்தினைக் குறிப்பிடலாம்.

அந்தவகையில் டைசியின் சட்ட ஆட்சிக்கோட்பாட்டின்படி அனைவரும் சட்டத்தின் முன் சமனாகக் கருதப்படல் வேண்டும். இந்நிலை எமது 1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பில் உறுப்பு 12 (1) மற்றும் (2) இலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. சட்டத்தின் முன் சகலரும் சமம் என்ற அம்சத்தினை எடுத்துக் கொள்வோமாயின், இலங்கையின் அரசியலமைப்புச் சட்டமானது டைசியின் சட்டவாட்சிக் கோட்பாட்டின் முக்கிய பிரிவான சமத்துவத்திற்கான உரிமையை உறுப்புரை 12(1) மற்றும் (2) இலும் உறுதிப்படுத்தியிருக்கின்றன. இவ்வரசியலமைப்பில் 12(1) சரத்தின்படி சட்டத்தின் முன் சகலரும் சமனானவர்கள் என்றும் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அரசியலமைப்பின் 12(2) சரத்தின்படி இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்கள் ஏதேனும் ஒன்று காரணமாக எந்த பிரஜையும் ஓரங்கட்டப்படுதல் ஆகாது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உறுப்புரை 35இன் கீழ் ஜனாதிபதி முழுமையான விடுபாட்டுரிமை உடையவராக விளங்குகின்றார். தாம் பதவி வகிக்கும்போது அவர் பதவி ரீதியாகவோ தனிப்பட்ட ரீதியாகவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த அல்லது செய்யாதுவிட்ட எந்த விடயம் தொடர்பிலும் அவருக்கெதிராக வழக்கிட முடியாது. இது அவரால் தனிநபர் உரிமைகள் மீறப்படும்போது அதை கேள்விக்குட்படுத்த முடியாத சர்வாதிகாரப் போக்கையே காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, **Vijeya Kumarathunga Mallikarachchi vs AG** வழக்கில் எதிராளியாக ஜனாதிபதியின் பெயர் இடம்பெற முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகக் காணப்படுகின்றது.

மேலும், **Water edge case** என அழைக்கப்படும் **Sugathapala Mendis vs Chandrika Bandaranayake Kumarathunga & others** என்னும் வழக்கில் கௌரவ நீதியரசர் சிராணி திககவர்த்தன அவர்கள் இலங்கைச் சட்ட முறைமையில் பகிரங்க நம்பிக்கை பொறுப்பு கோட்பாடு வெளிப்படையாக அங்கீகரிக்கப்படுவதற்கு உத்தரவாதம் அளித்தமையோடு நிறைவேற்றுத் துறை தத்துவம் பகிரங்க நம்பிக்கைக்கு முரணாக பிரயோகிக்கப்படுகையில் அது அதிகார துஷ்பிரயோகம் எனவும் சட்டவாட்சிக்கு முரண் எனவும் எடுத்துக்காட்டினார்.

இந்த வழக்கானது அரசியலமைப்பு உறுப்புரை 12(1) இனால் உத்தரவாதம் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக சார்த்துதல் செய்யப்பட்ட ஒன்றாகும். பொது நோக்கத்திற்கென காணி சுவீகரிக்கப்பட்டு பின்னர் தனிப்பட்ட பொறுப்பு முயற்சியாளருக்கு முற்றானதும் தனிப்பட்டதுமான களியாட்ட விடுதிக்கென வழங்கப்பட்டது. மனுதாரர் தனது அடிப்படை உரிமையான "சமமான பாதுகாப்பிற்கு உரித்துடையவர்" என்ற உரிமை மீறப்பட்டுள்ளதாக சார்த்துதல் செய்தார். உண்மையில் அக்காணி சுவீகரிக்கப்படும்போது "நகர அபிவிருத்தியின் பொது நோக்கத்திற்காகவும் பாராளுமன்ற நிர்வாகக் கட்டிடம் மற்றும் நீர்த்தேக்கத்தை ஏற்பாடு செய்கின்ற இடப்பரப்பாகவும் இருப்பதற்கென சுவீகரிக்கப்பட்டது. இவ்வழக்கில் அரசாங்கத் துறைகளினால் வைத்திருக்கப்படும் தத்துவங்கள் மக்களிடமிருந்து உருவாகின்றன. அத்துடன் அவை மக்களின் நன்மைக்கென பிரயோகிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் மேலும் இவ்வழக்கில் குறிப்பிடப்பட்ட அதிகாரத்தைப் பிரயோகிக்கும்போது அக்குறிப்பிட்ட அரசாங்கத்தின் அங்கம் மக்களின் ஒரு காவலாளியாக இருக்கிறது. ஆகவே அந்த குறிப்பிட்ட அதிகாரத்தைப் பிரயோகிக்கும்போது ஆகக் குறைந்த வரிசையிலுள்ள பொலிஸ் அதிகாரியானாலும் சரி ஆகக் கூடிய அதிகாரத்திலுள்ள ஜனாதிபதியாக இருந்தாலும் சரி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரமானது மக்களுடைய நன்மைக்காக பயன்படுத்த வேண்டுமேயொழிய அவர்கள் எதேச்சதிகாரமாக அதிகார துஷ்பிரயோகத்தை மேற்கொள்ள அல்ல. அவ்வாறு நம்பிக்கை பொறுப்பு மீறப்படும்போது அரசியல் அமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளான 12(1) கூறப்பட்ட சமத்துவத்திற்கான உரிமை மீறப்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலைகளில் அரசியலமைப்பிற்கான பதினெட்டாம் திருத்தம் கொண்டுவருவதற்கு முன்னர் ஒருவர் ஜனாதிபதியாக இரண்டு தடவைகள் மட்டுமே பதவி வகிக்கும் மட்டுப்பாடு இருந்தது. ஆனால் இப்பதினெட்டாம் திருத்தம் அந்த மட்டுப்பாட்டையும் இல்லாதொழித்து ஒருவர் ஜனாதிபதியாக எத்தனை தடவையும் பதவி வகிக்கலாம் என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஒருவர் நீண்டகாலம் மக்களின் செல்வாக்கைப் பெற்றிருப்பின் எத்தனை தடவையும் ஆட்சியில் அமரலாம். ஜனாதிபதிப் பதவிக்கு வரையறைக் கொண்டதான ஒருவிதிப்பை ஏற்படுத்தல் அதாவது 19ஆவது திருத்தம் அமுலுக்கு வந்தபிறகு தேர்ந்தெடுக்கப்படும் அல்லது அந்தப் பதவியை அடையும் எவரேனும் ஜனாதிபதியாக கடமையை பொறுப்பேற்றவுடன் அவர் எந்த அரசியல் கட்சியினதும் அங்கத்தவரல்லாத பொதுமனிதர் போன்றவர் அதனை தொடர்ந்துவரக் கூடிய ஜனாதிபதி பதவிக்கான எத்தகைய தேர்தலிலும் ஒருவேட்பாளராக பிரேரிக்கப்படும் தகைமையை இழந்துவிடுவார் என தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை பத்தொன்பதாம் சீர்திருத்தம் (தற்போது மசோதா வடிவிலுள்ளது) ஜனநாயக வழியில் நின்று சிந்திக்ககூடிய சில காத்திரமான உறப்புரைகளை கொண்டமைந்துள்ளது இதன் தொழிற்தன்மையை எதிர்காலத்தில் கண்கூடாக காணலாம்.

இலங்கையில் அதிகரித்துவரும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு வன்முறைகள் போன்றவற்றினால் ஏற்படும் குழப்பங்களையும், அமைதி தடைகளையும் குறைப்பதற்காக சட்ட ஒழுங்குகளை பராமரிக்கும் நிறுவனங்கள் சட்டஆட்சியின் கீழ் மற்றும் குற்றவியல் சட்டத்தின் கீழ் அபராதங்கள், தண்டனைகள் போன்றவற்றினை வழங்கி சுமூகமான சமூகத்தை உருவாக்க துணைநிற்கின்றன.

இலங்கையில் சட்டம் மற்றும் ஒழுங்குகளை சீரான முறையில் நடைமுறைப்படுத்த சட்டம் மற்றும் ஒழுங்குற்கான அமைச்சு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் செயலாளராக முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் நந்தமல்லிகாராச்சி நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்க விடயம் ஆகும். இந்த அமைச்சிற்கான தற்போதைய நோக்கம் “கற்றுக்கொண்டபாடங்கள் மற்றும் நல்லிணக்கஆணைக்குழுவின்” விதந்துரைகளைவினைத்திறனாகநடைமுறைப்படுத்துவதாகும். ஆனால் தற்போது வடக்கின் போர் அழிவுச் சின்னங்கள் அவசர அவசரமாக சுத்தமாக்கப்படுவதும் இந்த அமைச்சின் ஓர் அமுலாக்க பொறிமுறை என கூறலாம்.

தற்போது உள்ள சிவில் செயற்பாடுகளில் தமிழர் பாரம்பரிய பிரதேசங்களில் இராணுவ தலையீடு தவிர்க்க முடியாததாக்கியுள்ளது. இந்தவேளையில் சிவில் நிர்வாகத்திற்கு பொறுப்பான பொலிஸ்சையும் சட்டம் மற்றும் ஒழுங்கு என்னும் பெயரில் உள்வாங்கி அதன் நிர்வாக அதிகாரத்தை முன்னாள் இராணுவ அதிகாரிகளின் கைகளில் ஒப்படைத்தல் ஆனது முழு சிவில் செயற்பாட்டு கட்டமைப்பையும் இராணுவமயமாக்கல் என்னும் அபாயத்தை காட்டுகின்றது. இது LLRC அறிக்கையின் மட்டுப்படுத்தப்பட்ட விதந்துரைகளுக்குள்ளும் முரணான ஒரு தடைச் செயற்பாட்டுநிலை என்பது கவனிக்கவேண்டியதொன்றாகும்.

வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் கோரமான யுத்தத்தின் பிடியிலிருந்து மக்கள் விடுபட்டு படிப்படியாக சிவில் நிர்வாகத்தின் கீழ் வாழத்தலைப்படும் நிலையில் அண்மையில் மாகாண சபை தேர்தலை நடத்தி ஜனநாயக ரீதியாக மாகாண ஆட்சி கைமாறியிருக்கின்றமை ஆட்சியியலை சட்டத்தின் நெறியில் நகர்த்த ஏதுவாக இருந்தாலும் செல்நெறி சீரமைவானதா என்பது கேள்விக்குறியே. ஏனெனில் வெறுமனே சட்ட அமுலாக்கங்கள் மட்டும் நீதியிருத்தலை எத்துணையுறுதிப்படுத்தும் என்பதை ஹிட்லரை முன்னிலைப்படுத்தி அவர் இயற்றிய சட்ட்ங்களினூடே பாரக்கப்படவேண்டியது காலத்தின் தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமாக வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்வதற்கான ஓர் ஆரோக்கியமான சூழலை உருவாக்க சமாதான சமூக பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கினைக் கொண்டிருத்தல் அவசியம் ஆகும். அத்துடன் அரசாங்கம் நல்லாட்சி பொறுப்புடைமை மற்றும் வெளிப்படைத் தன்மையைக் கொண்டிருத்தல் அவசியம். இலங்கையைப் பொறுத்தவரை நேர்மையான திறமையான மற்றும் சுயாதீன பொதுத்துறை நிறுவனங்கள் கொண்ட சட்டத்தின் ஆட்சி நிலவும் சூழ்நிலை அத்தியாவசியமான தொன்றாகக் காணப்படுகின்றது.

இலங்கையின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை குறைத்து உள்நாட்டு சேமிப்பை அதிகரிக்க சட்டத்தின் அதிகாரத்தை மேம்படுத்தி முதலீட்டிற்கு ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்குதல் அவசியம். மேலும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை குறைப்பதன் மூலம் உள்நாட்டு சேமிப்பை அதிகரிக்க முதலீடுகளுக்காக வெளிநாட்டு கடன்களை சார்ந்திருக்கும் நிலையை மாற்றலாம், எனவும் இது அதியுயர் வளர்ச்சியை தக்கவைக்க வாய்ப்பளிக்கும் என்றும் குறிப்பிட்டார். இவ்வாறன சூழ்நிலைகளை இலங்கை எட்ட வேண்டு மெனில் இவை தொடர்பான சட்ட ஒழுங்குகள் முறையாக பின்பற்றப்பட வேண்டும்.

உண்மையில் சட்டம் என்பது சாதாரண வாழ்வியலினுள்ள மக்கள் ஒவ்வொருவரும் அவசியம் அறிந்திருக்க வேண்டிய ஒன்றாகும். அப்பொழுது தான் ஒவ்வொருவரும் தன்னையும் மற்றவர்களையும் பாதுகாக்கமுடியும். இதன் மூலம் நாட்டையும் பாதுகாக்கலாம். பேச்சுரிமை, கருத்து வெளியிடும் உரிமை ஜனநாயகநாட்டின் அடித்தளமாகும். ஆனால் எத்தனைப்பேர் தங்களது கருத்தையும் நியாயத்தையும் சொல்லக்கூடிய நிலையில் இருக்கின்றார்கள்? இதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்ற போதிலும் சட்டப்பூர்வமான அறிவு இல்லாமையும் முக்கிய காரணாமாகும். எனவே சமூகத்தில் கட்டாயமாக சட்டம் ஆர்வலூட்டப்பட வேண்டிய விடயமாக காணப்படுகின்றது.

சமூகத்தில் மக்கள் சட்டம் மற்றும் ஒழுங்குகளைப் பற்றிய சட்ட அறிவின்மையால் மக்கள் தமது உரிமைகளைப் பற்றி அறியாதவர்களாக திண்டாடுகின்றனர். உதாரணமாக இன்று இலங்கையில் பலதொழில் நிறுவனங்கள் தமது தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி இலாபம் அடைகின்றனர்.

சட்டம் இலங்கைச் சமூகத்தில் எவ்வாறு தன்னுடையச் செயலைச் செய்கின்றது என்பதற்கு (கிரிசாந்தி) கொலைவழக்கு சிறந்த உதாரணமாகும். பரீட்சை விட்டு வீடு திரும்பிய மாணவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி துடிக்கதுடிக்க கொலை செய்தார்களே அது மட்டும்மின்றி அவரைதேடிச் சென்ற தாய், தம்பி, பக்கத்து வீட்டுக்காரர் அனைவரையும் துடிக்கத் துடிக்க கொலை செய்யப்பட்ட போது சட்டம்தான் அவர்களுக்கு மரணதண்டனை வழங்கியது.

அது மாத்திரமின்றி ஒரு கல்லில் இரண்டு மாங்காய் விழுந்தது போல இந்த தண்டனையினை பெற்ற குற்றவாளிகள் நாம் மட்டும் தான் குற்றவாளிகளா? செம்மணி புதைகுழியில் 600 பேர் புதைக்கப்பட்டார்களே அதற்கு யார் குற்றவாளிகள் எனக் கேள்வி எழுப்பி இன்னோர் உண்மையினையும் வெளிக்கொணந்தார்களே. இவ் உண்மை வெளிவந்தது சட்டத்தினால் தான் என்பது புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தின் பேரால் பல்வேறு மோசடிகள் செய்து பல்வேறு பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொன்ற "பிரேமானந்தா" போன்ற போலிச்சாமிகளுக்கும் ஆசாமிகளுக்கும் நீண்டகாலசிறைவாசம் அனுப்பி வைத்ததும் இந்தத் சட்டம்தான்.

2007 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் 350 தமிழர்கள் லொட்ஜ்களில் இருந்து நடுநிசி வேளையில் தட்டி எழுப்பப்பட்டு உடைமாற்றவும், காலைக்கடன் கழிக்கவும் இடம் கொடுக்காமல் வவுனியாவில் கொண்டு சென்று விடப்பட்டார்களே இவ் வேளையில் சமயவாதிகளும், ஆன்மீகவாதிகளும் மனச்சாட்சியுள்ளோரும் அவர்களுக்காக ஆதங்கப்பட்டார்களே ஒழிய மதத்தின் பேரினால் எதுவும் சாதிக்க முடியவில்லை. இவ் வேளையிலே சட்டம் விழித்துக் கொண்டது.

கலாநிதி சரவணமுத்து பாக்கியசோதியினால் உடனடியாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை வழக்கில் "லொட்ஜில் இருந்து கூட்டிச் செல்லப்பட்ட 350 தமிழர்களும் உடனடியாக கொழும்பில் உள்ள லொட்ஜிக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட வேண்டும்" என உயர்நீதிமன்றத் தீர்ப்பினால் அவர்கள்பட்ட துன்பத்திற்கு உடனடி நிவாரணம் வழங்கப்பட்டது. இவ் விடயம் எல்லோரின் மனதுக்கும் சந்தோசத்தை அளித்தது.

தூங்கிக் கொண்டிருந்த உலகநாடுகள் பலவும் விழித்துக் கொண்டது. இதற்கு சர்வதே சரீதியில் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டது. இலங்கையில் மனித உரிமை மீறல் சம்மந்தமாக விசாரிக்க வேண்டும் எனக் குரல் எழுப்பப்பட்டது. இதன் பின் அரசும் அதற்காக வருத்தம் தெரிவித்தது இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறமாட்டாது என அரச உயர் பீடமும் வாக்குறுதி அளித்தது.

## முடிவுரை

இவற்றினை தொகுத்து நோக்கும் போது சட்டம் அரசினால் உருவாக்கப்பட்டது அல்ல அது மனித இயல்பினால் தோற்றம் பெறுவதுடன் சுதந்திரமானதும் அரசிற்கு மேலானதும் ,விசாலமானதுமாகும். சட்டத்தின் தேவையில் அல்லது அதன் அமுலாக்கத்தில் சமூகதேவையை வலியுறுத்தியமை இக் கோட்பாட்டின் முக்கிய அம்சம் ஆகும். ஏனெனில் சட்டங்கள் சமூகநலனை பாதுகாப்பதற்காகவே இயங்குகின்றன. சட்டம் தமதுதேவைகளுக்காகவே அமுல்படுத்தப்படுகின்றது எனக் கருதுவதனாலேயே மக்கள் அதற்கு கீழ் படிகின்றனர்.

சமூகத்தில் ஒரு சட்டத்தின் வெற்றியின் அடிப்படையிலேயே ஏனைய அபிவிருத்திகள் தங்கியுள்ளன. சட்டம் மக்களை சென்றடைய வேண்டிய வகையில் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு சட்டம் உருவாக்கப்படும் போது அவை அக்குறிப்பிட்ட மக்களின் கல்வியறிவு, பொருளாதாரநிலை, பாரம்பரியம், விஞ்ஞான தொழிநுட்ப அறிவு என்பவற்றை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் சட்டங்கள் வெறுமனே தண்டிக்கும் சட்டங்களாகவோ அல்லது பயனற்று வெறும் காகிதங்களுக்குள் மட்டும் முடக்கப்படும் சட்டங்களாகவே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சட்டம், ஒழுங்குகள் என்பவற்றின் வெற்றி அச்சட்டத்தினால் ஆளப்படும் சமூகத்தின் உள்ளார்ந்த கூறுகளிலேயே தங்கியுள்ளது. எனவே முன்னேற்றமடையாத ஒரு சமூகத்தின் மீது அமுல்படுத்தப்படும் வினைத்திறனான சட்டம் மற்றும் சட்டத்தினால் ஆளப்படாத ஒரு அபிவிருத்தி என்பன ஒன்றில் ஒன்று தங்கிவாழ வேண்டும். என்பதுடன் அவை சமாந்திரமாகப் பயணிக்க வேண்டும். அப்போது தான் ஒரு சமூகம் உச்சக்கட்ட அபிவிருத்தியடைந்த தன்னிறைவுச் சமூகமாகமாறும். எனவே சமூக முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஒவ்வொருவரும் இவ்விடயங்களை உள்ளத்தில் இருத்தி ஒரு வினைத்திறனான சமூகத்தினை அல்லது அபிவிருத்தி அடைந்த நாட்டை உருவாக்க உழைக்க வேண்டும். அப்போது தான் அவர்களது உழைப்பின் உண்மைப்பலனை எட்டமுடியும். அல்லாவிடின் அவ் உழைப்புகள் எல்லாம் விழலுக்கிறைத்த நீரே.

ஒரு சட்ட முறைமையானது தனது அடிப்படை நியமங்களாக, கொள்கை, உயிர்களைப் பாதுகாத்தல், சிந்தனைச் சுதந்திரமும் பாதுகாப்பும், பரம்பரையைப் பாதுகாத்தல், செல்வங்களைப் பாதுகாத்தல், சமூக நீதிகளையும், சுதந்திரத்தையும் பேணல் என்பவற்றைக் கொண்டு இவை ஒன்றுக்கொன்று முரண்படுகின்ற நிலை தவிர்த்து சமநிலை பேணி முன் கொண்டு செல்லப்படுமாக இருந்தால் அந்தச் சட்டமுறை நிச்சயமாக வெற்றி பெற்றதாகும். அப்போது சட்டம் வெறும் சட்டமாக அன்றி சக்தியாக மாறி இயக்கியாக நின்று சமூகத்தை இயங்கு நிலைக்குட்படுத்தும்.

இவைகள் எல்லாவற்றையும் உற்று நோக்கும் போதும் சட்டம், சமயம், ஒழுக்கம் எல்லாம் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டு காணப்படுவதனால் இவ் நெறிகளை ஒழுங்காக கடைப்பிடித்து வந்தால் நாட்டில் துன்பம், துயரங்கள் நீங்கி நல்லாட்சி நிலவும். அத்தோடு மக்கள் சாந்தியும், சமாதானத்துடனும் வாழ்வார்கள் என்பது யாவரும் மறுக்க முடியாத உண்மை. எனவே சமூகத்தில் அல்லது ஒரு நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகள் மக்களின் நலன் கருதி திணிக்கப்பட்டு வந்தாலும் அவை இன்றுவரை மக்களால் ஆர்வமூட்டப்பட்டு வருகின்றது என்பதனை தெளிவாகவும், உறுதியாகவும் அறிந்துகொள்ள கூடியதாய் இருக்கிறது.

**Bibliography**

Bassu, G. (2008). **Law Overruled: Strengthening the Rule of Law in Post-Conflict States. Global Governance: A Review of Multilateralism.** Vol. 14, No.1,pp.21-38,Available@ http://www.atypon-link.com/LRP/doi/abs/10.5555/ggov.2008.14.1.21

Barnett, Hilaire. (1995). **Constitutional & Administrative Law.** London: Cavendish Publishing Limited.

Schlaeppi, E. & McCabe, C. (2008). **Rule of Law, Justice Sector Reforms and Development Cooperation : SDC Concept Paper.** Swiss Agency for DevelopmentandCooperation.Available@ http://www.deza.ch/ressources/resource_en_170419.pdf

இலங்கையில் சட்டம் மற்றும் ஒழுங்குகள் சீர்குலைந்து வருகின்றன. இலங்கைச் செய்திகள் ( விசேட செய்தி 12.12.2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

http://sattanooku.blogshttp://www.parliament.lk/index.php/tapot.com/2013/08/ministry-of-law-and-order.html

s.சர்வானந்தா முன்னால் பிரதம நீதியரசர் (2000) "ஜனநாயக விழுமியமும்" நீதிமுரசு இலங்கை சட்க்கல்லூரி தமிழ் மன்றம்.

S. கீத்த பொன்கலன் "சட்டம்" அரசறிவியல் அறிமுகம்.

அன்ரோ அமலவளன் ஆனந்தராஜா (2003) "சட்ட அறிவின் அவசியத்தன்மை" நீதிமுரசு இலங்கை சட்க்கல்லூரி தமிழ் மன்றம்.

M. U. M நம்பவர் (2002) "சட்டம் பற்றிய கோட்பாடு" நீதிமுரசு இலங்கை சட்க்கல்லூரி தமிழ் மன்றம்.

இராமகிருட்டுணன் "சட்டமும் சமுதாய அறமும்" நீதிமன்றங்கள் ( page 10 - 20)

செ. செல்வகுணபாலன். (2012) சட்டமும் ஒழுக்கமும் இலங்கைச் சட்டங்கள் ஓர் அறிமுகம் (page 5-12)

பா. சண்முகசுப்பிரமணியம் "சட்டம் பற்றிய கண்ணோட்டம்" சட்ட இயல்

வி. சி. முனுசாமி "சமூக நீதி" சமூக நீதிக்கு நீதிமன்றம் தடையா?

செல்வகுணபாலன். (2014) சட்ட ஆட்சி( Rule Of Law) நக்கீரம் இலங்கை சட்டக்கல்லூரி இந்து மகா சபை

ஜெயசிங்கம் ஜெயருபன்.(2002) **சட்ட ஆட்சி (Rule Of Law)** நக்கீரம் இலங்கை சட்டக்கல்லூரி

கே. ஜீ. ஜோண்.(1990) **மனித உரிமைகளை அங்கிகரிக்கும் நாடுகளிலேயே சட்ட ஆட்சி நிலவுகிறது.** நீதிமுரசு இலங்கை சட்க்கல்லூரி தமிழ் மன்றம்.

T. சுவஸ்திகா (2013) பொதுமக்கள் அக்கறை வழக்காடல் **நக்கீரம் இலங்கை சட்டக்கல்லூரி** இந்து மகா சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகிதாசார பிரதிநிதித்துவம் தொடர்பான விரிவான ஒரு பார்வை.

**எம்.பி. வசீமுள் அக்ரம்,**
இறுதிநிலை ஆண்டு,
இலங்கை சட்டக்கல்லூரி.

நவீன ஜனநாயக அரசியல் முறை பிரதிநிதித்துவ ஜனநாயக முறையினை அடிப்படையாகக் கொண்டே செயற்படுத்தப்படுகின்றன. பிரதிநித்துவ ஜனநாயக முறையினை நடைமுறைப்படுத்தும் ஒரு வழிமுறை என்றவகையில் விகிதாசார பிரதிநிதித்துவ முறையினை Proportional Representation (PR முறைமை) அறிமுகம் செய்யலாம். எளிய பெரும்பான்மை முறையில் உள்ள பலவீனங்களை தவிர்த்து மிகவும் பரந்த அடிப்படையில் மக்கள் அபிப்பிராயங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதை இலக்காகக் கொண்டு வகுக்கப்பட்ட ஒரு முறையே விகிதாசார அல்லது விகிதசம பிரதிநிதித்துவ முறை ஆகும்.

ஓர் தேர்தலில் போட்டியிடும் சகல அரசியல் கட்சிகளும் குழுக்களும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப அக்கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் ஆசனங்களைப் பெற்றுக்கொடுக்கும் சில வகையான உபாயங்களை கொண்ட ஒரு பிரதிநிதித்துவ முறைமையே விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை ஆகும். இம் முறைமை தன்மாற்றுப் பட்டியல் முறைமை எனவும் பிரிவுகளை உள்ளடக்கி உள்ளது.

இந்த விகிதாசார முறைமையானது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பில் உள்வாங்கப்பட்டது. எனினும் இது கோட்பாட்டு ரீதியாக விகிதாசார தேர்தல் முறைமையில் இருந்து வேறுபடுகின்றது எனலாம். அரசியல் அமைப்பின்படி விகிதாசாரத் தேர்தல் திறந்தபட்டியல் முறையில் நடாத்தப்பட வேண்டும். பாராளுமன்றம், மாகாணசபை, உள்ளூராட்சி சபை தேர்தல் இவ்விகிதாசார தேர்தல் முறையில் நடாத்தப்படுகின்றன. நாம் இப்பொழுது பாராளுமன்றத் தேர்தல் முறையை விரிவாக ஆராய்வோம்.

225 பேர் அங்கம் வகிக்கும் பாராளுமன்றத்தில் 196 பேர் மக்களால் நேரடியாக தேர்தல் மூலமும் 29 பேர் தேசிய பட்டியல் மூலமும் தெரிவு செய்யப்படுகின்றனர். இவ்வாறு தெரிவு செய்யப்படுகின்ற முறையினை பின்வருமாறு விளக்கமுடியும்.

1. தேர்தல் மாவட்டங்களின் எல்லை நிர்ணயம்
2. தேர்தல் மாவட்டங்களிற்கான ஆசன ஒதுக்கீடு
3. வேட்பாளர் பட்டியல் தெரிவு செய்தல்
4. வாக்களித்தல்
5. 5 வீதம் அல்லது 1/2 வெட்டுப்புள்ளி கணித்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. போனஸ் ஆசனம் (Bonus) அல்லது மேலதிக ஆசனம்
7. முதல் ஒதுக்கீடு
8. இரண்டாம் ஒதுக்கீடு
9. விருப்பு வாக்குகள்
10. தேசியப்பட்டியல்.

## தேர்தல் மாவட்டங்களின் எல்லை நிர்ணயம்.

தேர்தல் மாவட்டங்களை வரையறுக்கும் நோக்கத்தோடு எல்லை நிர்ணய ஆணைக்குழு ஒன்று காணப்படும். பாராளுமன்றப் பேரவையின் அவதானிப்போடு ஜனாதிபதியினால் 03 பேர் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவர்கள் அரசியலில் தீவிர ஈடுபாடு காட்டாதவராக இருத்தல் வேண்டும். எல்லை நிர்ணய ஆணைக்குழுவானது இலங்கையை 20 திற்குக் குறையாததும் 25க்கு மேற்படாததுமான தேர்தல் மாவட்டங்களாகப் பிரித்து அவற்றிற்கு பெயர் குறிக்கும் இவ் எல்லை நிர்ணயத்தின் அடிப்படையாக மாகாணமும் நிர்வாக மாவட்டமும் காணப்படும். மாகாணம் அல்லது நிர்வாக மாவட்டம் ஒவ்வொன்றும் ஒரு தேர்தல் மாவட்டமாகவோ பல தேர்தல் மாவட்டங்களாகவோ அல்லது பல நிர்வாக மாவட்டங்கள் ஒரு தேர்தல் மாவட்டமாகவோ அமையலாம்.

இதன் அடிப்படையில் தற்போது 22 தேர்தல் மாவட்டங்கள் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டம் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டமாகவும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகியன வன்னி தேர்தல் மாவட்டமாகவும் ஏனைய நிர்வாக மாவட்டம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டமாகவும் கணிக்கப்பட்டு வருகின்றது.

## தேர்தல் மாவட்டங்களிற்கான ஆசன ஒதுக்கீடு.

விகிதாசார தேர்தல் முறைமை மூலம் 196 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். தேர்தலிற்கு முன்னர் மாவட்டங்களிற்கு ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யும் போது முதலில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் 04 உறுப்பினர்கள் வீதம் 09 மாகாணத்திற்கும் 36 ஆசனங்கள் ஒதுக்கப்படும். இவ் ஆசனங்களை ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள தேர்தல் மாவட்டங்களிற்கு ஒரு ஒப்புறவான முறையில் வழங்கப்படும்.

மிகுதி 160 ஆசனங்களும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களிலும் உள்ள வாக்காளர்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஒதுக்கப்படும். இவ்வாறு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆசன ஒதுக்கீடு மேற் கொள்ளப்பட்ட பின் மிகுதி ஆசனங்கள் இருக்குமாயின் விகிதாசார அடிப்படையில் பிரிக்கும் போது மிகக் கூடிய பகுதியை பெற்ற மாவட்டங்கள் வரிசைப்படி ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

## வேட்பாளர் பட்டியல் தயார் செய்தல்.

இத் தேர்தல் முறைமையின் அடிப்படையில் ஒருவர் தனியாக போட்டி இடமுடியாது. அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் போட்டி இட விரும்புகின்ற ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என வேட்பாளர் பட்டியல் தயார் செய்து மாவட்ட தெரிவத்தாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலரிடம் நியமனப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும். கட்சி சாராத தனிநபர்கள் தேர்தலில் போட்டி இட விரும்பினால் சுயற்சை குழு வேட்பாளர் பட்டியல் தயாரித்து ஒப்படைக்க வேண்டும். ஒவ்வொரு அரசியல் கட்சியும் சுயேற்சைக் குழுவும் குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டிய அங்கத்தவர் எண்ணிக்கையுடன் 03 பேரை மேலதிகமாகச் சேர்த்து வேட்பாளர் பட்டியல் தயார் செய்ய வேண்டும்.

உதாரணமாக - புத்தள மாவட்டத்திற்கு தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள் 08 பேர் எனின் மேலதிக 03 பேர் சேர்த்து 11 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலினைத் தயார் செய்தல் வேண்டும்.

## வாக்களித்தல்

விகிதாசாரப் பிரதிநிதித்துவம் எனப்படும் தேர்தலில் கட்சிக்கு வாக்களிக்கின்ற அதே வேளை கட்சியில் போட்டி இடுகின்ற வேட்பாளர்களில் ஆகக்கூடியது 03 பேருக்கும் வாக்களிக்கலாம். ஆசனங்கள் ஒதுக்கப்படும் போது கட்சிக்கு அளிக்கப்பட்ட வாக்குகளே கணக்கில் எடுக்கப்படும். அதனால் கட்சிக்கு மாத்திரம் வாக்களித்து விருப்பு வாக்குகள் எதனையும் அளிக்காவிட்டாலும் அது செல்லுபடியானதாகவே கருதப்படும்.

ஒரு வாக்குச்சீட்டில் எவ்வித வாக்கும் அளிக்காதிருந்தாலோ கட்சிக்கு வாக்களிக்காமல் விருப்பு வாக்குகளை மாத்திரம் அளித்திருந்தாலோ ஒன்றிற்கு மேற்பட்ட வாக்குகளை அளித்திருந்தாலோ வாக்குச்சீட்டினை சிதைத்து இருந்தாலோ எக்கட்சிக்கு என இனம் காணாதவகையில் வாக்களித்து இருந்தாலோ அவ்வாக்கு சீட்டு செல்லுபடி அற்றது ஆகும்.

## மாதிரி வாக்குச்சீட்டு (5 ஆசனம் கொண்ட மாவட்டம்)

கட்சிகள்.

| | |
|---|---|
| A | X |
| B | |
| சு.குழு . 01 | |
| சு.குழு . 02 | |
| சு.குழு . 03 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 (X) | 3 | 4 (X) | 5 | 6 (X) | 7 | 8 |

1/20 வெட்டுப்புளளி கணித்தல் (1 ஆசனத்திற்கான வாக்குகள்)

வாக்கு எண்ணிக்கையின் பின் குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்குகளில் 5% (1/20) கணிக்கப்படும்.

பின்னர் அவ்வெட்டுப்புள்ளிக்கு குறைவான வாக்குகளை பெற்ற கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் போட்டியில் இருந்து நீக்கப்படும். அத்துடன் அவை பெற்றுக்கொண்ட வாக்குகளும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அம்மாவட்டத்தில் மொத்த செல்லுபடியான வாக்குகளில் இருந்து கழிக்கப்படும். இதன் பின்னர் உள்ள வாக்குகள் தொடர்புடைய வாக்குகள் (இயைபான வாக்குகள்) எனப்படும்.

குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட வேண்டிய அங்கத்தவர் எண்ணிக்கையில் இருந்து 1ஐ கழித்து வரும் என்னினால் தொடர்புடைய வாக்குகளைப் பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரித்து வரும் தகுதிகாண் எண் அம்மாவட்டத்திற்கான 01 ஆசனத்தின் வாக்குகளாகும்.

## போனஸ் ஆசனம் – (மேலதிக ஆசனம்).

குறித்த தேர்தல் மாவட்டத்தில் போட்டி இட்ட அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்களில் மிகக்கூடுதலான செல்லுபடியான வாக்குகளைப் பெற்ற அரசியல் கட்சிகளுக்கு அல்லது சுயேட்சை குழுக்களிற்கு ஒரு போனஸ் ஆசனம் வழங்கப்படும். இவ்விதம் நாடு முழுவதும் 22 போனஸ் ஆசனங்கள் ஒதுக்கப்படும்.

## முதல் ஒதுக்கீடு.

குறிப்பிட்ட தேர்தல் மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் சுயேட்சை குழுக்களும் பெற்றுக் கொண்ட வாக்குகள் தகுதிகாண் எண்ணினால் பிரிக்கப்பட்டு, வரும் எண்ணிக்கையான ஆசனங்கள் ஒவ்வொரு அரசியல் கட்சிகளுக்கும் சுயேட்சை குழுக்களுக்கும் ஒதுக்கப்படும்.

## இரண்டாம் ஒதுக்கீடு.

முதல் ஒதுக்கீட்டில் குறிப்பிட்ட மாவட்டத்தின் ஆசனங்கள் அனைத்தும் நிரப்பப்படாமல் எஞ்சி இருப்பின் முதல் ஒதுக்கீட்டின் போது ஆகக் கூடுதலான மிகுதி வாக்குகளைப் பெற்ற கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் ஒழுங்கு வரிசைப்படி அங்கத்துவம் வகிக்கும். இங்கு மிகுதி வாக்கு என்பது தகுதிகாண் எண்ணினால் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் பெற்றுக்கொண்ட வாக்குகளை பிரிக்கும் போது எஞ்சி இருக்கும் வாக்குகளாகும்.

## விருப்பு வாக்கு.

ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுவும் அந்த மாவட்டத்தில் அந்த தேர்தல் மாவட்டத்தில் பெற்றுக்கொண்ட ஆசனங்களை அம்மாவட்டத்தில் போட்டி இட்ட வேட்பாளர்களில் கூடுதல் விருப்பு வாக்குகளைக் கொண்டவரின் முன்னுரிமை வரிசையில் பாராளுமன்ற **உறப்பினராக தேர்**தல் ஆணையாளரினால் பிரகடனம் செய்யப்படும்.

## தேசியப் பட்டியல்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களில் 29 பேர் தேசியப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். பொதுத் தேர்தலில் நாடுதழுவிய ரீதியில் கட்சிகள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப தேசிய பட்டியல் ஆசனங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இதற்கு என பொதுத்தேர்தலுக்கு முன்னர் ஒவ்வொரு கட்சியும் 29 பேர் கொண்ட ஓர் பட்டியலை தயார் செய்து தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுமுழுவதும் அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்குகள் 29 ஆல் பிரிக்கப்பட்டு பெறப்படும் தகுதிகாண் எண்ணானது ஒரு தேசிய பட்டியல் ஆசனத்திற்கான வாக்கு தொகை ஆகும். பின்னர் ஒவ்வொரு கட்சியும் பெற்றுக்கொண்ட செல்லுபடியான வாக்குகள் தகுதிகாண் எண்ணால் பிரிக்கப்பட்டு கட்சிகளுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்படும். இவை தேர்தல் ஆணையாளரிற்கு கட்சி வழங்கிய பட்டியலின் முன்னுரிமைப்படி ஆட்களுக்கு வழங்கப்படும்.

இவ்வாறு பகிர்ந்தளிக்கப்படும் போது 29 ஆசனங்களும் நிரப்பப்படாமல் மிகுதி இருக்குமாயின் முன்னர் தகுதிகாண் எண்ணினால் பிரிக்கும் போது எஞ்சி இருந்த வாக்குகளில் ஆகக்கூடிய மிகுதி வாக்கை பெற்ற கட்சி வரிசைப்படி அவ் ஆசனங்கள் நிரப்பப்படும். மாவட்ட மட்டத்தில் வெட்டுப்புள்ளிக்கு குறைவான வாக்கைப் பெற்று ஆசனங்கள் ஒன்றையேனும் பெற்றுக்கொள்ளாத கட்சியும் கூட நாடு முழுவதுமான மொத்த வாக்குகளை கொண்டு தேசிய பட்டியல் மூலம் ஆசனங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தேசியப்பட்டியல் முறைமையானது ஒரு சிறப்பு வாய்ந்த நோக்கத்திற்காக அறிமுகப் படுத்தப்பட்டது. தேர்தலில் போட்டி இடாத அல்லது போட்டி இட விரும்பாத அறிஞர்கள், கல்விமான்கள், விஷேட துறை நிபுணர்கள், உறுப்புரிமை பெறாத சிறுபான்மையினர் அவர்களது சேவைகளை நாட்டிற்கு பெற்றுக்கொள்ளும் உன்னத நோக்கத்தோடு தேசிய பட்டியல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால் தற்போதைய நிலைமையை எடுத்து நோக்குமிடத்து கட்சிக்கு விசுவாசமானவர்களையும் பொதுத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டோரையும், கல்வி கற்காதவர்களையும் தேசிய பட்டியல் மூலமாக பாராளுமன்ற உறுப்பினர்களாக்கு ஒரு பிற்போக்கான அரசியல் கலாச்சாரம் நடமாடுகின்றது எனக்குறிப்பிடலாம்.

இவ்வாறு விகிதாசார முறைமை மூலம் தெரிவு செய்யப்படுவதனால் பல்வேறு நன்மைகள் காணப்பட்டு வருவதோடு, பல தீமைகளும் இதனை சூழ்ந்து நிற்கின்றது.

பெரும்பான்மை வாக்காளர்கள் விரும்புகின்ற ஒருவர் தெரிவு செய்யப்படுவதுதான் ஜனநாயகத் தன்மை வாய்ந்ததாக காணப்படுகின்றது. அதே வேளை இங்கு ஒரு பிரதேசத்தில் காணப்படும் சிறுபான்மையினர் பாதிக்கப்பட வாய்ப்பு அதிகமாக உள்ளது.

பெரும்பாலும் எந்த ஒரு கட்சியும் 2/3 பெரும்பாண்மை பெறக்கூடிய சந்தர்ப்பம் குறைவாக காணப்படுவதால் அரசியல் அமைப்பை மாற்ற முடியாது. இதனால் யாப்பின் நிரந்தர தன்மை பேணப்படும். இருந்த போதிலும் எந்த ஒரு கட்சியும் 2/3 பெரும்பாண்மை பெறமுடியாது போனால் காலத்தின் தேவைக்கு ஏற்ப அரசியல் அமைப்பை மாற்றமுடியாது போகும். இதனால் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது ஒரு கேள்விக்குறி ஆகும்.

எந்த ஒரு அரசாங்கமும் பெரும் பெரும்பான்மை பலம் பெற முடியாத போது கூட்டு அரசாங்கம் அமைக்கப்பட்டு சர்வாதிகார நிலையை தவிர்க்க உதவும். இருந்த போதிலும் கூட்டு அரசாங்கத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சரவை இடையே கூட்டுப்பொறுப்பு வலுவிழந்து காணப்படுவதோடு, நிலையான அரசாங்கம் ஒன்றினை பெறமுடியாது.

இடைத்தேர்தல் நடைபெறுவதற்கான தேவைகள் குறைவாக உள்ளதால் அதற்கான செலவும், சிரமமும் காலதாமதமும் மீதமாகின்றது. ஆனால் மக்களின் பொதுசன அபிப்பிராயம் தட்டிக்கழிக்கப்படுகின்றது எனலாம். மேலும் எந்த ஒரு கட்சியும் பெரும்பான்மை பெற முடியாததினால் சிறுபான்மை கட்சிகளுடன் சேர்ந்தே ஆட்சி அமைக்க வேண்டி உள்ளதால் சிறுபாண்மைக் கட்சிகள் பேரம்பேசி சிறுபான்மையினரின் நலன்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. இதனை 1994 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் S.L.M.C சும் மலையக மக்களின் முன்னணியினதும் கூட்டுச்சேர்ந்ததனை கூறலாம். மேலும் இந்த தேர்தல் முறைமை கட்சிமுறை வளர்ச்சிக்கும் உதவுகின்றது.

இந்த தேர்தல் முறையில் பணம் அதிகளவில் செலவிடுவதும், போனஸ் ஆசன முறைமை, விகிதாசார கோட்பாட்டு ரீதியுடன் முரண்படுவதும், விருப்பு வாக்குகள் மூலம் கட்சி உறுப்பினர்களிற்கு வாக்குகள் இடையில் பிளவு ஏற்படவும் செய்கின்றது.

விகிதாசார தேர்தல் முறைமையானது மேற்கூறப்பட்ட நன்மைகளையும் தீமைகளையும் கொண்டு காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச்சொத்துச் சட்டத்தின் கீழ் வியாபார குறிகள் மற்றும் பெயர்கள் எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றன?

**றொஷானி செந்தில்செல்வன்**
இறுதிநிலை ஆண்டு
இலங்கைச் சட்டக் கல்லூரி

மனிதனையும் சொத்துவத்தை ஒரு போதும் பிரிக்க முடியாத ஒன்றாகும். ஆரம்ப காலங்களில் இருந்து இன்றுவரை சமூகத்தில் மனிதவினம் மட்டும் சொத்துவத்தை சொந்தம் கொண்டாடுகின்றது. பல வகையான சொத்துக்கள் மீது மனிதன் பலவிதமான சொந்தங்களைக் கொண்டாடுகின்றான் அவை சட்டங்களினால் அங்கீகாரமளிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டும் வருகின்றது. பொதுவாக சொத்துவம் என்பது மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றது. முதலாவதாக அசையும் சொத்துக்களாக காசு, வாகனம், நகைகள் போன்றன வரையறுக்கப்படுகின்றன. இரண்டாவதாக அசையாத சொத்துக்களாக வீடு, காணி, கட்டடங்கள் போன்றனவாகும். இறுதி வகையானது அறிவு சார்ந்த சொத்துக்கள் ஆகும்.இது மேற்கூறப்பட்ட இரண்டு வகையான சொத்துக்களில்லிருந்தும் சற்று வேறுபடுகின்றது.

புலமைச் சொத்துக்கள் அல்லது அறிவு சார்ந்த சொத்துக்கள் (Intellectual Property) என்பது மனிதச் சிந்தனையின் முயற்சியில் அதாவது மனித மூளையின் சுயபடைப்புக்கள் அல்லது புத்தாக்கம் அல்லது நுட்பங்கள் போன்ற புலமைசார் நடவடிக்கைகள் மூலமாக சட்டரீதியான உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியவை சொத்துவம் ஆகும். இவ்வாறான ஆக்கங்கள் மற்றும் படைப்புக்கள் மனிதனுக்கு மனிதன் வேறுபட்டிருக்கும் அத்துடன் மிக முக்கியமாக அதன் சொந்தம் அல்லது உரிமை படைப்பாளிக்கு அல்லது அதனை உருவாக்கிய நிறுவனத்திற்கே மட்டும் உரித்தாகின்றது. இலகுவாகக் கூறினால் கை ரேகைகள் மனிதனுக்கு மனிதன் எவ்வாறு வேறுபட்டு தனித்துவமாகக் காணப்படுகின்றதோ அவ்வாறு தான் இந்த புலமைச் சொத்துக்களின் சொத்துவமும் தனியுரிமையாகக் காணப்படுகின்றது.

புலமைச் சொத்துக்களுக்கு உதாரணங்களாக கவிதை, கட்டுரை, வணிக சின்னங்கள், வியாபாரப் பெயர்கள், பதிப்புரிமை, கைத்தொழில் வடிவமைப்பு, நியாயமற்ற போட்டிக்கு எதிரான பாதுகாப்பு மற்றும் வழிவந்த ஆக்கங்கள் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

ஆரம்ப காலங்களில் மனிதனுடைய படைப்புக்களைப் பாதுகாப்பதற்கு எந்த வழிமுறைகளும் காணப்படவில்லை. மனிதனால் ஆக்கப்பட்டவை அல்லது படைக்கப்பட்டவற்றை தன்னுடனும் தன்னனைச் சார்ந்தவர்களடனும் பகிர்ந்து கொண்டான். காரணம் அக்கால கட்டத்தில் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி சமூகத்தில் தாக்கத்தைச் செலுத்தியிருக்கவில்லை என்பதுடன் தொடர்பாடல் மற்றும் ஊடகப் பரிமாற்றங்கள் பெரிதும் விருத்தியடைந்திருக்கவில்லை. வணிகங்கள் ஏற்றுமதிகள் உற்பத்திகள் பெரிதும் சந்தைகளை ஆளவில்லை என்பதனால் கைத்தொழில்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சாலைகளும் அதீத வளர்ச்சியைக் கொண்டிருக்கவில்லை. இவ்வாறானதொரு கால கட்டத்தில் வியாபாரச் சின்னங்கள், வியாபாரப் பெயர்கள் மற்றும் படைப்புக்களின் மீது போலிகள் உருவெடுப்பதற்கான வாய்ப்புக்களை சந்தைகள் வழங்கவில்லை. கால மாற்றத்தில் அதிகரித்த போட்டிகள், பொருளாதாரத்தில் வல்லரசுகள், நாளுக்குநாள் உலகையே புரட்டிப்போடும் தொழில்நுட்பங்கள், விண்ணைத் தாண்டிய மனிதக் கண்டுபிடிப்புக்கள் போன்றன ஒவ்வொரு நாட்டிலும் காணப்படும் பல்வேறு சந்தைகள் மீது பல்வேறு வழிகளில் ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளன. இவ்வாறானதொரு சூழ்நிலையில் மனிதப்படைப்புக்களின் தனித்துவத்தை இலகுவில் சிதறடித்துவிடுவதற்கான வழிமுறைகள் தொழில்நுட்பரீதியின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அதிகரித்து வரும் போலிகள் மத்தியில் ஒவ்வொரு படைப்புக்களின் தனித்துவத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு சட்டத்தின் கைகளில் காணப்படுவதுடன் தனிமனித உரிமைகளை மீறுவர்களை தண்டிக்கும் அதிகாரத்தையும் சட்டம் தன்னகத்தே கொண்டுள்ளது.

## உலக புலமைச்சொத்து ஒழுங்கமைப்பு (WIPO)

புலமைச் சொத்தின் சர்வதேச பாதுகாப்பை மேம்படுத்தல், பதிப்புரிமை, வியாபாரக்குறி, கைத்தொழில் வடிவமைப்பு மற்றும் தனியுரிமைகள் மீதான ஒத்துழைப்புக்களை மேம்படுத்துதல் போன்றன இவ்வமைப்பின் செயற்பாடுகள் ஆகும். உலகெங்கும் பரந்து கிடக்கும் புலமைச்சொத்துக்களை அனைவராலும் அணுகக் கூடிய முறையில் சமச்சீரான நடவடிக்கைகளை உருவாக்கி முனைப்புடன் இவ்வமைப்பு செயல்பட்டு வருகின்றது.

## புலமைச்சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயங்கள் மற்றும் உடன்படிக்கைகள்

### ❖ பாரிஸ் சமவாயம் (Paris Convention)

1883ஆம் ஆண்டு இச் சமவாயம் கூட்டிணைக்கப்பட்டது.கைத்தொழில் சொத்துக்கள் மீதே அதன் பங்களிப்பு அதிகமாகக் காணப்பட்டது. அதாவது கைத்தொழில் பொருட்கள் உள்ளடக்கியுள்ள ஆக்கவுரிமை (patent), குறிகள் (Marks), கைத்தொழில் வடிவமைப்பு (Industrial design) வர்த்தகப் பெயர்கள் (Trade names), நியாயமற்ற போட்டியின் அடக்குமுறைகளில் (repression of unfair competition) இருந்து பாதுகாப்பளிக்கின்றது.

### ❖ Madrid Agreement

இவ் உடன்படிக்கை மூலமாக குறிகளை(Marks) சர்வதேச ரீதியில் பதிந்து கொள்வதன் மூலம் பாதுகாப்பளிக்கின்றது.இவ்வுடன்படிக்கையானது முதன்முதலாக 1891ஆம் ஆண்டு வரையப்பட்டது.இறுதியாக 1979ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது.இந்த முறைமையானது இரண்டு வகையாக செயற்படுத்தப்படுகின்றது.அதில் ஒன்று ஒப்பந்தம் தொடர்பான நெறிமுறை மற்றையது Madrid ஒப்பந்தமாகும்.

### ❖ NICE Agreement

மேற்கூறப்பட்ட உடன்படிக்கையானது பொருட்கள் மற்றும் சேவைகளை நோக்க அடிப்படையில் வகைப்படுத்தி அவற்றினை வர்த்தக குறிகள் மற்றும் சேவைக்குறிகளின் கீழ் பதிவதற்கு ஏற்பாட்டினை வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **The Vienna Agreement**

  இவ் உடன்படிக்கையின் வகைப்பாடானது சர்வதேச ரீதியில் குறிகள்(Marks) கொண்டிருக்கும் அல்லது உள்ளடக்கியிருக்கும் அடையாளக் கூறுகளை நிறுவுகின்றது.

- **The Nairobi Treaty**

  இக்கட்டுறுத்தானது ஒலிம்பிக் அடையாளத்தை அதாவது பிணைக்கப்பட்ட ஐந்து வளையங்களையும் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இக்கட்டுறுத்தில் இணைந்துள்ள அனைத்து நாடுகளிடமும் வேண்டப்படுவது யாதெனில் சர்வதேச ஒலிம்பிக் நிர்வாககுழுவின் அங்கீகாரம் இன்றி வர்த்தக நோக்கத்திற்காக அவ்வடையாளத்தை ஒரு குறியாக பயன்படுத்துவதைத் தடை செய்கின்றது.

பல்வேறு வகையான புலமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக கட்டுறுத்துக்கள் சமவாயங்கள் மற்றும் உடன்படிக்கைகள் என்பன காணப்படுகின்றன.

உலகமயமாக்கலின் கீழ் அனைத்து நாடுகளும் ஏதோ ஒரு தேவையின் அடிப்படையில் ஒரு குடையின் கீழ் சுருங்கிக் கொண்டுள்ளன. தற்போதைய பொருளாதாரங்கள் நாடுகளுக்கிடையில் சார்பு நிலைத்தன்மையை உருவாக்கியுள்ளதுடன் அதிகரித்த போட்டிச் சந்தைகளையும் ஊக்குவிக்கின்றன. இதனால் அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளும் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு தான் முக்கியமான ஒரு விடயத்தைக் கவனிக்கவேண்டியுள்ளது. அதாவது குறிகள் மற்றும் வியாபாரப் பெயர்களுமாகும். போட்டி உலகை வெல்லவேண்டும் என்ற நோக்கில் பல உற்பத்திகள் போலியானவையாகவும் பெயர்பெற்ற, பிரபல்யமான நிறுவனங்களின் உற்பதிகளைப் போல் பார்வையில் ஒத்த தன்மையைக் கொண்ட போலி உற்பத்திகள் சந்தைக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகின்றன. இதனால் பல பிரச்சினைகள் பலவிதமான முறையில் எழுகின்றது. இவற்றில் இருந்து பாதுகாப்பைப் பெற வேண்டுமானால் வியாபார குறிகள் மற்றும் வியாபாரப் பெயர்களை புலமைச் சொத்து சட்டத்தின் கீழ் பதிந்து கொள்வதன் மூலம் உரிமைகளை உத்தரவாதப்படுத்திக் கொள்ளமுடியும்.

வியாபாரக் குறியின் மூலம் ஒரு நிறுவனத்தின் நன்மதிப்பு, புகழ் மற்றும் பொருளாதார உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. ஆகவே இவ் வியாபாரக்குறியின் முக்கியத்துவத்தை ஆராய்ந்தோமானால் நுகர்வோர் ஒரே மாதிரியான பண்டங்களை ஒன்றிலிருந்து மற்றையதை வேறுபடுத்தி அறியமுடியும். பொருட்களின் உற்பத்தியாளர்கள் அப் பண்டங்களின் குறியின் மூலமாக உரிமைகளைப் பேண முடியும். அத்துடன் பொருட்கள் தொடர்பான விளம்பரங்களை மேற்கொள்வதற்கும் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இலகுவான வழிமுறையை உருவாக்கிக் கொடுக்கின்றது. பொருட்களின் தரத்தை ஒரே சீர்வரிசையில் பேணுவதற்கு உதவுகின்றது. உலகளாவிய வர்த்தகத்தில் பொதுவான கட்டளைகளையும் நியாயமான வர்த்தகப் போட்டிகளையும் உருவாக்குகின்றது. ஆராய்சிகளை மேற்கொண்டு தரமான பொருட்கள் சேவைகளுக்கு குறிகள் மற்றும் வியாபாரப் பெயர்கள் மூலம் சந்தையில் ஏகபோக உரிமைக்கு வழிவகுக்கின்றது. இவ்வாறான செயற்பாடுகள் ஊடாகவே வியாபாரக்குறிகளின் நோக்கங்கள் புலமைச் சொத்து சட்டத்தின் கீழ் அடையப்பட்டு பாதுகாக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் புலமைச் சொத்து விடயங்கள் தொடர்பாக 2003 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச்சொத்துச் சட்டம் காணப்படுகின்றது.இச்சட்டம் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம் திகதி அன்று நடைமுறைக்கு வந்தது. இச் சட்டமானது 1979ஆம் ஆண்டு 52ஆம் இலக்க புலமைச்சொத்துச் சட்டத்தை திருத்தியமைக்கப்பட்டதன் விளைவாகவே இப்புதிய சட்டம் நடைமுறைக்கு வந்தது.

இச்சட்டமானது புலமைச்சொத்துத் தொடர்பாக பதிவு செய்வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் நிருவகிப்பதற்குமான திறமைவாய்ந்த நடவடிக்கை முறைக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமாகும்.

இச் சட்டத்தின் **பிரிவு 101** கீழ் குறிகளும் வர்த்தகப் பெயர்களுக்கமான வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. **"வியாபாரக்குறி"** என்பது ஒரு தொழில் முயற்சியின் பண்டங்களை வேறு தொழில் முயற்சிகளின் பண்டங்களில் இருந்து வேறு பிரித்துக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற ஏதேனும் புலப்படும் சைகை எனப் பொருள்படும்.

**"வர்த்தகப்பெயர்"** என்பது ஓர் இயற்கையான அல்லது சட்டப்படியான ஆளின் தொழில் முயற்சியை அடையாளம் காணுகின்ற பெயர் அல்லது பெயர் குறிப்பு எனப் பொருள்படும்.

**"சேவைக்குறி"** என்பது ஒரு தொழில் முயற்சியின் சேவைகளை வேறு தொழில் முயற்சிகளின் சேவைகளில் இருந்து வேறு பிரித்துக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற ஏதேனும் **புலப்படும் சைகை** எனப் பொருள்படும்.

இவ்வாறானதொரு குறிகள் அல்லது பெயர்கள் ஒரு வியாபாரத்திற்கு அல்லது தொழில் முயற்சிக்கு இல்லாதுவிட்டால் போட்டிச் சந்தையில் என்ன நிகழும்? பல்வேறு பொருட்கள் சந்தையில் காணப்படும் போது நுகர்வோரின் நுகர்வில் குழப்பத்தன்மை அதாவது பொருட்களைத் தெரிவதில் சிக்கல் தன்மை காணப்படும். தொழில் நுட்ப உலகில் எல்லா விடயங்களிலும் போலிகளும் நகல் பிரதிகளும் சர்வசாதாரணமாக சந்தையில் நுழைகின்றன.இவற்றைத்தடுப்பதற்கு ஒரு வேலி வேண்டும். குறிகளும் பெயர்களும் இலகுவில் இனம்காண வழிவகுக்கின்றது. ஏமாற்றுகை இடம்பெறாமல் தடுக்கின்றது. வர்த்தகத்தில் தாமதத் தன்மையை ஏற்படுத்தும். சரியான இனம் காணல் இல்லாத காரணத்தினால் நுகர்வோரை தவறாக வழிநடத்துவதற்கு வாயப்பளிக்கின்றது. நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளைத் தோற்றுவிப்பதுடன் நியாயமற்ற போட்டிகளையும் மறைமுகமாக ஊக்குவிக்கின்றது. இவை போன்ற பல நடவடிக்கைகள் மேன்மேலும் பொருட்களையும் சேவைகளையும் ஆளத்தொடங்கும் என்பது தான் நடைமுறை யதார்த்தமாகும்.

**பிரிவு 102** குறிகள் கொண்டுள்ள ஏல்தகைமைகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. அதாவது குறி ஒன்றிற்கான பிரத்தியேக உரிமையினைப் பெறுவதற்காக பதிவு செய்யப்பட வேண்டும். மேலும் பிரிவு 102(3) ஒரு குறியானது கற்பனையாகவோ, விருப்பப்படியாகவோ, புவியியற்பெயர்களைக் கொண்டதாகவோ வண்ண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை கோடுகள் ஆகவும் காணப்படலாம். WIPO ன் படி sound mark, smell mark போன்றவை வியாபாரக்குறிகளாகப் பயன்படுத்த முடியும். ஒரு நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் ஒரே வகையான வாசனையைக் கொண்டனவாக காணப்படலாம்.

**பிரிவு 103** பின்வரும் சின்னங்கள் ஏல்தகவற்றவை என வரையறுக்கின்றது. அதாவது அவதூறான வடிவமைப்பைக் கொண்ட அல்லது பொது ஒழுக்கத்துக்கு மாறான குறிகள் மற்றும் பெயர்கள், குறிப்பிட்ட பண்டங்கள் அல்லது சேவைகளின் வர்த்தக செயற்பாடு இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ள போது அப்பண்டங்களின் சேவைகளின் குறிகளை நாடுதல், அரசின் அலுவலகமுறையான சைகைகள் அல்லது அதிகார முத்திரைகளைக் கொண்டுள்ளதாவுள்ள குறிகள் பதிவு செய்யப்படுதல் ஆகாது.

அதாவது உற்பத்திப் பொருட்கள் நுகர்வோரிற்கு வேறுபாட்டினைக் காட்டாத போது அவை வியாபாரக்குறியாக ஏற்றுக்கொள்ளப்படாது. உதாரணமாக சாதாரணமான ஒரு பத்தூரிகையின் வடிவமைப்பு அனைவருக்கும் தெரிந்ததொன்றாகும். அதன் வடிவத்தை ஒருவர் தனது உற்பத்திப் பொருளின் வியாபாரக்குறியாகப் பயன்படுத்த முடியாது. அது ஒரு பொதுவான வடிவமாகும். அவ் வடிவத்தின் மீது தனிப்பட்ட முறையில் உரிமை கொள்ளவும் முடியாது.

சில குறிகள் ஏற்கனவே மூன்றாம் தரப்பினரால் கோப்பிடப்பட்டு முன்னுரிமையை பெற்று பதிவு செய்யப்பட்ட பண்டங்கள் சேவைகள் தொடர்பான அதே குறிகளை மீண்டும் பதிவு செய்யமுடியாது என பிரிவு 104 ஏற்பாடு செய்கின்றது.

பின்வரும் வழக்குகள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

- **Stassen Exports Ltd V. Hebtulabhoy &Co.Ltd**
- **Maharajah Organization V.Teleshan Networks private Ltd.**
- **Leela nanda V.Earneri De silva**
- **Sahib V.Muthalip**
- **Mohamed V. Mohamed Uvais (1942) 43 NLR 176-179**

## பதிவிற்கான விண்ணப்பத்தின் தேவைப்பாடுகளும் நடவடிக்கைகளும்

பதிவிற்கான விண்ணப்பம் பணிப்பாளருக்கு செய்யப்பட வேண்டும் அத்துடன் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. குறியைப்பதிவு செய்வதற்கான ஒரு வேண்டுகோள்
2. விண்ணப்பகாரரின் பெயரும், முகவரியும், அவர் இலங்கைக்கு வெளியே வசிப்பவராயின் இலங்கையில் சேர்ப்பிப்பதற்கான அஞ்சல் முகவரி.
3. குறியின் பிரதி உருவத்தினது ஐந்து பிரதிகள்

விண்ணப்பமானது முகவர் மூலம் கோப்பிடப்படும் போது விண்ணப்பகாரரினால் அத்தகைய முகவருக்கு அளிக்கப்பட்ட அற்றோனி தத்துவத்துடன் அது சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொருசெயலுக்கும் கால எல்லை என்பது மிகவும் முக்கியமானது ஆகும்.அதே போல குறிகளுக்கும் கால எல்லை சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ளது. **பிரிவு 118** பின்வருமாறு கூறுகின்றது.ஒரு குறியின் பதிவு அத்தகைய குறியை **பதிவுசெய்த தேதியிலிருந்து பத்தாண்டுகளுக்குப் பின்னர் முடிவுறுத்தப்படும்**. மீண்டும் புதுப்பித்தல் தொடர்பாக பிரிவு 119 கையாளுகின்றது.

புலமைச் சொத்து மனித மூளையையும் ஆற்றல்களையும் அடிப்படையாகக் கொண்டமையால் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலைகள் உருவாவது இயல்பான ஒன்றாகும். அதற்கு ஏற்றவாறு புலமைச் சொத்துச் சட்டமும் நெகிழ்வுத் தன்மையான ஏற்பாட்டைக் கொண்டுள்ளது. **பிரிவு 120** பதிவு செய்யப்பட்ட குறிகளை பெருமளவிற்குப்பாதிக்காத வகையில் மாற்றுவதற்று குறியின் சொந்தக்காரருக்கு உரிமையை அளித்துள்ளது.

குறியினை சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து குறியின் சொந்தக்காரருக்கு சில உரிமைகளை இச் சட்டத்தின் ஊடாக **பிரிவு 121** கீழ் வழங்குகின்றது.

- குறியினைப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கின்றது
- குறியின் பதிவை சாட்டுதல் செய்வதற்கு அல்லது கைமாற்றுவதற்கு
- உரிம ஒப்பந்தங்களை முடிவுறுத்துவதற்கு

பிரிவு 121(2) குறியின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரின் சம்மதம் இன்றி மூன்றாம் திறத்தவர்கள் ஈடுபடுவதை தடைசெய்கின்றது. (Sumeet Research &Holdings Ltd V.Elite Radio)

இருப்பினும் பிரிவு 121 ற்கு பிரிவு 122 மூலம் சில மட்டுப்பாடுகளை குறியின் சொந்தக்காரரின் மீது விதிக்கின்றது. அதாவது பொருட்களின் பாவனைக்காக அப் பொருளைப் பற்றி தகவல் அறிதல் போன்ற நோக்கங்களைக் கொண்ட செயற்பாடுகளை தடுக்கும் உரிமையை சொந்தக்காரருக்கு அளிக்கவில்லை. (Nestle V. Multitech Lanka)

பிரிவு 133 குறி மீதான பதிவைத்துறத்தலுக்கான ஏற்பாட்டை வழங்குகின்றது. குறியினை பதிவு செய்த சொந்தக்காரர் பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கொடுக்கப்படும் எழுத்திலான வெளிப்படுத்துகை மூலமாக முழுமையாகவோ அல்லது எப்பண்டங்கள் சேவைகள் தொடர்பில் குறி பதிவு செய்யப்பட்டதோ அப்பண்டங்களின் அல்லது சேவைகள் தொடர்பில் பதிவைத் துறக்கலாம்.

பிரிவு 138 கூட்டுக்குறிகளின் அங்கீகாரம் தொடர்பாகவும் சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் மீறுகின்றவிடத்து அல்லது அச்சுறுத்தப் படுகின்றவிடத்து அல்லது மீறும் சாத்தியம் உள்ளது என நீதிமன்றம் திருப்தியும் விதத்தில் எண்பிக்கப்படுமிடத்து நீதிமன்றமானது அத்தகைய ஆளைத் தடைசெய்யும் தடைக் கட்டளையொன்றை வழங்கலாம் அத்துடன் நிவாரணத்தையும் வழங்க கட்டளையிடலாம்.

புலமைச் சொத்தில் குறிகள் தொடர்பாக புரியப்படும் குற்றங்களுக்கும் இச்சட்டத்தில் ஏற்பாடுகள் காணப்படுகின்றன. பொய்ப்புனைவு செய்யப்பட்டு தவறொன்றுக்கு குற்றவாளி ஆகும் ஒருவர் ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து இலட்சத்தை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்தண்டனைக்கு ஆளாகுதல் வேண்டும். ரூபா ஐந்து இலட்சத்தை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்தண்டனைக்கு அல்லது இரண்டிற்கும் ஆளாகுதல் வேண்டும். இரண்டாவது அல்லது அடுத்துறும் குற்றத்தீர்ப்பின் விடயத்தில் அத்தகைய குற்றப்பணத்தின் இரட்டிப்பு மடங்குக்கு அல்லது மறியற்தண்டனைக்கு ஆளாகுதல் வேண்டும்.

குறிகள் தொடர்பான பொய்யான கூற்றினைச் செய்தல் அதாவது குறியொன்று அல்லாத குறியை குறியாகப் பதிவு செய்தமை தொடர்பில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவர் ரூபா ஐந்து இலட்சத்தை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்தண்டனைக்கு அல்லது இரண்டிற்கும் ஆளாகுதல் வேண்டும்.

வியாபாரக்குறிகள் , வியாபாரப் பெயர்களைப் பாதுகாப்பதற்கு சர்வதேச மற்றும் உள்நாட்டு ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ஏன் என்றால் இன்றைய போட்டிச் சந்தைகளிலும் சர்வதேச சந்தைகளிலும் பொருட்கள் மற்றும் சேவைகளினைப் பாதுகாக்கும் ஒரே ஒரு கவசமாக காணப்படுவதுடன் அதன் முக்கியத்துவமும் அதிகரித்துள்ளது என்பதே தெட்டத்தெளிவான உண்மையாகும். வணிகத்தில் மிக முக்கியமான விடயம் சந்தையை கைப்பற்றுவதுடன் அதில் நீண்ட காலம் நிலைத்திருப்பதாகும். அதற்கு உறுதுணையாகவே இச்சட்ட ஏற்பாடுகள் வரையப்பட்டுள்ளது என்றால் மிகையாகாது.

தனிமனிதனின் சிந்தையில் எழும் கற்பனையை சட்ட ஏற்பாடுகள் பாதுகாப்பளிக்கின்றது என்றால் சட்டம் மனிதனுக்காகவே உருவாக்கப்பட்டதுடன் சட்டமும் மனிதனும் பிரிக்க முடியாத இரட்டைகள் ஆகும்.

**உசாத் துணை நூல்**


**D.M.Karunaratna, Law of Intellectual Property in SriLanka (1st Edition)**

**Intellectual Property Act, No.36 of 2003**

**www.wipo.int/portal/en/**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளில் அரசியலும் தற்கால அரசியல் சட்டமும்

**எம். பரமேஸ்வரி** BA (HONS)
இறுதிநிலையாண்டு
இலங்கை சட்டக் கல்லூரி

## அறிமுகம்

ஒரு நாட்டின் ஆட்சியின் தன்மை, ஆட்சியின் இயல்பு ஆகியவற்றின் நிலைகளை எடுத்துக்காட்டுவதே அரசியல் ஆகும். ஒரு சமூகத்துள் வாழும் மக்களின் செயல்களின் நிலையை எடுத்துக்காட்டி மனிதனுடைய எண்ணங்களுக்கும் கற்பனைகளுக்கும் இடம்கொடுத்து நல்லாட்சி புரிய வேண்டும். அதாவது உலகம் ஒரு குடும்பம். மக்கள் அதில் வாழும் உறுப்பினர்கள் ஆளப்படுவோர் வேறல்லர். குடியரசு, முடியரசு, படையரசு என எதுவாக இருப்பினும் சிறப்பான முறையில் ஆட்சி செய்வதே நோக்கமாகக் கொண்டு மக்களின் காவலனாக அரசு (மன்னன்) செயற்படுவதையே அரசியல் எனலாம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே மூவேந்தரின் அரசியல் வரலாறோடு ஆரம்பிக்கும் பண்டைய அரசியல் சமுதாயம் இன்று பலவாறாக வளர்ச்சியடைந்து விட்டது. அவ்வாறான ஒரு காலப்பகுதியில் உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறளில் திருவள்ளுவர் அரசியலை ஒரு பகுதியாகக் கூறியிருக்கிறார் எனலாம்.

அவருடைய காலத்தில் மன்னர்களுடைய ஆட்சிமுறையை நன்கு அவதானித்த வள்ளுவர் நாடு எவ்வாறு இருக்க வேண்டும், மன்னன் எவ்வாறு இருக்க வேண்டும், மக்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என அவர் எண்ணினாரோ அதனை அவ்வாறே அறிவுரையாக திருக்குறளின் வாயிலாக வலியுறுத்தி விட்டு சென்றிருக்கிறார்.

வள்ளுவர் குறிப்பிட்ட அரசு நிறுவனப்பட்டது அல்ல. அரசன் என்ற தனி மனிதனிடமே அனைத்து அதிகாரங்களும் காணப்படுகின்றது. அவனே அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்கிறான். அவர் காலத்தில் அரசனைச் சார்ந்தே முடியரசின் முழு அமைப்பும் தங்கியிருந்திருக்கிறது எனலாம்.

மன்னன் தான் அனைத்து அதிகாரங்களுக்கும் உரியவன் என்பது வள்ளுவருடைய கருத்தாக இருக்கிறது. இதன் மூலம் பண்டைய சமுதாயத்தில் முடியாட்சியே நடைமுறையில் இருந்திருக்கிறது என்பது புலனாகிறது.[1]

1 மனோகரன்.து. (2011) “திருக்குறளின் அரசியல் நோக்கு”நீதிமுரசு, கொழும்பு, சட்ட மாணவர் தமிழ் மன்றம். ப.233.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறளில் மன்னனின் இயல்புகள் பற்றியும் கூறப்படுகின்றது. **வேந்தர், அரசர், மன்னன், மன்னவன், இறை, அரசு** முதலான சொற்களை வள்ளுவர் அதிகமாகப் பயன்படுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அரசியல் சட்டம் என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் அரசனுக்கு கூறிய இலக்கணம், அறிவுரை என்பன இன்று சட்டமாக மாறியுள்ளது. திருக்குறள் தோன்றிய காலத்தில் அரசியல் சட்டம் அமைத்து அதன்படி நாட்டை ஆட்சி செய்தார்கள் என்று உறுதியாக கூற முடியாது. முடியாட்சி மறைந்து குடியாட்சி மலர்ந்த பின்பு தான் அரசியல் சட்டம் அமைத்து அதன்படி ஆட்சி நடத்த வேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்டது. மன்னர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் மரபுமுறைப்படி வாழ்ந்தார்கள். அவர்களுடைய விருப்பமே சட்டமாகவும் இருந்தது.

அத்தகைய காலத்தில் தோன்றிய திருக்குறளின் கருத்துக்கள், கொள்கைகள், தத்துவங்கள் அனைத்தும் தற்காலச் சட்டத்திலும் காணப்படுகிறது. இலங்கை அரசியல் அமைப்பு சட்டமானது 1978ம் ஆண்டு அரசியல் அமைப்பினால் ஆளப்படுகின்றது. நாட்டின் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய அரசியல் சட்டம் மிக விரிவானதுடன் அது வலிமை மிக்கது. அது அனைத்து சட்டங்களுக்கும் மேலானதுடன் **நாட்டின் மீயுயர் சட்டமாவும்** அரசியல் அமைப்புச் சட்டம் விளங்குகிறது.

அரசியல் சட்டத்திற்கு முரணாக எந்த சட்டமும் செயற்படலாகாது என வலியுறுத்துவதுடன் அரசியல் சட்டத்தின் சாரம்சம், முக்கிய அம்சங்கள் அனைத்தும் அதன் முன்னுரையில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கூறப்பட்ட அரசியல் அறிவுரைகள் இன்று சட்டவடிவம் பெற்று தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## இயற்கைச் சட்டமும் திருக்குறளும்

இயற்கைச் சட்டமானது நீதியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. சட்டத்தை நியாயத்தினதும் நேர்மையினதும் துணை கொண்டே எடைப்போட வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்தாகும். கிரேக்கர்களின் தத்துவார்த்தத்தின் அடிப்படையில் தோன்றிய இயற்கைச் சட்டமானது சட்டத்துக்கும் ஒழுக்கத்துக்கும் இடையே இணைப்பு காணப்படுவதையும் அது நியாயமாகவும் நேர்மையானதாகவும் இருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர்.

இயற்கைச் சட்டமானது இயற்கை விதிகளோடு முரண்படக்கூடாது என்பதில் அதிகம் கவனம் செலுத்தப்படுகிறது. இயற்கைச் சட்டமே உயரியது என்றும், ஏனைய சட்டங்கள் யாவும் அந்த சட்டத்துடன் இயைந்ததாகவே இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது[2] அது

"மனித நடத்தை சில நேரங்களில் மதிப்பிட்டு ஆளப்படுகிறது. இது நன்னெறி மற்றும் சட்டவிதிமுறைகளை அடித்தளத்தில் கொண்டு உலகளாவிய தார்மீக கொள்கையாக ஏற்றுக் கொண்ட எழுதப்படாத சட்டம் இயற்கை சட்டம். மற்றும் இயற்கை சட்டம் தத்துவ தன்மைகளை **இயற்கை** என்று அழைக்கிறது."[3]

---

2

3 69 (http://www.justice4you.org/natural-justice.php



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கைச் சட்டம் பற்றிய சிந்தனையாளர்களுள் சோக்கிரட்டிஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் போன்றோர் முக்கியமானவர்களாக கருதப்படுவதுடன் இவர்கள் **தத்துவார்த்தம்** தான் இயற்கை சட்டம் என வலியுறுத்தினர். அதாவது இவர்களுடைய கருத்துப்படி சட்டம் நல்ல சட்டமாக இருக்க வேண்டும் எவ்வாறாயினும் அது தெய்வீகமானதாகவும் நிலையானதாகவும் நியாயப்படுத்தக்கூடியதாகவும் இயற்கையானதாகவும் நீதியானதாகவும் இருக்க வேண்டும் என்கின்றனர்.[4]

பிளேட்டோ தனது "The republic" எனும் நூலில் இயற்கைச் சட்டம் தொடர்பாக பின்வருமாறு கூறுகின்றார்.

- மனிதனால் உருவாக்கி கொள்ளும் விதியே பலமானது மற்றவர்களால் திணிப்பது அல்ல.
- சட்டம் நியாயமானது என்பதால் கீழ்ப்படிகின்றோம்
- சட்டத்தை பின்பற்றுவதற்கான காரணமானது சுயவிருப்பு. தம்மைத் தாமே ஒழுங்குப்படுத்தல் ஒழுக்கத்தை விரும்புதல். ஆகியன காரணமாகவே பின்பற்றுகின்றோம் என வலியுறுத்துகிறார்.

நாட்டை ஆட்சி செய்வோன் தத்துவவியலாளனாக இருக்க வேண்டும் எனக் கூறி அவனுக்குரிய பண்புகளாக யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும், எதனையும் அறிந்துக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும், எப்பொழுதும் உண்மையையும், நீதியையும், பேசுவனாகவும் இருக்க வேண்டும். நீதி, துணிவு சுயக்கட்டுப்பாடு உடையவனாக ஆட்சியாளன் காணப்பட வேண்டும் என அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர்.[5]

இதனையே திருக்குறளும் வலியுறுத்துகின்றது. நாட்டை ஆட்சிபுரிவோனின் பண்புகளை திருவள்ளுவரும் கூறியிருக்கிறார். திருக்குறளும் நீதி, நேர்மை, ஒழுக்கம், அறம் ஆகியனவற்றையே வலியுறுத்துகிறது. சட்டமானது மனிதனுடைய நடத்தையானது நீதியானதாகவும் நியாயமானதாகவும் நேர்மையானதாகவும் இருக்க வேண்டும் என வலியுறுத்துவது குடிமக்களுக்கு மட்டுமன்றி அது ஆட்சியாளனுக்கும் பொருந்தும். இதனை திருவள்ளுவரும் வலியுறுத்திய அதேவேளை கிரேக்க அறிஞர்களும் ஆட்சியாளனுக்குரிய பண்புகளை வலியுறுத்தி இருப்பதன் ஊடாக அரசியல் கருத்துக்கள் இயற்கைச் சட்டத்திலும் காணப்படுகின்றன.

இயற்கை உரிமையானது ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போதே பிரிக்க முடியாத உரிமைகளுடனும் பிறந்திருக்கின்றான் என்கிறது. அதுவே காலப்போக்கில் இயற்கைச் சட்டமாக மாறி தற்காலத்தில் அரசியல் சட்டத்தில் வலியுறுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக,

எல்லோரும் **சட்டத்தின் முன் சமம் என்றும் இனம், மதம், மொழி, ஜாதி, பிறப்பிடம், அரசியல் கொள்கை வேறு காரணங்களினால் எந்த ஒரு நபரையும் ஓரங்கட்டப்படலாகாது** எனச் சட்டம் வலியுறுத்துகிறது[6]

---

4 70Robert m.cover, (1975), Justice accused, Binghamton, united states of america by vail-ballou press,p.p.9-12.

5 Robert m.cover, (1975), -do-, Binghamton, united states of america by vail-ballou press,p.p.13-17.

6 இலங்கை அரசின் அச்சு திணைக்களம். மே.கு.நூல். "அத்தியாயம் 3 அடிப்படை உரிமைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே வள்ளுவர் வலியுறுத்தி விட்டுச் சென்று விட்டார்.

**“பிறப்பொக்கு மெல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா**
**செய் தொழில் வேற்றுமை யான்”** (குறள்:972)

இக்குறளின் மூலம் வள்ளுவர் மேலேக் கூறிய அதேக்கருத்தினையே வலியுறுத்தி இருக்கிறார். பிறப்பினால் அனைவரும் சமம் என்றும் செய்யும் தொழிலில் மட்டுமே வேறுப்பாடு காட்ட முடியும் என்கிறார்.[7] இதன் மூலம் இயற்கைச் சட்டத்தினை திருவள்ளுவரும் வலியறுத்துகிறார்.

இயற்கைச் சட்டக் கோட்பாடானது கிரேக்கர்களினால் கட்டியெழுப்பப்பட்ட ஒரு கோட்பாடாகும். இதில் **அரிஸ்ரோட்டில். பிளேட்டோ, சோக்கிரட்டிஸ் மட்டுமன்றி ஒகஸ்டின், தோமஸ் அக்குவனாஸ்** போன்றோர்கள் மதத்தினுடாக கட்டியெழுப்பப்பட்டதே இயற்கைச் சட்டம் என்கின்றனர். **ஜோன் லொக், ரூசோ** போன்ற அறிஞர்களும் சமுதாய ஒப்பந்தத்தின் ஊடாகவே இயற்கைச் சட்டம் வளர்ச்சியடைந்தது என வலியுறுத்துகின்றனர்.

இவர்கள் மட்டுமன்றி இன்னும் பல அறிஞர்களாலும் இயற்கைச்சட்டம் தொடர்பாக பல விளக்கங்கள் காலத்துக்கு காலம் முன்வைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இருந்தப்போதிலும் இவர்கள் அனைவராலும் கூறப்பட்ட இயற்கைச்சட்டக் கருத்துக்களை திருவள்ளுவர் தனி ஒரு மனிதனாக இருந்து கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஏனெனில் இயற்கைச் சட்டம் பெருமளவு அரச நீதியையே வலியுறுத்துகிறது. அதனை வள்ளுவர் **எழுபது அதிகாரத்தில்** அரசநீதி தொடர்பாக வலியுறுத்திக் கூறியிருக்கிறார்[8].

**“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்”** (குறள்: 388)

இக்குறளானது தர்ம சாஸ்திர நீதி சாஸ்திர முறைப்படி மக்களைக் காத்து நல்லாட்சி புரிய வேண்டும் அவ்வாறு மக்களை காத்தால் அரசனை மக்கள் கடவுளுக்கு ஒப்பாக கருதுவர் என குறள் வலியுறுத்துகிறது.[9] இதனையே **அரிஸ்ரோட்டில், சோக்கிரட்டிஸ், பிளேட்டோ** போன்றோர்கள் அரசன் பல நூல்களைக் கற்று ஒரு தத்துவஞானியாக இருந்து மக்களை ஆட்சி செய்ய வேண்டும் என்கின்றார்கள். அரசன் அறிவுடையவனாக இருக்க வேண்டும் என்பதே வள்ளுவரின் கருத்து. அதனையே தத்துவஞானிகள் இயற்கைச் சட்டத்தில் அரசன் எல்லா நுல்களையும் கற்று புலமையுடையவர்களாகவும் அறிவுடையவர்களாகவும் உண்மை, நீதியை பேச வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

எனவே இயற்கைச் சட்டமானது இவ்வாறாகப் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று எல்லா நாடுகளும் ஏற்றுக்கொள்ளும் வகையில் பொதுவான சட்டமாக காணப்படுகின்றது. திருக்குறளும்

உறுப்புரை 12(1),(2)” ப.8.

7 ஸ்ரீராமதேசிகன்,எஸ்.என்.(1998) “பெருமை” திருக்குறள் தமிழ், ஆங்கில, தெளியுரையுடன்,சென்னை: நாதன் கம்பனி. ப.388.

8 ஜகன்நாதன்,சி.வ. (1963),திருக்குறள் ஆராய்ச்சி பதிப்பு, கோயம்புத்தூர்,ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.பக்.122-123.

9 ஸ்ரீராமதேசிகன்,எஸ்.என். மே.கு.நூல்” இறைமாட்சி” ப.155.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிக்கே முக்கியத்துவம் அளித்தமையால் அது ஒரு **"பொதுநூல்"** என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எனவே இரண்டும் நீதியையே வலியுறுத்துகின்றன.

## திருக்குறளில் பொருட்பாலில் அரசியலும் அரசியல் சட்டமும்

அறம், பொருள், இன்பம் என்ற முப்பிரிவின் ஊடாக வாழ்க்கை பொலிவடையும் வழிகளை கூறிய வள்ளுவர் பொருட்பாலில் முதல் இருபத்தைந்து அதிகாரங்களிலும் அரசியல், ஒழியியல், அங்கவியல் ஆகிய அதிகாரங்களிலும் அரசியல் கருத்துக்களைக் கூறிகின்றார்.

வடமொழி அர்த்த சாஸ்திரம் அரசனை ஒரு கூறாகவே கூறுகின்றது. ஆனால் திருக்குறளில் அரசனே மையப்பொருளாவான். அதாவது **படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்** ஆகிய ஆறு அம்சங்களும் மன்னனை மையமாகக் கொண்டதுடன் அதில் அமைச்சு நிர்வாகம் தொடர்பானது. படை, அரண் என்பவை பாதுகாப்புத் தொடர்பானவை. கூழ் நாட்டின் சமாதானப் போக்கைக் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது எனலாம்.

அந்தவகையில் இந்த அரசியல் என்ற பாகுப்பாடு நாடாளுகின்ற அரசன் உயர்ந்த குறிக்கோளுடையவனாகவும் பண்புடையவனாகவும் இருக்க வேண்டும் என நோக்கம் கொண்ட வள்ளுவர் மன்னர் **கொடை, அறிவு, செங்கோல், குடியோம்பல், கல்வி, கேள்வி, அறிவுடைமை** கொண்டவனாக விளங்க வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாக இருக்கிறது.[10]

மேலும் வள்ளுவர் மக்களும் ஒன்றே என கருத்துடையவராக காணப்படுவதோடு, மன்னன் மனிதனுக்குரிய சிறந்த பண்புகளைக் கொண்டு ஆட்சி செய்ய வேண்டும் எனக் கூறுவதோடு, அவனை மக்களிடம் இருந்து வேறுப்படுத்துவது அவன் ஒரு ஆட்சியாளன் என்பதால் மட்டுமே. மற்றப்படி அனைத்து மக்களுக்கும் பொருந்தக்கூடிய அறிவுரைகளைக் கூறிய அவர் மக்களுக்குரிய கடமைகளையும் கூற மறக்கவில்லை.

அந்தவகையில் **"இறைமாட்சி"** என்ற அதிகாரத்தினூடாக நல்லரசிற்கான இலக்கணங்களை எடுத்துக் காட்டுகிறார். அதாவது மக்களாட்சியை மாண்புற நடத்துவதற்கான தகுதிகளையும் பண்புச்சிறப்புக்களையும் ஆட்சித்தலைவன் கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்துகிறார்.[11]

**"படைகுடி கூழ மைச்சு நட்பர ணாறும்**
**உடையா னரசரு ளேறு"** (குறள்:381)

படை, குடி, அமைச்சு, நட்பு, அரண் இத்தகைய ஆறு உடமைகளையும் கொண்டவன் அரசனுள் சிறந்தவன் என நாட்டு அரசனை இக்குறளினுடாக வர்ணிக்கிறார்.[12] மேலும் அடுத்த இரண்டு குறள்களினூடாக ஒரு நாட்டு அரசன் **ஈகை, கல்வி, அறிவு, அஞ்சாமை, ஊக்கம்** முதலிய நற்பண்புகளை பெற்றிருக்க வேண்டும் என வலியுறுத்துகிறார்.

---

10 மனோகரன், து. (2011) "திருக்குறளின் அரசியல் நோக்கு"இ நீதிமுரசு, கொழும்பு,சட்ட மாணவர் தமிழ் மன்றம். பக்.190-195.

11 ஸ்ரீராமதேசிகன்.எஸ்.என். மே.கு.நூல்" இறைமாட்சி" ப.155.

12 ஸ்ரீராமதேசிகன்.எஸ்.என். மே.கு.நூல்" இறைமாட்சி" ப.155.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளை பெருக்கித் திரட்டிக் காத்து ஏற்றவாறு திட்டமிட்டு அரசன் செலவிட வேண்டும். அதுவே நல்லரசு என்கிறார். குடிமக்களுடன் இன்சொல்லை பேசுவதுடன் அவர்களுடைய பேச்சுரிமையை மதித்து ஆட்சி புரிய வேண்டும் என அடுத்த மூன்று குறளினூடாக வலியுறுத்துகின்றார்.[13] மேலும் **"இறைமாட்சி"** அதிகாரத்தில் நல்வாழ்விற்கு வேண்டியவற்றை வழங்கியும் நிலையுணர்ந்து கருணைக்காட்டியும் நடுநிலைமை தவறாமல் ஆட்சி நடத்தியும் மக்களைப் பேணிப்பாதுகாப்பதே அரசிற்கு புகழ் சேர்ப்பதாக இருக்கும் என நல்லாட்சி தொடர்பாக அரசன் எவ்வாறு செயற்பட வேண்டும் என இறைமாட்சி அதிகாரம் வலியுறுத்துகிறது.

**நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால், யான் உயிர் என்பது அறிகை**
**வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே.** (புறநானூறு: 186)

அந்தவகையில் தற்காலத்தில் அரசியல் சட்டத்தில் அவ்வாறான விடயங்களை உள்வாங்கிச் சட்டம் இயற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக ஜனநாயக ஆட்சி நிலவும் இக்காலக்கட்டத்தில் அதிகாரமானது வள்ளுவர் கூறியது போல் அரசனிடம் மட்டும் காணப்படாது இக்காலத்தில் தனிநபரிடம் மட்டுமன்றி பல அமைப்புக்களும் நிறுவனங்களும் இணைந்து அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. எடுத்துக்காட்டாக, **சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை, பகிரங்கசேவை** மற்றும் ஏனைய அமைப்புக்களை குறிப்பிடலாம்.

இங்கு நாட்டின் அரசனாக ஜனாதிபதி கருதப்படுவதுடன் அவர் மக்களை எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும் என்றும், அவருக்குரித்தான அதிகாரங்களையும் கடமைகளையும் அரசியல் சட்டம் ஏற்பாடு செய்துள்ளது. குறிப்பாக அத்தியாயம் **7ல் உறுப்புரை 33-34** வரையான பகுதியில் அது தொடர்பாக கூறுவதுடன் வள்ளுவர் கூறிய கருணை காட்டி மக்களை ஆட்சி செய்ய வேண்டும் என்ற பேரில் இரக்கம் காட்டி சிறைக்கைதிகளை விடுதலை செய்கிறார். அரசியல் சட்டத்தில் **உறுப்புரை 34** இற்கினங்க அவர் பொதுமன்னிப்பு வழங்குகிறார்.[14]

மக்களுடைய கருத்து தெரிவிக்கும் உரிமையை மதிக்க வேண்டும் என இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் கூறிய விடயம் தற்காலத்தில் அரசியல் சட்டத்தில் **அத்தியாயம் 3 இல் உறுப்புரை 14** இன் மூலம் மக்களுடைய கருத்து வெளியிடும் உரிமை சட்டமாக தற்காலத்தில் வலியுறுத்தப்படுகிறது.[15] எனவே இதுபோன்ற இன்னும் பல கருத்துக்கள் திருக்குறளில் வலியுறுத்தப்படுகின்றன. அவை தற்கால அரசியல் சட்டத்தில் சட்டமாக வலியுறுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

---

13 மயுரா, ந.. (2013) "திருக்குறளின் அரசியல்"நீதிமுரசு, கொழும்பு, சட்ட மாணவர் தமிழ் மன்றம். பக்.233-235

14 இலங்கை அரசின் அச்சு திணைக்களம். (2009) "அத்தியாயம் VII, ஆட்சித்துறை" இ இலங்கை ஜனநாயக குடியரசின் அரசியலமைப்பு,கொழும்பு: இலங்கை அரசின் அச்சு திணைக்களம். ப.22.

15 இலங்கை அரசின் அச்சு திணைக்களம். மே.கு.நூல். "அத்தியாயம் 3 அடிப்படை உரிமைகள், உறுப்புரை 14(அ)"இ ப.8.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறளின் பொருட்பாலில் அங்கவியலும் அரசியல் சட்டமும்

அங்கவியலில் அமைச்சு, அரச நிர்வாகம், அரசின் பொருளாதாரம், அரசின் பாதுகாப்பு ஆகியன தொடர்பாக திருவள்ளுவர் கூறுகிறார். அதாவது அமைச்சர்கள் மதிநுட்பம் உடையோராக இருக்க வேண்டும், செல்வமின்மை கொண்டவராக இருக்க வேண்டும் மற்றும் அமைச்சர்கள் மன்னர்களைச் சேர்ந்து ஒழுகும்போது எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும் எனவும் திருக்குறள் வலியுறுத்துவதுடன் அவர்கள் அவைக்கு அஞ்சியவர்களாக இருக்க கூடாது.[16]

அமைச்சர்கள் ஆளும் திறன், முயற்சி, நற்குடிப்பிறப்பு, மன உறுதி, சாஸ்திரக்கல்வி இவையனைத்தும் நன்கு கற்று புலமையுடையவர்களாக இருக்க வேண்டும் எனப் பின்வரும் குறள் வலியுறுத்துகிறது.[17]

**"வன் கண் குடிகாத்தல் கற்றறித லான் வினையோ**
**டைந்துடன் மாண்ட தமைச்சு"** (குறள்:632)

இவ்வாறு அமைச்சு எனும் அதிகாரத்தில் வருகின்ற அனைத்து குறள்களும் அமைச்சருக்குரிய பண்புநலன்களைக் கூறுவதாக அமைந்துள்ளது. அது தற்காலத்தில் அமைச்சருக்குரிய பண்புகளை வலியுறுத்தி **பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் சட்டத்தில்** அங்கிகரிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் அங்கவியலில் நாட்டின் நிர்வாகம், பொருளாதாரம் தொடர்பாக கூறும் போது **"நாடு"** என்ற அதிகாரத்தின் வாயிலாக அதனை வலியுறுத்துகிறார்.

**"தள்ளா விளையுறும் தக்காரும் தாழ் விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு"** (குறள்:731)

உழவு தொழில் வல்லவர்களும் அவரவர் ஆசிரம தருமங்களை நன்கு கடைப்பிடித்து வருவோரும் பொருள் ஈட்ட வல்ல வணிகங்களும் நிறைந்ததே நாடாகும் என்பதே இக்குறளின் விளக்கம்.[18] இங்கு தற்காலத்தில் நாட்டின் அன்னிய செலாவணியை பெற்றுக் கொடுப்பதில் விவசாயம் முதன்மை வகிக்கிறது. நாட்டின் பொருளாதாரம் உயர்ந்து காணப்பட இவர்களின் பங்களிப்பு இன்றியமையாதது எனலாம்.

**"அறன்னு மின்பமு மீனுந் திறனறிந்து**
**நீதின்றி வந்த பொருள்"** (குறள்:754)

இங்கு பொருள் தேடும் வழிகளை அறிந்து தீய வழியில் வந்த பொருள் அறத்தையும் இன்பத்தையும் கெடுக்கும். ஆகையால் நேர்மையான வழிகளில் பொருள் தேட வேண்டும் என குறள் வலிறுத்துகிறது.[19]

16 ஸ்ரீராமதேசிகன்,எஸ்.என். மே.கு.நூல்,"அமைச்சு" பக்.252-255.
17 ஸ்ரீராமதேசிகன்,எஸ்.என். மே.கு.நூல்,"அமைச்சு" பக்.252-255.
18 ஸ்ரீராமதேசிகன்,எஸ்.என். மே.கு.நூல்"நாடு"இ ப.292.
19 ஸ்ரீராமதேசிகன்,எஸ்.என். மே.கு.நூல் "பொருள் செயல் வகை"இ ப.301.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனையே தற்காலத்தில் பொருள் உற்பத்தி செய்யும் உரிமையை பகிர்ந்தளிக்க வேண்டும் என அரசியல் சட்டம் கூறுவதுடன், அதனைத் திருக்குறளானது உனக்கு கிடைத்ததைப் பிறருடன் பகிர்ந்து கொள் என வலியுறுத்துகிறது. இது இலங்கையில் அரசியல் சட்டத்தில் **அரச கொள்கை வழிகாட்டி கோட்பாடு அத்தியாயம் ஆறில் உறுப்புரை 27 (உ)**மூலம் இவ்வாறு வலியுறுத்தப்படுகிறது.

> ''சமுதாயத்தில் பருப்பொருள் மூலவளங்களையும் சமூகத்தால் விளைவிக்கப்பட்டவற்றையும், ஆகக்கூடிய அளவு பொது நலனுக்குப் பயன் படக்கூடிய வண்ணம் எல்லா பிரஜைகளின் இடையேயும் ஒப்புரவான முறையில் பகிர்ந்தளித்தல்''[20]

நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக வலியுறுத்தும் வள்ளுவர் அரண், படைச்செருக்கு, இகல், பகை, மாட்சி, படைமாட்சி, பகைத்திறன் தெரிதல், உட்பகை ஆகிய அதிகாரங்கள் வாயிலாக அதனுடைய பண்புகளை வலியுறுத்தியுள்ளார்.[21] அந்தவகையில் தற்காலத்தில் அரசியல் சட்டத்தில் **உறுப்புரை 155**இல் பொதுமக்கள் பாதுகாப்புச்சட்டம் தொடர்பான ஏற்பாடுகளை கூறுவதுடன் அரசியல் சட்டம் முப்படைகளுக்கும் அங்கிகாரம் வழங்கி அதிகாரத்தை அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறது.[22]

**"தள்ளா விளையுருளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வமும் சேர்வது நாடு"** (குறள்:731)

**உழைப்பு, கல்வி, பொருள்,** ஆகிய மூன்றும் நாட்டிற்குரியவை.[23] இலங்கை அரசியல் அரசியலமைப்பில் **உறுப்புரை 27** அரச கொள்கை வழிகாட்டி கோட்பாட்டில் பிரிவு (ஈ) பின்வருமாறு நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக கூறுவதுடன். இவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனத் தற்காலத்தில் சட்டம் கூறுகின்றது.

(ஈ). ''பகிரங்க பொருளாதார முயற்சியின் மூலமும் தனியார் பொருளாதார முயற்சியின் மூலமும், அத்தகைய பகிரங்க பொருளாதார முயற்சியையும் தனியார் பொருளாதார முயற்சியையும் சமூகக் குறிக்கோள்களுக்காகவும் பொதுமக்கள் நலனுக்காகவும் நெறிப்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் உகந்ததாக இருக்கக்கூடிய அத்தகைய திட்டமிடலையும் கட்டுப்பாடுகளையும் விதித்துரைக்கின்ற சட்டங்களின் மூலமும் நாடு முழுவதையும் விரைவாக அபிவிருத்தி செய்தல்''[24]

எனவே இவ்வாறாக பொருட்பாலில் அங்கவியலில் **அமைச்சு, அரச நிர்வாகம், அரசின் பொருளாதாரம், அரசின் பாதுகாப்பு** தொடர்பாக இரண்டாயிரம் ஆண்டுக்கு முன் வள்ளுவர் கூறிய அறநெறிகள் தற்காலத்தில் அரசியல் சட்டத்தில் வலியுறுத்தப்படுகின்றது.

---

20 இலங்கை அரசின் அச்சு திணைக்களம். மே.கு.நூல். "அத்தியாயம் 6 அரச கொள்கைகளும் வழிகாட்டி கோட்பாடுகளும் அடிப்படை கடமைகளும் உறுப்புரை 27(உ)"இப.19.

21 ஸ்ரீராமதேசிகன்,எஸ்.என். மே.கு.நூல், பக்.296-352.

22 இலங்கை அரசின் அச்சு திணைக்களம். மே.கு.நூல். "அத்தியாயம் XVII பொது மக்கள் பாதுகாப்பு உறுப்புரை"இ பக்.110-113.

23 ஸ்ரீராமதேசிகன்,எஸ்.என். மே.கு.நூல்,"நாடு"இ ப.292.

24 இலங்கை அரசின் அச்சு திணைக்களம். மே.கு.நூல். "அத்தியாயம் 6 அரச கொள்கைகளும் வழிகாட்டி கோட்பாடுகளும் அடிப்படை கடமைகளும் உறுப்புரை 27(ஈ)"இப.19.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறளில் பொருட்பாலில் ஒழிப்பியலும் அரசியல் சட்டமும்

பொருட்பாலில் இறுதிப் பகுதியாக அமைந்துள்ள ஒழிப்பியலில் பதிமூன்று அதிகாரங்களில் குடி மக்கள் தொடர்பான விடயங்களைத் திருவள்ளுவர் மிக விரிவாகக் கூறியுள்ளார். அதாவது குடிமக்களுக்கு கூறவேண்டிய அறிவுரைகளைக் குடிமை, பெருமை, மானம், பண்புடைமை, சான்றாமை, நன்றியில் செல்வம், குடிச்செயல் வகை, நாணுடைமை ஆகியவற்றினூடாக கூறும் அதேவேளை "கயமை" எனும் அதிகாரத்தில் மக்களிடம் இருக்க கூடாத அம்சங்களை வள்ளுவர் வலியுறுத்தி கூறுகின்றார்[25].

நல்குரவு, இரவு, இரவச்சம் ஆகிய அதிகாரங்களின் ஊடாக வறுமை நிலையினையும் மானத்தை இழக்காது இரக்கும் தன்மையினையும் இரங்காமல் வாழ்வது சிறந்த வாழ்வு என பின்வரும் குறளின் ஊடாக வலியுறுத்துகிறார்.

**"இரந்து முயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து**
**கெடுக உலகியற்ற யான்"26** (குறள்: 1062)

இவ்வாறாக குடிமகன் தொடர்பாக வள்ளுவர் கூறியிருக்கும் அதேவேளை தற்காலத்தில் அரசியல் சட்டமானது நாட்டின் பிரஜையின் கடமையினையும் அவர்களுடைய உரிமைகளையும் அரசியல் சட்டம் வலியுறுத்துகிறது. திருவள்ளுவர் அதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே வலியுறுத்தி விட்டார்.

**"பிறப்பொக்கு மெல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய் தொழில் வேற்றுமை யான்"** (குறள்:972)

பிறப்பினால் அனைவரும் சமம், செய்யும் தொழிலில் காட்டும் திறமையால் மட்டுமே வேறுபாடு காண முடியும் என்பது இக்குறளின் கருத்து.[27] பிறப்பினால் வேற்றுமை அல்லது ஏற்றத்தாழ்வு இல்லை அதனையே தற்காலத்தில் அரசியல் சட்டத்தில் **அத்தியாயம் 3ல் அடிப்படை உரிமைகளில் உறுப்புரை 12(1)** இவ்வாறு வலியுறுத்துகிறது.

"சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள், அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமமாக பாதுகாப்பதற்கு உரித்துடையவர்கள்"

என கூறுவதுடன் **உறுப்புரை 12(2)** பின்வருமாறு வலியுறுத்துகிறது.

"இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக எந்த பிரஜையும் ஓரங்காட்டப்படலாகாது"

எனவும் வலியுறுத்துகிறது.[28] இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குறள் அறநெறியாக வலியுறுத்தி விட்டது.

---

25 ஸ்ரீராமதேசிகன்,எஸ்.என். மே.கு.நூல், பக்.380-428.
26 ஸ்ரீராமதேசிகன்,எஸ்.என். மே.கு.நூல், "இரவச்சம்"இ ப.424
27 ஸ்ரீராமதேசிகன்,எஸ்.என். மே.கு.நூல்."பெருமை"இ ப.388.
28 இலங்கை அரசின் அச்சு திணைக்களம். மே.கு.நூல்,"அத்தியாயம் 3 அடிப்படை உரிமைகள், உறுப்புரை 12(1),(2)"இப.6.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் திருக்குறளானது அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டும் என கூறுகிறது. இதனை **"கல்வி"** எனும் அதிகாரத்தில் சிந்திப்பதும் செயற்படுவதும் பற்றி கூறும் வள்ளுவர் கல்லாமையினால் ஏற்படும் இழிநிலையினையும் கூறுகின்றார். எடுத்துக்காட்டாக,

**"உளரென்னும் மாத்திரைய ரல்லாற் பயவாக்**
**களரனையிர் கல்லா தவர்"** (குறள்: 406)

கல்லாதவர்கள் ஒன்றுக்கும் பயன்படாத களர் நிலம் போல் வெறும் நடைப்பிணங்களாகப் கருதப்படுவர் என்பது இக்குறளின் விளக்கம்.[29] அதாவது கல்வி கற்றவர்கள் தான் உயிர் வாழ்பவர்கள் என்றும் கல்லாதவர்கள் களர் நிலம் போல் வெறும் நடைப்பிணங்கள் என்று கூறுவதன் மூலம் ஆண், பெண் பாகுபாடு இல்லாமல் அனைவரும் கல்வி கற்க வேண்டும் எனக் குறள் வலியுறுத்துகிறது.

தற்காலத்தில் சட்டமானது பதினான்கு வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் அனைவருக்கும் கட்டாயமாகவும் இலவசமாகவும் கல்வி கற்பிக்க வேண்டிய வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது அரசின் கடமை என வலியுறுத்துவதுடன் அது ஒவ்வொரு பிரஜையின் கடமையும் ஆகும். **அத்தியாயம் 6ல் அரச கொள்கை வழிகாட்டி கோட்பாடுகளும் அடிப்படை கடமைகளும் என்ற பகுதியில் 'உறுப்புரை 27ல்(ஏ)** ஆனது இவ்வாறு வலியுறுத்துகிறது.

"எழுத்தறிவின்மையை முற்றாக இல்லாதொழித்தலும் எல்லா நிலைகளிலும் உலகளாவியதும் சமத்துவமானதுமான கல்வி வாய்ப்புக்கான உரிமையை எல்லா பிரஜைக்கும் உறுதிப்படுத்த வேண்டும்" என கூறுகிறது.[30]

இதன் மூலம் திருவள்ளுவர் வலியுறுத்திய அனைவருக்குமான கல்வி தற்காலத்தில் சட்டமாக வலியுறுத்தப்படுகின்றது. மேலும் நாட்டில் குடிமகன் எவ்வாறான கடமைகளை மேற்கொள்ள வேண்டும் என **உறுப்புரை 28 அ-ஊ** வரையிலான பகுதி வலியுறுத்துகிறது. எடுத்துக்காட்டாக,

அ) அரசியலமைப்பையும் சட்டத்தையும் போற்றி பாதுகாக்க வேண்டும்
ஆ) தேசிய நலனை வளர்த்தலும், தேசிய ஐக்கியத்தை வளர்த்தலும்
இ) தாம் தேர்ந்தெடுத்த முயற்சியை **மனசாட்சியுடன் புரிதல்**
ஈ) அரசாங்க ஆதனத்தைப் பேணிக்காத்தலும் பாதுகாத்தலும், அரசாங்க ஆதனம் பிழையான முறையில் பயன்படுத்தலையும் வீணாக்குதலையும் தடுத்து நிறுத்தலும்:
உ) மற்றவர்கள் உரிமைகளையும் சுதந்திரத்தையும் மதித்தல்: அத்துடன்
ஊ) இயற்கையை பாதுகாத்தலும் அதன் செல்வங்களைக் காத்தலும்,

என இலங்கையின் அரசியல் சட்டத்தில் பிரஜையின் கடமை வலியுறுத்தப்படும்[31] அதேவேளை, வள்ளுவர் வலியுறுத்திச் சென்ற **மனசாட்சியின் படி வாழ்தல்** என்ற அறநெறி தற்காலத்தில் அரசியல் சட்டத்தில் **குடிமகனுடைய கடமையாக** அங்கிகரிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாறாக திருக்குறளின் அரசியல் கருத்துக்கள், தற்கால அரசியல் சட்டத்துடன் தொடர்பு கொண்டு காணப்படுகின்றது.

29 ஶ்ரீராமதேசிகன்,எஸ்.என். மே.கு.நூல்."கல்லாமை"இ ப.162.
30 இலங்கை அரசின் அச்சு திணைக்களம். மே.கு.நூல்,. "அத்தியாயம் 6 அரச கொள்கைகளும் வழிகாட்டி கோட்பாடுகளும் அடிப்படை கடமைகளும் உறுப்புரை 27(ஏ)"இ ப.18.
31 இலங்கை அரசின் அச்சு திணைக்களம். மே.கு.நூல்,"அத்தியாயம் 6 அரச கொள்கைகளும் வழிகாட்டி கோட்பாடுகளும் அடிப்படை கடமைகளும் உறுப்புரை 27 அ-ஊ"இ ப.19.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பொது சட்டத்தின் கீழ் மகவேற்பு
# (Adoption under the General law in Sri lanka )

நிரோஜினி திருஞானசம்பந்தர்
இறுதிநிலை ஆண்டு
இலங்கைச் சட்டக் கல்லூரி

இலங்கையில் வருடாந்தம் அதிக எண்ணிக்கையிலான பிள்ளைகள் மகவேற்கப்படுகிறார்கள். ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 1000 பிள்ளைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்களால் சட்ட ரீதியாக மகவேற்கப்படுவதாக பிள்ளைகள் நலன்புரி சேவைத் திணைக்களத்தின் (Department of Probation and child care services) புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகவேற்பு என்பது உயிரியல் ரீதியாக அல்லாமல் செயற்கைப் பொறிமுறை மூலம் உருவாக்கப்படும் உறவுமுறையாகும். பொதுவாக குழந்தைகள் இல்லாத பெற்றோர் பராயமடையாத பிள்ளைகளை மகவேற்பு செய்வது வழமையாகக் காணப்பட்டது. பழைய சட்ட முறைமையில் பராயமடையாத பிள்ளைகளை மாத்திரம் மகவேற்பு செய்வதற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. உரோம, டச்சுச் சட்டத்தில் வயது வந்த ஒரு நபரை மகவேற்கும் முறையும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் மகவேற்புக் கோட்பாடு ஆங்கிலச்சட்டம் மற்றும் கண்டியச் சட்டத்திலிருந்து தோன்றியுள்ளது. சட்ட ரீதியான மகவேற்புக் கோட்பாடு 1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் மூலம் பொதுச் சட்டத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இது இலங்கையில் பிள்ளை ஒன்றை மகவேற்பு செய்வது தொடர்பாக சட்ட வரம்பு ஒன்றை வழங்குகின்றது. இலங்கையில் ஒரு பிள்ளை மகவேற்புக்கட்டளை (Adoption Order) ஒன்றின் மூலமே மகவேற்கப்பட முடியும். மகவேற்புத் தொடர்பான அனைத்து விடயங்களும் மாவட்ட நீதிமன்றத்தினால் கேட்கப்படுகின்றது.

## யாரை மகவேற்புச் செய்யலாம்

மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2(1) இன்படி மகவேற்க விரும்பும் எத்தகைய நபரும் பிரிவு 13 இல் கூறப்பட்ட விதிகளுக்கு இணங்க மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றினை மேற்கொள்வதன் மூலம் பிள்ளை ஒன்றை மகவேற்கலாம். எனினும் இச் சட்டத்தின் பிரிவு 2(2) இன்படி இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நபர்கள் மகவேற்பு செய்யமுடியாது. ஆனால் அவர்கள் கணவன், மனைவி (Spouses) ஆக இருந்தால் இருவர் இணைந்து மகவேற்பு செய்யலாம்.

இச்சட்டத்தின் பிரிவு 17 இல் பிள்ளை என்பது 14 வயதிற்கு குறைந்த பிள்ளை என பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் மகவேற்பினை செய்யலாம்

மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 3(1)a இன்படி இக்கட்டளைச்சட்டத்தின் கீழுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் ஒரு ஆண் அல்லது பெண் ஓர் பிள்ளையை மகவேற்கலாம். விண்ணப்பதாரி 25 வயதிற்கு குறைந்தவராக இருந்தால் மகவேற்புக் கட்டளை வழங்கப்படமாட்டாது.

இக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 3(1)b இன்படி மகவேற்கப்படும் பிள்ளைக்கும் மகவேற்பிற்காக விண்ணப்பம் செய்பவர்க்கும் இடையில் வயது வித்தியாசம் 21 க்கு குறைவாக இருந்தால் மகவேற்புக் கட்டளை வழங்கப்பட மாட்டாது.

எவ்வாறாயினும் எப்பிள்ளை சார்பாக மகவேற்பு செய்யப்பட்டதோ அப்பிள்ளை

- விண்ணப்பதாரிக்கு நேரடி பின் சந்ததி வழியாக அல்லது
- விண்ணப்பதாரியுடைய முழு அல்லது பாதி இரத்தவழி சகோதரன் அல்லது சகோதரி அல்லது அத்தகைய சகோதரன் அல்லது சகோதரியுடைய பின் சந்ததிவழி அல்லது
- குறிப்பிட்ட விண்ணப்பதாரியின் வேறொரு திருமணத்தின் மூலமான பிள்ளையாக இருக்கும் போது

நீதிமன்றம் 21 வயதிற்கு குறைந்த வயதெல்லையுடைய விண்ணப்பத்தை ஏற்கலாம். எனவே இங்கு உறவுமுறைக்குள்ளாக மகவேற்கப்படுகின்றவிடத்து வயதெல்லை பார்க்கப்படமாட்டாது.

இந்த வயது வித்தியாசம் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான உறவுமுறையை பாதுகாப்பதற்காகவே விதிக்கப்பட்டுள்ளது. மகவேற்கப்படும் பிள்ளைக்கும் மகவேற்பவருக்கும் இடையிலான திருமணம் தடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவ்விருவருக்கும் இடையிலான பாலியல் ரீதியான உறவுகள் தற்போதைய சட்டத்தின் கீழ் ஒரு குற்றவியல் குற்றமாகும் ( தண்டனைச்சட்ட கோவைக்கு 1995 இல் கொண்டுவரப்பட்ட திருத்தம் ).

இக்கட்டளைச்சட்டத்தின் பிரிவு 3(2) இற்கு அமைவாக விண்ணப்பதாரி ஒரு ஆணாகவும் மகவேற்கப்படும் பிள்ளை பெண்ணாகவும் இருந்தால் நீதிமன்றம் விசேட கவனம் செலுத்தி மகவேற்புக் கட்டளை வழங்குவது சரியென எண்ணினால் மட்டுமே மகவேற்புக் கட்டளை வழங்கும். இல்லாவிட்டால் மகவேற்புக் கட்டளை வழங்கப்படமாட்டாது.

மேலும் நீதிமன்றம் தனது தற்துணிவு அதிகாரத்தினை பிரயோகிப்பதன் மூலம் திருமணம் செய்யாத இயற்கை தந்தையொருவருக்கு சட்ட ரீதியான திருமணத்திற்கு புறம்பாகவுள்ள உறவுமுறை மூலம் பிறந்த பிள்ளையொன்றினை மகவேற்பதற்கு அனுமதி வழங்கலாம்.

இச் சட்டத்தின் பிரிவு 3(3) இற்கு அமைய

- குறிப்பிட்ட பிள்ளையின் பாதுகாவலராகவுள்ள பெற்றோர் அல்லது பாதுகாவலருடைய சம்மதம் அல்லது
- குறிப்பிட்ட பிள்ளையின் கட்டுக்காவலை வைத்திருக்கும் நபரின் சம்மதம் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிள்ளையுடைய வாழ்வாதாரத்திற்கு பங்களிப்பு செய்யக்கூடிய நபருடைய சம்மதம் பெறப்படல் வேண்டும்.

மேற்படி பிரிவில் தேவைப்படுத்தப்பட்டுள்ள சம்மதம் எனும் தேவைப்பாடு பின்வரும் சூழ்நிலைகளின் கீழ் அவசியமில்லை.

- பிள்ளை கைவிடப்பட்டுள்ள போது அல்லது
- அத்தகைய நபரைக் கண்டுபிடிக்க முடியாத போது அல்லது
- நீதிமன்றக் கட்டளை ஒன்றில் மனநிலை பாதிக்கப்பட்டவராக வெளிப்படுத்தப்பட்டவிடத்து
- குறிப்பிட்ட பிள்ளைக்கு பராமரிப்பு வழங்கவேண்டிய ஒரு நபர் வேண்டுமென்றே மறுத்துள்ளவிடத்து அல்லது கவனயீனமாக இருக்கின்றவிடத்து
- நீதிமன்றம் குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கீழ் அத்தகைய நபருடைய சம்மதம் தேவைப்படாது எனக் கருதுகின்றவிடத்து

இக்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 3(5) இன் படி 10 வயதிற்கு மேற்பட்ட ஒரு பிள்ளையை மகவேற்புச் செய்யும் போது அப்பிள்ளையின் சம்மதத்தினைப் பெற வேண்டும். எவ்வாறாயினும் உரிய பாதுகாவலன் என்ற அடிப்படையில் குறிப்பிட்ட மகவேற்பு பிள்ளையுடைய நலனிற்கு பாதகமாக உள்ளவிடத்து பிள்ளையுடைய அனுமதி இருப்பினும் நீதிமன்றம் மகவேற்புக் கட்டளையை வழங்காது.

## மகவேற்பு கட்டளை ஒன்றை ஆக்குவதற்கான நடவடிமுறை

- இலங்கையில் பிள்ளைகளை மகவேற்பு செய்தல் தொடர்பாக மாவட்ட நீதிமன்றம் பிரத்தியேக நியாயாதிக்கத்தினைக் கொண்டுள்ளது.
- மகவேற்புக் கட்டளையொன்று பிறப்பிப்பதற்கு முன் நீதிமன்றம் பிள்ளையின் நலனைக் கருத்திற் கொள்ளவேண்டும்.
- நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்று மேற்கொள்ளப்பட்டதை உடனடுத்து பிள்ளையினுடைய நலன்களை நீதிமன்றத்தில் பாதுகாப்பதற்காக ஒரு நபரையோ அல்லது நபர்களைக் கொண்ட குழுவையோ பாதுகாவலராக (guardian ad litem) செயற்பட நீதிமன்றம் நியமிக்க வேண்டும்.
- வழமையாக பிள்ளைகள் நலன்புரி சேவை நிலையத்திடமிருந்து ஒரு நலன்புரி அலுவலரை பாதுகாவலராக நியமிக்கும் நடைமுறை உண்டு.
- மெனிக்காமி எதிர் பொடிமெனிகே என்ற வழக்கில் 10 வருடங்களும் 4 மாதமும் பூர்த்தியான ஒரு பிள்ளையிடமிருந்து பெறப்பட்ட சம்மதம் தொடர்பாக பிணக்கு எழுந்தது. நீதிமன்றம் பிள்ளையினுடைய நலனைக் கருத்தில் கொண்டு நீதிமன்றத்திற்கு வரமுன்னர் பிள்ளையினுடைய அனைத்து சாத்தியமான விடயங்கள் தொடர்பாகவும் குறிப்பிட்ட பாதுகாவலர் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிட்டது.
- வெளிநாட்டவர்கள் தொடர்புபட்ட மகவேற்புகளில் குறிப்பிட்ட நாட்டின் பிள்ளைகள் நலன்புரித் திணைக்களத்தின் அறிக்கை மிக முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மகவேற்பு தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் இரகசிய முறையில் நடைபெறுவதோடு பொதுமக்கள் பார்வையில் நடைபெறுவதில்லை.
- மகவேற்புக் கட்டளைக்கான விண்ணப்பம் ஒன்றை மேற்கொண்டதையடுத்து நீதிமன்றம் அது தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ள காலதாமதம் செய்துள்ளவிடத்து நீதிமன்றம் இரண்டு வருடகாலப் பகுதிக்கு தற்காலிகமாக பிள்ளையினுடைய பாதுகாவலை விண்ணப்பதாரியிடம் ஒப்படைப்பதற்கான இடையீட்டுக் கட்டளை ஒன்றை மேற்கொள்ளலாம்.
- அனைத்துத் திறத்தவர்களும் நீதிமன்ற அமைப்பு தினத்திலும் விசாரணை தினத்திலும் கட்டாயமாக சமூகமளித்தல் வேண்டும். விசாரணை தினத்தன்று பிள்ளையினுடைய பாதுகாவலர் தன்னுடைய விசாரணகள் அனைத்தும் பூரத்தி செய்துள்ளவிடத்து நீதிமன்றத்தில் தனது அறிக்கையை கோப்பிடலாம்.
- நீதிமன்றம் அவ்வாறு கட்டளையை செய்தல் உகந்தது எனக் கருதினால் சான்றுகளை கோரி கட்டளையை பதிவு செய்யலாம்.
- மகவேற்புக் கட்டளையை ஆக்கும் நீதிமன்றம் குறிப்பிட்ட மகவேற்பாளருடைய குடும்பப்பெயரை அல்லது மகவேற்பாளர் குறித்தான வழக்காறு அல்லது சமூகத்தின் அடிப்படையில் ஏனைய பெயர்களை பிள்ளைக்கு வழங்கலாம்.
- மகவேற்புக் கட்டளை மேற்கொள்ளப்பட்ட பின்பு நீதிமன்றம் அக்கட்டளையின் பிரதியொன்றை அல்லது உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை ஆணையாளர் நாயகத்திற்கும் விண்ணப்பதாரிக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

## மகவேற்கப்பட்ட பிள்ளையின் உரிமைகள்

மகவேற்புக் கட்டளை சட்டத்தின் பிரிவு 6(3) இன்படி மகவேற்கப்பட்ட பிள்ளை சட்டரீதியான திருமண உறவொன்றின் மூலம் பிறந்த பிள்ளைக்குரிய அதே அந்தஸ்தைப் பெறுகிறது. மேலும் இக் கட்டளை நிரந்தரமாக இயற்கைப் பெற்றோரிற்கு இருக்கின்ற பெற்றோர் உரிமைகளை இல்லாதொழிக்கின்றது. இங்கு பிள்ளைகள் தொடர்பான பராமரிப்பு, கட்டுக்காவல், கல்வி மற்றும் பிள்ளைகளின் ஏனைய நலன்சார் விடயங்கள் அனைத்தும் இயற்கை பெற்றோரிடமிருந்து மகவேற்ற பெற்றோருக்குக் கைமாற்றப்படுகின்றது.

மகவேற்பு கட்டளைச் சட்டத்தின் 6(3) b இன் பிரகாரம் மகவேற்புச் செய்தவரின் சொத்தில் மகவேற்புச் செய்தவரின் பிள்ளை மரண சாதனமொன்று (will) இல்லாதிருப்பின் உரிமை கோரமுடியும். இச் சட்டத்தின் பிரிவு 6(4) இன் பிரகாரம் மகவேற்கப்பட்ட பிள்ளைக்கு இயற்கைப் பெற்றோரின் சொத்தில் உரிமையிருக்கும்.

இக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 6(5) இன் படி மகவேற்கப்பட்ட பிள்ளையுடைய சொத்துக்களின் மரண சாதனமல்லாத வழியுரிமையை மகவேற்ற பெற்றோர் அல்லது அவர் மூலமாக வேறு எவரேனும் உரிமை கோர முடியாது. எவ்வாறாயினும் இப்பிரிவின் காப்பு வாசகப்படி மகவேற்கப்பட்ட பிள்ளைக்கு அத்தகைய சொத்து மகவேற்கப்பட்டவரால் அல்லது அவருடைய பின்சந்ததி வழியினர் அல்லது முன்சந்ததி வழியினரால் கைமாற்றப்பட்டிருக்கின்ற விடத்து அப்பிள்ளையினுடைய சொத்துக்களை மகவேற்ற பெற்றோர் அல்லது அவர் மூலமாக வேறு நபர்கள் மரணசாதனமல்லாத வழியுரிமையை கோர முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999 ஆம் ஆண்டின் பராமரிப்புச் சட்டத்தின் பிரிவு 22 க்கு அமைய பிள்ளை என்பது திருமண உறவு மூலமாக அல்லது திருமணத்திற்கு புறம்பாக அல்லது மகவேற்கப்பட்ட பிள்ளை என பொருள் கொள்ளப்படுகிறது. எனவே இத்தகைய அடிப்படையில் மகவேற்கப்பட்ட பிள்ளையொன்று தன்னை மகவேற்ற பெற்றோரிடமிருந்து பராமரிப்பு கோரமுடியும்.

## வெளிநாட்டவர் மூலமான மகவேற்பு

மகவேற்பு கட்டளைச் சட்டத்திற்கு 1979ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தம் இலங்கையில் இருந்து பிள்ளை ஒன்றை வெளிநாட்டவர் மகவேற்பதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. இலங்கை பிரஜைகளாக இல்லாத இரண்டு வாழ்க்கை துணைகள் இலங்கையில் உள்ள பிள்ளை ஒன்றை மகவேற்புச் செய்ய இணைந்து விண்ணப்பம் ஒன்றை மேற்கொள்ளலாம்.

இலங்கைப் பிள்ளைகளுடைய நலன்புரி சேவை ஆணையாளர்களால் இலங்கையில் உள்ள ஒரு அநாதை விடுதி அல்லது அரசாங்கம் நடத்துகின்ற ஒரு நிறுவனம் அல்லது அநாதை விடுதிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் ஒரு அநாதை இல்லத்தில் இருந்து பிள்ளை ஒன்றை மகவேற்க விண்ணப்பம் ஒன்றை மேற்கொள்ளலாம். மகவேற்புக்கட்டளையை வழங்குவதற்கு முன்பு நீதிமன்றம் பிள்ளை நலன்புரி சேவைகள் ஆணையாளருடைய அறிக்கையைப் பெற வேண்டும்.

அந்த அறிக்கையில் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 4 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பிள்ளையுடைய சமூக மன ரீதியான அணுகுமுறைகள் கவனத்தில் எடுக்கப்படும். அதாவது,

- குறித்த பிள்ளையின் பாதுகாவலரின் சம்மதம் பெறப்பட்டதா?
- பிள்ளையின் வயது, விளக்கம், சம்மதம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு பிள்ளையினுடைய நலனுக்காக மகவேற்பு செய்யப்படுகின்றதா?
- குறிப்பிட்ட மகவேற்பிற்காக விண்ணப்பதாரி அல்லது வேறு எவரேனும் ஏனைய நபர் எந்தவிதமான கொடுப்பனவுகளையும் பெற்றுள்ளாரா போன்ற விடயங்கள் கருத்தில் எடுக்கப்படும்.

மேலும் சில விசேட சூழ்நிலைகளில் விண்ணப்பதாரிகளுக்குச் சார்பாக மகவேற்புக் கட்டளை ஒன்று செய்யப்படுகின்ற போது அதனை நீதிமன்றம் நியாயப்படுத்த வேண்டும். ஆணையாளர் குறிப்பிட்ட அறிக்கையுடன் பின்வருவனவற்றை இணைத்தல் வேண்டும்.

- குறிப்பிட்ட விண்ணப்பதாரி வசித்து வருகின்ற நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து குறிப்பிட்ட விண்ணப்பதாரியுடைய மனநிலை, சமூக மதச்சார்பான பின்னணி, நிதிநிலைமை மற்றும் ஒரு பிள்ளையை மகவேற்பதற்கு அவர்களுக்குரிய பொருத்தமான தன்மை என்பன பற்றிய ஒரு அறிக்கையைப் பெறவேண்டும். இவ்வறிக்கை குறிப்பிட்ட நாட்டில் இலங்கைக் குடியரசின் உத்தரவுபெற்ற ஒரு பிரதிநிதியின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குறிப்பிட்ட விண்ணப்பதாரி வசித்து வருகின்ற பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் நிலையத்திலிருந்து அவருடைய நடத்தை மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை பெறப்படல் வேண்டும். இவ்வறிக்கை குறிப்பிட்ட நாட்டில் இலங்கை குடியரசின் உத்தரவுபெற்ற ஒரு பிரதிநிதியின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் நீதிமன்றம் திருப்தியடைந்தால் நீதிமன்றம் விரும்பும் அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைவாக பிள்ளையுடைய மகவேற்பு கட்டளையை மேற்கொள்ளலாம். மேலும், நீதிமன்றம் தகுந்தது எனக் கருதினால் பிரிவு 5 இன் படி குறிப்பிட்ட விண்ணப்பதாரியை ஒரு பிணை உடன்படிக்கையில் ஈடுபடுமாறு வேண்டலாம்.

இலங்கைக்கு வெளியே வசித்து வருகின்ற ஒவ்வொரு மகவேற்பாளரும் மகவேற்கப்படுகின்ற பிள்ளையுடைய நாட்டில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து பிள்ளையினுடைய முன்னேற்ற அறிக்கைகளைப் பெற வேண்டும். அத்துடன், அவ்வறிக்கையை சிறுவர் நல ஆணையாளருக்கு குறிப்பிட்ட நாட்டில் மகவேற்பு சட்டரீதியாக்கப்படகின்ற வரையில் ஒரு வருடத்திற்கு நான்கு முறை அனுப்பி வைக்கப்படல் வேண்டும். முதல் மூன்று வருடங்களில், வருடத்திற்கு இரண்டு முறை பிள்ளையுடைய புகைப்படத்துடன், 10 வயதைப் பிள்ளை பூர்த்தி செய்யும் வரை வருடா வருடம் அனுப்பி வைத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம் – சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் சட்டங்களும்

**A.M.M Firnas, S.M.F. Rahma & I. Farzana,**
(Final Year, SriLanka Law College)

## அறிமுகம்

இன்றைய உலகின் கவனம் பெரிதும் சிறுவர்களின் பக்கம் ஈர்க்கப்பட்டுள்ளது. ஏனெனில் இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்ற அடிப்படையில் அவர்களை அனைத்து பாதிப்புகளிலும் இருந்து பாதுகாப்பது சமூகத்தின் பொறுப்பாகும். சிறுவர் உரிமை பற்றிய எண்ணக்கரு ஓர் அண்மைக்கால தோற்றமாயினும் அது 19ம் நூற்றாண்டில் இருந்து படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது.

20ம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் பிள்ளை என்பது ஒரு சுதந்திரப் பிறவியாகும் என்பதை அங்கீகரிப்பதில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. அத்துடன் பிள்ளை விசேட கவனிப்புக்கு உட்பட வேண்டும் என்பதும் அங்கீகரிக்கப்படலாயிற்று. சர்வதேச ரீதியாக 1924ம் ஆண்டு ஜெனீவா சிறுவர் உரிமைப் பிரகடனம் உருவாக்கப்பட்ட போதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் பின்னர் 1945ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் உருவாக்கப்பட்டது. இப்பிரகடனத்தில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் 1989ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் சிறுவர் உரிமை பற்றிய சமவாயம் உருவாக்கப்பட்டது. இது 1990இல் நடைமுறைக்கு வந்தது. இதனை இலங்கை அரசு 1991ம் ஆண்டு உறுதிப்படுத்தியது. இந்த சமவாயம் சிறுவர்கள் சிறப்பான கவனிப்புக்கு உரியவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது.

சிறுவர்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க பல அரசசார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன. அரசசார் நிறுவனம் என்ற அடிப்படையில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சிறுவர்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதில் முக்கியம் பெறுகின்றது. அந்த வகையில் இச்சபையின் பணிகள் தொடர்பாகவும், சிறுவர் உரிமைகளோடு தொடர்புபட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளும் வகையிலும், பாதிப்புக்குள்ளான சிறுவர்களின் புள்ளிவிபரங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடனும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு நேரடியாகச் சென்று தரவுகள் பெறப்பட்டு இக்கட்டுரை எழுதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்கள்

எதிர்கால உலகம் இன்றைய சிறார்களின் கரங்களில் தங்கியுள்ளதால் ஒவ்வொருவரும் சிறுவர்களின் நலனில் அக்கறை கொண்டிருப்பது தெளிவாகின்றது. சர்வதேச ரீதியாக 1924ம் ஆண்டு ஜெனீவா உரிமைப் பிரகடனம் உருவாக்கப்பட்ட போதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் பின்னர் 1948ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் சிறுவர் உரிமையைப் பாதுகாக்கும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இவ்வேற்பாடுகள் போதியனவாக காணப்படாமையினால் 1959ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் **சிறுவர் உரிமைப் பிரகடனம்** உருவாக்கப்பட்டது.மேலும் சிறுவர் உரிமையைப் பாதுகாக்கும் நோக்கில் 1989ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் **சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்** உருவாக்கப்பட்டது.இச்சமவாயத்தை 1991ம் ஆண்டு இலங்கை உறுதிப்படுத்தியதுடன் அதன் ஏற்பாடுகளை இலங்கையில் பயனுறச் செய்வதற்காக சிறுவர் உரிமைப் பட்டயம் என்பதனை உருவாக்கியது எனலாம்.

சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்தில் 18 வயதிற்குட்பட்ட அனைத்து மனித பிறவிகளும் சிறுவர் என வரையறுக்கின்றது.அத்துடன் இச்சமவாயமானது ஒவ்வொரு நாடும் தமது நாட்டில் வெவ்வேறான வயதெல்லையை வைத்திருப்பதற்கு அனுமதிக்கின்றது.இதேவேளை உறுப்புரை 38 இன் படி பதினைந்து வயதிற்குட்பட்டவர்களை சண்டைகளில் நேரடியாக பங்குகொள்ளாதிருப்பதை அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் ஏற்பாடு செய்கின்றது.

இதே போல் இலங்கைச் சட்டங்களிலும் வெவ்வேறான வயதெல்லைகள் வெவ்வேறான சட்டங்களில் கடைப்பிடிக்கப்படுகிறது.அவை பின்வருமாறு கூறப்பட்டுள்ளது :

1. குற்றவியல் கோவை.
2. தேசிய சிறுவர் பாதுகாப்புச் சட்டம்.
3. பராமரிப்புச் சட்டம் என்பவற்றில் 18 வயதிற்குட்பட்டவர்கள் சிறுவர்கள் என்கின்றது.

மேலும்,

1. சிறுவர் இளம்பராயத்தவர் பெண்கள் தொழிற்சட்டம்.
2. தெழிற்சாலைக் கட்டளைச் சட்டம்.
3. சிறுவர் இளம்பராயத்தவர் (தீங்கு மிக்க வெளியீடுகள்)சட்டம்.

என்பவற்றில் 14 வயதிற்குட்பட்டவர்கள் சிறுவர்கள் என்கிறது.

வேலையாட்கள் விஷேட படிச் சட்டத்தில் 16 வயதிற்குட்பட்ட ஆண்களையும், 15 வயதிற்குட்பட்ட பெண்களையும் சிறுவர்களென கருதுகின்றது.இவையனைத்தும் சட்டத்தின் நோக்கத்தின் அடிப்படையில் சிறுவர்களை வரையறை செய்கின்றன.

ஒரு சமூகத்தில் சனநாயகத்தைப் பாதுகாத்தல், பிரஜைகளின் பொது நலனை விருத்தி செய்தல், சமூக நீதியை நிலை நிறுத்துதல் என்பவற்றுக்கு மனித உரிமைகளை ஏற்றுக்கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைப்படுத்துதல் அத்தியாவசியமானதொன்றாக கருதப்படுகின்றது. இம்மனித உரிமைகளானது அரசின் இயல்பையும், தேசங்களுக்கிடையிலான தொடர்பையும் நிர்ணயிக்கும் அளவுகோளாய் இருக்கின்றது எனலாம். எனவே மனிதனின் மகிழ்ச்சிகரமான வாழ்கைக்கு உரிமைகள் காரணமாய் அமைகின்றன எனலாம்.

**சிறுவர்களை இம்சைப்படுத்தப்படுவதற்கான காரணிகள் ஏராளமாக இருந்த போதிலும் இன்றைய சூழ்நிலையில் நிகழும் இம்சைகளை கீழ்வரும் தலைப்புக்களில் நோக்கலாம்.**

- அவசியமின்றி அதட்டுதல்,அவசியமின்றி கோபமூட்டுதல்.
- பிள்ளை நம்பிக்கை இழக்கும் படியாக நடந்துகொள்ளல்.
- கெட்ட எண்ணத்துடன் பிள்ளைகளை வருடுதல்.
- மன அதிர்ச்சி மற்றும் உளப்பாதிப்பு ஏற்படும் வகையில் தண்டித்தல்.
- குற்றம் செய்ய அல்லது விபத்தில் சிக்க வழி செய்தல்.
- பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பாதிருத்தல்.
- பாலியல் நடத்தைக்குத் தூண்டுதல்.
- பிள்ளை எதிர்பார்க்கும் அன்பு ஆதரவு போன்றவை வழங்கப்படாமை.
- தமது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு பிள்ளைகளை வதைத்தல்.
- தங்களை வருடும்படி பிள்ளைகளை வருடுதல்.
- பிள்ளையை சொந்த வீட்டிலே வேலைக்காரர் போல் நடாத்துதல்.
- பிள்ளைகளின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமை.
- பிள்ளையின் ஆடை, உணவு, சுத்தம் போன்றவற்றில் அக்கறை செலுத்தாமை.
- பிள்ளைகளின் விருப்பு வெறுப்புக்களுக்கு இடங்கொடாமை.
- பிள்ளையை பாதுகாப்புடன் வளர்க்காமை.
- பிள்ளையின் நோய் நொடிகள் பற்றி அக்கறை கொள்ளாமை.
- குழந்தைப் பருவக் கல்வியை மறுத்தல்.
- பிள்ளையின் சக்திக்கு அப்பாற்பட்ட வேலைப்பளுவை சுமத்தல்.

போன்ற பல்வேறு அம்சங்களை சிறுவர் இம்சைகளாகக் குறித்துக்காட்டலாம்.

**ஐ.நா. சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் சிறுவர்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட எண்ணக்கருக்கள்.**

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனை இலங்கை அரசானது 1991ம் ஆண்டு உறுதிப்படுத்தியது. இந்தச் சமவாயம் சிறுவர்கள் சிறப்பான மதிப்புக்குரியவர்கள் என்பதனை ஏற்றுக்கொண்டு அவர்களுக்குரிய நன்மைகள், அவர்கள் பெற வேண்டிய பாதுகாப்பு ஆகியவற்றை முறைப்படுத்துகின்றது. சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் 54 உறுப்புரைகள் காணப்படுகின்றன. இதில் முக்கியமாக 42 உறுப்புரைகள் உரிமைகள் தொடர்பாக பறைசாற்றுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **உறுப்புரை 1 சிறுவர் பற்றிய வரைவிலக்கணம்** : 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர், சிறுமியராகக் கணிக்கப்படுவர். அவர்கள் அந்த சமவாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் எல்லா உரிமைகளையும் அனுபவித்தல் வேண்டும்.

❖ **உறுப்புரை 2 - பாகுபாடு காட்டாமை** : எல்லாப் பிள்ளைகளுக்கும் அவர்களின் வயது, பால், இனம், நிறம், சாதி, மொழி அல்லது மதம் எவ்வாறிருப்பினும் இந்த உரிமைகள் உண்டு. அரசு பிள்ளைகளை எல்லாவகையான பாகுபாடுகளிலிருந்தும் பாதுகாப்பதுடன் அவர்களின் உரிமைகளைப் பரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தலும் வேண்டும்.

❖ **உறுப்புரை 3 - பிள்ளைகளின் சிறந்த நலன்** :பிள்ளைகள் தொடர்பான சகல செயற்பாடுகளும் முடிவுகளும், அவர்களின் சிறந்த நலன்களைக் கருத்திற் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

❖ **உறுப்புரை 4 - சமவாயத்தை அமுலாக்கல்** :அரசாங்கம் சமவாயத்தில் இடம்பெற்றுள்ள உரிமைகளை நிதர்சனமாக்குதற்கு தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

❖ **உறுப்புரை 5 - பெற்றோரின் வழிகாட்டலும் பிள்ளையின் வளர்ச்சியும்** :பிள்ளையின் பரிணாம வளர்ச்சித் திறனுக்கு ஏற்றவாறான நெறிமுறைகளை புகட்டுவதில் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் உள்ள உரிமைகளையும் பொறுப்புக்களையும் அரசாங்கம் மதித்தல்.

❖ **உறுப்புரை 6 - உய்வும் மேம்பாடும்** :பிள்ளைகள் உயிர்வாழும் உரிமையுடையவர்கள் என்பதை அங்கீகரித்தல் வேண்டும். பிள்ளையின் உய்வையும் அரசாங்கம் உறுதி செய்தல் வேண்டும்.

❖ **உறுப்புரை 7 - பெயரும் தேசியமும்** :ஒவ்வொரு குழந்தையும் பிறப்பிலிருந்து தனக்கென ஒரு பெயரைப் பெறும் உரிமையுடையது. அது ஒரு தேசியத்தில் சேர்த்துக் கொள்ளப்படவும் வேண்டும்.

❖ **உறுப்புரை 8 - தனித்துவத்தைப் பேணல்** :அரசாங்கம் குழந்தையின் தனித்துவத்தைப் பாதுகாத்தல் வேண்டும். அவசியமானால் அரசாங்கம் குழந்தையின் தனித்துவம் தொடர்பான அடிப்படை அம்சங்களை (பெயர், தேசியம், குடும்பவுறவுகள் ஆகியவற்றை) மீள நிரூபித்தல் வேண்டும்.

❖ **உறுப்புரை 9 - பெற்றோரைப் பிரிதல்** : பிள்ளைகள் அவர்களின் சிறந்த நலன்களை முன்னிட்டே அல்லாமல் (புறக்கணிப்பு, துஷ்பிரயோகம் போன்ற காரணங்களை முன்னிட்டு அல்லாமல்) பெற்றோரிடமிருந்து பிரிதல் ஆகாது. பெற்றோர் பிரிந்து வாழ முடிவு செய்யும் பட்சத்தில் பிள்ளை இருவரில் ஒருவரை அல்லது இருவரையும் பிரிந்து வாழுமானால் இரு பெற்றோருடனும் தொடர்பு வைத்திருக்கும் உரிமை அதற்குண்டு.

❖ **உறுப்புரை 10 - பிரிந்த குடும்பம் இணைதல்** :பெற்றோருடன் மீண்டும் இணைந்து கொள்ளுவதற்கோ, பிள்ளைக்கும் பெற்றோருக்குமுள்ள உறவை பேணுவதற்கோ எந்த நாட்டையும் விட்டு அகலுதற்கோ அல்லது தன் சொந்த நாட்டில் நுழைவதற்கோ பிள்ளைகளும் பெற்றோரும் உரிமையுடையவர்கள்.

❖ **உறுப்புரை 11 - பிள்ளைகளின் சட்டவிரோத இடமாற்றமும், மீளாமையும்** : பெற்றோரில் ஒருவரால் அல்லது வேறொருவரால் பிள்ளை கடத்தப்படுதலை அல்லது பலாத்காரமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டில் தடுத்துவைக்கப்படுதலை அரசாங்கம் தடுக்க முயல்வதுடன் அவர்களை மீட்பதற்கும் ஒத்தாசை செய்தல் வேண்டும்.

❖ **உறுப்புரை 12 - பிள்ளையின் கருத்து** :ஒவ்வொரு பிள்ளையும் தன் கருத்தை வெளியிடுவதற்கும் தன்னைப் பாதிக்கக் கூடிய எந்த விடயம் அல்லது நடைமுறை பற்றி அதன் அபிப்பிராயத்தை தெரிவிக்கவும் உரிமையுடையதாகும். அத்தோடு வளர்ந்தோரால் அது கருத்திற் கொள்ளப்படுவதற்கும் உரிமையுடையதாகும்.

❖ **உறுப்புரை 13 - கருத்துச் சுதந்திரம்** :பிறரின் உரிமைகளை மீறினாலல்லாமல் மற்றும் படி தகவல்களைப் பெறவும் மற்றவர்களுக்கு அவற்றை பரிமாறவும் தன்கருத்துக்களை வெளியிடவும் பிள்ளைக்கு உரிமையுண்டு.

❖ **உறுப்புரை 14 - சிந்தனை, மனச்சாட்சி, மதவழிபாட்டுச் சுதந்திரம்** :ஒவ்வொரு பிள்ளையும் பெற்றோரின் வழி நடத்தலுக்கும் தேசிய சட்டத்திற்கும் அமைந்த முறையில் சிந்தனை, மனச்சாட்சி, சமயம் ஆகிய விடயங்களில் சுதந்திரமாக இயங்க உரிமையுடையவராவர்.

❖ **உறுப்புரை 15 - கூடும் சுதந்திரம்** :பிள்ளைகள் மற்றவர்களைச் சந்திக்க அல்லது சங்கங்களை அமைக்க உரிமையுடையவர்கள். ஆனால் இது பிறரின் உரிமைகளுக்குப் பாதகமாய் அமைதலாகாது.

❖ **உறுப்புரை 16 - அந்தரங்கத்தைப் பேணல்** :பிள்ளைகள் தங்களது அந்தரங்கத்தைப் பேண உரிமையுடையவர்களாவர். தமது அந்தரங்கம், குடும்பம், வீடு, கடிதத்தொடர்பு ஆகியவற்றுக்குப் பாதுகாப்புப் பெறும் உரிமை அவர்களுக்கு உண்டு.

❖ **உறுப்புரை 17 - பொருத்தமான தகவல்களைப் பெறல்** :வெகுசன ஊடகங்கள் ஆற்றும் பணியின் முக்கியத்துவத்தை அங்கிகரித்து விசேஷடமாக அதன் சேம நலனுக்கும், பண்பாட்டுப் பின்னணிக்கும் ஏற்ற தகவல்களையும், தகவற் சாதனங்களையும் பெறுவதற்குரிய வாய்ப்புக்களை உறுதி செய்தல் வேண்டும்.

❖ **உறுப்புரை 18 - பெற்றோரின் பொறுப்பு** :தம் பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர் இருவரும் கூட்டாகப் பொறுப்பேற்றல் வேண்டும். பெற்றோர் இதனை நிறைவேற்றுவதற்கு அரசு ஆதரவளித்தல் வேண்டும்.

❖ **உறுப்புரை 19 - இம்சை புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு** :பிள்ளைகள் சகல வகையான இம்சைகள், புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமையுடையவர்களாவர். பெற்றோரும் ஏனைய பராமரிப்பாளர்களும் பிள்ளைகளை துன்புறுத்தும் உரிமையற்றவர்களாவர். பிள்ளைகள் இம்சைகள் புறக்கணிப்பு ஆகியவற்றுக்கு உள்ளாகாது தடுக்கவும் அவற்றிலிருந்து மீளவும் வகை செய்யும் செயற்திட்டங்களை பொறுப்பேற்கும் கடப்பாடு அரசுக்குரியதாகும்.

❖ **உறுப்புரை 20 - குடும்பங்களற்ற பிள்ளைகளின் பாதுகாப்பு** :தம் குடும்பங்களோடு வாழ முடியாத பிள்ளைகளுக்கு விஷேட பாதுகாப்பு அவசியம். பிள்ளையின் பண்பாட்டுப் பின்னணிக்கு உகந்த மாற்றுக் குடும்பப் பராமரிப்பை ஏற்பாடு செய்தல் அல்லது தாபரிப்பு வழங்கும் ஒரு விடுதியில் தங்க வைத்தல் அரசாங்கத்தின் கடப்பாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **உறுப்புரை 21 - தத்தெடுத்தல்** :ஒரு பிள்ளையை தத்தெடுப்பதனால் அதனை சட்டமுறைப்படியும், பிள்ளையின் சிறந்த நலனுக்கு அமைவாகவும் செய்தல் வேண்டும்.

❖ **உறுப்புரை 22 - அகதிப்பிள்ளைகள்** :ஒரு பிள்ளை பாதுகாப்பு இல்லை எனும் காரணத்தால் தன் வீட்டை அல்லது நாட்டைப் பிரிந்து அகதியானால் அப்பிள்ளை விசேட பாதுகாப்பும் ஆதரவும் பெறும் உரிமையுடையதாகும்.

❖ **உறுப்புரை 23 - ஊனமுற்ற பிள்ளைகள்** :உள்ளத்தால் அல்லது உடலால் ஊனமுற்ற பிள்ளைகள் முடிந்தளவு சொந்தக் காலில் நின்று சமுதாயத்தில் முழுமையான செயலூக்கமுள்ள வாழ்க்கை நடத்துவதற்கு உதவும் வகையிலான விஷேட பராமரிப்பு, கல்வி பயிற்சி ஆகியவற்றைப் பெறும் உரிமையுடையவர்களாவர்.

❖ **உறுப்புரை 24 - சுகாதாரமும் சுகாதகர சேவைகளும்** : பிள்ளைகள் முடியுமான வரை உயரிய சுகாதார வசதிகளைப் பெறும் உரிமையுடையவர்களாவர். சுகாதார மற்றும் வைத்திய சேவைகளைப் பெறும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தல் வேண்டும். விசேடமாக சிசு மரணம்,நோய், போஷாக்கின்மை ஆகியவற்றைக் குறைக்கும் வகையிலான ஆரம்ப மற்றும் தடுப்பு ரீதியான சுகாதாரப் பராமரிப்பு, பொது சுகாதாரக்கல்வி, அவை தொடர்பான செயற்திட்டங்கள் ஆகியவற்றைப் பெறும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தல் வேண்டும்.

❖ **உறுப்புரை 25 - காலத்துக்குக் காலம் பரிசீலித்தல்** :அரசினால் பராமரிப்பு, பாதுகாப்பு, சிகிச்சை ஆகியவற்றின் பொருட்டு வீட்டுக்கு வெளியே தங்க விடப்பட்டுள்ள பிள்ளை அவ்வாறு தங்கியுள்ளமை தொடர்பான சகல அம்சங்களும், கிரமமாக ஆராயப்படுவதற்கு உரிமையுடையதாகும்.

❖ **உறுப்புரை 26 - சமூகப் பாதுகாப்பு** :தன் நாட்டில் கிடைக்கும் சமூகப்பாதுகாப்பின் அனுகூலங்களைப் பெறும் உரிமை பிள்ளைக்குண்டு.

❖ **உறுப்புரை 27 - வாழ்க்கைத் தரம்** :ஒவ்வொரு பிள்ளையும் தகுந்த தரம் வாய்ந்த வாழ்க்கையை அனுபவிக்கும் உரிமையுடையதாகும். இதனை வழங்குதல் பெற்றோரின் முதற் கடப்பாடாகும். பெற்றோரால் அது முடியாத பட்சத்தில் அரசாங்கம் உதவுதல் வேண்டும்.

❖ **உறுப்புரை 28 - கல்வி** :எல்லாப் பிள்ளைகளும் கல்வி பயிலும் உரிமையுடையவர்களாவர். அரசு ஆரம்பக் கல்வியையேனும் கட்டாயமாகவும், இலவசமாகவும் கிடைப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

❖ **உறுப்புரை 29 - கல்வியின் நோக்கங்கள்** :ஒரு பிள்ளை கல்வி கற்பதன் நோக்கம் அதன் ஆளுமை, திறன்கள், உடல் மற்றும் உள ஆற்றல்கள் என்பவற்றை விருத்தி அடைய செய்தலாகும். சுதந்திரமான சமுதாயத்திலே அடிப்படை மனித உரிமைகளுக்கும் தம் சொந்தக் கலாச்சார, தேசிய விழுமியங்களுக்கும் மட்டுமல்லாமல் மற்றவர்களின் விழுமியங்களுக்கும் மதிப்பளித்து பொறுப்புடனும், சமாதானத்துடனும் வாழ்வதற்கு அவர்களைத் தயார்செய்தல் வேண்டும்

❖ **உறுப்புரை 30 - சிறுபான்மையினரின் பிள்ளைகள்** :சிறுபான்மை சமூகங்கள், ஆதிவாசிகள் ஆகியோரின் பிள்ளைகள் தம் சொந்தப் பண்பாட்டினை அனுபவிப்பதற்கும் தம் சொந்த மதம், மொழி ஆகியவற்றைப் பின்பற்றுவதற்கும் உரிமையுடையவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **உறுப்புரை 31 - ஓய்வு, பொழுது போக்கு மற்றும் கலாசார நடவடிக்கைகள்** :பிள்ளைகள் ஓய்வாக இருக்க, விளையாட, கலாசார மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்குபெற உரிமையுடையவர்களாவர்.

❖ **உறுப்புரை 32 - சிறுவர்களை வேலைக்கமர்த்தல்** :தம் ஆரோக்கியம், கல்வி வளர்ச்சி என்பவற்றின் மேம்பாட்டுக்கு அச்சுறுத்தலாய் அமையக்கூடிய வேலைகளில் இருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு. தொழிலில் அமர்த்தப் படுவதற்குறிய குறைந்த பட்ச வயதை வரையறை செய்தலும், தொழில் நிபந்தனைகளை நெறிப்படுத்தலும் அரசின் கடப்பாடாகும்.

❖ **உறுப்புரை 33 - போதைப் பொருள் துஷ்பிரயோகம்** : பிள்ளைகள் சட்டவிரோத மருந்துகளைப் பாவிப்பதிலிருந்தும் அவற்றின் உற்பத்தி அல்லது விநியோகத்தில் ஈடுபடுத்தப்படுவதிலிருந்தும் பாதுகாப்புப் பெறும் உரிமையுடையவர்களாவர்.

❖ **உறுப்புரை 34 - பாலியல் ரீதியிலான சுரண்டல்** :ஒவ்வொரு பிள்ளையும் விபச்சாரம் மற்றும் ஆபாசக் காட்சிகள் ஆகியன அடங்கலான பாலியல் சுரண்டல்கள், இம்சைகள் முதலியவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமையுடையவர்களாவர்.

❖ **உறுப்புரை 35 - விற்பனை, பரிவர்த்தனை, கடத்தல்** :பிள்ளைகளை விற்றல், பரிவர்தத்னை செய்தல், கடத்துதல் போன்றவற்றைத் தடுப்பதற்கு அரசு சகல விதத்திலும் முயலுதல் வேண்டும்.

❖ பிள்ளைகளை விற்பனை செய்தல், அவர்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல், ஆபாச நடவடிக்கைகளுக்கு அவர்களை உபயோகித்தல் என்பவற்றை தடைச்செய்வதற்கு வேண்டிய புதிய நியமங்களை உருவாக்கும் **"விருப்பத்தேர்வு நடவடிக்கைக் குறிப்பு"** 2002ம் ஆண்டு மே மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டமானது சம்பந்தப்பட்ட நாடுகளில் குற்றச் செயல்கள் நிகழாதிருக்கும் பொருட்டு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அக்குற்றச் செயல்களை இல்லாதொழிக்க பல்வேறு நாடுகள் இணைந்து செயற்படவும் உதவுகிறது.

❖ **உறுப்புரை 36 - வேறுவகையான சுரண்டல்கள்** : அரசு, மேலே 32 - 35 வரையான உறுப்புரைகளில் சொல்லப்படாத மற்றெல்லாவகையான இம்சைகள், சுரண்டல்களிலிருந்தும் பிள்ளைகளைப் பாதுகாத்தல் வேண்டும்.

❖ **உறுப்புரை 37 - சித்திரவதையும், சுதந்திரத்தைப் பறித்தலும்** :எந்தப் பிள்ளையும் சித்திரவதை, கொடூர தண்டனை, ஆயுட் சிறைத்தண்டனை, மரணத்தண்டனை, சட்ட விரோதமான கைது அல்லது சுதந்திரம் மறுப்பு ஆகியவற்றிற்கு உள்ளாக்கப்படலாகாது. தகுந்த சிகிச்சை, தடுப்புக்காவலில் உள்ள வளர்ந்தோரிடமிருந்து விலக்கி வைக்கப்படல், குடும்பத்தவர்களுடன் தொடர்பு ஆகியவற்றிற்கு உரித்துடையதாகும்.

❖ **உறுப்புரை 38 - ஆயுதப்பிணக்குகள்** :போர்க்காலத்தில் பாதுகாப்புப் பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு. 15 வயதிற்கு குறைந்த எந்தப் பிள்ளையும் போராட்டத்தில் நேரடியாகவோ, ஆயுதப் பிணக்குகளில் சேர்க்கப்படவோ கூடாது. அரசாங்கம் ஆயுதப் பிணக்கினால் பாதிக்கப்பட்ட எல்லாப் பிள்ளைக்கும் பராமரிப்பும், பாதுகாப்பும் வழங்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பிள்ளைகளை ஆயுதப் பிணக்குகளில் ஈடுபடுத்துவது தொடர்பாக சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்திற்கான **"விருப்பத் தேர்வு நடவடிக்கைக் குறிப்பு"** 2002ம் ஆண்டு மே மாதம் அறிமுகம் செய்யப்பட்டது. இது பிள்ளைகளை ஆயுதப் பிணக்குகளில் ஈடுபடுத்துவதைக் கட்டுப்படுத்துகின்றது. இதன் பிரகாரம் ஆயுத மோதல்களில் ஒருவர் ஈடுபடுவதற்கு முன்பதாக 18 வயதை அடைந்திருத்தல் வேண்டும்.

❖ **உறுப்புரை 39 - புனர்வாழ்வும் பராமரிப்பும் :** ஆயுதப் பிணக்குகளில் சித்திரவதை, புறக்கணிப்பு, துர்நடத்தை அல்லது சுரண்டலுக்கு உள்ளான பிள்ளைகள் குணமாகி சமுதாயத்தில் மீண்டும் சேர்ந்து கொள்வதற்கான உதவிகளை உறுதி செய்யும் கடப்பாடு அரசாங்கத்தினுடையதாகும்.

❖ **உறுப்புரை 40 - பால், நீதி பரிபாலனம் :** பிள்ளைகள் ஒரு குற்றம் புரிந்ததாகப் பழி சுமத்தப்பட்டால் சட்ட ரீதியாகவும், வேறுவகையாகவும் உதவி பெற அவர்களுக்கு உரிமையுண்டு. சட்ட நடவடிக்கைகள், பராமரிப்பு நிலையங்களில் சேர்த்தல் முதலியன முடியுமான வேளையிலும் தகுந்த சந்தர்ப்பத்திலும் தவிர்க்கப்படல் வேண்டும்.

❖ **உறுப்புரை 41 - நடைமுறையிலுள்ள நியமங்களை மதித்தல் :**சிறுவர் உரிமைகள் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச சட்டத்தில் வரையப்பட்ட நியமங்கள் இந்தச் சமவாயத்தில் உள்ளவற்றிலும் உயர்ந்தனவாக விளங்கும் பட்சத்தில், உயர்ந்த நியமமே என்றும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

❖ **உறுப்புரை 42 - அமுலாக்கல் :**இந்தச் சமவாயத்தில் சொல்லப்பட்டுள்ள உரிமைகளை வயது வந்தோருக்கும், சிறுவர்களுக்கும் பரவலாக அறியச் செய்தல் அரசாங்கத்தின் கடமையாகும்.

எனவே சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயமானது மேற்கண்டவாறு அமைந்து காணப்படுகின்றது எனலாம். இதன் மூலம் சிறுவர்களும் மனித பிறவிகள் என்ற விதத்தில் எல்லோரும் அவர்கள் மீது தம் கவனத்தை செலுத்துவதுடன் அவர்களுக்கான பாதுகாப்பையும் வழங்க வேண்டும் என்பதை எமக்கு எடுத்தியம்புவதாய் அமைகிறது.

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ( National Child Protection Authority)

அரச சார்பற்ற பல நிறுவனங்கள் செயற்படுகின்ற போதும் இலங்கையில் சிறுவர் உரிமை மீறல்கள் அதிகரித்த வண்ணமேயுள்ளன. ஏனெனில் அரசார்பற்ற நிறுவனங்களால் முழுமையாக எல்லா இடங்களையும் அவதானிக்க முடிவதில்லை, சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் போதிய அதிகாரமின்மை, ஆளனியின்மை போன்ற குறைபாடுகள் காணப்படுகின்றமையாகும். எனவே சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க அரசு நேரடியாகத் தலையிட்டு செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டது.

இலங்கை 1991ம் ஆண்டில் சிறுவர்களின் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தை (United nations convention) பின்னுறுதிப்படுத்தியது. இலங்கை அதன் சர்வதேச கடப்பாடுகளைப் பின்பற்றி 1992ம் ஆண்டில் சிறுவர் உரிமைகள் மீதான பட்டயத்தை ஏற்றுக் கொண்டது. அத்துடன் பட்டயம் 1 நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்கு தேசிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்காணிப்புக் குழுவொன்றும் (NMC - National Monitoring Committee) உருவாக்கப்பட்டது அத்துடன் ஒரு சில வகையான சிறுவர் துஷ்ப்பிரயோகத்தை குற்றச்செயல் ஆக்குவதற்கும் குறித்துரைக்கப்பட்ட தவறுகளுக்கு குறைந்த பட்ச கட்டாய தண்டனைகளை விதிப்பதற்கும் 1995ம் ஆண்டில் தண்டனைச் சட்டக்கோவை (penal code) திருத்தப்பட்டது.

தேசிய கண்காணிப்புக் குழுவின் உருவாக்கமும் 1995ம் ஆண்டில் தண்டனைச் சட்டக்கோவைக்கான திருத்தமும் சிறுவர் துஷ்ப்பிரயோகம் சம்பந்தமான சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அவற்றினளவில் போதுமானதாக இருக்கவில்லை. உடல் ரீதியான துஷ்ப்பிரயோகம், புறக்கணிப்பு, சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுதல், உல்லாசப் பிரயாணிகளாலும் உள்ளூர் வாசிகளாலும் சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படும் பாலியல் ரீதியிலான துஷ்ப்பிரயோகம் போன்ற வெவ்வேறு தோற்றத்தில் உருவெடுக்கும் சிறுவர் துஷ்ப்பிரயோகத்தைப் பற்றி ஆராய்வதற்கென 1996ம் ஆண்டில் ஜனாதிபதியின் செயலணி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. செயலணி சட்டவாக்கங்களைத் திருத்துதல், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையை ஸ்தாபித்தல் (NCPA) உட்பட பல பரிந்துரைகளை செய்தது. 1998ம் ஆண்டு நவம்பரில் **'1998ம் ஆண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம்'** பாராளுமன்றத்தால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சட்டத்தின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"சிறுவர் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுத்தல், அத்தகைய துஷ்பிரயோகத்தைத் தடுத்தல், அத்தகைய துஷ்பிரயோகத்துக்குப் பலியான சிறுவர்களுக்குப் பாதுகாப்பும் சிகிச்சையும் அளித்தல் என்பன பற்றிய தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைக்கும் நோக்கத்திற்கும், அத்துடன் எல்லாவிதமான சிறுவர் துக்ஷ்பிரயோகத்திற்கும் எதிரான நடவடிக்கையை ஒருங்கிணைப்பதற்கும் கண்காணிப்பதற்குமென தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபையொன்றைத் தாபிப்பதற்கும் அதனோடு தொடர்புடைய அல்லது இடைநேர்விளைவுகளான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்".

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் இலக்கு

சிறுவர்களை உடல் மற்றும் உள ரீதியான பாதிப்புக்களில் இருந்து பாதுகாக்கும் வகையில் சமூகம், குடும்பம், பாடசாலை மற்றும் ஏனைய நிறுவனங்களின் சூழல்களை மாற்றியமைத்தல். அத்தோடு அனாதைகளான, கைவிடப்பட்ட, அடைக்கலமில்லாத மற்றும் கவனிப்புக்குரியதும் சட்டரீதியான பிரச்சினைகளுக்கு இரையாகியதுமான சிறுவர்களினதும் பிறரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தி சிறுவர்களின் பங்களிப்பை உச்ச அளவில் பெற்றுக்கொண்டு முழு இலங்கைத் தேசத்தினதும் சிறுவர்களின் உரிமைகளை தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கு இணங்க உறுதிப்படுத்துவதே இலக்காகும்.

## அதிகார சபையின் துணைநோக்கங்கள்

- சிறுவர் உரிமைகள் தொடர்பான அறிவை வழங்கி அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- அநாதைகளான, கைவிடப்பட்ட அடைக்கலமில்லாத குரூரச் செயல்களுக்கு இரையான மற்றும் பல்வேறு இன்னல்களுக்கும், துஷ்பிரயோகங்களுக்கும் முகங்கொடுக்கின்ற சிறுவர்களைப் பாதுகாத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிறுவர் நலன்புரிச் சேவையில் ஈடுபட்டுள்ள தொண்டர் ஒழுங்கமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான ஆய்வுகள், மேற்பார்வை மற்றும் நிதியுதவி வழங்குதலும்.
- வறுமையின் காரணமாக அல்லது பிற சமூகக்காரணங்களினால் வாழ்க்கையில் தோல்வி கண்டுள்ள, தோல்வியடையக் கூடிய சிறுவர்களின் எண்ணிக்கையை குறைத்தலும் தடுத்தலும்.
- ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சிறுவர் உரிமைச் சாசனத்தைச் செயற்படுத்துதல் மற்றும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சட்டம் பற்றிய தெளிவை எற்படுத்தி சட்ட உதவி தேவைப்படுபவர்களுக்கு சட்ட உதவிகளை வழங்குதல்.
- சிறுவர் துஷ்ப்பிரயோகத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தல்.

## அதிகார சபையின் பணிகள்

1. சிறுவர் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுத்தல், அத்தகைய துஷ்பிரயோகத்துக்குப் பலியான சிறுவர்களுக்குப் பாதுகாப்பும் சிகிச்சையும் அளித்தல் என்பன பற்றிய தேசியக் கொள்கை யொன்றை வகுத்தமைப்பதில் அரசுக்கு மதியுரை வழங்குதல்.




2. சிறுவர் துஷ்ப்பிரயோகத்தைத் தடைசெய்வதற்கான வழிமுறைகள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
3. அத்தகைய துஷ்ப்பிரயோகத்துக்குப் பலியான சிறுவர்களின் பாதுகாப்புக்கான வழிவகைகள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
4. சிறுவர்கள் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு அவர்களுக்குள்ள உரிமை, சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடைசெய்வதற்கான வழிமுறைகள் என்பன பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல்.
5. சிறுவர் துஷ்ப்பிரயோகத்தைத் தடைசெய்வதற்கான நோக்கத்துக்காகவும் அத்தகைய துஷ்பிரயோகத்துக்குப் பலியானவர்களைப் பாதுகாத்து அவர்களின் நலன்களுக்குக் காப்பளிப்பதற்காவும் இயைபான அமைச்சுகள், மாகாணசபைகள், உள்ளூரதிகார சபைகள், மாவட்ட பிரதேச செயலாளர்கள், பகிரங்க மற்றும் தனியார் துறை ஒழுங்கமைப்புகள் என்பவற்றுடன் ஆலோசனை நடத்தல்: அத்துடன் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா வழிகளையும் சிபாரிசு செய்தல்.
6. சிறுவர் துஷ்ப்பிரயோகத்தைத் தடைசெய்வதற்கான தேசிய கொள்கையைப் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சட்ட, நிர்வாக அல்லது வேறு சீர்திருத்தங்களை விதந்துரைத்தல்.
7. எல்லாவிதமான சிறுவர் துஷப்பிரயோகம் தொடர்பான சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுவதைக் கண்காணித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சிறுவர் துஷ்ப்பிரயோகம் தொடர்பான எல்லா புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் ஆகியவற்றின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.

9. ஆயுதப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர் தொடர்பில் மனிதாபிமான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அத்தகைய பிள்ளைகளின் உள மற்றும் உடல் ரீதியான நலன் உட்பட அவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் மீண்டும் சமுதாய நீரோட்டத்தில் ஒன்றிணைதல் ஆகியவற்றுக்கான நடவடிக்கைகளை விதந்துரைத்தல்.

10. குற்றவியல் புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அவசியமானவிடத்து தோதான நடவடிக்கைகளை எடுத்தல்.

11. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதும் அத்துடன் அவசியமானவிடத்து அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல். (இதற்காக 1929 என்னும் விஷேட தொலைபேசி இலக்கமும் உருவாக்கப் பட்டுள்ளது)

12. நீதிமன்ற அனுமதியுடன் சிறுவர் உரிமை மீறல்கள் இடம்பெறும் சம்பவங்களை இரகசியமாகப் பதிவு செய்து அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

13. சிறுவர்கள் துஷ்ப்பிரயோகத்துக்கு எதிரான பிரச்சாரங்களை ஒருங்கிணைக்க மாகாண சபை மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகள் என்பவற்றுக்கு ஆலோசனை வழங்குதலும் உதவி செய்தலும்.

14. சிறுவர் துஷ்ப்பிரயோகம் பற்றி ஒரு தேசிய தரவுகள் அட்டவணையைத் தயாரித்தலும் பேணலும்.

15. சிறுவர்களுக்கு பிள்ளைப் பராமரிப்புச் சேவைகள் வழங்குகின்ற எல்லாச் சமய மற்றும் தரும நிறுவனங்களை இயைபான அமைச்சுக்களினதும் ஏனைய அதிகாரிகளினதும் ஆலோசனையுடனும் மேற்பார்வை செய்தலும் கண்காணித்தலும்.

16. சிறுவர் துஷ்ப்பிரயோகம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான ஆராய்ச்சியை நடத்த ஊக்குவித்தலும் ஒருங்கிணைத்தலும்.

17. பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் பிள்ளைகளின் நலன்களைப் பாதுகாத்தல் சம்பந்தமாகப் பொது மக்களுக்குத் தகவலும் கல்வியும் வழங்குதல்.

18. சிறுவர் துஷ்ப்பிரயோகத்துக்கான சந்தர்ப்பங்களைக் குறைக்கும் கருத்துடன் சுற்றுலாப் பயணத்துறையோடு தொடர்புபட்ட எல்லாப் பிரிவினருடனும் பேச்சுவார்த்தை நடத்தல்.

19. சிறுவர்துஷ்ப்பிரயோகம்தொடர்பில்பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் ஆகியவற்றை ஒழுங்கமைத்து அவற்றுக்கு வசதியளித்தல்.

20. எல்லாவிதமான சிறுவர் துஷ்ப்பிரயோகங்களையும் கண்டுபிடித்தல் அத்துடன் தடைசெய்தல் என்பன தொடர்பில் வெளிநாட்டு அரசுகள் மற்றும் சர்வதேச ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு தகவல் பரிமாற்றம் செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## No of cases reported to The National Child Protection Authority Annually

| | No of Cases | | No of Cases | | No of Cases | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | | 2012 | | 2013 | No of Cases | 2014 |
| Abduction | 31 | 31 | 286A. Obscene Publications | 2 | 286A. Obscene Publications | 8 | 27A. ACO-Unlawful custody | 2 |
| Begging | 92 | 159 | 288. Procuring to beg | 154 | 288. Procuring to beg | 313 | 286A. Obscene Publications | 1 |
| Care & Protection | 664 | 1086 | 288B. Trafficking Restricted Articles/Drugs | 21 | 288B. Trafficking Restricted Articles/ Drugs | 30 | 288. Procuring to beg | 120 |
| Child Labour | 152 | 227 | 308A.Cruelty To Children | 1516 | 308A.Cruelty To Children | 2030 | 288B. Trafficking Restricted Articles/Drugs | 10 |
| Child Marriages | 103 | 307 | 345. Sexual Harassment | 502 | 345. Sexual Harassment | 400 | 308A.Cruelty To Children | 1156 |
| Compulsory Education | 452 | 779 | 352. Kidnapping from Lawful guardianship | 235 | 352. Kidnapping from Lawful guardianship | 247 | 345. Sexual Harassment | 227 |
| Cruelty | 905 | 1156 | 353. Abduction | 39 | 353. Abduction | 41 | 352. Kidnapping from Lawful guardianship | 106 |
| Cyber Crimes | 3 | 2 | 360C.Trafficking | 210 | 358A.Sefordem, Slavery,Child Soldiers. | 1 | 353. Abduction | 13 |
| Domestic Violence | 81 | 75 | 360D.Offence Related to Adoption | 5 | 360C.Trafficking | 267 | 360C. Trafficking | 86 |
| Grave Sexual Abuse | 115 | 75 | 360E. Soliciting a Child | 12 | 360E. Soliciting a Child | 18 | 360D.Offence Related to Adoption | 2 |
| Grievous Hurt | 3 | 2 | 363.Rape | 614 | | 691 | 360E. Soliciting a Child | 17 |
| Gross Indecency | 88 | 114 | 365A. Gross Indecency | 3 | 363.Rape | 3 | 363.Rape | 228 |
| Illegal Adoption | 17 | 11 | 365B. Grave Sexual Abuse | 487 | 365A. Gross Indecency | 681 | 365A. Gross Indecency | 2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Incest-Not Rape | 74 | 115 | 365C.Publication of Sexual abuse. | 1 | 365B. Grave Sexual Abuse | 1 | 365B. Grave Sexual Abuse | 259 |
| Incest-Rape | 53 | 50 | 71.CYPO – Neglect of Children. | 856 | 71.CYPO – Neglect of Children. | 1101 | 71.CYPO – Neglect of Children. | 405 |
| Juvenile Delinquency | 48 | 214 | 76.CYPO – Sales of Tobacco | 3 | 76.CYPO – Sales of Tobacco | 5 | Child Labour | 163 |
| Kidnapping | 171 | 274 | Child Labour | 313 | Child Labour | 380 | Compulsory Education | 889 |
| Murder | 1 | - | Child Marriages | 12 | Compulsory Education | 1263 | Domestic Violence | 59 |
| Non Grievous Hurt | 2 | - | Compulsory Education | 943 | Juvenile Delinquency | 250 | Juvenile Delinquency | 120 |
| Obscene Publications | 13 | 9 | Domestic Violence | 78 | MISC | 2415 | MISC | 1689 |
| Other | 388 | 629 | Juvenile Delinequency | 196 | Tsunami | 1 | | |
| Procuration | 39 | 86 | MISC | 1216 | | | Total | 5554 |
| Rape | 133 | 237 | | | Total | 10273 | | |
| Restricted Articles/ Drugs | 13 | 19 | Total | 7418 | | | | |
| Sexual Exploitation | 8 | - | | | | | | |
| Sexual Harassment | 150 | 304 | | | | | | |
| Soliciting a Child | 4 | 14 | | | | | | |
| Trafficking | 85 | 91 | | | | | | |
| Tsunami Victim | 3 | 4 | | | | | | |
| Unnatural Offences | 1 | - | | | | | | |
| Total | 3892 | 6076 | Total | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**No of Cases reported to The National Child Protection Authority Annually (By District)**

| District | No of Cases | | | |
|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013 |
| Ampara | 70 | 113 | 129 | 220 |
| Anuradhapura | 161 | 345 | 406 | 578 |
| Badulla | 122 | 180 | 213 | 286 |
| Batticaloa | 31 | 35 | 59 | 81 |
| Colombo | 720 | 1037 | 1174 | 1477 |
| Galle | 308 | 435 | 618 | 853 |
| Gampaha | 524 | 797 | 948 | 1146 |
| Hambantota | 132 | 187 | 244 | 362 |
| Jaffna | 7 | 15 | 33 | 46 |
| Kalutara | 260 | 408 | 479 | 622 |
| Kandy | 153 | 245 | 302 | 417 |
| Kegalle | 169 | 226 | 252 | 438 |
| Kilinochchi | 2 | 7 | 35 | 47 |
| Kurunegala | 289 | 442 | 636 | 785 |
| Mannar | 4 | 19 | 21 | 29 |
| Matale | 87 | 143 | 144 | 196 |
| Matara | 162 | 244 | 299 | 440 |
| Moneragala | 65 | 160 | 170 | 281 |
| Mullaitivu | 2 | 11 | 26 | 53 |
| Nuwara Eliya | 87 | 97 | 108 | 220 |
| Polonnaruwa | 89 | 156 | 204 | 306 |
| Puttalam | 150 | 295 | 344 | 491 |
| Ratnapura | 221 | 341 | 431 | 668 |
| Trincomalee | 57 | 81 | 88 | 135 |
| Vavuniya | 19 | 57 | 55 | 96 |
| **Total** | **3892** | **6076** | **7418** | **10273** |

(மூலம் : சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிக்கை)

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளின் கருத்தின்படி இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றங்களின் புள்ளிவிபரவியல் முறைப்பாடு செய்யப்பட்டவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். ஆனால் அவ்வாறு அறிவிக்கப்படாத பல ஆயிரம் குற்றச் செயல்கள் இடம்பெறுவதாகக் கூறுகின்றனர். இதற்கு பொதுமக்களே பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டச் சீர்திருத்தத்திற்கான பரிந்துரைகள்

சிறுவர்களுக்கு உதவும் ஆர்வமுள்ள நீதிமன்ற நடைமுறை பற்றி நீதித்துறை அலுவலர்களுக்காக நடத்தப்பட்ட கருத்தரங்கில் பங்குபற்றியவர்களினால் பரிசீலனை செய்யப்படுவதற்கான பின்னணிக் கட்டுரையொன்றில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பல பரிந்துரைகளை முன்வைத்தது. இந்தப் பரிந்துரைகள் சுருக்கமாக கீழே தரப்படுகின்றன.

- சிறுவர்கள் உள்ளகத் தொலைக்காட்சியைப் பயன்படுத்தி சாட்சியமளிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். ஏனெனில் இத்தகைய முறையில் சிறுவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை நேரடியாக எதிர்கொள்ள வேண்டிய தேவையில்லை. அத்துடன் இங்கு நீதிமன்றத்தை விட குறைந்தளவு அச்சுறுத்தலே உள்ளது. இலத்திரனியல் வழிமுறைகளினால் நாடா ஒலிப்பதிவுகளினதும் கட்புல ஒலிப்பதிவுகளினதும். நீதிமன்ற சாட்சியத்தை ஏற்கத்தகுந்த சாட்சியமாக அங்கீகரிக்கும் சட்டவாக்கம் சிறுவர் துஷ்ப்பிரயோக வழக்குகளில் பராயமடைந்த ஒருவருடன் சிறுவரின் பூர்வாங்க நேர்காணலின் ஒளிப்பதிவு செய்யப்பட்ட சாட்சியத்தைப் பெறுவதனை மேற்படி சட்டவாக்கம் அனுமதிக்கின்றது.
- பாதிக்கப்பட்ட சிறுவர்களினதும் சாட்சிகளினதும் வழக்குகளில் இழிவான, தூக்ஷணமான கேள்விகள் தவிர்க்கப்படுவதை உறுதிப்படுத்தப்படுவதற்காக குறுக்கு விசாரணைகள் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும் சாட்சிகளுக்கும் தடுமாற்றமான ஓர் அனுபவமாக இல்லாதிருப்பதை தவிர்க்கும் வகையில் நீதிபதிகள் நீதிமன்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல் வேண்டும்.
- வழக்கறிஞர்களாலும், சிறுவர்களாலும் பயன்படுத்தப்படும் மொழிக்கிடையிலான பொருத்தமின்மையால் ஏற்படும் பிரச்சினைகள் பொருத்தமான நீதித்துறை தலையீட்டாலும் மொழி பெயர்ப்பாளர்களின் பயன்பாட்டாலும் தீர்க்கப்பட வேண்டும்.
- துஷ்ப்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களை கவனிக்கும் வழக்கறிஞர்களை அவர்கள் சார்பில் நீதிமன்றங்களில் தோன்றுவதற்கு அனுமதிப்பதற்கான சட்டவாக்கம் அறிமுகம் செய்யப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு மேலும் பயனுறுதியுள்ள ஒரு வழிமுறையை ஏற்பாடு செய்வதற்காகவே இந்தப்பரிந்துரை செய்யப்படுகின்றது. தற்பொழுது பாதிக்கப்பட்ட ஒரு சிறுவனின் நலன்களைக் கவனிப்பதற்கு நீதிபதியொருவர் தமது சொந்த தற்துணிவின் பேரில் வழக்கறிஞர் ஒருவரை அனுமதிக்கலாம். ஆயினும் அனுமதி வழங்கப்பட்ட போதிலும்கூட வழக்குத் தொடுநருக்கும் எதிர்தரப்பு வழக்கறிஞர்களுக்குமுள்ள சாட்சிகளின் வாக்குமூலம், மருத்துவ அறிக்கைகள் போன்ற ஆவனங்களைப் பெறுவதற்கான வாய்ப்பு மறுக்கப்படலாம். சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பு பாதிக்கப்பட்ட சிறுவனின் நலன்களைக் கவனிக்கும் வழக்கறிஞர்களுக்கு அளிக்கப்படுவதில்லை.
- தங்கள் முடிவுகளை துரிதமாக தீர்மானிப்பதற்கும் சிறுவரை சங்கடத்திற்கு உட்படுத்தும் கேள்விகளை திரும்பத் திரும்ப கேட்பதைத் தடுப்பதற்கும், ஞாபக சக்தி குறைவைத் தவிர்க்கவும், சாட்சிகள் விசேடமாக நிபுணத்துவ சாட்சிகள் கிடைப்பதை உறுதிப்படுத்தவும் அடுத்தடுத்த நாட்களில் விசாரணைகள் இடம்பெற வேண்டும்.
- சிறுவர்கள் பல தடவை நீதிமன்றத்திற்கு வருகை தருவதைக் குறைப்பதற்கு சிறுவர் துஷ்ப்பிரயோக வழக்குகளை விசாரிப்பதற்கான விசேட நீதிமன்ற அமர்வுகள் நடத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நலன்புரி தத்துவங்களைக் கையாளும் 1939ம் ஆண்டின் 48ம் இலக்க சிறுவர்கள் மற்றும் நபர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 21ம் பிரிவு (திருத்தப்பட்டவாறு) போன்ற ஏற்பாடு குற்றவியல் சட்டக்கோவை சட்டத்தில் இருத்தல் வேண்டும்.
- வன்முறைக்குட்படுத்தப்பட்ட சிறுவர்களை ஆதரிப்பதற்கு குற்றவியல் ஊறுகள் நட்டஈடு நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும்.
- சிறுவர் துஷ்ப்பிரயோக குற்றங்கள் கைரேகைப்படப் பதிவு எடுக்கக்கூடியதான குற்றங்களுக்காக ஏற்கப்படல் வேண்டும்.
- நீதவான்கள் நிறுவனத்தின் பாடத்திட்டத்தில் சிறுவருக்கு பாதிப்பில்லாத நடவடிக்கை முறைகள் பற்றிய விசேட அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

## சிறுவர்களைப் பாதுகாப்பதுடன் தொடர்புபட்ட சட்ட ஏற்பாடுகள்

- The Penal Code (Amendment) Act No16 of 2006
- The Penal Code No.2 of 1883
- Evidence ordinance act No 17 of 1895
- Civil procedure code act No 2 of 1889
- The Shop and Office Employees Act No.19 of 1954
- General marriage & registration ordinance
- The Prevention of Domestic Violence Act No.34 of 2005
- The Citizenship (Amendment) Act No.16
- Regulation No. 1003/5 dated 25.11.1997, passed under the Education Ordinance No. 31 or 1939
- Childrens' & young persons' ordinance act No 28 of 1939
- The Mines and Minerals Act No. 57 of 1981
- The Trade Unions Ordinance No. 14 of 1935
- The Minimum Wages (Indian Labour) Ordinance No.27 of 1927
- The Factories Ordinance No.45 of 1942
- Birth & death registration act act No 17 of 1951
- Children & young person ordinance
- Employment of women , young persons' & children act No 47 of 1956
- Children & young persons (harmful publication) act No 48 0f 1956
- Indicate act
- code of criminal procedure act No 15 of 1979
- Offences committed under the influence of liquor (s/p) act No 41 of 1971
- National child protection act No 50 of 1998
- Maintenance act No 37 of 1999
- Tsunami (special provision)act No 16 of 2005
- The Adoption of Children Ordinance No. 24 of 1941
- Convention of preventing & combating trafficking in women & children for prostitution act act No 30 of2005
- National authority on tobacco & alcohol act No 27 of 2006
- The International Covenant on Civil and Political Rights (ICCPR) Act No.56 of 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியல் அமைப்பில் நீதித்துறைச் சுதந்திரம்

**காளிமுத்து கமலதாசன்**
இறுதியாண்டு
இலங்கைச் சட்டக் கல்லூரி

பொது நூலகம் யாழ்ப்பாணம்

## அறிமுகம்

21ம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள புதிய உலக ஒழுங்கிலும், நல்லாட்சி பற்றிய செய்தி முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. "மனிதன் சுதந்திரமாகப் பிறந்தான், எனினும் அவன் அடிமைத் தனத்தால் கட்டுண்டு கிடக்கின்றான்" என ரூசோ எனும் பிரான்சிய நாட்டுத் தத்துவஞானி குறிப்பிடுகின்றார். இவ்வாறு கட்டுண்டிருக்கும் மனித வாழ்க்கையில் சுதந்திரத்தினையும், சுபீட்சத்தையும் ஏற்படுத்தக்கூடிய ஒரு சமூக கட்டமைப்பைக்கொண்ட ஒரு முன்மாதிரியான ஒரு தேசத்தின் தோற்றப்பண்பையே நல்லாட்சி எனலாம். ஒரு நாட்டில் நல்லாட்சி மற்றும் சட்டவாட்சி நிலவுவதற்கு அங்கு நீதித்துறையில் சுதந்திரம் காணப்பட வேண்டும். இதன் அடிப்படையில் இலங்கையில் நல்லாட்சி குறித்து அனைவராலும் பேசப்படுகின்ற தற்போதைய சூழ்நிலையில் அதன் அடிப்படைக் கூறுகளில் ஒன்றான நீதித்துறைச் சுதந்திரம் குறித்து ஆராயவேண்டிய தேவை காணப்படுகின்றது. எனவே நீதித்துறைச் சுதந்திரம் என்றால் என்ன? நீதித்துறைச் சுதந்திரத்தின் அவசியம், இலங்கையின் அரசியல் அமைப்பின் கீழ் எவ்வாறு நீதித்துறைச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இந்த கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

## நீதித்துறைச் சுதந்திரம் என்பதன் பொருள்

வலுவேறாகக் கோட்பாட்டின் இன்றைய நிலையில் நீதித்துறைக்கு வழங்கப்படும் மேலதிகமான ஒரு சுதந்திரம் நீதித்துறைச் சுதந்திரம் என்ற கருத்து நிலவுகின்றது. நீதித்துறைச் சுதந்திரம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்ற போதிலும், நீதிபதிகள் எந்தவித முறைகேடான ஆதிக்கத்திற்கும் உட்படாவண்ணம், தமது தீர்ப்பை வழங்ககூடியதாயிருக்கும் ஒரு நிலைப்பாட்டை அல்லது சூழ்நிலையினை நீதித்துறைச் சுதந்திரம் என அடையாளப்படுத்தலாம். 1959 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புது டில்லியில் இடம்பெற்ற சர்வதேச யூரிமார்கள் காங்கிரஸ் கூட்டத்தில் சட்டவாட்சியின் கீழ் சுதந்திரமான சமூகம் அமைவதற்கு இன்றியமையாத தேவைப்பாடாக நீதித்துறைச் சுதந்திரம் காணப்படுகின்றது என குறிப்பிடப்பட்டது.[1]

## நீதித்துறைச் சுதந்திரத்தின் அவசியம்

நீதித்துறையானது ஜனநாயக ரீதியான அரசாங்கங்களில் அரசியல் யாப்பினதும் பிரஜைகளின் உரிமைகளினதும் பாதுகாவலனாகவும் செயற்படுவதனால் தற்கால அரசுகளில் முக்கியத்துவம் வாய்ந்த துறையாகத் திகழ்கின்றது. ஒரு நாட்டில் நீதித்துறை, சுதந்திரத்தின் அவசியம் குறித்து

1. https://en.wikipedia.org/wiki/Declaration_of_Delhi

ஆராயவேண்டிய தேவை இருக்கின்றது. ஏனெனில் தற்காலத்தில் எந்தவொரு அரசினதும் ஜனநாயக தன்மையை அளவிடும் குறிகாட்டியாக நீதித்துறைச் சுதந்திரம் கருதப்படுகின்றது.

ஒரு நாட்டில் நீதித்துறையின் பொறுப்புக்களையும், பணிகளையும் பாரபட்சம் அற்ற முறையில் நிறைவேற்றுவதற்கு நீதித்துறை சுதந்திரமானதாக இருக்க வேண்டும். மேலும் நிறைவேற்றுத்துறையின் அதிகார துஷ்ப்பிரயோகத்தினை தடுத்து, வரம்புமீறிய செயல்களைக் கட்டுப்படுத்தவும், அரசுடனான தகறாறுகளில் பாரபட்சமற்ற விசாரணையைப் பெறுவதற்கும், நாட்டில் சட்டவாட்சியை நிலைநாட்டவும் நீதித்துறை சுதந்திரமானதாக இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

## இலங்கையில் நீதித்துறைச் சுதந்திரம்

இலங்கையில் நீதித்துறை சுதந்திரத்தினை பின்வரும் வழிமுறைகளினூடாக அளவீடு செய்ய முடியும். அவையாவன,

- நீதிபதிகளின் நியமனம்.
- சேவை பாதுகாப்பு
- தேவையான தலையீடுகளிலிருந்தும் கட்டுப்பாடுகளில் இருந்தும் விடுவித்தல்.

1978 இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியல் அமைப்பில் 105 ஆம் உறுப்புரையானது "அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவற்றை நிலைநாட்டி நடைமுறைப்படுத்தும் நீதி நிருவாகத்திற்கான நிறுவனங்களாக,

(அ). இலங்கை குடியரசின் உயர் நீதிமன்றம்

(ஆ). இலங்கை குடியரசின் மேன் முறையீட்டு நீதிமன்றம்

(இ). இலங்கை குடியரசின் மேல் நீதிமன்றமும் பாராளுமன்றமும் காலத்திற்கு காலம் ஆணையிட்டமர்த்தி தாபிக்ககூடிய அத்தகைய வேறு முதனிலை நீதிமன்றங்களும் நியாயசபைகளும் அல்லது அத்தகைய நிறுவனங்களும் ஆகும் என குறிப்பிடுகின்றது.

இதனடிப்படையில் இலங்கையில் நீதிபதிகளின் நியமனங்களை பொறுத்தவரையில் 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பிற்கு கொண்டு வரப்பட்ட பல திருத்தங்களின் காரணமாக காலத்திற்கு காலம் பல மாற்றங்களை உள்வாங்கியிருந்தது. 2001 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பதினேழாம் அரசியல் திருத்தத்தின் ஊடாக அரசியல் அமைப்புப் பேரவை அமைக்கப்பட்டதன் பின்னர் நீதித்துறையானது சுதந்திரமாக செயற்பட வாய்ப்புக்கள் ஏற்பட்டிருந்தது. காரணம் இதற்கு முன்னர் இலங்கையின் சனாதிபதி தனக்கு விரும்பியவரை தன்னிச்சையாக நியமிக்க முடியுமாக இருந்தது. ஆனால் அரசியல் அமைப்பின் பதினேழாம் திருத்தத்தின் கீழ் சனாதிபதி மேல் நிலை நீதிமன்ற நீதியரசர்களை நியமிக்கின்ற போது சனாதிபதியினால் பேரவைக்கு செய்யப்படும் விதப்புரையின் மீது அத்தகைய நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டால் ஒழிய சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் ஆகாது.[2] அவ்வாறே பதினேழாம் திருத்தத்தின் கீழ் சுயாதீனமான நீதிச்சேவை ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. ஆணைக்குழு உறுப்பினர்கள் இதற்கு

2. பதினேழாம் அரசியல் திருத்தம். 41, ஆம் உறுப்புரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் போல் சனாதிபதியால் நேரடியாக அன்றி அரசியல் அமைப்பிற்கு செய்யும் சிபாரிசு, பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே தெரிவு செய்யப்பட்டனர். ஆணைக்குழுவானது, நீதி அலுவலர்களின் (உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம் தவிர்ந்த) நியமனம், நீக்கம், ஒழுக்காற்று கட்டுபாடு தொடர்பான அதிகாரத்தைப் பெற்றிருந்தது. எனவே அரசியல் அமைப்புப் பேரவையினூடாக நீதித்துறை மீது நிர்வாகத்துறையினால் செலுத்தப்பட்ட கட்டுப்பாடு மற்றும் தலையீடு ஓரளவு குறைக்கப்பட்டு நீதித்துறையின் சுதந்திரத்திற்கு வழிசமைக்கப்பட்டிருந்தது.

இந்த சுதந்திர நிலையை நீண்ட காலம் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை மக்களுக்கு கிடைக்கவில்லை. 2010ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் அரசாங்கத்தால் அரசியல் அமைப்பின் பதினேழாவது திருத்தத்தினை நீக்கி அவசரஅவசரமாக பதினெட்டாவது திருத்தம் கொண்டுவரப்பட்டதன் மூலம் நீதித்துறையின் சுதந்திரம் கேள்விக்குறியானது. பதினெட்டாவது திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே நடைமுறையில் இருந்த அரசியல் அமைப்புப் பேரவை நீக்கப்பட்டு அதற்கு பதிலாக பாராளுமன்ற பேரவை தாபிக்கப்பட்டது. இதன் கீழ் சனாதிபதி மேன்நிலை நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் நீதிபதிகளை நியமிக்கும் போது சனாதிபதியினால் அவரது கைப்பட எழுதப்பட்ட ஆணைப்பத்திரத்தின் மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும். பதினேழாம் திருத்தத்தில் இருந்த "41(இ) உறுப்புரை நீக்கப்பட்டதனால்"[3] சனாதிபதியினால் மேன் நிலை நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் மேல் நிலை நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் போது பாராளுமன்றப் பேரவையின் அங்கீகாரத்தினை அன்றி அவதானிப்பையே கோருதல் வேண்டும். அத்தகைய அவதானிப்புக்களை சனாதிபதி கோரும் போது அத்தகைய அறிவித்தல் திகதியிலிருந்து ஒரு வாரகாலத்தினுள் குறித்த நியமனங்களுக்காக சனாதிபதியால் முன்மொழியப்பட்ட ஆட்கள் பற்றிய பேரவையின் அவதானிப்புக்களை சபாநாயகர் ஊடாக அறிவிக்கும்படி பேரவையை தேவைப்படுத்தலாம். குறித்த காலத்தில் பேரவை அவதானிப்பை அறிவிக்க தவறின் சனாதிபதி மேற்குறிப்பிட்ட நியமனங்களை செய்ய முற்பட வேண்டும் என பதினெட்டாவது திருத்தம் ஏற்பாடு செய்திருந்தது. இதற்கு முன்னர் அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரம் இன்றி சனாதிபதி நியமனங்களை மேற்கொள்ள முடியாது. ஆனால் பதினெட்டாவது திருத்தத்தின் கீழ் பாராளுமன்ற பேரவைக்கு அங்கீகாரம் வழங்க முடியாது. அவதானிப்பினை மட்டுமே வழங்க முடியும். இதன் மூலம் நேரடியாக நிர்வாகத்துறை நீதித்துறையின் மீது செல்வாக்குச் செலுத்த வழி சமைக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கையில் நீதித்துறையின் சுதந்திரம் கேள்விக்குட்படுத்தும் நிலையை அடைந்தது.

இதன் மூலம் சனாதிபதி தனக்கு சார்பானவர்களை சிபாரிசு செய்யவும், தான் விரும்பின் அவர்களை அகற்றுவதற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இதனை முன்னாள் நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவின் பதவி நீக்க விடயத்தில் தெளிவாக விளங்கிக்கொள்ளலாம்.

இந்த நிலையில் நிர்வாகத்துறையின் தலையீட்டைக் குறைத்து நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாக்கவேண்டிய தேவை அனைவராலும் உணரப்பட்டது. இதனை 2012 ஆம் ஆண்டு

3. 41. (1) ஆளெவரும் இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பதவிகளுள் எவற்றுக்கும் சனாதிபதியினால் பேரவைக்குச் செய்யப்படும் விதப்புரையின் மீது அத்தகைய நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தால் ஒழிய சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் நீதிபதிகளின் வருடாந்த மாநாடு கொழும்பில் இடம்பெற்ற போது முன்னாள் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்கள் ஆற்றிய உரையினூடாக விளங்கிக்கொள்ள முடிகின்றது. அவர் "ஜனநாயகம் நிலைக்க நீதித்துறை சுதந்திரம் அவசியம். எனவே நீதிபதியொருவர் அச்சம், பக்கசார்பின்றி அனைத்து வகை அழுத்தங்களிலும் இருந்து விடுபட்டு செயற்பட வேண்டுமாயின் இலங்கையில் சட்டத்துறையும் நிறைவேற்றுத்துறையும் அதனை உறுதி செய்ய வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.[4] அவ்வாறே 2013ம் ஆண்டு இலங்கையில் நீதித்துறை சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும் பல சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் அதனை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் நிலையியற் குழுவொன்று அமைக்கப்பட்டமையானது[5] நீதித்துறையின் சுதந்திரம் இலங்கையில் பாதிக்கப்பட்டிருந்தமையை காட்டுகின்றது. இத்தகைய பின்னணியில் 2015 ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது அரசியல் அமைப்பு திருத்தத்தின் மூலம் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாத்து உறுதிப்படுத்தும் பல ஏற்பாடுகள் உள்வாங்கப்பட்டுள்ளது.

பத்தொன்பதாவது திருத்தத்தில் பதினெட்டாவது திருத்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்ற பேரவை நீக்கப்பட்டதுடன் அனைத்து தரப்பினரையும் உள்வாங்கும் வகையில் அரசியல் அமைப்புப் பேரவை ஒன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் மீண்டும் தாபிக்கப்பட்டுள்ளன. இதன்படி அரசியல் அமைப்பு பேரவையில் பிரதமர், சபாநாயகர், எதிர்கட்சி தலைவர், சனாதிபதியால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், பிரதம அமைச்சர் மற்றும் பாராளுமன்றின் எதிர்கட்சி தலைவரினால் சிபாரிசு செய்யப்பட்டு சனாதிபதியால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்கள் (இதில் இருவர் பாராளுமன்ற உறுப்பினர்கள்), பிரதமர், எதிர்கட்சி தலைவரின் கட்சியை சாராத கட்சி அல்லது குழுவிலிருந்து சனாதிபதியால் நியமிக்கப்படும் ஒருவர் என பத்து உறுப்பினர்கள் காணப்படுவர். கடந்த காலத்தில் காணப்பட்ட பாராளுமன்ற பேரவையுடன் ஒப்பிடுகையில் இதன் அமைப்பு மிகுந்த ஜனநாயக தன்மைபொருந்தியாதாக விளங்குகின்றது. இதில் குறிப்பிடக்கூடிய விடயம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாது பல்வேறு துறைசார், கீர்த்தி மற்றும் நேர்மையின் அடிப்படையில் மூவர் தெரிவுச்செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் காணப்படுகின்றமை கட்சி சார்பற்றவர்களை உள்வாங்கி நியமனங்களில் நீதியினை நிலைநிறுத்த மேற்கொண்டுள்ள ஏற்பாடாகப் பார்க்கப்படுகின்றது.

பத்தொன்பதாம் அரசியல் திருத்தத்தின் ஊடாக நீதித்துறை தொடர்பான நியமனங்களை பார்க்கின்ற போது பிரதம நீதியரசரும், மேன் முறையீட்டு நீதிமன்ற தலைவரும், மற்றும் உயர் நீதிமன்றத்தினதும், மேன் முறையீட்டு நீதிமன்றத்தினதும் ஏனைய ஒவ்வொரு நீதிபதியும் அரசியல் அமைப்பு பேரவையின் அங்கீகாரத்திற்கமைய சனாதிபதியால் கைப்பட எழுதப்பட்ட எழுத்தாணையின் மூலம் நியமிக்கப்பட வேண்டும்.[6] மேற்கூறப்பட்ட நியமனங்கள் குறித்த சனாதிபதியின் சிபாரிசு அரசியல் அமைப்பு பேரவையால் அங்கீகரிக்கப்படாவிடின் சனாதிபதியால் நியமிக்க முடியாது என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.[7] அத்தோடு பத்தொன்பதாம் திருத்தத்திற்கு முன்னர் நீதித்துறை சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள் சனாதிபதியால் நியமிக்கப்பட்டனர். எனினும் பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் இந்நிலை மாற்றப்பட்டு நீதித்துறைசேவை

4. www.bbc.com/tamil/sri_lanka/2012/12/121222
5. www.bbc.com/tamil/sri_lanka/2013/04/30420
6. அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம் உறுப்புரை -107
7. அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம் உறுப்புரை -41(இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைக்குழு உறுப்பினர்கள் அரசியல் அமைப்பு பேரவையின் அங்கீகாரத்துடன் சனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டும். அத்தோடு ஆணைகுழுவின் உறுப்பினர்களை பதவி விலக்க வேண்டின் பேரவையின் அங்கீகாரம் அவசியம்.[8] இதன் மூலம் நீதித்துறை சேவை ஆணைக்குழு எத்தகைய தலையீடும் இன்றி சுதந்திரமாக செயற்பட வழி சமைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஏற்பாடுகளினூடாக கடந்த காலத்தில் நீதித்துறையின் மீதான நிறைவேற்றுத்துறையின் வரம்புமீறிய தலையீட்டைத் தடுப்பதற்கும், நிர்வாகத்துறையின் அதிகார துஷப்பிரயோகத்தையும் தடுப்பதற்கான சாத்தியமும் ஏற்பட்டுள்ளது. அத்தோடு நீதித்துறை தொடர்பான நியமனங்களில் நிறைவேற்றுத்துறையின் தற்துணிபதிகாரம் அரசியலமைப்பு பேரவையால் வரையறை செய்யப்பட்டுள்ளமையால் நீதிபதிகள் அனைத்துவகை அழுத்தங்களிலும் இருந்து விடுபட்டு சுதந்திரமாக இயங்க முடியும் என நம்பப்படுகின்றது.

அடுத்ததாக நீதித்துறையில் நீதிபதிகளின் சேவை பாதுகாப்பினை ஆராய்வோமானால் நவீன அரசாங்கங்களில் நீதிபதிகளின் சேவையை பாதுகாக்க பயன்படுத்தப்படும் பிரபல்யமான முறையே இலங்கையில் பின்பற்றப்படுகின்றது. அதாவது சட்டத்துறையினால் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தின் மூலம் பதவி நீக்கம் செய்யும் அதிகாரத்தினை நிறைவேற்று துறைக்கு பெற்றுக்கொடுப்பதாகும். உதாரணமாக பிரித்தானியாவில் இரண்டு சட்ட மன்றங்களினாலும் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தின்படி முடிவில் நீதிபதிகள் பதவி நீக்கம் செய்யப்படுகின்றனர். இலங்கையில் மேன் நிலை நீதிமன்ற நீதியரசர்களின் பதவி விலக்கல் தொடர்பில் அடிப்படைகளான எண்பிக்கப்பட்ட துர்நடத்தை, அல்லது தகைமையின்மை காரணமாக பாராளுமன்றின் மொத்த உறுப்பினர்களில் (சமூகமளிக்காதோர் உட்பட) நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டு ஜனாதிபதியினால் ஆக்கப்படும் கட்டளையொன்றின் மூலமாக அன்றி அகற்றப்படலாகாது. அத்தோடு அத்தகைய பிரேரணை பாராளுமன்றின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒன்று பங்கினரால் கையொப்பமிடப்பட்டிருப்பதுடன், துர்நடத்தை அல்லது தகைமையின்மை தொடர்பான முழு விபரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.[9]

இந்த நடைமுறையானது நீதிபதிகளின் சேவை தொடர்பில் ஓரளவு பாதுகாப்பை வழங்கின்றது என கூறப்பட்டாலும் பல விமர்சனங்களும் காணப்படுகின்றன. அதாவது இங்கு நீதிமன்ற விசாரணை நடைபெறுவதில்லை. சட்டத்துறையான பாராளுமன்றமே முடிவெடுக்கின்றது. எனவே ஆளும் கட்சி பாராளுமன்றில் பெரும்பான்மையை கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் நிறைவேற்றுத்துறையும் பாராளுமன்றமும் இணைந்து தமக்கு சாதகமான முடிவை பெற்று நீதித்துறையில் தலையிட வாய்ப்பு உள்ளது. முன்னாள் நீதியரசர் 2013ம் ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்ட முறை இதற்கு எடுத்துகாட்டாகும்.

ஏனைய கீழ் நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகளின் (நீதித்துறை அலுவலரின்) நியமனம், இடமாற்றம், பதவி விலக்கல், ஒழுக்காற்று கட்டுப்பாடு என்பன சுயாதீன நீதித்துறைசேவை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையானது நீதித்துறை சுதந்திரத்திற்கான ஒரு பாதுகாப்பு ஏற்பாடாக விளங்குகின்றது.

8. அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம் உறுப்புரை -111(ஈ).(உ)
9. அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம் உறுப்புரை -107(2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதித்துறையின் சுதந்திரத்தின் மற்றுமொரு நிபந்தனையாக உள்ள நீதிபதிகளின் பதவிக் காலத்தைப் பொறுத்தவரையில் இலங்கையில் உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை 65 ஆகவும், மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 63 ஆகவும் இருத்தல் வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.[10] நீதிபதிகளின் சேவைக் காலத்தை நீடிப்பதனூடாக அவர்களின் சுதந்திரம் பாதுகாக்க இலங்கை அரசியலமைப்பு ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும். அத்தோடு போதிய சம்பளத்தை வழங்குவதனூடாகவும் நீதித்துறையை சுதந்திரமாக செயற்பட வழிசமைக்கலாம். சம்பளத்தை பொறுத்தவரையில் இலங்கையில் உயர் நீதிமன்றம் மற்றும் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளங்கள் பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்பட்டுள்ளதுடன், பதவி காலத்தின் போது அவர்களின் சம்பளம் குறைக்கப்பட முடியாது போன்ற ஏற்பாடுகள் நீதித்துறை சுதந்திரத்திற்கு வலுவூட்டுவனவாக இருக்கின்றன.

இதற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் நீதிதுறை சேவை ஆணைக்குழுவில் தலையிடுதல் தவறென்றும்,[11] நீதிதுறையில் தலையிடுதல் தவறென்றும்,[12] ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தமது கடமைகளை புரிகையில் அல்லது பணிகளை நிறைவேற்றுகையில் நல்லெண்ணத்துடன் செய்த ஏதேனும் செய்கைக்காக அவர்களுக்கெதிராக எந்த வழக்கும் தொடரப்படுதல் ஆகாது[13] என அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையானது நீதித்துறை சுதந்திரத்தை உறுதிப்படுத்த உதவுகின்றது.

இவற்றுக்கு மேலாக இன்னும் பல அம்சங்களினுடாக இலங்கையில் நீதித்துறை சுதந்திரத்தைப் பாதுகாக்க அரசியயலமைப்பில் ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அதன்படி நீதிமன்ற அலுவலர் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது ஜனாதிபதியாகவோ தெரிவுசெய்யப்படத் தகுதியற்றவராவார் என ஏற்பாடு செய்வதன் மூலம் நீதிமன்ற அலுவலர்கள் அரசியலில் இருந்து தவிர்ந்து பக்கசார்பற்றவர்களாக செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.[14] அத்துடன் பாராளுமன்ற நடவடிக்கையின்படி பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவர் கேள்வி நேரத்தின் போது அல்லது விவாத நேரம் மற்றும் ஒத்திவைப்பு பிரேரணையின் போது நீதிபதி ஒருவரின் நடவடிக்கை குறித்து இழிவு கூற அனுமதிக்ககப்படமாட்டார். மேலும் ஒரு விடயம் நீதிமன்ற ஆய்வில் இருக்கும் போது பாராளுமன்றில் அவ்விடயம் விவாதிக்கப்படலாகாது என்பதுடன் நீதிபதிகளுக்கு சட்ட நடவடிக்கைகளில் இருந்து சிறப்புரிமை வழங்கப்படுகின்றது. அத்துடன் நீதித்துறை கடமைகள் ஆற்றப்படுகையில் ஏற்படும் ஏதேனும் நட்டஈட்டுக்கு நீதிபதிகள் பொறுப்புகூற தேவையில்லை என்பதோடு நீதிமன்ற நடவடிக்கையின் போது ஆற்றப்பட்ட எல்லா சொற்பொழிவுகளும், கூற்றுகளும் சிறப்புரிமை பெறுகின்றன. இவ்வாறு இலங்கையில் நீதித்துறைச் சுதந்திரமானது அரசியலமைப்பு ஏற்பாடுகளினூடாக பாதுகாக்க வழி சமைத்துள்ளது.

இருந்தபோதிலும் நீதிமன்ற தீர்ப்புக்களால் வழங்கப்பட்ட தண்டனையை சனாதிபதியானவர் குறைக்க அல்லது மன்னிப்பு வழங்க அரசியல் அமைப்பு அதிகாரம் வழங்கியிருக்கின்றமை

10. அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம் உறுப்புரை -107(5)
11. அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம் உறுப்புரை -115
12. அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம் உறுப்புரை -116
13. அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம் உறுப்புரை -117
14. அரசியலவமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம் உறுப்புரை -91(ஈ),92(ஆ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதித்துறையில் நிர்வாகத்துறையின் தலையீட்டைக் காட்டுகின்றது. அத்தோடு மேன் நிலை நீதிமன்ற நீதிபதிகள் பதவியில் இருந்து இளைப்பாறிய பின்னர் சட்டத்தரணியாகப் பணியாற்ற விரும்பின் சனாதிபதியின் எழுத்துமூலமான சம்மதம் அவசியம்.[15] இது பதவியில் இருக்கும் போது நீதிபதிகள் நிர்வாகத்துறைக்குச் சார்பாக செயற்பட கூடும் என்ற சந்தேகத்தினை தோற்றுவிக்கின்றது. மேற்கூறப்பட்ட அம்சங்கள் நீதித்துறைச் சுதந்திரத்தைப் பாதிப்பதாக அமைகின்றன.

தொகுத்து நோக்கும் போது இலங்கையில் பதினேழாம் அரசியல் திருத்தத்தின் ஊடாக தாபிக்கப்பட்ட அரசியலமைப்பு பேரவையானது அரசியலமைப்பிற்கான பதினெட்டாவது திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டு நீதித்துறைச் சுதந்திரம் கேள்விக்குட்படுத்தப்பட்டிருந்தது. அதனால் நீதித்துறையானது அரசியல் தலையீடு மிக்க ஒரு துறையாக பலராலும் விமர்சிக்கப்பட்டிருந்தது. எனினும் 2015ம் ஆண்டு அரசியலமைப்பிற்கான பத்தொன்தாம் திருத்தத்தின் மூலம் மீண்டும் அரசியல் அமைப்புப் பேரவை தாபிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் சுயாதீனமான நீதித் துறைச் சேவை ஆணைகுழு ஒன்று தாபிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக நீதித் துறைச் சுதந்திரம் பாதுகாக்கப்பட அரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இலங்கையில் ஜனநாயத்தை உறுதிபடுத்தி அனைவரும் நல்லாட்சியை அனுபவிக்கும் ஒரு நாட்டை உருவாக்குவதற்கு நீதித்துறைச் சுதந்திரம் அவசியம் என்பதால் இனிவரும் காலத்தில் இலங்கையின் சட்டத்துறையும், நிறைவேற்றுத்துறையும் அதனை உறுதிப்படுத்த முன்னின்று செயற்பட வேண்டும்.

## உசாத்துணை நூற்பட்டியல்


குணரத்தினம், வே. (2009) “அரசறிவியல்” குமரன் புத்தக இல்லம்: கொழும்பு

துசித அலுத்பட்டபெந்தகே “நல்லாட்சி” பஃரல் அமைப்பு

செல்வகுணபாலன், செ. (2007) “இலங்கைச் சட்டங்கள் ஓர் அறிமுகம்” குமரன் புத்தக இல்லம்: கொழும்பு.

அரசியலமைப்பிற்கான பதினெட்டாவது திருத்தம் (2010) : இலங்கை அரசின் அச்சுத்திணைக்களம்

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தம் (2015) : இலங்கை அரசின் அச்சுத்திணைக்களம்

“இலங்கை சனநாய சோசலிச குடியரசின் அரசியலமைப்பு” (1978) : இலங்கை அரசின் அச்சுத்திணைக்களம்


15. அரசியலவமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம் உறுப்புரை -110(3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணினம் கடந்து வந்த பாதை ஓர் பார்வை

**V. சுபாகரன்**
சட்டக்கல்லூரி இறுதியாண்டு மாணவன்
இலங்கை சட்டக் கல்லூரி

உலக சிருஷ்டியின் மூலம் என்றும் தெய்வம் என்றும் அம்மன்கோவில்களிலும் மாதா கோவில்களிலும் மண்டியிடும் எல்லா ஆண்களுமே தெரிந்தோ தெரியாமலோ பாவமன்னிப்பே அற்ற பெண்ணுடல் - மனம் மீதான வன்முறையை செய்தவர்கள்தான்.

எனது இந்த கட்டுரையை நான் பெண்ணியம் பற்றிய வரலாற்று தகவல்களுடன் ஆரம்பிக்கின்றேன் 'பெண்மை' என்ற தமிழ்ச் சொல் பெண்ணியம் என்ற சொல்லின் பொருளோடு வேறுபட்டு விளங்குகிறது. "பண்பாடு, மரபு, இவற்றின் அடிப்படையில் பேணப்பட்டு வந்த பெண்ணின் இலக்கணங்களைக் குறிக்கவே பெண்மை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுவருகிறது". தமிழுக்குப் "பெண்ணியம்" என்றசொல் அந்நியமாயினும் தனித்துவமான தன்மைகளுடன் அமையும் அதன் கோட்பாட்டை ஓரம் கட்டவோ, ஒதுக்கிவைக்கவோ முடியாது.

ஏனெனில் பெண்ணியம் என்பதும் அதன் கோட்பாடுகளும் ஒரு சமூகமாற்றத்திற்கான நடவடிக்கை ஆகும். ஐக்கியநாடுகள்சபை 1975ஆம் ஆண்டை மகளிர் ஆண்டாக அறிவித்ததையும், 1975 தொடங்கி 1985 வரையான பதினொரு ஆண்டுகளை அனைத்துலக மகளிர் ஆண்டாக கொண்டாடத் தீர்மானித்ததையும் அடுத்து, இலங்கையில் பெண்ணியம் பற்றியகருத்துக்கள் பெண்நிலைவாதம் என்னும்பெயரில் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையில் தோற்றம் பெற்ற பெண்கள் அமைப்புக்கள் "சுயவுரிமை போராட்டத்தில் தீவிரவாத இயக்கங்கள் பலம்பெற்று வளரவும், விடுதலைப்போராளிகளாய் அதிகளவு பெண்கள் அணியில் சேரவும், தமிழ்ப் பெண்மையின் பாரம்பரியப் படிமங்கள் மாற்றுருவாக்கம் பெறவும் பேரளவில்" உழைத்தன.

1970களுக்குப் பின் இலங்கையில் தமிழ்ப் போராளிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஆயுதப் போராட்டம் வலுப்பெற்ற சூழ்நிலையில் பயங்கரவாதச்சட்டம், அவசரகாலச்சட்டம் முதலானவை மனிதனுக்குள்ள அடிப்படைச் சுதந்திரத்தைக் கூடத்தட்டிப் பறித்தன.

மனித உரிமைகள் மீறப்பட்ட சூழலில் இத்தகையமனித உரிமைமீறல்களுக்கு எதிராக 1971 இல்சிவில் உரிமை இயக்கம், 1972 இல்சற்யோதய,1979 இல் நிறுவப்பட்ட இனங்களுக்கு இடையிலானநீதி, சமத்துவத்திற்கான இயக்கம் முதலானவை,தோற்றம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வமைப்புக்களிற் பெண்கள் சுயாதீனமாக இயங்கினாலும் இவை தனித்துவமான பெண்கள் அமைப்பாகத் தொழிற்படவில்லை. பெண்கள் மீதுகொண்ட விசேட அக்கறை, பெண்களுக்குஎதிரான அடக்கு முறை, பாராபட்சம், வீட்டிலும் வெளியிலும் பெண்கள்மீது திணிக்கப்படும் இரட்டைச்சுமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு 1980களுக்குப் பின் பெண்களுக்கெனத் தனிப்பிரிவுகள் உருவாக்கப்பட்டன.

1980 இல் 'பெண்கள் முன்னேற்றச்சங்கம்' ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கம் உத்தியோக பூர்வ அமைப்பில்லாதிருந்தாலும் இரண்டு வருடகாலம் இயங்கியது. இதன்பின் உருவாக்கப்பட்ட 'பெண்கள் ஆய்வு வட்டம்' பெண்களின் ஆராய்ச்சி, எழுத்தாற்றலை ஊக்குவிப்பதற்கான நோக்கில் உருவாக்கப்பட்டது. இந்த ஆய்வுவட்டத்தில் சாவமங்களம் கைலாசபதி, சிவரமணி, ஔவை, மல்லிகா, சோமேசசுந்தரி, பார்வதிகந்தசாமி, ரஜனிதிரணகம, சுல்பிகா முதலானோர் அங்கம் வகித்தனர் இவ்வமைப்பினால் வெளியிடப்பட்ட 'சொல்லாதசேதிகள்', 'கேள்வி, பதில்வடிவிலான பெண்ணிலைவாதம்' குறித்தானநூல்கள்இரண்டும்முக்கியமானது.

1982இல் பொலிரெக்ஸ் ஆடைத்தொழிற்சாலையில் நிகழ்ந்த வேலை நிறுத்தப் போராட்டமே, இலங்கையில் பெண்ணுரிமை, பெண் விழிப்புணர்வைத்தூண்டிய முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. தேசியமட்டத்திலான முதற் பெண் நிகழ்வாக 1983இல் கொழும்பு நகரமண்டபத்தில் கொண்டாடப்பட்ட சாவதேசப் பெண்கள் தினத்தைக் கூறலாம். 'அன்றைய தினம் பயங்கரவாதத்தடைச்சட்டத்தை இரத்துச் செய்தல், தமிழ் அரசியல் பெண்கைதியான நிர்மலா நித்தியானந்தனை விடுதலைசெய்தல் தோட்டத் தொழிலாளருக்குச் சமமானசம்பளம், பிரஜாவுரிமை வழங்கல் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு சாலை மறியல் போராட்டமும் இடம்பெற்றது". இக்காலப்பகுதியில் தோற்றம் பெற்ற சமாதானத்திற்கான பெண்கள் அமைப்பு சமாதானத்திற்கும் ஜனநாயகத்துக்குமான பாலமாக இயங்கியதுடன் வன்முறைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்றும் குரல் கொடுத்தது. பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ்கைது செய்யப்பட்ட பெண்களுக்கான சட்ட உதவிகளையும் இவ்வமைப்பு வழங்கியது.

1987இல் இனப்பிரச்சனை உக்கிரம் அடைந்த சூழலில் வீணான அழிவுகளைத் தடுத்து நிறுத்தும் வகையில் தாய்மாரும் மகள்மாரும் என்னும் அமைப்புத் தோன்றியது. 1990களில் இவ்வமைப்பு மனித உரிமைகள் இயக்கத்தோடு இணைந்து அரசியல் தீர்வு, அதிகாரப்பகிர்வு முதலான விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியது.

1990இல் தெற்கில் இடம்பெற்ற அரசியல் வன்முறை அங்கு "அன்னையர் முன்னணி" என்னும் அமைப்பை உருவாக்கியது. சட்டத்துக்கு அப்பால் கொலைசெய்யப்பட்ட ஆயிரக்கணக்கானவரின் தாய், மனைவிமார் ஒன்றிணைந்து ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி உறுப்பினரின் ஆதரவுடன் இம்முன்னணியைத் தொடங்கினர். பிற்பட்டகாலத்தில் அரசியல் பலத்தை மாற்றக்கூடிய சக்திமிக்க அமைப்பாக இது உருவானது.

இலங்கையில் 1979இல் உருவாக்கப்பட்ட பயங்கரவாதத்தடுப்புச்சட்டமும், 1982இல் அமுலுக்குவந்த அவசரகாலச்சட்டமும் தமிழ்த்தீவிரவாத அமைப்புக்களை அடக்கி அழிக்கப் பயன்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1984இல் வல்வெட்டித்துறை இளைஞர்கள் பலாத்காரமான முறையில் கைது செய்யப்பட்டு பூஸாமுகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவ்வாறன நிகழ்வுகள் மீள நடத்தப்படாமல் இருப்பதற்காக திருநெல்வேலியைச் சேர்ந்த பெண்கள் "யாழ்ப்பாண அன்னையர்" முன்னணியை நிறுவினர். தம்பிள்ளைகளை விடுவிக்குமாறு 1984 இல்ட்றிமர் மண்டபத்திலிருந்து கச்சேரிவரை இம் முன்னணியினரால் நடாத்தப்பட்ட ஊர்வலம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இயக்கங்களுக்கிடையே உள் முரண்பாடுகள் ஏற்பட்டபோது அப்போது எல்லாம் அன்னையர் முன்னணி தலையிட்டு சமரசம் செய்துவைப்பதில் முனைப்போடு செயற்பட்டது. 1985இல் தீப்பொறி உறுப்பினர் ஒருவரைத் தமிழ்ஈழ மக்கள்விடுதலை இயக்கம் தடுத்துவைத்தபோது அன்னையார் முன்னியிரின் தலையீட்டால் அவ்வியக்கம் அவர்களை விடுதலை செய்தது.

இதேபோல் தமிழ் ஈழவிடுதலைப்புலிகள் 1986இல் தமிழ் ஈழவிடுதலை அமைப்பைதாக்க முற்பட்ட போது அதற்கு எதிராகவும் இவ்வமைப்புகுரல் கொடுத்தது. இக்காலப்பகுதியில் யாழ்பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் கொல்லப்பட்ட போது தன்எதிர்ப்பை இம் முன்னணி, வெளியிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதன் உச்சபட்சமாக 1987 இல் தமிழ் ஈழவிடுதலைப்புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைகளுக்கும் இடையில் யுத்தம் ஏற்பட்டபோது அது உடனடியாக நிறுத்தப்படவேண்டுமெனக்கூறி அன்னைபூபதி சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தமையைக் கூறலாம். இனங்களுக்கு இடையில் உறவையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட அமைப்பே இதுவாகும்.

1989இல் ஆரம்பிக்கப்பட்ட பூரணி பெண்கள் நிலையம், பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உட்பட்டவருக்கும், வதிவிடம் அற்றவருக்கும் வதிவிடம் வழங்குவதை நோக்கமாகக்கொண்டு நிறுவப்பட்டது. மனித உரிமை, பெண்ணுரிமை முதலானவற்றைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டும் இயங்கிய இவ்வமைப்பில் ரஜனிதிரணகம, சிவரமணி முதலான பலரும் அங்கம் வகித்தனர். ஆயினும் இவ்வமைப்பு 1991 இல் முடிவுக்குவந்தது.

1991 இல் இலங்கையில், நடைபெற்ற போரால் சனத்தொகையில் 1.2 இலட்சத்துக்கு அதிகமான மக்கள் கொழும்பை அண்டிய பகுதிக்கு இடம்பெயர்ந்தனர். இந்நிலையில் இடம்பெயர்ந்தவர்களைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணத்தின் அன்னையர் முன்னணியினதும் பெண்கள் ஆய்வு வட்டத்தினதும் செயற்பாட்டாளராக இருந்து இடம்பெயர்ந்த பெண்கள் சிலரும், முஸ்லிம்பெண்கள் ஆய்வுமற்றும் கொழும்பு பெண்கள் அக்ஷன்/போறம் ஆகியவற்றோடு இணைந்து சந்திப்பொன்றை மேற்கொண்டனர். இச்சந்திப்பின் பயனாக இடம்பெயர்ந்தவர்களின் மத்தியில் வேலை செய்வதற்காக சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் உருவானது. இக்காலப்பகுதியில் தெற்கிலுள்ள சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையமானது பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்காணித்துக் கொண்டு இடம் பெயர்ந்தவர்களுக்கான உதவிகளையும் செய்துவந்தது. இடம்பெயர்ந்த மக்களில் சிலர் மீண்டும் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டத்தை தொடர்ந்து 1994 இல் இவ்வமைப்பு மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டது. இவ் அமைப்பு சமூகத்தால் பாதிக்கப்பட்ட, கைவிடப்பட்ட, நிராதரவாக்கப்பட்ட பெண்களுக்காக இற்றைவரையும் மட்டக்களப்பில் வேலை செய்கின்றது. கல்வி அறிவுக்கூடாகப் பெண்விழிப்புணர்வைத் தூண்டும் இவ்வமைப்பு பெண் கீழ் நிலைப்படுத்தப்படுவதைக்கண்டிப்பதுடன் பாலியல் சுரண்டல்களுக்கு எதிராகவும் போராடி வருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990களில் தோற்றம் பெற்ற பிறிதொரு அமைப்பான "யுத்தத்தினால பாதிக்கப்பட்ட சங்கம்", பெண்கள் சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இயங்கியதைப் போல 1999 இல் உருவாக்கப்பட்ட "பொலநறுவை மாவட்ட பெண்கள் குழு" எல்லைப்புறக் கிராமங்களில் வாழும் பெண்களின் சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இயங்கியது. 1995 இல் பீஜிங்ஹெய்றோவில் நடைபெற்ற பெண்கள் பற்றிய நான்காவது மாநாட்டை ஒட்டி அமைக்கப்பட்ட "இலங்கைப்பெண்களின்அரசசார்பற்ற அமைப்புக்களின் அரங்கு" (SLWNGOF) வன்முறையும் யுத்தமும் அற்ற சுபிட்சமான வாழ்வைப் பெறும் நோக்கோடு உருவாக்கப்பட்டது.

1996இல் இராணுவத்தினர் பாடசாலை மாணவியான கிருஷாந்தி குமாரசாமியைப் பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கிக் கொலைசெய்ததோடு அவளைத் தேடிச்சென்ற தாய், சகோதரன், அயலவன் ஆகிய அனைவரையும் கொலை செய்தனர். இதற்கு எதிராகத் தோன்றிய "விழிப்புக்கூட்டணி" இலங்கையிலுள்ள அனைத்துப் பெண்பிரிவுகளுடன் இணைந்து பல்வேறு போராட்டங்களை ஆரம்பித்தது. தெற்கிலிருந்து இயங்கிய இக்கூட்டணி இலங்கையில் முக்கிய பலம்பொருந்திய எதிர்ப்பு இயக்கமாகத் தோற்றம் பெற்றது.

ஈழத்தில் சமூக விடுதலையைக் கருத்திற் கொண்டு தோன்றிய பெண்கள் அமைப்பானது வெகுசனமட்டத்தில் விணைத்திறனும் செயற்றிறனும் கொண்ட அமைப்பாக இயங்கியதுடன் பெண்ணிய உணர்வுநிலையையும் வளர்த்து எடுத்தது. பெண்ணியச்சிந்தனையை உள்வாங்கி குடும்பம் தொழில் வாய்ப்பில் சமமின்மை சமூக ஒடுக்கமுறை என்பவற்றுகெதிராகக் குரல் கொடுத்த இவ்வமைப்புக்களானது பெண்ணியம் பற்றிய விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது.

இது வரலாற்று பக்கங்களில் பதியப்பட்டதே என்னை பொறுத்தவரையில் பெண்ணியம் பேசுதல் என்பது ஒரு வகையில் பெண்களை வேறுநிலையில் வைத்து பார்த்தல் அல்லது சமூக இருக்கை நிலைகளை களைதல் என்பேன். பெண்பிள்ளை என்றால் இப்படிதான் கட்டுப்பாடு ஆண்பிள்ளை எனின் எப்படியும் வாழலாம். இந்த அடிப்படைதான் விஸ்வரூபம் எடுத்து பின்னாளில் பெண்ணுடலை ரணமாக்கிவிடுகின்றது.

பெண்ணியம் என்பது எப்போது சமூகமயமாக்கபட்டதோ அன்றே பிரிவினையும் தோன்றிவிட்டது.. பெண்ணியம் இது எல்லாம் மேடை போட்டு சொல்லி ஏற்படுத்த கூடியதல்ல. எல்லாமே ஒவ்வொரு தனி மனிதனின் அகநிலையில் இருந்து தொடங்கப்பட வேண்டிய மாற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழி நோக்கில் தமிழ்

**இ. அல்வின் கமல்ராஜ்,**
மூன்றாம் ஆண்டு,
இலங்கைச் சட்டக்கல்லூரி.

உலகம் முழுவதிலும் ஏறக்குறைய ஏழு பில்லியன் மக்களால் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. மொத்த மக்கள் தொகையில் அண்ணளவாக எண்பது மில்லியன் மக்கள் தமிழ் மொழியை தமது முதல் மொழியாகக் கொண்டுள்ளனர். அதிகமான மக்களால் பேசப்படும் மொழிகளின் பட்டியலில் தமிழ் மொழியானது இருபதாவது இடத்தில் காணப்படுகின்றது. இத்தமிழ் மொழியானது தற்போது செம்மொழியாகப் (Classical Language) போற்றப்படுகின்றமை குறித்ததே இக்கட்டுரையாகும்.

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்"** எனப் பாடினான் பாரதி. தமிழ் இனிமையும், பழமையும், ஆழமும், அழகும் வாய்ந்த மொழி ஆகும். செந்தமிழ், செழுந்தமிழ், பைந்தமிழ், நற்றமிழ், நறுந்தமிழ், இன்தமிழ், ஒண்தமிழ், தீந்தமிழ் எனப் பலவாறு தமிழின் சிறப்பை உணர்த்தும் சொற்தொடர்கள் எமது தமிழ் புலவர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. புரட்சிக்கவிஞன் பாரதிதாசன் **"தமிழுக்கும் அமுதென்று பெயர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"** என்று முழங்குவதினூடாக எம் தமிழின் பெறுமதியை எடுத்துரைக்கின்றார். இயல், இசை, நாடகம் எனும் முப்பெரும் கூறுகளைத் தன்னுள் தாங்கியுள்ள தமிழை எம்முன்னோர் சங்கங்கள் அமைத்து வளர்த்துள்ளனர். தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோவடிகள், ஔவையார் முதலான முதுபெரும் புலவர்களைத் தோற்றுவித்து அவர்களின் மூலம் எம் தாய்மொழியாள் உயர்ந்த பல கருத்துக்களை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உலகிற்கு வழங்கியுள்ளாள்.

செம்மொழி நோக்கில் தமிழைக் கருதும்போது செம்மை பற்றிச் சிந்திக்க வேண்டும். செம்மை என்பதற்குப் பல்வேறு மட்டங்களிலும், பல்வேறு கோணங்களிலும் பலவாறான வரைவிலக்கணங்கள் தரமுடியுமாயினும் மிக எளிய மற்றும் அடிப்படை மட்டத்தில் கூறுவதாயின் செம்மை என்பதை பெருமை, நேர்மை, தூய்மை, எளிமை, மேன்மை மற்றும் தொன்மை என்னும் பண்புகளின் கூட்டு உருவாக அடையாளப்படுத்த முடியும். இத்தனை பண்புகளையும் ஒரு சேரக் கொண்டமைந்த மொழி அழகுற மிளிரும் என்பதில் ஐயமிருக்க முடியாது.

மொழி ஒன்று செம்மொழியாகக் கருதப்படுவதற்கு அது எத்தகைய பண்பினதாய் அமைதல் வேண்டுமென மொழியியலாளர்கள் கூறுகின்றனர். கலிபோர்னியப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆய்வாளர் ஜோர்ஜ் எல். ஹார்ட் (George L. Hart) என்பவரது கருத்துப்படி மொழி ஒன்று செம்மொழியாக கருதப்படுவதற்கு அது பின்வரும் பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொன்மை வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். அதாவது ஆயிரம் ஆண்டுகளேனும் வரலாற்றைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
- அம்மொழி மற்றெந்த மொழியில் இருந்தும் தோன்றாததாக காணப்படுவதுடன் தனக்கெனத் தனிமரபினைக் கொண்டிருத்தலும் வேண்டும்.
- அம்மொழியில் உலகத்தரம் வாய்ந்த இலக்கிய மற்றும் கலை வளங்கள் பல காணப்படல் வேண்டும்.

இவரது செம்மொழி பற்றிய கருத்து பொதுவாக உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஹார்ட் இன் கருத்துக்களின் அடிப்படையில் எம் தாய்மொழியாள் செம்மொழித் தரத்திற்கு தகுதியுடையவளா எனக் கேட்டால் ஆம் எனப் பதிலளிக்க ஆதாரங்கள் வேண்டுமல்லவா. செம்மொழி அந்தஸ்தினைத் தமிழ் மொழியும் சூடிக்கொள்வதற்கு ஆதாரமாக அமைந்த சில சான்றுகளை நோக்குவோம்.

**"தொன்று நிகழ்ந்ததனைத்து முணர்ந்திடும் சூழ்கலை வாணர்களும் இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய்"** - மிகத் தொன்மையான காலத்தில் தோன்றிய மற்றும் நிகழ்ந்த விடயங்கள் பற்றி ஆய்வுகள் செய்து அவை எப்போது தோன்றின எனக் கண்டறியும் ஆராட்சியாளர்கள், தமிழ் மொழியாள் என்று பிறந்தாள் என்பதை கண்டறிய முடியாதளவு தொன்மை வாய்ந்தவளாக அவள் காணப்படுகிறாள் எனவும் **"திங்களோடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் மண்ணோடும் உடுக்களோடும் மாங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்"** எனவும் தமிழின் தொன்மைபற்றி பாவேந்தர் பாரதிதாசன் முழங்குகிறார்.

தமிழ் மொழியின் இனிய பல சொத்துக்களில் காலத்தால் மூத்ததாகவும் காணக்கிடைப்பதாகவும் இருப்பது தொல்காப்பியமே. இது ஏறக்குறைய இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளைக் கடந்தும் வாழ்ந்துகொண்டிருக்கும் இலக்கிய வடிவிலமைந்த அறவடித்த இலக்கண நூல் என்பதை ஆய்வுலகம் நன்கறியும். உலக மொழிகளின் வரலாற்றினை நோக்கின் பொதுவாக எல்லா மொழிகளினதும் பூர்வாங்கப்படைப்புக்களாகத் திகழ்பவை அவற்றின் இலக்கியங்களே. பல நூற்றாண்டு காலம் பக்குவமாய் வளர்க்கப்படும் இலக்கியங்களின் அடிப்படையிலேயே மொழி வல்லுனர்கள் அந்தந்த மொழிகளுக்கான இலக்கணங்களை வகுக்கின்றனர். தமிழ் மொழியும் அதற்கு விதிவிலக்கல்ல. தொல்காப்பியத்திற்கு முன்னர் தோன்றிய தமிழ் நூல்கள் பல அழிவடைந்துள்ளமைக்கு தொல்காப்பியமும், வரலாறும் சான்றுகளைத் தருகின்றன. **"செந்தமிழ் இயற்கைச் சிவணிய நிலத்தொடு முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்தோனே போக்கறு பனுவல்"** எனும் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் மூலம் இவ்வுண்மை புலனாகிறது. அது மட்டுமன்றி தான் வாழ்ந்த காலத்திற்கு முன்னர் வாழ்ந்த தமிழ் இலக்கணப்புலவர்கள் பற்றித் தொல்காப்பியர் தனது படைப்பில் இருநூறிற்கும் மேற்பட்ட இடங்களில் குறிப்பிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. காக்கை பாடினியம், அவிநயம் போன்ற நூல்கள் தொல்காப்பியர் காலத்தில் காணப்பட்டதாகவும் அவை அழிந்துவிட்டதாகவும் ஆராட்சியாளர்கள் கூறுகின்றனர். தொல்காப்பியம் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய பரதம், அகத்தியம் போன்ற பல தமிழ் நூல்கள் அறியாமையாலும், இயற்கையின் சீற்றத்தாலும், பகைவர்களாலும், தன்னலக்காரர்களின் சூழ்ச்சிகளாலும் அழிந்தே போயின. அரிய நூல்களின் அழிவினால் பழந்தமிழின் தொன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிற்கு வெளிப்படுத்தப்படாத ஊமையின் கனவாயிற்று. எது எவ்வாறிருப்பினும் தற்போதைய பயன்பாட்டில் உள்ள ஆதி நூல்களான சங்க காலத்து நூல்கள் கூட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றினைக் கொண்டவை என்பது வெளிப்படை..

உலக மொழிகள் அனைத்தும் தத்தமது மொழிக்குடும்பங்களைச் சார்ந்தே காணப்படுகின்றன. இம்மொழிக்குடும்பங்களை இயற்கை மொழிக்குடும்பங்கள், செயற்கை மொழிக்குடும்பங்கள் எனும் இரு பெரும் பிரிவுகளாக்கலாம். இயற்கை மொழிக்குடும்பங்கள் என்பவை புவியில் மனிதகுலம் தோன்றி மொழி எனும் கருத்துப்பரிமாற்ற ஊடகத்தினை பயன்படுத்தத்தொடங்கிய காலம் தொட்டு மனிதப்பரிணாமத்தோடு தாமும் பரிணாமம் பெற்றவை. இவ்வகையான இயற்கை மொழிக்குடும்பங்களில் திராவிட மொழிக்குடும்பமும் ஒன்றாகும். இத்திராவிட மொழிக்குடும்பத்தில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், கொலமி, பார்ஜி, கோண்டி, குய், கொண்டா உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட மொழிகள் காணப்படினும் இவற்றுக்கெல்லாம் தாயாகவும் தலையாகவும் திகழ்பவள் எம்தமிழே என்பதோடு அவளுக்கும் மேலான வேறொரு மூலம் இருக்குமாயின் அந்த மூலம் இறைவனைத் தவிர வேறில்லை என்றே கூறலாம்.

தமிழ்மொழியாள் தனக்கெனத் தனிமரபினைக் கொண்டவள் என்பதற்கு இன்னோரன்ன சான்றுகளைச் சமர்ப்பிக்க முடியும். தமிழின் நெடுங்கணக்கே உலகம் வியக்கும் தனி மொழி மரபிற்குச் சிறந்த சான்றாகும். உயிர், மெய், குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம் எனும் பாகுபடுத்தல்கள் யாவுமே என் முன்னோரால் தூர நோக்குடன் மிகச்சிறப்பாக மரபாக்கப்பட்டவை. அது மட்டுமன்றி எண் பெறுமானங்களுக்கும் எழுத்துருக்கொடுத்த மொழியாக தமிழ் திகழ்வதனை **"எட்டேகால் இலட்சணமே எமனேறும் பரியே"** (எட்டேகால் இலட்சணம் - அவலெட்சணம்) என எம்மூதாட்டிப் புலவர் ஔவையார் மற்றொரு புலவரைச் சாடுவதில் இருந்து கண்டுகொள்ளலாம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களும் மரபுகளின் அடிப்படையிலேயே பாகுபடுத்தப்பட்டவை. அனேக உலக மொழிகளிடம் காணப்படாத ஆனால் தமிழில் காணப்படுகின்ற தனிச்சிறப்பான ஆற்றலாக பொருளறிந்து வினைகொண்டு சொல்லாக்கும் ஆற்றலைக் கூறினால் அது மிகையில்லை. **Calculator** எனும் ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லலை உருவாக்குதல் தமிழுக்கு எளிது. இக்கருவி கணித்தலைச் செய்கின்றது எனும் பொருள் அறிந்து கணி எனும் வினை கொண்டு கணிப்பான் என இக்கருவிக்கு தமிழில் இலகுவாக நாமம் வழங்கியுள்ளனர்.

**"தமிழில் உள்ள அகத்துறை இலக்கியங்கள் போல் உலகில் வேறெந்த மொழியிலும் இல்லை"** என தமிழைக் கற்றுத்தேர்ந்தவரும் வீரமாமுனிவர் எனத் தமிழில் அழைக்கப்படுபவருமான வேற்றுமொழிப் பாதிரியார் ஜோண் பெஸ்கி கூறியுள்ளார். தமிழின் இலக்கிய, கலை வளங்களை நோக்கின், அவை பற்றி நாம் அறிந்தவை அறியக்கூடியவை மிகச்சொற்பமே. ஏனெனில் தமிழின் இலக்கிய மற்றும் கலையின் ஆழத்தைக் காண எமது ஆயுள் சில நூறாண்டுகளாக இருந்தாலும் கூட அதுவும் போதாது. அத்தகைய இலக்கியச் செறிவும், கலை வளமும் கொண்ட தமிழை கட்டுரை போன்ற குறுகிய படைப்புக்களுக்குள் அடக்க முயல்வது என்பது சிப்பி ஒன்றுக்குள் கடல் நீர் முழுவதையும் சிறைப்பிடிக்க முயல்வது போன்றதாகும். ஓரிரு சான்றுகளை மட்டும் செம்மொழி நோக்கில் கருதுதல் இவ்விடத்தில் பொருத்தமானது என எண்ணுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பற்ற உலகப் பொதுமறையாம் திருக்குறள் எம்தமிழால் உலகிற்கு உவந்தளிக்கப்பட்ட ஒரு பொக்கிஷமாகும். வாழ்வியல் தத்துவங்கள் யாவற்றையும் இருவரிக்குறள்களுக்குள் இறுக்கமாகப் படைப்பித்துள்ளான் தமிழ்ப்புலவன் வள்ளுவன். சமணரின் கருத்துரைக்கும் சிலப்பதிகாரமும் சீவகசிந்தாமணியும், பௌத்தக்கருத்துரைக்கும் மணிமேகலையும், சைவக்கருத்துரைக்கும் பெரியபுராணமும் கந்தபுராணமும், வைகூஷ்ணவக் கருத்துரைக்கும் கம்பராமாயணமும், கிறிஸ்தவக்கருத்துரைக்கும் தேம்பாவணியும், இஸ்லாமியக்கருத்துரைக்கும் சீறாப்புராணமும் எம்தமிழ் ஈன்றெடுத்த தவப்புதல்வியரே. இவற்றுடன் சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர்காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், தற்காலம் என பல்வேறு காலகட்டங்களில் தமிழின் சிறப்பை வெளிபடுத்தியும் அதன் இருப்பை உறுதிப்படுத்தியும் எண்ணற்ற இலக்கியச் செல்வங்கள் தோன்றி நிலைபெற்றுள்ளன. நற்றிணை, குறுந்தொகை, நாலடியார், திரிகடிகம், பன்னிரெண்டு திருமுறைகள், குண்டலகேசி, வளையாபதி, நான்மணிக்கடிகை, ஆத்திசூடி, வாக்குண்டாம் என தமிழ் இலக்கியச் சொத்துக்களின் பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம். தமிழின் கலைப்படைப்பிற்குச் சான்றுகள் பல தமிழன் வாழ்ந்த, வாழ்கின்ற பிரதேசங்கள் யாவிலும் (இலங்கை உட்பட) கொட்டிக்கிடக்கின்றன. மகாவலிபுரம், மாமல்லபுரம் போன்ற இடங்களின் கட்டடக்கலை தமிழின் கலைப்படைப்பிற்கு சான்றுகளை வெளிப்டுத்துகின்றன. வென்றி பெற்றவனால் எழுதப்படுவதே வரலாறு எனும் யதார்த்தத்தின் அடிப்படையில் எம்நாட்டுத் தமிழ்ச்சான்றுகள் பல மங்கலடைந்தும், மறைக்கப்பட்டும், மாற்றப்பட்டுமுள்ளமை வருத்தமானதே.

நீண்ட வரலாறு, சுயமான தோற்றம், தனி மரபு, ஆரோக்கியமான இலக்கியக்கலை வளம் என்பவற்றை தனது சொத்துக்களாகக் கொண்டு இலங்கும் தமிழ் மொழி, இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள தமிழ் அமைப்புக்கள், ஆதரவாளர்களின் நீண்டகால தொடர்ச்சியான பெருமுயற்சியினால், 2004ம் ஆண்டு இந்தியாவில் செம்மொழியாக இந்திய அரசினால் அறிவிக்கப்பட்டது. செம்மொழித் தகுதிகாண் பரீட்சையில் எமது மொழி சிறப்பாகத் தோற்றி வெற்றியும் பெற்றுள்ளமை தமிழரெமக்குப் பெருமையெனினும் இத்தகைமை தமிழ் மொழிக்கு ஏன் இவ்வளவு தாமதமாக வழங்கப்பட்டுள்ளது என்பது கேள்விக்குரியதே.

ஒரு மொழி நீண்டு நிலைப்பதற்கு அதன் பேச்சுவழக்கும் எழுத்துவழக்கும் தொடருதல் அவசியம் ஆகும். எனவே, செம்மொழியாம் தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொள்ளும் பெரும் பேற்றினைப் பெற்று தமிழால் வளர்ந்த நாம் உலகின் எப்பாகத்தில், எந்நிலையில் வாழ்ந்தாலும் தமிழின் இனிமையும் இளமையும், பழமையும் புதுமையும், வழமையும் மகிமையும் குன்றாது இத்தரணி உள்ளவரை தமிழை வாழ்விக்க கடமையுடையோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமும் அறமும் (Law and Ethics)

**க.ந.தயாசீலன்**
சட்டக்கல்லூரி இறுதியாண்டு மாணவன்
சட்டமாணி (திறந்த பல்கலைகழகம்)

**"அறத்தின்ஊஉ ங்கு ஆக்கமும் இல்லை அதனை**
**மறத்தலின் ஊங்குஇல்லை கேடு."**

**அறமாகிய நல்ல காரியத்தை செய்வதைக்**
**காட்டிலும் நல்லதும் வேறில்லை**
**அதை மறந்து விடுவதைக் காட்டிலும்**
**கெடுதலும் வேறில்லை.**

அறத்திற்கும் சட்டத்திற்கும் உள்ள தொடர்பு - மக்கள் இன்பத்தை நோக்கியே இரண்டும் இயங்குவன ஆகும்.

ஆனால் செயல்முறையில் வேறுபடுவன  செயலை திருத்துகிறது சட்டம். சிந்தனையை உயர்த்துகிறது அறம் - கட்டாயப்படுத்துவது சட்டம். காரணம் காட்டுவது அறம் அச்சுறுத்துவது சட்டம், அறிவுறுத்துகிறது அறம் இயற்றப்படுவது சட்டம், இயல்பாய் அமைவது அறம் மாறும் தன்மையுடையவை சட்ட விதிகள் மாறாத்தன்மை கொண்டவை அறநெறிகள்.

உலகில் இன்ப வாழ்விற்கு அறநெறியே அடிப்படை என்றும் அறத்தை நிலைநாட்டுவதே முறைசெய்தல் என்றும் முறை செய்வதற்கு முன்னின்று உதவுவது சட்டம் என்றும் கண்டோம்.

அறநெறியை நிலைநிறுத்துவது, முறைசெய்தல் முறை செய்தலுக்குக் கருவியாக அமைவது சட்டம் என்றால் அறமும் சட்டமும் ஒன்றுதானா என்ற கேள்வி எழுகிறது.

## அறத்திற்கும் சட்டத்திற்கும் உள்ள உறவு என்ன?

மக்களின் இன்ப வாழ்வையே குறிக்கோளாகக் கொண்டு அறமும் சட்டமும் செயல்படுகின்றன. எனவே இரண்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கற்பு காக்கப்பட வேண்டும் என்று அறம் கூறுகின்றது. கற்பு அழிக்கப்படுவது குற்றம் எனக் கொள்கிறது சட்டம் வஞ்சனையும் வன்முறையும் அறத்திற்கும் சட்டத்திற்கும் மாறுபட்ட செயல்கள். இவ்வாறு அறமும் சட்டமும் ஓரளவு ஒன்றியிருக்கின்றன. பெரும்பாலான சட்ட விதிகள் அறக் கொள்கையின் அடிப்படையில் எழுந்தவையே. அற விதிகள் அனைத்தும் சட்ட விதிகள் ஆகிவிடுவதில்லை. ஈதலும் இரக்கமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கமும் ஒப்புரவும் அறக்கொள்கைகள் ஆகும். அவை சட்ட விதிகளல்ல. இது போன்ற அறத்தோடு தொடர்பில்லாத சட்ட விதிகளும் பலவுண்டு. உதாரணம் - வரிகளைப் பற்றிய சட்டங்களும் வீதி போக்குவரத்து விதிகளைக் கூறும் சட்டங்களும் அறநெறியோடு சம்பந்தம் இல்லாதவை.

சமுதாய நலன், தனிமனிதனின் ஏற்றம் இந்த இரண்டிற்கும் வேண்டிய விதிகளை அறநூல்களில் காண்கின்றோம். அன்புடைமை, அருளுடைமை, அவா அறுத்தல் போன்ற அறநெறிகள் தனிமனிதனின் உயர்வுக்கு உற்றவை எனலாம். இன்னா செய்யாமை, பிறனில் விழையாமை போன்றவை சமூக வாழ்விற்கும் இன்றியமையாத அறநெறிகள். சமூக நலனையே நோக்கமாகக் கொண்டு சட்டம் இயங்குவதால் அறவிதிகள் பலவற்றையும் சமுதாயக் கண்கொண்டு ஆய்ந்து சமுதாயப் பொது வாழ்விற்கு அவசியமான அறநெறிகளை அரசு சட்டமாக அமுல்படுத்துகிறது எனலாம். அன்புடைமையும் அருளுடைமையும் சட்ட விதிகள் ஆவதில்லை. பிறனில் விழையாமை சமூக நலனுக்கு அவசியமாவதால் அது சட்ட விதியாகவும் இருக்கிறது.

அன்புடையவனாக இரு என சட்டம் எவரையும் கட்டாயப்படுத்துவதில்லை. ஏனெனில் அன்புணர்வு உள்ளத்தைப் பொறுத்தது. பிறருக்கு தீங்கிழைக்காதே என்று சட்டம் கூறுகிறது. காரணம் தீங்கிழைத்தல் புறச் செயலைப் பொறுத்தது.

சமுதாயத்தைப் பாதிப்பது மனிதனுடைய செயல்கள்தான் எனவே அவன் செயல்களைச் செம்மையாக்க முயலுகிறது சட்டம். செயல்களுக்கு ஆதாரமானது மனித உள்ளம். அந்த உள்ளத்தை உயர்த்த முற்படுகிறது அறம். "உள்ளத்தால் உள்ளலும் தீது என்றும் மனத்துக்கண் மாசிலன் ஆதல் வேண்டும் என்றும் அறம் கூறுகின்றது. இவ்வாறு சட்டம் மக்களின் செயல்களைச் சீர்மையாக சீர்படுத்துகிறது. அறம் செயல்களுக்கு அடிப்படையான சிந்தனையைச் செம்மைப்படுத்துகிறது.

சட்ட விதிகளுக்கு மக்கள் பணிந்து நடக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறது. ஆனால் அறவிதிகளை மக்கள் ஏற்று நடக்க வேண்டும் என்று அரசு கட்டாயப்படுத்த இயலாது.

"ஒழுக்கம் விழுப்பம்தரும்" நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம் என்று காரணத்தோடு நன்னெறியை அறம் எடுத்துக் கூறுகின்றது. ஆனால் கட்டாயப்படுத்துவதில்லை.

இவ்வாறு நல்வழிகளில் மனிதனைக் கட்டாயப்படுத்தி செயல்பட செய்கிறது சட்டம். காரணம் காட்டி செயல்படச் செய்கிறது அறம். சட்டம் அச்சுறுத்துகிறது அறம் அறிவுறுத்துகிறது.

அன்பையும் இரக்கத்தையும் யாரும் போதிப்பதில்லை. இயற்கையாகவே இந்த அறப்பண்புகள் அமைகின்றன. அன்பும், அருளும், ஈகையும், இரக்கமும், மனித குலத்தின் இயல்பான அருங்குணங்கள் ஆகும். சட்டவிதிகளை நாம் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. சமுதாய நலனுக்கென்று இயற்றப்பட்டவையே சட்ட விதிகளாகின்றன. எனவே அறவுணர்வுகள் மக்கள் உள்ளத்தில் இயல்பாகவே எழுபவை சட்ட விதிகள் மக்களால் இயற்றப்படுபவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம் அல்லது தருமம் என்பது மனிதனின் தூய மனச்சான்றிலே நன்மை, தீமை என்ற இயல்பான பாகுபாட்டின் பயனாக எழும் உயர் உணர்வாகும். இந்த அறவுணர்வு மக்கள் அனைவருக்கும் பொதுவானது. நாட்டைப் பொறுத்தோ, காலத்திற்கு தக்கபடியோ அது அதிகமாக மாறுவதில்லை. அத்தகைய அறங்களை அடிப்படை அறம் எனக் கூறுகிறோம். அன்புடைமையும் அருளுடைமையும், வாய்மையும், சான்றாண்மையும் உலக மக்கள் அனைவருக்கும் உறுதிபயப்பன. அடிப்படை அறக் கொள்கைகள் எல்லா நாட்டினருக்கும் எல்லாக் காலத்திற்கும் பொதுவானவை. எனவேதான் சிறந்த அறநூல்கள் காலங்கடந்து நிற்பனவாக வாழ்வென்னும் கடலிலே வழிகாட்டும் கலங்கரை விளக்கங்களாக ஒளி வீசி கொண்டு விளங்குகிறது. ஆனால் சட்டவிதிகள் சமுதாயத்தின் தேவைக்கேற்ப சூழ்நிலைகளுக்கு காலத்தையொட்டி மாறுகின்றன.

வீதியில் இடப்புறமாக வண்டிகள் செல்ல வேண்டும் என்று ஒருநாட்டிலும், வலப்புறமாகப் போக வேண்டும் என்று மற்றொரு நாட்டிலும் சட்ட விதிகள் இருக்கின்றன. வரதட்சினை வாங்குவது குற்றம் என்று கூறும் இன்றைய சட்டம் சில ஆண்டுகளுக்கு முன் இந்திய நாட்டில் இருக்கவில்லை. அத்துடன் பெண்களுக்கு சொத்துரிமை கிடையாது என்று இருந்த சட்டம் இன்று மாறிவிட்டது. இவ்வாறு நாட்டிற்கு நாடு காலத்திற்குக் காலம் சட்டங்கள் மாறுபடுகின்றன. சமுதாயத்தின் தேவைகளுக்கேற்ப புதிய புதிய சட்டங்கள் தோன்றுகின்றன. எனவே சட்டம் மாறும் விதிகளைக் கொண்டிருக்கிறது.

மனிதனை மனிதனாக மதித்து மனித உரிமைகளைச் சிறப்பாகக் கடைப்பிடிக்கும் நாடான கனடாவிலும் அறக் கொள்கை சம்பந்தமான சட்டங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. கொடுங்குற்றங்களான கொலை, கற்பழிப்பு போன்ற குற்றங்களுக்குக் கூட வழங்கப்பட வேண்டிய மரண தண்டனை வழங்கப்படுவதில்லை. இதற்குப் பதிலாக ஆகக் கூடுதலான ஆயுட்காலச் சிறைத்தண்டனையே வழங்கப்படுகின்றது. இலங்கையிலும் 1975 ஆம் ஆண்டு இறுதியாக மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. அதன் பிறகு இத்தண்டனை இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. ஆனாலும் தற்போது கடுங்குற்றங்கள் புரிந்த கிட்டத்தட்ட 475 கைதிகளுக்கு நீதிமன்றத்தால் மரணதண்டனை வழங்கப்பட்டும் கூட இத்தண்டனை நிறைவேற்றப்படவில்லை. இலங்கை, கனடா போன்ற நாடுகளில் அறம் சார்ந்த கொள்கைச் செயற்பாடுகள் நிலைநிறுத்தப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறாக மக்களின் இன்பத்தை நாடியே வெவ்வேறு வழிகள் பின்பற்றுகின்றன. சட்டம் மனிதனைக்கட்டாயப்படுத்திநல்வழியில்நிறுத்துகிறது. அறம்காரணம்காட்டிநல்வழிப்படுத்துகிறது. சட்டம் அச்சுறுத்துகிறது. அறம் அறிவுறுத்துகிறது. செயல்களைச் சீர்திருத்துகிறது. சிந்தனையை உயர்த்துகிறது. அறம் தீமையை தடுக்கின்றது. சட்டம் நன்மைகளை வளர்க்கின்றது. இயற்றப்படுவது சட்டம் இயல்பாய் அமைவது அறம் மாறும் தன்மையுடையவை சட்ட விதிகள் மாறாத் தன்மை கொண்டவை அறநெறிகள்.

இவ்வாறு அறத்திற்கும் சட்டத்திற்கும் செயல்முறையில் வேறுபாடுகள் இருந்தாலும் நோக்கத்தில் மாறுபாடுகள் இல்லை. மனிதன் மனிதனாக மானசீகமாக வாழ அறம் வழிசமைக்கிறது. சமூகத்தில் கௌரவமான உறுப்பினராக வாழச் சட்டம் உதவுகிறது. அறத்தைக் காத்து நிற்கிறது சட்டம். சட்டத்திற்கு அடிப்படையாக அமைகிறது அறம்.

இந்த முறையில் சட்டமும் அறமும் ஒன்றியிருக்கின்றன. ஆனால் ஒன்றாக இருப்பதில்லை இணைந்து நிற்கின்றன. ஆயினும் இரண்டாகவும் தனித்துவமாகவும் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயமும் தத்துவங்களும்

நடராஜா வாஹீஷன்
முதலாம் ஆண்டு
இலங்கைச் சட்டக் கல்லூரி

இறைவனால் படைக்கப்பட்ட மக்கள் தொன்று தொட்டு இறைவனை முன்னிறுத்தி பின்பற்றி வந்த முறையே இன்று வழிபாடுகளாக காணப்படுகின்றன. இது ஆகமத்துக்குரிய இறைவனை முழுமுதலாகக் கொண்டு வழிபடும் முறையாகும். அத்தகைய வழிபாட்டு முறைகள் கொண்ட இந்து சமயம் ஓர் ஈடு இணையற்ற ஆகமமாகும். இன்று உலகில் உள்ள பௌத்தம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் போன்ற மதங்களின் தோற்றத்தை காலவரையறுத்துக் கூறலாம். ஆனால் இந்துசமயம் எப்போது தோன்றியதென்றோ எமது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் எப்போது உலகில் அவதரித்தார் என்றோ எல்லையிட்டு யாராலும் கூறமுடியாது.

உலகில் உள்ள சமயங்களின் போதனைகள் மனித வாழ்க்கையை சீர்தூக்குவதாகவே உள்ளன. பௌத்தம் ஒரு தருமமாகும் புத்த பகவான் மனித வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகளைக் கூறியுள்ளார். ஆனால் அவர் எதனையும் கட்டாயப்படுத்தவில்லை. கிறிஸ்தவ மதம் தேவன் உலகத்தைப் படைத்தார் என்று கூறுகின்றது. அதே போன்று இஸ்லாம் மனித வாழ்க்கைக்குத் தேவையான பின்பற்ற வேண்டிய தருமங்களை கூறுகின்றது. ஆனால் இந்துசமயம் ஆன்மீகத்தைப் பற்றியே சொல்லுகின்றது ஆன்மீக வளர்ச்சியடைந்த ஒருவர் உலகில் எங்குமே வாழக்கூடியவராக உள்ளார். எனவே இந்து சமயம் எல்லா இடமும் எல்லோருக்கும் சொந்தம் என்று சொல்லாமல் சொல்லுகின்றது. ஆன்மீக வழியில் இறைவனைக் காண்பதே இந்து சமயத்தின் அடிப்படைத் தத்துவமாகும்.

இந்துசமயப் போதனைகளைப் பின்பற்றி வாழ்ந்த முனிவர்கள் ரிஷிகள் அற்புதமானவற்றைத் தோற்றுவித்தனர். அகத்திய முனிவர் சித்தவைத்தியத்தைத் தோற்றுவித்தார். கீதையில் கண்ணபிரான் தர்மம் வெல்லும் என்பதனை பாரதப்போரில் அர்ச்சுனன் மூலமாக உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றார். எனவே இந்துசமயம் ஆன்மீக ரீதியிலான உண்மைகளை வெளியுலகிற்கு எடுத்துக்காட்டுகின்றது. இன்று உலகில் ஆன்மீக வளர்ச்சியடைந்தவர்களாலேயே அற்புதங்கள் படைக்கப்படுகின்றன. உலகில் எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும் சாதனைப்பயணங்கள் ஆன்மீகவாதிகளாலேயே தொடரப்படுகின்றன. அண்மை நாடான இந்தியாவை எடுத்துக்கொண்டால் அந்நாட்டில் வாழ்பவர்களில் அதிகமானோர் இந்துக்களாகவே உள்ளனர். இறைவனை வழிபடுகின்றவர்களாகவே உள்ளனர். அதனால் உலகில் ஆன்மீகத்தில் வளர்ச்சி அடைந்தவர்கள் இந்தியாவிலேயே அதிகமாக உள்ளனர் என்று சொல்வதில் தர்க்கத்துக்கு இடமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக வளர்ச்சியின் காரணமாக விஞ்ஞானத்துறையிலும் கூட சாதனைகள் படைக்கும் நம் தமிழர்கள் "**நாசா**" விஞ்ஞானகூடத்திலும் தொழில்புரிந்து வருகின்றனர். பண்டைக்காலத் தமிழன் கல்லை எடுத்தான் அவனுடைய கலை மகிமையை அதனுள் திணித்தான் கல்லைக் கடவுளாக்கினான். எனவே ஒவ்வொரு மனிதனின் சாதனைகளும் படைப்புக்களும் வெறுமனே அமையவில்லை. அவனின் படைப்புத்திறமைக்கு இறைவழிபாடும் ஆன்மீகவளர்ச்சியுமே உறுதுணையாக அமைந்துள்ளதென்பதை எவராலும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. இறைவழிபாட்டினை முதன்மையாகக்கொண்ட மகான்கள் இதனை வளர்ச்சியடையச் செய்யப் பாடுபட்டுள்ளார்கள். கடவுள் வழிபாட்டினை சிறப்புறச் செய்வதற்கே ஔவைப் பிராட்டியார் பிஞ்சு உள்ளங்களில் **'ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்'** என்று போதனை செய்துள்ளார். எனவே கடவுள் வழிபாட்டின் முக்கியத்துவம் இந்துமதத்தில் அதிகமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் கட்டாயப்படுத்தப்படவில்லை. உலகில் உள்ள சமயங்களில் வழிபாடுகள் நிறைந்துள்ள சமயம் இந்துமதமாகையால் அம்மதத்தைப் பின்பற்றும் பக்தர்கள் ஆன்மீகவளர்ச்சி கண்டுள்ளனர்.

மனிதனாகப் பிறந்தவன் எதை எதையோ ஆராயத்தொடங்கினான். மனிதன் வானத்தை அளந்தான், கடலை அளந்தான். சூரியனை அளந்தான். உலகத்தையே அளந்தான். ஆனால் அவனால் இறைவனை அளக்க முடியவில்லை. அவனுடைய ஆற்றல் அறிவு இறைவனை அளக்கக் காணாது. விஞ்ஞானிகள் உலகில் எல்லாவற்றையும் கண்டுபிடித்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவர் கூட இறைவன் இருக்கின்றானா? இல்லையா? என்பதைப்பற்றி அறிய முற்படவில்லை. ஏனெனில் அவர்களால் அது ஒரு முடியாத விடயமாகவே உள்ளது. அவர்களுக்கு மேலே ஒரு சக்தி இயங்குவதாக ஏற்றுக்கொண்டுள்ளனர். அச்சக்தியையே ஒவ்வொரு சமயத்தவரும் இறைவன் என்று ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அந்த மேலான சக்தியையே இந்து சமய குரவரான அப்பர் சுவாமிகள் கடவுளாக நேரில் கண்டதாக அவரின் தேவாரத் திருப்பாடல்களில் கூறியுள்ளமையிலிருந்து புலப்படுகின்றது. இந்து சமய தத்துவங்களின் அடிப்படையே இறைவனாவான். ஒரு காலத்தில் இறைவன் ஒருவனே என்று வணங்கப்பட்டுள்ளார். பின்னர் ஒரு காலத்தில் பல தோற்றங்களில் பல தெய்வங்கள் தோன்றியதாக மரபுவழி வந்த கருத்துக்கள் பரவலாயின. இதன் காரணமாக இந்துக்களின் மனதில் பல வழிபாட்டு முறைகள் உருவாகின. எனினும் சிவபெருமானே இந்துக்களின் முழுமுதற் கடவுள் என்று ஊர்ஜிதப்படுத்தப்படுள்ளது. அந்த சிவபெருமானின் பல அவதாரங்களே பல தெய்வங்களாக வணங்கப்பட்டு வருகின்ற, தத்துவ நடைமுறை வழிபாடுகளில் காணப்படுகின்றது. இதனையே **'பரம்பொருள் ஒன்றே அது மெய்ப்பொருள், பதி, இறை என்றெல்லாம் வேறுபடுகின்றது'** என்று ஆகமம் குறிப்பிடுகின்றது.

ஒரு மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை அவனுக்கு துன்பம் ஏற்படும் போது **'கடவுளே என்னைக்காப்பாற்று'** என்றுபுலம்புகின்றான். எனவேஇறைவனுடையமகிமையைஅப்போதுதான் அவன் உணர்கின்றான். இறைவனை நித்தமும் வழிபடுகின்றவன் தனக்குக் கடவுள்தான் துணையாக நிற்கிறார் என்று அங்கலாய்த்துக் கொள்கின்றான். ஆகையால் இறைவனின் மகிமையை சொல்லில் அடக்க முடியாது. பரம்பொருளாகிய சிவபெருமானின் பேரருள் உலகம் முழுவதுமே வியாபித்துள்ளது. எமது நாட்டில் உள்ள பிற சமயங்களின் போதனைகள் மனித வாழ்க்கையை சீர்தூக்குவதாகவே உள்ளன. ஆனால் இந்து சமயம் ஆன்மீகத்தை மையமாகக் கொண்ட வழிமுறைகளையே பின்பற்ற வைத்துள்ளது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'அவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்'** என்று இறைவன் புகழ்ந்து கூறப்பட்டுள்ளார். இறைவனுக்கு நிலையான இடம் கிடையாது. அப்படி இருந்திருந்தால் இறைவனைப்பற்றி ஆராய்ச்சி பண்ண தொடங்கி இருப்பார்கள். இறைவன் மீது பேரன்பு வைத்து நித்தமும் மனதில் நினைத்து வணங்கியவர்களாலேயே இறைவனின் உண்மை நிலையை அறிய முடிந்தது. இறைவனை போற்றிப் புகழ்ந்தவர்களாலேயே இறைவனைக் காண முடிந்தது. இறைவனைப் பற்றிய சிந்தனைகள் இருக்க வேண்டும் என்பதற்காகவும் இறைவனை நினைவு கூறுவதற்காகவும் எம் முன்னோர்கள் மக்களின் பெயர்களை இறைவனின் பெயர்களாக வைத்துள்ளார்கள். எனவே தமிழரின் தூரநோக்கு சிந்தனைகள் எவ்வளவு தூரத்திற்கு வளர்ந்திருக்கிறது என்பதை இதிலிருந்து காணக்கூடியதாகவுள்ளது.

ஆறுமுகநாவலர் அவர்கள் இறைவனைப்பற்றிக் கூறும்போது இறைவன் வேறொரு உருவில் வந்தே பக்தர்களின் துன்பங்களை நீக்குகின்றார் என்று கூறியுள்ளார். இது முற்றிலும் உண்மை. சில பக்தர்கள் பேராபத்தை நோக்கும் போது இறைவனின் அருள் வேறொருவரின் சிந்தையில் வந்து பேராபத்தை தடுத்த சம்பவங்கள் உண்டு. உதாரணமாக சொல்லப்போனால் ஒருவர் பஸ் வண்டியில் தூரப் பிரயாணம் செல்ல நினைத்து ஆவண செய்யும் போது வேறொரு நண்பர் அவரை சந்தித்து அவர் புகையிரதத்தில் போவதாக கூறி இந்நண்பரையும் கூட்டிச் சென்றுள்ளார். அதே நேரத்தில் போவதற்கு எதிர்பார்த்த பஸ் வண்டி கோரவிபத்தைச் சந்தித்து அதில் பயணித்த பெரும்பாலான பயணிகள் உயிரிழக்க நேரிட்டது. இது போன்ற பல சம்பவங்களில் பக்தர்களுக்கு இறைவன் மற்றவர் ஊடாக அருளிய சந்தர்ப்பங்கள் எத்தனையோ உண்டு. இதுதான் இறைவனின் மகிமையாகும்.

மேலை நாடுகளிலுள்ள ஐரோப்பிய இனத்தவர்கள் கூட வாழ்க்கையில் நிம்மதியை தேட ஆன்மீக அமைதிக்காக சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமயத்தை பின்பற்றி வருகிறார்கள். ஆனால் நாங்கள் சைவனாகவே உலகில் தோன்றினோம். ஆன்மீக வளர்ச்சியுடன் நிம்மதியாக வாழ்கின்றோம்.

**சைவம் வாழ்க! சைவ உலகம் வாழ்க!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Law is A Necessary Evil

**Tharsika Thirukumaranathan**

Preliminary Year, Srilanka Law College

A law is "a rule of conduct or procedure established by the Custom, Agreement or Authority" by which a society is governed. The Law is different from the other type of rules which govern certain types of behavior. Rules in regards to the Sports or other Games could not be treated as Law.

In Sri Lanka, the law passed by the Parliament known as "Act of Parliament"; and the law passed by the Provincial Councils known as "Statute". Sri Lankan Courts have no power to question the validity of the Act of Parliament. In other words, Sri Lankan Courts have no power to invalidate an Act of Parliament - Article 80(3) of the Constitution of Democratic Socialist Republic of Sri Lanka of 1978.

Laws have been necessary throughout the history of human life in order to maintain peace and harmony in the society. Laws are the oil in the wheel that keeps society running fairly smoothly. Laws are important in a society as a means to keep people in a somewhat semi-controlled environment, to keep things uniform in a huge society. Ultimately, it will never happen this way, but if everyone were following all the laws at all times, then everyone is being safe and controlled.

Laws are very important to the society to ensure the safety of our families and our way of life. Laws give us rules to follow so we live with structure and without chaos. If we didn't have laws to tell us what we aren't allowed to do, people would do whatever they want and there would be no proper consequences. Without laws, there is no punishment for bad behavior and so no deterrent for people to stop those committing crimes.

Law can be said to perform four different functions, each of which is of every very importance to our welfare. These are could be treated as goodness of law:

The primary important function of law is to defend us from evil, that is, those who would seek to harm us for no good reason. It does not mean that the law is only concerned with bringing evil people to account for their actions.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The second important function of law is promoting the common good among the people living a society. A society made up of people who are simply concerned to pursue their own self-interest needs law because there are situations where if everyone pursues their own self-interest, everyone will be worse off than they would have been if they acted differently.

The third important function of law is resolving disputes over limited resources. As every family knows, in any community there will always be disputes over who should have what of a limited number of resources. Law is needed to resolve these disputes. The law is necessary not only resolve the disputes within the family members, but also between the private individuals.

The fourth important function of law is encouraging and helping people to do the right thing. UK legal system contained a large number of 'morals laws' – that is, laws that were designed purely and simply to stop people acting immorally. Whether or not law has a role to play in encouraging us to do the right thing, no one doubts the continuing importance of law in performing the functions set out above. As a result, there is a widespread acceptance that the health and wealth of nations is crucially dependent on how far the rule of law is maintained and observed in those nations.

It should be acknowledged that numerous criticisms are made of the benefits that are supposed to flow from the existence of law, and the observance of the rule of law. The Society respects the importance of the rule of law and private property rights are no guarantee that the society will be particularly just. The rule of law, it is argued, is compatible with great oppression, inequality and poverty.

The law, in its majestic equality, forbids rich and poor alike to sleep under bridges, to beg in the streets, and to steal their bread. Because of poor enforcement of law, the Law seems to be an Evil. If Enforcements of laws go in the wrong hands, law can become an instrument of evil, a means by which a country's rulers can rob people of their property and oppress minorities. If the country is administered by the whims and fancies of the Rulers, not only the question arises whether the Law exists, but also the Law will become an Evil.

Failure of providing equal access to justice also makes law as an Evil. Promoting access to justice is fundamental to the rule of law, good governance, democracy and observance of human rights. Educating people about their legal and human rights is also fundamental in promoting equal access to justice. If people do not know about their rights and cannot exercise them, the fact that the Constitution and other laws have enshrined them is of very little practical impact; the law will become an Evil.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In Sri Lanka, Universities are closed time to time without knowing reasons. Power cuts and Water cuts are enforced without any restriction. Most of the Elder parents are sent to Elders home. Most of the Women are going to Middle East for the purpose of employments leaving their kids in Sri Lanka without adequate safeguard for them. Adequate wages are not paid to Estate workers and employees. Dogs are moving in and around the street all times without any restriction. Day to day new news coming through electronic media and daily news papers indicates that Narcotic Drugs are freely coming into our Country. The school students and other young people are free to easy access to Narcotic Drugs in each and every town. Child abuses and Sexual abuses are also increasing. These facts indicate that there are loop holes in law.

Lack of legal awareness is very serious issue in our society, therefore people are denied equal access to justice. Therefore the Law is seemed to be an evil for under privilege people. Judiciary and Police have been playing an important role in proper enforcement law. They should work together, proper training and facilities should be provided for them. Day to day news in the media further indicates bribery and corruption are regular practice in very important sections of the State. If it so, it would be a bar for proper enforcement of law. These facts also make law as an Evil.

There may be various counter arguments on law and enforcement of law, the Society respects the importance of the rule of law. The law is a good instrument for regularize the society in a proper way, to resolve the disputes and maintain peace and harmony in the society. Success of the law depends on educating people about their legal and human rights in order to promoting equal access to justice, promoting an efficient function of Judiciary and Police and also implementation of the law of Customs.

The Law should always be used as a Shield, not as a Sword. If the Rulers of the country use the Law as a Sword, then the Law will operate as an Evil in the Society.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவியல் தடயங்களில் முக்கிய பங்கினை வகிக்கின்ற DNA சான்று

**R. Peranavahh,**
Second Year
Department of Legal Studies, Faculty of Humanities and Social Science,
The open University of Sri Lanka.

இன்றைய தொழில்நுட்பப் புரட்சி யுகத்தில் DNA இனை (Deoxyribonucleic acid) விஞ்ஞான ரீதியிலான முக்கிய சான்றாக பிரயோகிக்கும் அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது. DNA சான்று பிரயோகிக்கப்பட முன்னர் இருந்த விசாரணை முறையில் இருந்து மிகப்பெரிய மாற்றம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. குற்றவியற் சட்டத்துறையில் குற்றவாளிகளை இனங்கண்டு தண்டிப்பதற்கும் நிராபராதிகளை விடுவிப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்களை அடையாளங் காணவும் DNA சான்று பயன்படுகின்றது. தற்காலத்தில் குற்றவியல் நடபடிமுறையில் DNA பகுப்பாய்வு வலிதான நுட்பமாகக் காணப்படுகிறது.

DNA இன் முக்கிய தன்மையானது ஒவ்வொரு நபருக்கும் தனித்துவம் மிக்கதாக உள்ளது. இச்சான்றினை பதிவு செய்யும் படிமுறையில் நபர் ஒருவருடைய இழைய மாதிரியிலிருந்து DNA ஒழுங்கானது பெறப்படும். இவ் ஒழுங்கானது குற்றம் நடைபெற்ற இடத்திலிருந்து மாதிரியுடன் ஒப்பீடு செய்யப்படும். இதன்போது ஒற்றுமை காணப்படின் குற்றம் நடந்த இடத்திலிருந்து பெறப்படும் DNA, சோதிக்கப்பட்ட நபரிடமிருந்து பெறப்பட்டது எனக் கொள்ள முடியும். குறிப்பாக DNA நபர் ஒருவரின் இரத்தமாதிரி, உமிழ் நீர், விந்து, சிறுநீர் மற்றும் வியர்வை போன்ற உடலின் கலங்களிலிருந்து பெறக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களில் குற்றச்செயல் இடம்பெற்றதன் பின்னர் உடனடியாக இச்சான்று பெறப்படுகின்றது. காரணம் குற்றவியல் வழக்கினை இலகுவாகவும் துரிதமாகவும் கொண்டு சென்று முடிப்பதற்கு உதவுகின்றது.

**இலங்கையில் DNA சான்றின் பிரயோகம்.**

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டத்திற்கிணங்க DNA சான்றானது, 2005 ஆம் ஆண்டு 14ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட குடியியல் சட்டக்கோவையின் பிரிவு 122 இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் முதன்முறையான DNA சான்றானது ஹோகந்தரக் கொலை வழக்கிலே பிரயோகிக்கப்பட்டது. இரண்டாவதாக சரத் அம்பேபிட்டிய கொலை வழக்கு. அதன்பின்னர் றோயல் பார்க் கொலை வழக்கு போன்றவற்றில் DNA யினை நிபுணத்துவ சான்றாகப் பயன்படுத்திய வழக்குகளாக நாம் எடுத்து நோக்க முடியும்.

எமது நாட்டில் சான்றியல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 45 மற்றும் குடியியல் சட்டக்கோவையின் பிரிவு 122 ஐத் தவிர DNA சான்றினை ஆளுகின்ற எந்வொரு சட்டவாக்கமோ அல்லது விதிகளோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. இதனுடன் நடைமுறையிலுள்ள சட்டங்களிலும் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. இதன் காரணமாக நிறைவேற்று அதிகாரிகளான Forensic Scientist சந்தேக நபர்களின் அந்தரங்க உடற்பாகங்களின் மூலம் மாதிரிகளைப் பெறுவது கடினமாக உள்ளது.

இரண்டாவதாக DNA சான்றினைக் கொண்டு விசாரணை நடத்துவது தொடர்பில் அதிகாரிகளுக்கு போதியளவான தொழில் நுட்ப அறிவு காணப்படாமலும் இருக்கின்றது. குற்றம் நடைபெற்ற இடத்திலிருந்து வகைப்படுத்தப்படாத பகுக்கப்படாத DNA பெறப்படுகின்றது. பாலியல் குற்றங்களைப் பொறுத்தமட்டில் பாதிக்கப்பட்ட திறத்தவர்கள் குற்றம் தொடர்பில் முறையிடுவதில்லை. அல்லது காலந்தாழ்த்தி முறைப்பாடு செய்யப்படுவதனால் தேவையான மாதிரிகளைப் பெறமுடிவதில்லை. DNA பரிசோதனை தொடர்பில் தரப்படுத்தல் இல்லாமை இன்னொரு பிரச்சனையாக உள்ளது. இதனால் இச்சான்றின் நம்பகத் தன்மை தொடர்பில் சந்தேகம் ஏற்படுகின்றது. DNA சான்று தொடர்பான ஒரு தேசிய தரவாக்கம் இல்லாமை, குற்றவியல் துறையில் DNA சான்றின் பயன்பாட்டை மட்டுப்படுத்தியுள்ளது.

குறிப்பாக நபர் ஒருவரின் அந்தரங்கத் தன்மைக்கான உரிமை முக்கிய விடயமாக உள்ளது. ஆகவே DNA யை பயன்படுத்தல் மற்றும் சந்தேக நபர், பாதிக்கப்பட்டவர் மற்றும் சம்பந்தப்பட்ட நபர்கள் போன்றவர்களின் அந்தரங்கத் தன்மைக்கான உரிமை ஆகியவற்றுக்கிடையில் ஒரு சமனிலையைப் பேண வேண்டியது அவசியமாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள புங்குடுதீவு கிராமத்தில் 13.05. 2015 அன்று சிவலோகநாதன் வித்யா என்ற பாடசாலை மாணவிக்கு இடம்பெற்ற கூட்டு வன்புணர்வு மற்றும் கொலை தொடர்பான சந்தேக நபர்களுக்கு உடனடியாக நீதவான் DNA பரிசோதனை எடுக்குமாறு பணித்தார். ஆகவே இவ்வழக்கில் DNA சான்று முக்கிய சாட்சியமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இலங்கையில் தற்போது DNA சான்றானது பல குற்றங்கள் தொடர்பில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே இவை தொடர்பான தனியான சட்டங்கள் பாராளுமன்றத்தால் இயற்றப்பட வேண்டியது முக்கியமானதொன்றாகும். இவற்றின் முக்கியமாக மாதிரிகளைப் பெறுவது மற்றும் தண்டிக்கப்பட்ட அத்துடன் சந்தேக நபர்களின் DNA தரவாக்கங்கள் தொடர்பில் அந்தரங்கத் தன்மைக்கான உரிமைகள் மற்றும் DNA சான்றினுடைய பயன்பாடு தொடர்பான சமனிலை பேணல் தொடர்பில் சிறு குற்றங்களின்போது சந்தேக நபரின் சம்மதத்தினைப் பெறல் மற்றும் பாரதூர குற்றங்களின்போது சந்தேக நபர்களின் சம்மதமின்றி மாதிரிகளைப்பெறுவது தொடர்பில் ஏற்பாடுகள் உருவாக்கப்பட வேண்டியது அவசியமான தொன்றாகும்.

இலங்கையில் காவல்துறையினர் புதிய நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கும் குற்றம் நடைபெற்ற இடத்தில் DNA சான்று பாதிக்கப்படாமல் விசாரணையை மேற்கொள்வதற்கு சிறப்பான முறையில் பயிற்சி அளிக்கப்படவேண்டும். ஆகவே சட்டத்தினை நடைமுறைப்படுத்துபவர்களுக்கு நடைமுறையிலுள்ள தொழினுட்ப அறிவினை வழங்கவேண்டியது முக்கியமானதொன்றாகும். அத்தோடு DNA பகுப்பாய்வு தொடர்பான வசதி வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யவேண்டும். ஏனெனில் இச்சான்றின் நம்பகத்தன்மை DNA மாதிரிகளின் தரம் மற்றும் தெரிவு என்பவற்றில் தங்கியுள்ளன. எனவே இனிவரும் காலங்களில் DNA சான்று இலங்கையில் குற்றவியல் வழக்குகளில் முக்கிய சாட்சியமாக விளங்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகமும் அதன் மகிமையும்

**க. பரமேஸ்வரன்**
இறுதிநிலை ஆண்டு
இலங்கைச் சட்டக்கல்லூரி

இறைவன் ஜோதிவடிவானவன். பஞ்சபூத சக்திகளையும் தன்னுள்ளே அடக்கி ஆள்பவன். தன்னுடைய சக்தியை ஒரு கல்லினுள் நிலைபெறச் செய்து தன்னை நம்பி வருபவர்க்கெல்லாம் அருள் பாலிக்கிறான். இக்கலியுகத்தில் பிறவியெடுத்தநாம்,பிறவிப்பயன் அடையவேண்டும் என்று நம் முன்னோர்கள், ரிஷிகள், ஞானிகள் இவர்களைக் கொண்டுபூஜைகள்,விரதங்கள், யாகங்கள், தானதர்மங்கள் ஆகியன செய்து மனிதன் தெய்வத்தன்மை அடைந்து வாழ்வாங்குவாழ வழி வகுத்துள்ளார்கள். அதில் மிக முக்கியமான ஒன்று ஆலயம் கட்டுதல், ஆலயத் திருப்பணிசெய்தல் என்பதாகும். மனிதர்கள் எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கும் இறை சக்தியை ஈர்த்துச் சேர்த்து மூலஸ்தானத்தில் நிலைப்படுத்தி வழிபாட்டுத்தலமாக உருவாக்குகின்றார்கள்.

அந்தவகையில் ஆலயங்கள் மனிதரின் வாழ்க்கைக்கு அடிப்படைத் தளங்களாக அமைந்துள்ளன. காலங்காலமாக இவ்வாலயங்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டுவந்தமை வெளிப்படை. சிவபெருமான் எங்கும் வியாபகமாய் விளங்குமிடத்தும் சிவலிங்கவடிவில் தயிரில் நெய்போல் வியங்கிநிற்பார். திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் போன்றவற்றை நிகழ்த்துவதும் நித்திய பூஜைகளை ஒழுங்காக நடாத்துவதும் மிக உன்னதமான சிவபுண்ணியங்களாகும். "இந்தசாரீரம் நமக்கு கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முக்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்" என்பது ஆறுமுகநாவலர் அவர்களின் அருமைத் திருவாக்கு. சிவபெருமான் தம்மைத் தாபித்து வழிபட்டு உய்தி பெறுவற்கே நமக்குத் தனு, கரண, புவன, போகங்களைத் தந்தருளினார். எங்கும் நிறைந்துள்ள இறைவனை எல்லோருங் கூடி ஓரிடத்தே நின்று வழிபடுவதற்கு வாய்ப்பானது ஆலயம்.

திருக்கோயில் முதலியவை அழிந்தால் அவைகளை முன்போலச் செய்தவர் பெறும்பயன் அவைகளை முன் செய்தவர்கள் பெற்ற பயனிலும் ஆயிரமடங்காகும். சிவாலயங்களில் நித்திய பூசை நிகழ்வதற்கு வழிவகுக்கும் கும்பாபிஷேகத்தை ஆகமங்கூறும் விதிப்படி செய்தலும், செய்வித்தலும் இன்றியமையாததாகும். ஆலயங்களில் நித்தியபூசைகள் முறையாக நடைபெறுமாயின் காலந்தோறும் மழை தவறாது பெய்யும், வளம் பெருகும், மக்கள் நோய் இன்னலின்றிவாழ்வார். ஆலயங்களில் கும்பாபிஷேகம் முதலிய கிரியை செய்வதற்கும், பெரும் பொருள் தேவைப்படும். தனிநபர் ஒருவராலோ அன்றி ஒரு சிலரால் மட்டுமோ இதனை நிறைவேற்றுதல் இயலாததாகும். சைவசமயிகள் அனைவரும் ஒற்றுமையுணர்வுடன் சிரத்தையோடு ஒருங்கு கூடினால் தான் இறைவனுக்குரிய இக்கைங்கரியம் சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேறும். சிவாலயத் திருப்பணிக்குப் பொருள் கொடுப்பவர்களும் அப்பொருளை வாங்கிச் சிவாலய திருப்பணிகளைச் செய்பவர்களும் முக்தி பெற வாய்ப்புண்டு. திருப்பணி செய்வார்க்கு சிவனையுன்னிச் செம்பொன் விருப்புடனீவார் பெறுக வீடு என்பது சைவசமயநெறி கூறும் உண்மையாகும். கைங்கரியத்திற்கு என உறுதியளித்தபொருள் சிறிதளவேயாயினும் சிறிதும் தடையின்றி உடன் கொடுத்து விடுதலே ஒழுங்காகும். ஆலயந்தானும் அரனைத் தொழுமே என்பது சைவசித்தாந்தத்தின் முடிந்த முடிபு.

இறைவனை வழிபட நிறுவப்படும் மண் அம்சம் வாய்ந்த விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்வதற்காக விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் குறித்து நிகழும் கிரியைகள் கும்பாபிஷேகக் கிரியையின் உயர் நிலையைக் குறிக்கின்றன. கும்பாபிஷேகக் கிரியை நிகழ்வதற்கு அமைக்கப்படும் யாகசாலை ஆகாயவெளியில் இங்கு அமைக்கப்படும். குண்டங்களில் அக்கினியும் வாயுவும் ஒன்றிணைந்து விளங்குகின்றன. மண், நீர், நெருப்பு, காற்று, விண் எனப்படும் ஐம்பூதங்களும் இவற்றுக்குப்புறம்பாய் இருந்து விளங்க ஆற்றல் பெருகும். சூரியனும் சந்திரனும் இவற்றின் எசமானனதும் ஆகிய எட்டுமே இதில் அடங்குகின்றன. இவ்வெட்டு அம்சங்களில் இறைவனை உணர்ந்து வழிபடுதலே கும்பாபிஷேக கிரியையின் உயர் நோக்கமாகும். நவகுண்டங்களில் அக்கினியைப் பல்வேறு நிலையில் பூசித்து அந்தந்த குண்டங்களுக்குரிய அவிப் பொருட்கள் பூர்ணாகுதி முதலியன இடம்பெற்றது. யாகம் பூரண பொலிவு பெறுவது குறிப்பிடத்தக்கது. வேதகாலங்களில் தெய்வங்களைக் கூவியழைத்து வழிபட உதவிய பாடல்கள், மந்திரங்கள் எனப் போற்றப்பட்டன. ஆலயத்தின் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்படும் மூர்த்திகள் மந்திரவடிவமாக இருந்து ஆன்மாக்களுடைய கர்மாக்களையும் மாயைகளையும் போக்கி அருள்பாலிக்கின்றனர்கள். மந்திர ஒலிக்கு ஆற்றல் அதிகம். "மந்திரங்களின் மேல் கிரியைகளில்லை" எனக் கூறுமளவுக்கு ஆகமமரபில் மந்திரங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. உள்ளார்ந்த இறைவன்பால் ஈடுபாடு கொள்ளச் செய்யவும் இறைவனை உணரும் தெய்வீகச் சக்தியை ஏற்படுத்தவும், மந்திரங்கள் தூய்மையுடன் உச்சரிக்கப்படுகின்றன. மந்திரங்களில் சிறந்த மந்திரமாகக் கருதப்படும் காயத்ரீமந்திரத்தின் சக்தி ஒலிக்கப்படும் இடத்திலிருந்து ஆயிரம் மீற்றர் தொலைவு வரை வியாபித்திருக்கும் என கூறப்படுகின்றது.

கல்லினால் வடிவமைத்த தெய்வ திருவுருவங்களை தானியவாசம், ஜலவாசம் செய்வார்கள். தங்கம், வெள்ளி அல்லது செம்புத்தகட்டில் மந்திரங்களை எழுதி, நாற்பத்தெட்டு (48) நாட்கள் முறைப்படி வழிபாடுகள் செய்து அவற்றில் தெய்வ சிலைகளை பிரதிஷ்டை செய்யும். இடத்தில் பதிய வைப்பார்கள். கல்லினாலும், மண்ணினாலும், உலோகங்களாலும் மனிதனால் உருவாக்கப்பட்ட தெய்வ உருவங்களுக்கு சக்தியை உண்டு பண்ணுவதற்காகச் செய்யப்படும் பலவித யாகங்களுள் ஒன்றுதான் கும்பாபிஷேகம் ஆகும். கும்பாபிஷேகம் என்பது குடத்தில் உள்ள புனித நீரைக் கொண்டு இறைவனை நீராட்டுதல் என்பது பொருள். ஆனால் கும்பாபிஷேகம் என்னும் அபிடேகம் சிறப்பாக மந்திரபூர்வமாப் பெருமளவில் கிரியைகள் பலியச் செய்வதொன்றாகும். இதற்காக வேதத்தில் சிறந்தவர்களும், சிவாபூஜையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்களும் தேவையான யாககுண்டங்களை அமைப்பர்கள். இனிய மந்திரங்களை ஓதியாகத்தில் அக்கினி வளர்ந்து அரியவகை மூலிகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை அக்கினியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்து தோன்றும் ஜோதியை கும்பத்தில் சேர்ப்பார்கள். தெய்வசக்திகள் உருவேற்றப்பட்ட காச தீர்த்தங்களால் சிலைகளுக்கு அபிஷேகம் செய்து கருவறையில் இயந்திரங்கள் பதித்து சிலைகளை பிரதிஷ்டை செய்வார்கள். கோபுரத்தின் மேலுள்ள கலசங்களுக்கும் உயிரூட்டப்பட்ட சக்தி வாய்ந்த கலச தீர்த்தங்களால் அபிஷேகம் செய்யப்படும். சைவர்கள் மகா கும்பாபிஷேகம் என்றும் வைணவர்கள் மகாசம்ப்ரோசஷணம் என்றும் கூறுவர். ஆகம விதிப்படியும், சாஸ்திர முறைப்படியும் தெய்வ உருவங்களில் சத்தியையும், கோபுரகலசத்தில் உருவேற்றிய சக்தியையும், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊக்கப்படுத்தி மனிதவாழ்க்கை மேம்படுவதற்காக நடைபெறுவதே மகாகும்பாபிஷேகம். மகா கும்பாபிஷேகத்தன்று முப்பத்து முக்கோடி தேவர்களும் நமக்கு ஆசி வழங்குவார்கள் என்பது ஆன்றோர் வாக்கு.

ஆகம மரபில் கும்பாபிஷேகம் முக்கியத்துவம் பெறுவதினால் அது பல்வேறு நிலைகளில் உரிய ஒழுங்கில் நிகழ்த்தப்பட்டுவருகின்றது. அனராவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நான்கு வகையாக கும்பாபிஷேகம் வகைப்படுத்தப்படுகின்றது. ஆலயம் இல்லாத ஓரிடத்தில் ஆகமவிதிகளுக்கமைய புதிய தொரு ஆலயம் அமைத்து அங்கு இறைவனை எழுந்தருளச் செய்தல் அனராவர்த்தனம் எனப்படும். நித்திய நைமித்தியங்கள் முறையாக நடைபெற்றுவரும் ஆலயத்தில் விமானம், கோபுரம், கருவறை, மண்டபம், பரிகாரம், பரிகாரக் கோயில்கள் விக்கிரகங்கள் ஆகியவை பழுதடைந்தால் பாலஸ்தாபனம் செய்து திருப்பணி மூலம் புனரமைத்து பிரதிஷ்டை செய்தல் புனராவர்த்தன பிரதிஷ்டை என்று பெயர் பெறும். ஆலயத்தை எவ்வாறு அமைத்தல் அதிலே மூர்த்தியை எவ்வாறு பிரதிட்டை செய்தல் என்பனவாகிய கிரியைகளைக் கூறும் ஆகமம் கும்பாபிஷேகத்துக்குச் சிறப்பிடம் கொடுத்துள்ளது.

நல்லநேரம் முகூர்த்தம் பார்த்து குடத்துநீரை மூல மூர்த்தி, பரிவார மூர்த்திகள், விமானத்துக்கலசம் முதலிய இடங்களில் அபிடேகம் செய்வதைக் கண்ணாற் காணும் பேறு மனிதப்பிறப்பெடுத்த பயனாகும். கும்பாபிஷேகத்தன்று வணங்க முடியாதவர்கள் அதனைத் தொடர்ந்து நடைபெறும் 48 நாள் மண்டல பூஜையில் கலந்துகொண்டு கடவுளை வணங்கினாலும் இறைவன் திருவருள் நிரம்ப துணைசெய்யும்.

கும்பாபிஷேகம் இடையூறின்றி நிகழ விநாயகப் பெருமானை வழிபடுதல் முதன்மைபெறும். கணபதி வேதாகமத்தின் மூலம் இவ்வழிபாடு நிகழும். இதனைத் தொடர்ந்து கும்பாபிஷேகத்தைத் தலைமையிட்டு நடாத்தும் ஆச்சாரியாரை தேர்ந்தெடுத்தலாகிய ஆச்சாரியவாணம் நிகழும். கும்பாபிஷேகத்தின் முக்கிய கிரிகைகளுள் திரவியபாகம், அனுக்ஞைகிராம சாந்தி, பிரவேசபலி, ரசேஷாக்னஹோமம், திசாஹோமம், சாந்திஹோமம், மூர்த்தி ஹோமம், வாஸ்துசாந்தி, நவக்கிரகமகம், மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், பிரசன்னாபிஷே கம், பிரசன்னபூஜை, கடஸ்தானபனம், ஜலாதிவாசம், தான்யாநிவாசம், நயனோன்மீலனம், கிராமபிரதஷினம், சயணாரோபணம், அக்கினிகார்யம், சாமகர்ணம், பிம்பபிரதக்ஷணம், பிம்ப ஸ்தாபனம், அஷ்டபந்தனம், எண்ணைக்காப்பு பிம்பசுத்தி, சடத்துவநியசம், ஸ்பர்சாகுதி, யாத்ராதானம், கும்ப உத்வாசணம், ஸ்தூபிஸ்தானம், தீபாராதனை, ஆசார்யோத்சவம், மண்டலபூஜை, மண்டலபூர்த்தி ஆகியன குறிப்பிடத்தக்கவை. இவற்றில் குற்றங்குறைகள் இன்றி செய்தல் நாட்டின் சுபீட்சத்திற்கு ஏதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக கும்பாபிஷேக வைபவத்தின் போது யாகசாலையிலும் ஆலயத்திலும் நிகழும் பல்வேறு கிரியைகள் வைதீக சமய மரபினதும் இணைப்பை உணர்த்தி நிற்கின்றன. கும்பாபிஷேகக் கிரியைகளினால் திருக்கோயிலும் சூழலும் புனித மடைவது போன்று அதில் ஈடுபடும் அனைவரது உள்ளங்களும் நிறைவு பெறுதலும் குறிப்பிடத்தக்கது. இக்கிரியை பக்தியுணர்வை ஏற்படுத்த வல்லது இவ்வுன்னதமான கிரியையயடுத்து ஆலயத்தில் இறைவனுக்கு நித்திய நைமித்திய கிரியைகள் எதுவித தடையுமின்றி நிகழ்ந்துவருதல் அவசியமாகும். இதன்வழி இறைவனது சைதன்யமும் சாந்தித்தியமும் சிறந்துவிளங்கும். இறைவனுக்குரிய வழிபாடு ஒழுங்காக நடைபெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளும் புனிதக் கடமை ஆலய அறங்காவலர், சிவாச்சாரியார், அடியார் ஆகிய அனைவரையும் சார்ந்ததாகும்.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஆலய மகா கும்பாபிஷேகத்தில் உடலால், மனதால் பொருளால் உதவிசெய்து கும்பாபிஷேகம் காண்பது, அதில் பங்கு கொள்வது என்பது வாழ்நாளில் கிடைப்பதற்கரிய ஒரு வாய்ப்பாகும். இந்த அரிய வாய்ப்பினை நழுவ விடாமல் பயன்படுத்திக் கொள்பவர்களின் வாழ்நாளில் சகலவிதமான வேண்டுதல்களும் நிறைவேற்றப்பட்டு, பொருளாதார முன்னேற்றத்துடன், குடும்ப ஒற்றுமையுடன், மனமகிழ்ச்சியுடன், இறைவன் திருவருள் கூடி வர வாழ்வார்கள் என்பது நம்பிக்கை. குலம் தழைக்க, வளம் பெருக, நலம் சிறக்க, அனைத்து ஆலய கும்பாபிஷேகத்திலும் முடிந்தவரை பங்குபெறுவோம், பயன் பெறுவோம், நலன் பெறுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு தரும் நீதி

**பத்மா சோமகாந்தன்**
எழுத்தாளர்

சகலவிதமான இன்பங்களும் துன்பங்களும் பொலிந்தமைந்துள்ள இப்பூவுலகில் ஓரறிவு படைத்த உயிரினம் தொட்டு ஆறறிவு கொண்ட மனித இனம் வரை தாம் ஏற்றுக்கொண்ட பிறப்புக்கேற்றபடி கூடிய பங்கு மகிழ்ச்சியுடன் வாழவே விரும்புகின்றன: முயலுகின்றன. தத்தம் வாழ்வில் தமக்குக் கிடைத்த அடிப்படை வசதிகளை முன்நிறுத்தித் தமது அயரா உழைப்பாலும் ஊக்கத்தாலும் பூரணமான வாழ்க்கையை மேற்கொள்ளவே இரவுபகல் பாராது முயற்சிக்கின்றன. இத்தகைய போக்கு இயல்பான ஒன்றாக இருப்பினும் இதற்கு மாறாக ஓரிரு புறநடைகளும் இருக்கலாம். ஆனாலும் ஒவ்வொரு உயிரினமும் தனது அத்தியாவசியமான உணவு, இருப்பிடம் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்குப் பெரும்பாடுபட்டாலும், அவற்றின் எல்லையில் ஏதோ ஒரு வகையில் ஒரு சமத்துவம், நீதி, நியாயம் இருந்து கொண்டே இருக்கும். சிலவற்றை உணரக்கூடியதாக இருக்கலாம். அநேகமானவை அவற்றை உணர்ந்து கொள்ளும் நிலைக்குத் தம்மை ஆளாக்காமலும் இருக்கலாம். இயற்கையின் படைப்பில் இப்படி எத்தனையோ விஷயங்கள் பொதிந்து கிடக்கின்றன. ஆழ்ந்த சிந்தனைக்கும் ஆராய்ச்சிக்கும் உரிய இவ்விடங்களை முன்னிறுத்தி நாம் பெரிதும் அலட்டிக்கொள்ளாமல்,மனிதனுடைய வாழ்வாதாரமாக நீதி எப்படிக் கை கொடுக்கின்றதென்பதைப்பற்றி சிறிது அலசுவது உசிதமானதென்றே தோன்றுகின்றது.

நாம் எமது வாழ்வில் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் ஒரு ஒழுங்கு, நீதி, நேர்மை, சமத்துவம் என்பன பேணப்படாவிடின் நாம் நம்மை அறியாமலே பெரும்தொல்லைகளுக்கு ஆளாகின்றோம் இதன் பலனை நாம் உடனே கண்டு கொள்ளாவிடினும் பல நாட்களின் பின்பே அவற்றை நாம் உணர்ந்து கொள்கின்றோம்.அவை மிகவும் சிறிய விடயமாக எம்மைப் பெரிதான தாக்குதல்களுக்கு உள்ளாக்காத விடயமாக அமைந்துவிட்டால், அவற்றை மெல்லமாக ஊதித்தள்ளிவிட்டு மறந்துவிடுகின்றோம்.காலகதியில் இப்படியான சிறுசிறு தவறுகள் அசமத்துவமான போக்குகள் , பிழைகள் ,எமது அநீதியான நடைமுறைகள் என்பன ஒன்றுதிரண்டு படையெடுக்கும் நோய்க்கிருமிகள் போல நம்மை அவலத்துக்குள்ளாக்கும் போதும் கூட இவற்றின் காரணத்தைத் தெளிவாக நம்மால் உணர்ந்து கொள்ள முடியாமல் தவிக்கின்றோம்.

இவற்றை எல்லாம் சிந்தித்தே நம் பெற்றோர், பெரியோர், ஆசான்கள், குருமார் ஆகியோரும் சமயங்கள், நூல்கள் என யாவையுமே இளமையில் இருந்தே நாம் அறத்தோடு வாழப்பயிற்றுவிக்கின்றனர். தமிழ் மொழியின் உயிர் எழுத்துக்களின் முதலாம் எழுத்தான **“அ”** என்ற எழுத்தை அறிமுகம் செய்யும்போதே “அறம் செய்ய விரும்பு” என்கிறார் ஔவைப்பிராட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல நல்ல செயல்களை நீதியான வழியில் நிலைநாட்டி நாம்பெற்றுக் கொண்ட இம் மானிட பிறப்பை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவதே நமது இலட்சியமாக இருக்கு வேண்டும் என்பதையே தெய்வப்புலவர் திருவள்ளுவரும்

**"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்**
**புறத்த புகழும் இல"**

என அறத்தின் ஆழத்தை வாழ்வில் நமக்கு இன்பத்தைக் குவிக்கும் அறநெறியை ஏழேழு இலகுவான, எளிமையான சொற்களில் வெகு சூட்சுமமாகத் தொட்டுக்காட்டுகிறார். அறத்தில் இருந்து சிறிது விலகினாலும் அவை மலையளவு வசதிகளையும் வாய்ப்புக்களையும் அள்ளிக்கொட்டினாலும் கூட அவை புறத்தனவே. ஒதுக்கித்தள்ளி வைக்க வேண்டியனவே தவிர அவற்றால் எம் வாழ்விற்கு எத்தகைய நிலைத்த புகழோ, மகிழ்ச்சியோ, ஒழுக்கமான வாழ்வோ இல்லை என ஆணி அடித்தது போல அவற்றைக் கூறியுள்ளார். இவை எல்லாமே நமக்கான வாழ்வில் அறத்தின், நீதியின் வலிமையை வற்புறுத்துகின்றன.

இன்று நாம் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிகளில் எல்லாம் விண்ணைத்தொடும் நிலைக்கு வளர்ச்சியடைந்து வருகின்றோம் என ஒரு புறத்தே நாம் நமது மார்பை நிமிர்த்திக் கொண்டாலும் மனிதனுடைய இந்தக் கடுகதி வளர்ச்சி இயற்கையைத் தீண்டும் அநீதியைக் கையாள்வதனால் உலகின் சமநிலைப்போக்கு சரிவுறத் தொடங்கியுள்ளது. இதன் காரணமாகவே மனித ஆற்றலுக்கும் சக்திக்கும் அப்பாற் பட்ட நிலையில் ஜீரணிக்க முடியாத இயற்கை அனர்த்தங்கள் உலகின் நாலா பக்கங்களிலும் இடம் பெற்று மனித வாழ்விற்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளன என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். இவை வெகுபிரமாண்டான அளவில் பூமிப்பந்தை பயமுறுத்திக்கொண்டே இருக்கின்றன.

இத்தகைய பாரிய விளைவுகளால் இன்று நமது தலையாய பிரச்சினையாக உருவெடுத்து இருப்பது **"சுற்றுச்சூழல் பாதுகாப்பு"** என்ற பாரிய பிரச்சினை. சுற்றுப்புறச் சூழலுக்கும் மனித வாழ்வுக்கும் அத்தியாவசியமான நீதி, நீதிமன்றம், வழக்கு, விசாரணை போன்றவற்றுக்கும் என்ன தொடர்பு எனப் பலர் மூளையைக் குடையலாம்.

இயற்கை எழுதாச் சட்டமாக சில நியதிகளைக் கொண்டே இயங்குகின்றது. அதே வேளை மானிட வாழ்வு சில சமுதாயத்தின் கட்டமைப்புக்கள் , சட்டதிட்டங்கள், நீதி நியாயங்கள் என வரிக்கப்பட்ட கோடுகளின் கீழே செயற்படுகின்றது.ஏதோ ஒரு வகையான நியதியின் கீழ் இவை இயங்குவதால் அதாவது இயற்கை நீதி ஆக்கப்பட்ட நீதி என்றும் நியதி என்ற ஒரே கோட்டின் கீழ் இயங்கும் தன்மையால் இவ் ஒற்றுமை காணப்படுகின்றது. இந்நியதிகள் சிறிது சறுக்கும்போதே இயற்கை பாரதூரமான பல்வேறு அனர்த்தங்களாக வெளிவருகின்றது. மனிதன் நியாயம் தேடி நீதியைக் கோரி அதற்கான மன்றத்தில் முறையிடத் தலைப்படுகின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வளங்களை அள்ளிக் கொழிக்கும் பசுமை நிறைந்த காடுகளை அழித்துக் கட்டடங்களை நிர்மாணித்ததனால் மழைவீழ்ச்சி பொய்த்தது. காடுகளில் வாழும் ஏராளமான மிருகங்கள், பட்சிகள், பறவைகள் ஊர்வன போன்ற ஏராளமான பிராணிகள் அல்லல்ப்பட்டன அழிந்தொழிந்தன. இதனால் வயல்வெளிகள் குப்பை கூழங்கள் நிறைந்த மேடுகளில் அழுகிக் கிடக்கும் பிணங்கள் , மாடுகள் போன்ற இறந்த மிருகங்கள் எலிகள் போன்றவற்றை உட்கொள்ளும் பிணம் தின்னிக் கழுகுகள் ,வல்லூறுகள் என்பன, பூரான், விஷம் நிறைந்த வண்டுகள் போன்றவற்றை எல்லாம் தின்னும் காடை கரிச்சான் போன்ற பறவைகள் எல்லாம் பெருமளவில் அருகிவிட்டமையால் இக்கழிவுகளை விஷம் கொண்ட பிராணிகளை எல்லாம் அழித்தொழிக்கும் நிலையும் தேங்கியே கிடப்பதால் பல பிரச்சினைகளுக்கு மனிதன் மட்டுமல்ல ஏனைய பிராணிகளும் கூட முகம்கொடுக்க வேண்டிய இடர்பாடு நேர்ந்துள்ளது. இப்படியே நிலம் வாழ் ,நீர் வாழ் உயிரினங்களோடு தாவரங்களும் பறவைகள் , மிருகங்கள் மற்றும் உயிரினங்களோடும் மனிதனுமே ஏதோ ஒரு நியதியின் கீழ் ஒன்றுபட்டு இருத்தலையே வாழ்வு என நாம் கணிப்பிடலாம். இந்த இயற்கை வட்டத்தில், சுழற்சியில் ஏதாவது ஒரு சிறிய நெருடலோ முறையீனமோ ஏற்பட்டால் அதன் சுழற்சியிலே பாதிப்பு ஏற்படும், தடுமாற்றம் ஏற்படும். இயற்கையின் சுழற்சியிலேயே பல இன்னல்கள் தலைதூக்கும். மனிதனைப்போல் தனக்கேற்பட்ட அநீதியை முறைப்பாடு செய்ய இயற்கைக்கு ஒரு நீதிமன்றம் இல்லை. இவை எல்லாமே மனிதனின் சுபீட்சமான வாழ்க்கைக்கு சங்கடங்களையும் சிக்கல்கலையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தும் என்பது கண்கூடு. நாம் இவற்றையெல்லாம் உற்று அவதானிக்கும் போது வளப்பமான வாழ்விற்கு இயற்கை பின்னியிருக்கும் பின்னலின் சிறப்பை அமைத்திருக்கும் சட்டதிட்டங்கள் வெறும் செய்தியாகவோ சாதாரண விடயமாகவோ எண்ணி மௌனித்துக் கொள்ளாமல் நாம் அறிந்தவற்றைக் கற்றுக் கொண்டவற்றை தெரிந்தவற்றை எமது வாழ்வை வளம்படுத்தப் பயன்படுத்துவதே அறிவார்ந்த செயற்பாடாகும்.

மனித குலத்திற்கு வாழ்வழித்த நீதியைப் பழைய புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள் ஆகியன தொடங்கி சட்ட நூல்கள் நவீன கால நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் எனப் பலவற்றின் ஊடாகப் பார்த்திருக்கின்றோம். மனுநீதிச் சோழன் கதை , சிலப்பதிகாரத்தில் கண்ணகி நீதி கேட்டு சீற்றம் கொண்டமை என்பன என்றுமே மக்கள் மனதை விட்டகலாத நீதிக்கான செய்திகள்.

சில விஷயங்களை நாம் அந்தந்த கால கட்டத்தோடு ஒட்டியே சிந்தித்துப் பார்க்கவேண்டியது அவசியம். உதாரணமாக, கோவலன் கண்ணகி கதையில் கண்ணகி தன் துணைவன் இன்றி தனியே வீட்டை விட்டு வெளியேறியே அறியாத பெண். நீதி என்ற கோட்பாட்டைக் கையில் ஏந்தியமையே சாதாரண வகை குடியான வகைப்பெண்ணென அவளை அரசசபை ஏறக் கூடிய நெஞ்சுரத்தை ஈய்ந்தது. அல்லாமலும் கூட பல அனுபவத்தவர்கள், அறிஞர்கள், மேதாவிகள், கௌரவமும் பெருமையும் மிக்க சான்றோர்கள் அவையின் மத்தியில் சாதாரண குடிமகள் அந்நாட்டின் காவலனான மன்னனின் பாதுகாவலனை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அறிவறை போகிய பொறிஅறி நெஞ்சத்து**
**இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே.." என**

வாயிற்காப்போனை இறைமுறைமை தவறியவனின் சேவகன் எனக் குறிப்பிட்டதுமன்றி மன்னனையே நோக்கி

**"தேரா மன்னா! செப்புவதுடையேன்..........**
**தேர்ந்து நீதி செலுத்தத் தெரியாத அரசனே நான் சொல்வதைக் கேள்"**

என்று கூறக்கூடிய துணிச்சலும் விவேகமும் திடமும் ஏற்பட்டதென்றால் அவள் கையில் சிலம்பும் அவள் பக்கத்தில் உண்மை என்ற நீதி இருந்ததனாலன்றோ!

இப்படியே நாம் பழைய கதைகளைத் துருவித் துருவி ஆராய்ந்து பார்ப்போம் ஆயின் நீதியே இதுவரை காலமும் மக்களுக்கு மட்டுமல்ல இப் பிரபஞ்சம் அனைத்திற்குமே வாழ்வழித்திருக்கும் நீதியை நியாயத்தை சமத்துவத்தை உய்த்து உணரலாம்.எனவே வாழ்வில் திருப்தியையும் பூரணத்துவத்தையும் பிரகாசத்தையும் நிம்மதியையும் பயன்பாட்டையும் நல்குவது நீதியே! நீதியே! என்பதை நாம் உரத்துச்சொல்லித்தான் புரியவைக்க வேண்டுமென்பதில்லையே?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை இசையின் வலிமையும் பெருமையும்

**கலாநிதி ஸ்ரீ. தர்ஷனன்,**
யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர்

## இயற்கை இசை என்றால் என்ன?

இசையும் நடனமும் இயற்கையாக இறைவனால் தோற்றுவிக்கப்பட்டவை என்பதை அனைவரும் அறிவர் ஆனால், இன்று நாம் கேட்டுக் கொண்டிருக்கும் இசையானது இறைவனால் தோற்றுவிக்கப்பட்டதா? இயற்கை உணவு என்று , அவித்த காய்கறிகளையோ அல்லது பொரித்து வைத்த குழம்பையோ நாம் குறிப்பிடுவதில்லை. இயற்கை உணவு என்று நாம் எதனை குறிப்பிடுகிறோம் என்றால், இயற்கையாக மரத்தில் காய்த்தவை அல்லது இயற்கையாக மண்ணில் இருந்து உருவாகியவை. அவற்றில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படாமல் இயற்கையாக எவ்வாறு அது இவ் உலகிலிருந்து பெறப்பட்டதோ அவ்வாறே எம்மால் உட்கொள்ளப்பட்டால் மட்டுமே அது இயற்கை உணவு எனப்படுகிறது. உதாரணமாக, ஒரு அப்பிள் பழத்தையோ அல்லது ஒரு கரட்டையோ நாம் பச்சையாக உணவு உண்ணும்போது அது இயற்கை உணவு எனப்படுகிறது. அப்பிளில் கூட இன்று **Organic Apple, inorganic Apple** என்று வகைபிரித்து, அதில் அவற்றுள்ளும் இரசாயன உரம் சேர்க்கப்படாது தானாகவே இயற்கை மண்ணிலிருந்து சத்துக்களை உறிஞ்சி வளர்ந்து காய்த்து தானகவே இயற்கையாக பழுத்த அப்பிளின் விலை இன்று மேற்கு நாடுகளில் அதிகரித்த பெறுமதியைக் கொண்டதாக உள்ளது.

## இவ்வாறே, இயற்கையான இசை என்று நாம் எதனைக் கருதலாம்?

இயற்கையான இசை எனப்படுவது இயற்கையாக, இயற்கையாக பிறந்த ஊடகங்களிலிருந்து இயற்கையான முறையில் இயற்கைக்கருவிகளிலிருந்து இயற்கையாக உருவாக்கப்பட்ட இசையாகும். உதாரணமாகச் சொன்னால், குரலிலிருந்து எழும் இசை, குயிலின் இன்னிசை மற்றும் குழந்தையின் மழலை இசை. குழனினிது யாழ் இனிது என்பது தம் மக்கள் "மழலைச் சொல் கோளாதவர்" எனும் பொய்யாமொழிப் புலவர் குறள் இதனை நிரூபித்து நிற்கின்றது. காலத்தால் பொய்ப்பிக்கப்படமுடியாத, என்றென்றும் நிலைபெற்று வாழக்கூடிய, இவ்வுலக மாற்றங்கள் எத்தனை எத்தனை வந்தாலும் அப்படியாக மாற்றப்பட்ட சமுதாயத்தில் கூட பொருத்தமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய திருக்குறள், செயற்கையாக மனிதனால் தயாரிக்கப்பட்ட குழலையும், செயற்கையாக மனிதனால் தந்திகள் பொருத்தித் தயாரிக்கப்பட்ட யாழையும் விட எம் ஒவ்வொருவர் வீட்டிலும் இயற்கையாக படைக்கப்பட்ட மழலையின் குரலிலிருந்து எழுகின்ற மழலைப் பேச்சு இனிமையுடையது என்பதை நிரூபித்துக் காட்டுகின்றது இதனைத்தான் இக்கட்டுரையும் நிரூபிக்க முனைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலே முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவெனில்,

1. "தம் மக்கள்"

2. "மழலைச் சொல்"

பிறர் மக்களின் சொல்லை வள்ளுவன் இனிமை என்று சொல்லவில்லை. தன்னுடைய குழந்தையின் மழலைச் சொல்லைத்தான் வள்ளுவன் இனிமை என்று சொன்னான். அதாவது இசை ரசனை என்பது அறிவு சார்ந்தது அல்ல, முற்று முழுதாக உணர்வு சார்ந்ததே ஆகும். ஒரே வயதுடைய இன்னொரு குழந்தையின் மழலையை நாம் பெரிதாக கண்டுகொள்வதில்லை. ஆனால், அதே வயதுடைய எமது குழந்தையின் ஒரு மழலைச் சொல் எம்முள் ஏற்படுத்துகின்ற உணர்வு மாற்றங்களை சொல்லால் வடிக்க முடியாதது.

மழலைச் சொல்தான் இனிமை என்றாரே தவிர, அந்த குழந்தை வளர்ந்து பெரியவராகி, இவ் உலக அறிவின் கலப்பினாலே எம்மால் திணிக்கப்பட்டு மாசுபடுத்தப்பட்ட, அறிவு கலந்த சொல்லை அவர் இனிமை என்று கூறவில்லை. இதுவே நித்தியமான உண்மையாகும். ஏனெனின், இயற்கையாக, கள்ளம் கபடமற்று இறைவனால் உருவாக்கப்படுகின்ற குழந்தைகளின் பேச்சும் குரலும் எம்மால் செயற்கையாக்கப்படுகின்றன. பேசப்பழக்குகிறோம், பயிற்சி கொடுக்கிறோம், கல்வி கற்பிக்கிறோம் என்கின்ற பெயளரில் இயற்கையான அப்பழுக்கற்ற இறைவனின் படைப்புகள் செயற்கையாக்கப்படுகின்றன. அவை அறிவினால் மாசுபடுத்தப்படுகின்றன. அவ்வாறு உணர்வினை மறைத்து ஒரு இரும்புத்திரையை "அறிவு" என்கின்ற பெயரில் நாம் எமது குழந்தைகளைச் சுற்றி உருவாக்கி விடுகிறோம். இதனால் இயற்கையான இசை உள்ளே மறைக்கப்பட்டு செயற்கையாக, மற்றவர்களை இன்புறவைத்தாலும் அதேவேளை துன்பறுத்தும் சக்தியும் வாய்ந்த இசையானது மனிதனால் படைக்கப்படுவதற்கு மனிதனே தமது தலைமுறையினருக்கு பயிற்சி அளிக்கிறான்.

### இசையின் தோற்றமும் நோக்கமும்

இசை மனிதனையும் ஏனைய உயிர்களையும் இன்புற வைப்பதற்காகவும் தொடர் பாடலுக்காகவும் மட்டுமே இயற்கையால் தோற்றுவிக்கப்பட்டது. வேறெந்த நோக்கத்திற்காகவும் இசையானதுஇறைவனால்தோற்றுவிக்கப்படவில்லை. அவ்வாறுதோற்றுவிக்கப்பட்டஇசையானது கர்நாடக இசை என்கின்ற அறிவு கலக்கப்பட்டு ஒருசாராராலும், மேலைத்தேய என்கின்ற அறிவு கலக்கப்பட்டு இன்னொருசாராராலும் இனத்திற்குரிய இசையாக வரையறுக்கப்பட்டு: எமது இசை உயர்ந்தது என்று அவர்களது இசை தாழ்ந்தது என்றும் உயர்ச்சி தாழ்ச்சி என்கின்ற உலகிலே சமாதானத்தை குழப்புகின்ற வரம்புகளுக்குள் அகப்பட்டு மாசுபடுத்தப்பட்டது. அதனால், இசை என்கின்ற வரம் மனிதனுக்கு எதற்காக இறைவனால் கொடுக்கப்பட்டதோ, அந்த நோக்கங்கள் அனைத்தும் இசையினால் அடையப்பட முடியாத அளவுக்கு இசை மனிதனால் செயற்கையாக்கப்பட்டது. இயற்கையான இசைக்கு இருக்கக்கூடிய வலிமையும் பெருமையும் செயற்கைப்படுத்தப்பட்ட இசையிலே அருகிப் போயின. செயற்கை இசையை ரசிப்பதற்கு மனிதன் பயிற்சி அளிக்கப்பட்டான். செயற்கை இசையை ரசிக்கப் பழக்கப்பட்ட மனிதனுக்கு, இயற்கை இசையை ரசிக்கத் தெரியாமல் போனது. அதனால் இயற்கை இசையை ரசிப்பதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படக்கூடிய நன்மைகளும் கிடைக்காமல் போயின. இயற்கையான இசை மருத்துவக் குணங்களையும் கொண்டது. மனதிலே மற்றும் உடலிலே ஏற்படுகின்ற காயங்களை அன்றாடம் ஆற்றுகின்ற சக்தி இசைக்கு உள்ளது. ஆனால் அந்த இசை கடவுள்களின் பெயரைக் கொண்டு அமைக்கப்பட்டபோதும், எனது கடவுள் அவர்களின் கடவுள் என்று வகைபிரிப்பும் உயர்வு தாழ்வும் இசையிலே புகுத்தப்பட்டபோதும், ஒருவரை மகிழ்விக்கும் இசை இன்னொருவரை துன்புறுத்தும் இசையாக மாற்றம் பெற்றது. ஒரு மதத்தவருக்கு கடவுளாக போற்றக்கூடிய பெறுமதி வாய்ந்ததாக கருதப்படும் இசை இன்னொரு மதத்தவருக்கு தன்னைத் துன்புறுத்தும் கொடுமையான, தனது மதத்துக்கு எதிரான உணர்வுகளை விதைக்கும் இசையாக அது உணரப்பட்டது செயற்கையான இசையைத்தான் உண்மையான இசை என்று திணிக்கப்பட்டு ஏற்றுக்கொண்ட மனிதன் ஓடி ஓடி செயற்கையான இசைக்கச்சேரிகளைக் கேட்கிறான். வீட்டிலும் கூட தொலைக்காட்சியிலும் வானொலியிலும் இணையத்திலும் செயற்கையான இசையையே கேட்கிறான். இதனால் இயற்கையான இசையக் கேட்பதற்கு நேரம் இல்லாது போனது. இயற்கையான இலவசமாக இறைவனால் படைக்கப்பட்ட இயற்கையின் இசை அவனுக்கு செவிப்பறைகளில் விழுந்தும் மூளைக்கு எடுத்துக்கொள்ளப்பட

1. நேரமில்லை
2. பணமின்றி இயற்கையாக கிடைக்கின்றமையால் அதற்கு பெறுமதி கொடுக்க அவனால் முடியவில்லை.
3. செயற்கை இசையினால் பாதிக்கப்பட்ட அவனது காதுகளும் அதனை மூளைக்கு கடத்தக்கூடிய உணர்வு நரம்புகளும், இயற்கை இசையை இனங்காண முடியாத அளவுக்கு சீர்கெட்டுப் போயின.

## முடிவுரை

### இயற்கையான இசையை ரசிப்பது எப்படி?

இரைச்சலே இல்லாத, வாகனஒலிகள் மனிதர்கள் உணர்ச்சி வசப்பட்டு கத்துகின்ற மற்றும் மற்றவர்களைத்திட்டுகின்றஒலிகள், இவைஎவையுமேஇல்லாதஒருமுற்றுமுழுதும்இயற்கையான ஒரு காற்றுச் சூழலில் உட்கார்ந்திருந்து அங்கே காற்றினாலே மரங்கள் இசைக்கின்ற போது ஏற்படுத்தப்படுகின்ற ஒரே சுருதியுடனான இசையும், அந்த காற்றின் வேகம் மாற்றப்படுகின்ற போது உருவாகின்ற வெவ்வேறு சுருதிகளைக் கொண்ட ஸ்வரங்களும் இடையிடையே ஒரு மரத்தின் இலையும் இன்னொரு மரத்தின் கொப்பும், ஒரே கொப்புகளும் அடிக்கும் பலத்த காற்றினாலே ஒன்றுடன் ஒன்று உரசும்போது எழுகின்ற வெவ்வேறு சுருதிகளை உடைய ஸ்வரங்களையும், இடையிடையே கேட்கின்ற குயில் சத்தம் குருவிச் சத்தம் என்பவற்றினாலே தோற்றுவிக்கப்படுகின்ற பக்கவாத்திய இசையையும் இணைத்து ஒரு பாடலாக மனதினுள் கற்பனை செய்துகொண்டு கேட்டு ரசிப்போமானால் அதுவே இவ் உலகில் மிக உயர்ந்த தெய்வீக இசையாகும். அந்த இசையினாலேயே எவ்வித நோய்களும் மனத்துன்பங்களுமின்றி வாழமுடியும். மனிதனால் வாழமுடியும் அந்த இசையே மனிதகுலத்தை ஈடேற்றும் சக்திவாய்ந்ததும், பாதுகாக்கும் சக்திவாய்த்ததும் இசையாகும். அந்த இசைக்கு ஈடுஇணையான வேறு எந்தவொரு இசையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனால் தோற்றுவிக்கப்படவுமில்லை, தோற்றுவிக்கப்படவும் முடியாது. அந்த அப்பழுக்கற்ற இசையின் இசையமைப்பாளர் -

1. இயற்கை அல்லது இறைவன்
2. பாடகர்கள் மற்றும் வாத்தியக்கலைஞர்கள் - காற்று, மழை, மரம் செடி கொடி, விலங்குகள், பறவைகள், ஆறு, கடல், நீர்நிலைகள்,
3.

இவைகளால் தோற்றுவிக்கப்படுகின்ற அந்த இசைகளின் சேர்கையால் உருவாக்கப்படுகின்ற இசையானது ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு தினமும் புதுப்புது விதமாகவே தோற்றமளிக்கும் ஏனெனில் காற்றின் வேகம் ஒரே அளவில் இல்லாது அடிக்கடி மாற்றப்படும். அதனால் கடலின் கொந்தளிப்பு வேகமும் அதனாலே ஏற்படுகின்ற கொந்தளிப்பு வேகமும் அதனாலே ஏற்படுகின்ற ஒலியும், விலங்குகளின் உணர்ச்சிகளும் பசியும் தாகமும் அவற்றின் மகிழ்ச்சியும் அவற்றினால் மாற்றப்படுகின்ற குயில் ஓசையின் சுருதி வேறுபாடுகள் ஸ்வரங்களை உருவாக்கும். அவ்வாறு மாற்றப்பட்ட ஸ்வரங்களின் கலப்பினால் மெலடி இசை மட்டுமல்ல Harmony மற்றும் Polyphonic இசைகள் கூட இயற்கையாகவே தோற்றுவிக்கப்படும். இயற்கையில் பொருட்களும் செயற்பாடுகளும் ஒன்றாயினும், அவற்றை நாம் எவ்வாறு புரிந்து கொள்கிறோம் என்பதிலே தான் மனிதனுக்கு மனிதன் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே அந்த இயற்கை இசையை மனதுக்குள்ளே ஒருங்கிணைத்து ஒரு மனிதன் உணர்ந்து கொள்வதற்கும் இன்னொரு மனிதன் உணர்ந்து கொள்வதற்கும் இடையே பாரிய வேறுபாடுகள் காணப்படும். ஆதலால் அந்த இயற்கை ஒலிகளிலிருந்து ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய திறன்களுக்கும் அனுபவங்களுக்கும் அவர்களின் மூதாதையர்கள் மூலம் வழிவழியாக கடத்தப்பட்ட மரபணுக்கள் காவிவந்த இயல்புகளுக்கும் ஏற்றவகையில் தன்னை பாதுகாத்து மகிழ்வித்து தனது மனதுக்கும் உடலுக்கும் மருந்தாக அமையக்கூடிய அந்த இசையின் இயற்கையையே அவன் உணர்ந்துகொண்டு ரசிப்பான் இதன் மூலம் நோயற்ற வாழ்வையும் துயரற்ற சமூகத்தையும் தோற்றுவிக்க முடியும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய காலகட்டத்தில் குடும்பங்களின் முக்கியத்துவம்

F. Shifna Cassim
Final Year,
Sri Lanka Law College

குடும்பம் என்பது இரத்த உறவாலோ அல்லது திருமணம், தத்தெடுத்தல் போன்ற வேறு சட்டபூர்வமான முறைகளிலான தொடர்பினைக் கொண்ட ஓர் உறைவிடக் குழுவாகும். அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தின் பிரிவு (16(3)ன் விதிப்படி "குடும்பம் என்பது சமூகத்தின் இயல்பானதும் அடிப்படையானதுமான குழு அலகாகும்". என்பதுடன் இது சமூகத்தாலும், தேசத்தாலும் பாதுகாக்கப்படுவதற்குத் தகுதி பெற்றுள்ளது.

குடும்பம் என்பது அதன் அமைப்புக்கேற்ப தனிக்குடும்பம், கூட்டுக்குடும்பம் என இரு வகைப்படுகின்றது. கணவனும், மனைவியும் தங்கள் பிள்ளைகளுடன் ஒன்றாக வாழுகின்ற நிலையிலுள்ள குடும்பமே தனிக்குடும்பம் எனப்படுகின்றது. தற்கால சமூகத்தில் இவ்வகைக் குடும்பங்களே எங்கும் பரவலாகக் காணப்படுகின்றன. பெற்றோர், அவர்களது மணமாகாத பிள்ளைகள், மணமான பிள்ளைகள், அவர்களது துணைவர், பிள்ளைகள் மற்றும் பெற்றோரின் உடன்பிறந்தவர்கள் என இரத்த உறவால் பிணைக்கப்பட்ட பலர் ஒரே வீட்டில் குடும்பமாக வாழ்வது கூட்டுக்குடும்பம் எனப்படும்.

எவ்வகையான குடும்பமாகக் காணப்படினும் அங்கு பெற்றோரும், பிள்ளைகளுமே முதன்மை பெறுகின்றனர். ஐக்கிய நாடுகள் சபை 18 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரையும் "பிள்ளைகள்" அதாவது சிறுவர்கள் என வரையறை செய்துள்ளது.

அந்தவகையில் இத்தகைய சிறுவர்களுக்கும், குடும்பத்தின் வகைகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அதாவது ஒரு கருக்குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகள் மாத்திரமே காணப்படுவதனால் அவர்களுக்கிடையிலான தொடர்பு மிகவும் நெருங்கியதாகக் காணப்படுவதுடன் பெற்றோரின் அன்பு, கருணை, பாசம் என்பன அதிகம் கிடைக்கக் கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. எனினும், குழந்தைகளுக்கான சுதந்திரமான சூழல், பாதுகாப்பு, மகிழ்ச்சிகரமான மனநிலை என்பன குறுகிய வட்டத்துக்குள்ளேயே காணப்படும். ஆனால் கூட்டுக்குடும்பத்தில் எல்லோரினதும் அன்பும், பாசமும் கிடைப்பதோடு மகிழ்ச்சிகரமான வாழ்க்கையும் கிட்டும். பாதுகாப்பும் பலப்படுத்தப்படுவதுடன் கூட்டுக்குடும்பத்தில் வயதுமுதிர்ந்த பெரியவர்கள் இருந்தால் அவர்களது அனுபவங்கள் சிறுவர்களுக்கு நல்வழிகாட்டல்களை வழங்கும். இவ்வாறு குடும்ப வகைகளும் சிறுவர்களின் வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. எவ்வகையான குடும்பமாக இருந்தாலும் ஒரு சிறுவனின் நல்வாழ்க்கைக்கும் பண்பாடு மற்றும் பாதுகாப்பிற்கும் ஒரு நல்ல குடும்பம் இன்றியமையாதவொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிள்ளையின் முதலாவது கல்விக் கூடம் குடும்பமாகும். தாயின் கருவறையில் இருக்கும் போதிலிருந்தே ஒரு குழந்தை கற்க ஆரம்பிக்கின்றது. ஒரு பிள்ளையின் கல்விக்கு வழிகாட்டுவதில் குடும்பம் முக்கிய பங்கு வகிக்கின்றது என்பதுடன் ஒவ்வொரு மனிதனின் ஆற்றலை வளர்ப்பதற்கு குடும்பப்பின்னணி ஒரு அடித்தளமாகவும் உள்ளது. ஒரு பிள்ளையை பாதுகாக்க விரும்பும் பெற்றோர் அப்பிள்ளைக்கு சிறந்த கல்வியை ஊட்டுவது அவசியமாகும்.

மலை நாட்டில் தோட்டத் தொழிலாளர் பிள்ளைகளின் கல்வி மந்தநிலையில் இருப்பதற்குக் காரணம் பெற்றோரின் நேரடிக் கண்காணிப்பும் நேர்வழிகாட்டல் என்பன இன்மையாகும். இதே நேரம் சிறந்த குடும்பக் கட்டமைப்பினால் ஆளப்படும் பிள்ளைகளின் கல்வி அடைவு மட்டம் உயர்நிலையில் காணப்படுவது கண்கூடு. வெளிச் சூழலை அறிந்து நாட்டு நடப்புகளுக்கு ஏற்ப நாமும் நடப்பதற்கு ஒரு குடும்பம் பெரிதும் துணைபுரிகின்றது. குடும்ப ஆதரவு கிடைக்காத பிள்ளைகள் வெளிச் சூழலை தவறாகப் புரிந்தவர்களாகக் காணப்படுவதோடு உளவியல் தாக்கத்திற்கு உட்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

தமது ஆசைகள், உணவுகள், எண்ணங்கள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றைப் பரிமாற்றிக் கொள்வதற்கு மிகவும் பொருத்தமானவர்கள் பெற்றோர்களாவர். பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கிடையிலான தொடர்பு எங்கு சரிவர நிலவுகின்றதோ அங்கு மகிழ்ச்சி, பாதுகாப்பு, பாசம் என்பன பலப்படுத்தப்படுகின்றன. எங்கு ஒரு சிறுவன் பெற்றோர் பாதுகாப்பின்றி, ஆதரவின்றி தனித்து வாழ்கின்றானோ அங்கு ஏக்கம், ஏமாற்றம், அச்சம் என்பன அவனிடம் குடிகொள்கின்றது.. இவ்வாறு தனித்து இருப்பதனால் அவன் வாழ்வு மரக்கலம் அற்ற படகு போலாவதுடன், எதிர்கால வாழ்க்கை இருள்பாதையை நோக்கியே செல்லும் என்பதில் ஐயம் இல்லை.

எந்தவொரு மதமும் சிறுவர்கள் தனித்து இருப்பதை அங்கீகரிக்கவில்லை என்பதுடன், சட்டங்கள் கூட சமூக அலகான குடும்பங்களைப் பாதுகாப்பதற்காகவே ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. குடும்பங்களில் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் இருக்கும் தாய்மார் வெளிநாட்டிற்கு வேலைவாய்ப்புக்காகச் செல்வதைத் தடை விதித்துள்ளது வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை ஒழுங்குபடுத்தும் சட்டங்கள். அதாவது மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாக வேலைவாய்ப்பை பெற்று செல்லும் பெண்கள் மீது சட்டம் கடும் விதி முறைகளை விதித்துள்ளது. காரணம் என்னவென்றால் குடும்ப அலகையும் குடும்ப அங்கத்தவர்களையும் பாதுகாப்பதே இதன் நோக்கமாகும். வெளிநாட்டிலிருக்கும் பெற்றோரின் பிள்ளைகளை விட பெற்றோருடன் சேர்ந்து வாழும் பிள்ளைகளின் மனநிலை ஆரோக்கியமானதாகவும், கல்வியடைவு மட்டம் உயர்வாகவும் காணப்படுவதாக அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உலகக் குடும்ப நாள் (Global family day) ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் வாழும் மக்கள் இதை அமைதிக்கும், பகிர்தலுக்கும் ஏற்ற நாளாகக் கொண்டாடுகின்றனர். ஒரு சிறந்த குடும்பம் பல வழிகளிலும் சிறுவர்களின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கின்றது. 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாவர்" அந்த வகையில் பெற்றோரின் கருணை, முன்மாதிரியான நடத்தை, குடும்ப ஒற்றுமை, சவால்கள், பிரச்சினைகளை சிறுவயதிலிருந்தே தீர்த்துக்கொள்வதற்குரிய வழிகாட்டல், பரஸ்பர பகிர்ந்துணர்வு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன ஒரு குடும்பத்திலிருந்து பிள்ளைக்கு சரிவரக் கிடைக்குமானால் அந்தப் பிள்ளை நாளைய உலகில் வெற்றி நடை போடும் என்பது திண்ணம்.

இலங்கையில் கடந்தகால யுத்தம் மூலம் பல சிறார்கள் போராட்டத்தில் இணைக்கப்பட்டு சிறுவர் போராளிகளாக்கப்பட்டுள்ளனர். இதனால் அங்கவீனர்களாகி உடல், உளப் பாதிப்புற்ற நிலையில் இன்றைய இளைஞர் பராயம் விரக்தியின் விளிம்பில் நிற்கின்றது. மேலும் பொருளாதாரத் தேவைக்காக பெண்கள் மத்திய கிழக்கு செல்வதால் அவர்களின் குழந்தைகள் பாதுகாப்பின்றிய நிலையில் துஷ்பிரயோகப்படுத்தப்படுகின்றனர். எனவே நாம் சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் நாடளாவியரீதியிலான விழிப்புணர்வு ஏற்பட்டு பாமரமக்களையும் சென்றடைவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். அத்துடன் சிறுவர்களுக்கு இடம்பெறுவது துஷ்பிரயோகம் என உணர்த்து கொள்ள பெற்றோர் சிறுவர்களிடையே சுமூகமான நட்புறவு அவசியம். இதிலிருந்து ஒரு சிறந்த குடும்பத்தின் மூலமே சிறார்களின் நல்வாழ்வு பாதுக்கப்படுகின்றது என்பதை புரிந்து கொள்ளலாம்.

விஞ்ஞானி அப்துல்கலாம் பல ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் அவரது சகோதரியின் கணவரிடமிருந்தே பெற்றுக் கொண்டார். அப்துல்கலாமின் வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் அவரது பங்கு அளப்பெரியது.

எனவே சிறுவர்களின் நல்வாழ்வுக்கும், மேம்பாட்டிற்கும் உதவிபுரியக் கூடிய ஒரு சிறந்த தாபனமே குடும்பமாகும் எதிர்காலத் தலைவர்களாகிய சிறுவர்களின் பாதுகாப்பு குடும்பத்தின் மூலமே உறுதிப்படுத்தப்படுகின்றது. சிறுவர்களுக்கு சிறந்த கல்வி, நற்பழக்கவழக்கங்கள் போன்ற அனைத்தையும் கொடுப்பது பெற்றோரின் கடமையாகும். சிறுவர்கள் களிமண்ணைப் போன்றவர்கள் ஒழுங்கான முறையில் அவர்களை செதிற்கினோமானால் சிறந்த சிற்பமாக அவர்களை உருவாக்கலாம். எனவே நாளைய உலகின் கதாநாயகர்களாக அவர்கள் மாற்றுவது குடும்பத்தின் பாதுகாப்பிலேயே தங்கியுள்ளது.

நாடுகளும் தேசங்களும் மனித உரிமைகளையும் மற்றும் சிறுவர் உரிமைகளையும் பாதுகாப்பதற்கு ஒன்றிணைந்துள்ளன என்பதற்கு உரிமைகள் தொடர்பான பிரகடனங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச சட்டங்கள் சான்று பகிர்கின்றன.

சிறுவர்களை கௌரவப்படுத்தி அவர்களை பாதுகாக்கும் முகமாக ஐக்கிய நாடுகள் சபையினால் 1979ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் சிறுவர் உரிமைகளைக் காக்க போராடுவதுடன் குடும்பங்களினூடாக சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு எம்மால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் சமூகத்தில் விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்த வேண்டும். காலத்தின் தேவைகளை அறிந்து இயற்றப்படும் சட்டங்களை மதித்து உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதன் ஊடாக அனைவருக்கும் சிறந்த வாழ்வு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

**“இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்**
**நாளைய தலைவர்கள் நாட்டின் சரித்திரங்கள்”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பிணைச் சட்டத்தின் பின்புலம்

**யோகராஜா தீபிகா**
இறுதிநிலை ஆண்டு
இலங்கைச் சட்டக் கல்லூரி

இன்றைய சமூகத்தைப் பொறுத்தவரை பிணைச்சட்டமானது மிகவும் முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது. இலங்கை சோசலிச குடியரசின் அரசியலமைப்பு உறுப்புரை - 13 இன்படி, சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்கவன்றி, ஆளெவரும் கைது செய்யப்படுதலாகாது, கைது செய்வதற்கான காரணம், கைது செய்யப்படும் எவரேனும் ஆளுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

அதாவது ஒருவரை கைது செய்யும் போது அதற்கான காரணம் பொலிசாரினால் கூறப்படுவதோடு அன்றி, அக்கைதானது சட்டத்தில் கூறப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கிணங்கவே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை அரசியலமைப்பு தெளிவாக எடுத்துரைக்கின்றது. அத்தோடு உறுப்புரை - 13 (5) இன்படி,

ஆளெவரும் அவர் குற்றவாளியென எண்பிக்கப்படும் வரை, சுத்தவாளியென ஊகிக்கப்படுதல் வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்ட எந்த நபரும் குற்றவாளி அல்ல என்பதோடு, அவர் குற்றவாளியென நீதிமன்றத்தில் நியாயமான சந்தேகத்திற்கப்பால் நிரூபிக்கப்படும் வரை, அவர் அக்குற்றத்தை மேற்கொள்ளவில்லை என்பதே இதன் ஊகமாகும்.

இதன் மறுபக்கத்தை எடுத்து நோக்கின் பொதுவாக ஒரு வழக்கினை விசாரணை செய்யும் போது, கீழ்வரும் காரணங்களுக்கமைவாக விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.

1. விசாரணையை வசதிப்படுத்துவதன் மூலம்
2. சாட்சியம் மற்றும் பாதிக்கப்பட்டவர் மேலான தலையீடுகளை தவிர்ப்பதன் மூலமாக.
3. சந்தேகநபர் விளக்கத்திற்கு சமூகமளிக்க தவறுவதை தடுப்பதற்காக.
4. வழக்கு காலப்பகுதியின் போது சந்தேக நபர் மீண்டும் சமூகத்திற்கு வந்து குற்றத்தில் ஈடுபடுவதைத் தடுப்பதற்காக.
5. பாரதூரமான குற்றங்கள் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் சந்தேகநபரை மீண்டும் சமூகத்திற்கு வர இடமளிக்காததன் மூலம்.

இதன் மூலம் சமூகத்தின் நன்மையையும் கருத்தில் கொண்டு, சந்தேக நபரை விளக்கமறியலில் வைப்பதா இல்லையா எனத் தீர்மானிக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. பிணை தொடர்பான சட்டப்பிரயோகமும், அதன் நியதிச் சட்டத்தின் வளர்ச்சியும்

அடுத்து பிணை மற்றும் விளக்கமறியல் தொடர்பான சட்டக்கட்டளைப் பார்ப்போமாயின்,

முதலில் பிணை தொடர்பான கூட்டமானது, குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையின் இல. 15, 1979 இன் பிரிவு 115, 116 மற்றும் 404 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருந்த போதிலும், 1994 இல் நடைமுறைக்கு வந்த புதிய அரசாங்கம் இதில் மாற்றத்தை ஏற்படுத்தி பிணை தொடர்பான புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்தியது. பிணைச்சட்டம் இல. 30, 1997 ஆனது 28ம் திகதி கார்த்திகை மாதம் 1997 இல நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இச் சட்டத்தின் முன்னுரையில் இது தொடர்பாக தெளிவாக நடைமுறைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரிவு - 2இல், பிணைச் சட்டத்தின் பொதவான நீதி சந்தேக நபர் ஒருவருக்கு பிணை வழங்குவதாகும். இவ் விதிக்கு எதிராக பிணை மறுக்கப்படுவதை காதிவிலக்காக கூறுகின்றது. இதை தெளிவாக பார்ப்பதற்கும் வேறுபடுத்துவதற்கும் பிணைச் சட்டத்தின் பொதுக்கோடலில் கூறப்பட்டுள்ளதைப் பார்க்க முடியும்.

இதன் மூலம் இச்சட்டத்தை அறிமுகப்படுத்தியவர்களினது பிரதான நோக்கமானது, ஒரு சந்தேகநபரானவர் பெருமுயற்சியின் மூலம் பிணையில் வெளியில் வருவதாக இருப்பினும், அதற்கு சில வரையறைகளையும் சட்டவாக்குனர்கள் குறிப்பிட்டுள்ளார்கள், இதன் மூலம் சந்தேக நபர்கள் சிறையிலேயே இருப்பதற்கான வாய்ப்புகள் இங்கு அதிகரிக்கின்றது. இதன் விளைவுகளைப் பார்க்கும் போது, சிறைச்சாலைகளில் கூடுதலான நபர்கள் அத்தோடு ஒரு நபர் நிருபராதியாக இருந்தாலும் சிறையில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம், அதன் மூலம் அவனுடைய குடும்பம் எதிர்நோக்கும் இன்னல்கள் என்பன சமூகத்தில் எதிர்நோக்கக்கூடிய ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுக்கின்றது.

பிணைச்சட்டம் தொடர்பான புதிய எண்ணக்கருவை அறிமுகப்படுத்திய அரசாங்கமே இதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றது.

## 3. குற்றவியல் நடபடிமுறைச்சட்டத்தின் பிரயோக வரம்பு

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பிணை தொடர்பான சட்டமானது குற்றவியல் நடபடிமுறை சட்டக்கோவையில் இல. 5, 1979 இல் குறிப்பிடப்பட்டுள்ளதை விட தேவைக்கதிகமாகவே காணப்படுகின்றது என்பது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இங்கு கூறி நிற்கின்றது. எனினும் பிணை தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமாக இல்லை குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டமாக நடைமுறையில் காணப்படுகின்றது என்பதை ஆராயுமிடத்து, பிணை தொடர்பான சட்டமே இங்கு மேலாங்கி நிற்கின்றது. இது தொடர்பான இடைவெளிகளை நிரப்பும் சட்டமாக குற்றவியல் நடைமுறை சட்டக்கோவை காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. பிணை தொடர்பான முக்கிய சொற்பதங்களின் பொருள் கோடல்

1. பிணையில் விடக்கூடிய தவறு (Bailable Offence)

(இது தொடர்பாக பிரிவு 4, 6 மற்றும் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

பிரிவு 4 - சந்தேக நபர் ஒருவர் பிணையில் விடக்கூடிய தவறொன்றைப் புரிந்தாராயின் அவர் பிணையில் வெளியே வர முடியும்.

பொதுவான இதன் விளக்கம் யாதெனின், பிணையில் வெளியில் வரக்கூடிய ஒரு குற்றத்தை ஒரு நபர் செய்யுமிடத்து அவரை விளக்கமறியலில் வைத்திருக்க நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை. பிணை வழங்கப்படக்கூடிய குற்றம் தொடர்பாக ஒருவரின் கைது செய்யப்படுமிடத்து, அச்சந்தேக நபரை பொலிசின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவோ, நீதிமன்றத்திற்கு அழைத்து செல்ல, கட்டுக்காவலில் வைத்திருக்கவோ பொலிசிற்கு தற்துணிவு அதிகாரமில்லை. குறிப்பிட்ட சந்தேக நபரை பிணையில் விட வேண்டும் என்பதே, இதுபற்றி குற்றவியல் நடப்படிமுறை சட்டக்கோவையின் பிரிவு 402 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் பிரிவு - 6 இன்படி, சில சூழ்நிலைகளின் கீழ் சந்தேக நபருக்கான பிணை பொலிசினால் மறுக்கப்படமுடியும் அதாவது சந்தேகநபர் பொதுமக்களுக்கு தடையூறு செய்வதன் மூலம் சமாதானத்தை குலைக்க முயன்ற குற்றம் ஒன்றிற்காக கைது செய்யப்படுமிடத்து, பிரதான பொலிஸ் உத்தியோகத்தர், அச் சந்தேக நபரிற்கான பிணையை மறுத்து, அவரை நீதவான் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளார். அதன் பின் அந்நபருக்கு பிணை வழங்குவதா இல்லையா என்பதை நீதிபதி மடிவெடுப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளார்.

இதன் மூலம் ஒரு சந்தேக நபருக்கு மிகக் குறைவான சிறப்புரிமையே கிடைக்கப்பெறுகின்றது.

2. பிணையில் விடமுடியாத குற்றங்கள் (Non - Bailable Offence)

(பிரிவு 5, 13 மற்றும் 14)

பிரிவு 5 இன்படி, பிணையில் விட முடியாத குற்றங்களை ஒருவர் செய்யுமிடத்து, அவரை பிணையில் விடுவிப்பதா இல்லையா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் நீதவான் நீதிமன்றத்திடமே காணப்படுகின்றது.

அக்குற்றத்திற்கான தண்டனை மரணம் அல்லது ஆயுள் தண்டனையாக காணப்படுமிடத்து, பிணை வழங்குவதற்கான அதிகாரம் மேல் நீதிமன்றத்திடமே காணப்படுகின்றது.

## 5. பிணையில் விடக்கூடிய குற்றமா இல்லையா என்பதைத் தீர்மானித்தல்

பிணைச் சட்டத்தின் பிரிவு 29 இன்படி, பிணையில் விடக்கூடிய குற்றம் தொடர்பாக குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையில் அட்டவணை 1. நிரல் 5 இல் இது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிணையில் விட முடியாத குற்றங்கள் தொடர்பாகவும் அட்டவணை 1, நிரல் 5 இலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

விசேட கூட்டம் இது பற்றி குறிப்பிடப்படாதவிடத்து, அதி குற்றத்திற்கான தண்டனைத் தீர்ப்பை பொறுத்தே அது பிணையில் விடக்கூடிய குற்றமா இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது ஒரு குற்றத்திற்கான தண்டனைத் தீர்ப்பு 3 வருட சிறை எனின், அக் குற்றம் பிணை வழங்கக்கூடிய குற்றம் எனவும், 3 வருட சிறையிலும் கூடிய தண்டனைத் தீர்ப்பு உள்ள குற்றம் எனின், அது பிணை வழங்க முடியாத குற்றம் எனவும் வகைப்படுத்தப்படுகின்றது.

## 6. பிணைச் சட்டத்தின் பிரயோகம்

பிணைச் சட்டத்தின் பிரிவு - 2 இல் கூறப்பட்டுள்ள வழிகாட்டல் கொள்கை, மற்றும் பிரிவு - 21 இல் கூறப்பட்டுள்ள முன்பிணை என்பன சந்தேக நபர் ஒருவருக்கு ஆதரவாக இருப்பதோடு, அவர்களின் உரிமைக்கும் கைகொடுப்பதாக காணப்படுகின்றது.

இதனாலே சந்தேக நபர் சார்பில் வாதாடும் சட்டத்தரணி ஒருவர், அவருடைய கட்சிக்காரரைக் காப்பாற்றவும், வெளியில் கொண்டுவரவும் இச்சட்டத்தைப் பிரயோகிக்கின்றார்.

எனினும் சில குற்றங்களுக்கு இப்பிணைச் சட்டம் செல்லுபடியாகுந்தன்மையை இழக்கின்றது.

1. பயங்கரவாத தடைச் சட்டம் இல. 48, 1979
2. தேசிய நலன் பாதுகாப்பு கட்டளைச் சட்டம்

Ruwan Gunasekara OIC- Special Unit V Ravi Karunanayake மேற்படி வழக்கில் ரவி கருநாயக்க (MP) பிணைச் சடட்த்தின் பிரிவு 21 இன் கீழ் நீதவான் நீதிமன்றத்தில் தனக்கு முன்பிணை வழங்குமாறு விண்ணப்பம் செய்தார். தான் செய்யப்போகும் குறித்த செயல் ஒன்றிற்காக பொலிசாரினால் கைது செய்யப்படுவார் என எண்ணி, அம் முன்பிணைக்கான விண்ணப்பத்தை மேற்கொண்டிருந்தார். நீதிபதி குறித்த விண்ணப்பத்தின்படி முன்பிணை வழங்கியிருந்தார். எனினும் குறிப்பிட்ட முன்பிணை பிழையானது எனவும், ஏனெனின் பொதுச் சொத்துக்களுக்கெதிரான குற்றத்தை செய்யும் ஒருவருக்கு முன்பிணை வழங்குவது பிழையானது என மேன்முறையீடு செய்யப்பட்ட போதும்,

கௌரவ நீதிபதி Saleem Marsoof மற்றும் கௌரவ நீதிபதி சிறீஸ் கந்தராஜா அவர்கள் இக் குற்றங்களை வகைப்படுத்தினார்கள். அதாவது ejusdem generis எனும் கோட்பாட்டை நன்கு பயன்படுத்தும் போது, பயங்கரவாத தடைச்சட்டம், மற்றும் தேசிய நலன் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் குற்றங்கள் எனவும் இவை நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்டவை. எனினும் பொதுச் சொத்துக்களுக்கெதிரான குற்றமானது, நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட குற்றங்கள் அல்ல. எனவே பிணைச் சட்டம் இது தொடர்பான குற்றங்களுக்கு செல்லுபடியாகும் தன்மையைக் கொண்டவை எனக் கூறப்பட்டது.

Mohamead Shivam V AG. மேற்படி வழக்கில், 3வது வகைப்படுத்தலில் உள்ள குற்றங்கள் அனைத்தும் தேசிய பாதுகாப்பை கருத்தில் கொள்வது மட்டுமல்ல, மொத்த சமூகத்தின் பாதுகாப்பையும் கவனத்தில் கொள்வது அவசியமாகின்றது.

இது தொடர்பான மாற்றத்தை கொண்டுவர பாராளுமன்றத்தில் புதிய சட்டமூலம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்ட போதும், நீதிமன்றம் அதை மறுத்ததோடு மட்டுமல்லாது, ejusdem generis' கோட்பாடு இங்கு பயன்படுத்தப்படாது எனக் கூறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்தான போதைப்பொருள் தொடர்பான சட்டங்கள் தொடர்பிலும் பிணைச் சட்டம் செல்லுபடியாகாது எனக் கூறப்பட்டது.

## 7. முன்பிணை (Anticipatory Bail) – பிரிவு – 21

இலங்கையில் குற்றவியல் நீதிமுறைமையில் கீழ் முன்பிணை தொடர்பான சில சிறப்பம்சங்கள் காணப்படுகின்றது.

பிரிவு 21 இன்படி ஒரு நபர் பிணை வழங்கக்கூடிய குற்றம் ஒன்றைப் புரிந்து அவர் கைது செய்யப்பட முன்பு, அக்குறித்த நபர் நீதிமன்றத்தில் முன்பிணைக்கான விண்ணப்பத்தை கோர முடியும். இங்கு அந்நபர் தான் கைது செய்யப்படலாம் என்பதை நீதிபதி முன்தெளிவாக நிரூபிக்க வேண்டும். அத்தோடு அவர் கைது செய்யப்பட்டாலும், பிணையின் மூலம் வெளியில் வர அனுமதிக்குமாறும் அவ் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

Ruwan Gunasekara V Ravi Karunanayake. இவ் வழக்கில் மேன் முறையீடு நீதிமன்றம் கூறியதாவது, பொதுச் சொத்து தொடர்பான குற்றங்களை ஒரு நபர் மேற்கொண்டிருந்தாலும், அது தொடர்பாக பிணை வழங்கலும், இப்பிணைச் சட்டத்தின் மூலமே ஆளப்பட வேண்டும் என்பதோடு, அந்நபர் முன்பிணையில் வெளியில் வர முடியும் எனவும் கூறப்பட்டது.

## 8. பிணையை இரத்து செய்தலும், மறுத்தலும்

குற்றவியல் நடப்படிமுறை சட்டக்கோவையில் பிணையை இரத்து செய்தல் மற்றும் மறுத்தல் தொடர்பாக எந்தவொரு ஏற்பாடும் குறிப்பிடப்படவில்லை. எனினும் பிணைச்சட்டத்தின் பிரிவு - 14 இல் இது தொடர்பாக கூறப்பட்டுள்ளது.

பிரிவு - 14 இன் படி, பிணையில் காணக்கூடிய தவறொன்றை மேற்கொண்டாலும் மேற்படி பிரிவில் கூறப்பட்ட காரணங்கள் காணப்படின், நீதிபதி அந்நபருக்கான பிணையை மறுக்க முடியும், அதே போல், பிணையில் விட முடியாத தவறுக்கான பிணை விண்ணப்பமும் மேற்படி காரணங்கள் காணப்படின் இரத்து செய்யப்படலாம்.

பிரிவு - 14 இல் கூறப்பட்டுள்ள காரணங்களாவன,

a. குறித்த அந்நபர்,

1. அவ்வழக்கு தொடர்பான விசாரணை அல்லது விளக்கத்திற்கு சமூகமளிக்காதவராக இருப்பின்
2. அவருக்கெதிரான சான்றுகள் மற்றும் சாட்சியங்களில் குறுக்கீடு செய்தவராக இருப்பின், அது தொடர்பான நீதிமன்ற செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுத்தியவராக இருப்பின்
3. பிணையில் இருக்கும் போது ஏதும் குற்றத்தில் ஈடுபட்டவராக இருப்பின்,

b. குறித்த குற்றத்தின் தன்மை., பொதுமக்கள் தொடர்பான, மற்றும் அக்குற்றம் பொதுமக்களின் அமைதியை குலைப்பதாக இருப்பின், அக்குற்றங்களுக்கான பிணையை இரத்து செய்யவோ அல்லது மறுக்கவோ நீதிபதிக்கு அதிகாரம் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைச் சட்டத்தின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, எந்தவொரு நீதிபதியும் தன் சுயவிருப்பத்தின் பெயரில் பிணையை இரத்து செய்யவோ அல்லது மறுக்கவோ முடியாது எனினும், பிரிவு - 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் காணப்படுகின்றது என திருப்திப்படின், அந்நபருக்கான பிணையை இரத்து செய்யவோ அல்லது மறுக்கவோ முடியும்.

Udathalawinna case (Anuradda Rathwaththe V Ag), இவ் வழக்கில் உயர்நீதிமன்றம் கூறியதாவது. பிரிவு 14 (1) (a), அல்லது, 14 (1) (b) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் காரணங்கள் உள்ளன என திருப்திப்படாதவிடத்து பிணையை இரத்து செய்ய முடியாது.

## 9. பிணை தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ள போது மேன்முறையீடு செய்தல் பிரிவு (19 & 20)

பிரிவு - 19 இல் கூறப்பட்டுள்ளதாவது, வழக்கு ஒன்று நிலுவையால் உள்ள போது, பிணை கோரப்பட்டுள்ள, அக்குற்றத்தின் பாரதூர தன்மை மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் முன்பு ஏதும் குற்றம் புரிந்தாரா என்பதையும் கருத்தில் கொண்டு பிணை வழங்குவதா இல்லையா எனத் தீர்மானிக்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றத்திடம் உண்டு.

பிரிவு - 20 இன்படி, குற்றத்தீர்ப்பு வழங்கப்பட ஒரு நபருக்கு பிணை வழங்குவதா இல்லையா எனத் தீர்மானிக்கும் அதிகாரம் மேல் நீதிமன்றத்திடமே காணப்படுகின்றது.

AG V Thamodaram Pillai குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட நபர் ஒருவருக்கு சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலேயே விசாரணை நீதிமன்றத்தினால் பிணை வழங்க முடியும்.

குற்றஞ்சாட்டப்பட்டவரின் உடல் நலனை காரணமாக வைத்துப் பிணை கோரப்படலாம். எனினும் குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது அட்போதைய உடல்நிலைமை குறித்து அதாவது நோய் குறித்து சரியான தகவல்களை நீதிமன்றத்தின் முன் நிரூபிக்க வேண்டும்.

Jayanthi Silva V AG. இவ் வழக்கில் கூறப்பட்டதாவது, குடும்ப நலன் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளை காரணம் காட்டி பிணை கோர முடியாது, குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது உடல் நலக்குறைவை நீதிமன்றத்தின் முன் நிரூபிப்பதன் மூலமே பிணையை கோர முடியும்.

## 10. விளக்கமறியலில் வைத்திருப்பதற்கான அதியுச்சகால எல்லை (பிரிவு – 16)

பிரிவு - 16 இன்படி, சந்தேக நபர் ஒருவரை குறைந்தது ஒரு வருடகாலப்பகுதியிலேயே தடுப்புக்காவலில் வைத்திருக்க முடியும்.

இதன்படி, சந்தேக நபர் ஒருவர் ஒரு வருடத்திற்கு பின்னர், விடுவிக்கப்பட வேண்டும். எனினும், இவ் ஒரு வருட காலப்பகுதி குறைவானது எனவும், தடுப்புக்காவலில் வைத்திருப்பதற்கான காலப்பகுதியை கூட்டுமாறும் சட்டத்தரணி ஒருவரால் மேன்முறையீடு செய்யப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jeyawathie V State இவ் வழக்கில், மேன் முறையீட்டு நீதிமன்றில் கூறியதாவது, பிரிவு - 14 இல் கூறப்பட்டுள்ள காரணங்கள் ஏதும் காணப்படின் குறிப்பிட்ட நபர் ஒரு வருடத்திற்கு மேலாக தடுத்து வைக்கப்படலாம் நீதிமன்றம் அவருக்கு பிணை வழங்க முடியாது.

இதன்படி பிரிவு - 16 ஆனது, பிரிவு - 14 இனால் கட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது.

## 11. பிணைக்கான நிபந்தனைகள்

(பிரிவு - 7, 9, 10, 11 & 18)

பிரிவு - 9 இன்படி,

முன்னர் வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்கு மேலதிகமாகவோ, மாற்றீடாகவோ புதிய நிபந்தனைகளை வழங்குவதற்கான அதிகாரம் நீதிமன்றத்திடம் உண்டு.

## 12. அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிணை தொடர்பாக தீர்மானித்தல்.

(பிரிவு - 7 & 10) குறித்த ஒரு நபருக்கு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிணை வழங்குவதா இல்லையா என்பதை தீர்மானிக்க பின்வரும் காரணிகள் கருத்தில் எடுக்கப்படுகின்றது.

அதாவது, குற்றத்தின் தன்மை, அக்குற்றத்திற்கான தண்டனைத் தீர்ப்பு மற்றும் குற்றஞ் சாட்டப்பட்டவரின் வருமான நிலை என்பவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட பணம் நியாயமானதாக இருப்பதோடு, சந்தேக நபர் அப்பணத்தை செலுத்த முடியாத சந்தர்ப்பத்தில் அத்தொகையை குறைத்து அறவிடப்படலாம்.

## முடிவுரை

மேலே குறிப்பிடப்பட்ட பிணைச் சட்டம் தொடர்பான பகுப்பாய்வு மற்றும் வழக்குத் தீர்ப்புகளில் இருந்து தெரியவருவதாவது பிணைச் சட்டத்தை அறிமுகப்படுத்தும் போது சட்டவியலாளர்களின் இது தொடர்பான நோக்கமானது குறிப்பிடப்பட்டளவு நடைமுறைப்படுத்தப்படவில்லை. சந்தேக நபர்கள் இச்சட்டம் தொடர்பான நன்மைகளை பெறும் நோக்கிலேயே கொண்டுவரப்பட்டது என்றாலும் அதன்படி சந்தேக நபர்களுக்கு நன்மை தருவதாக அமையவில்லை. ஏனெனில் பிணைச்சட்டத்தின் பிரிவு - 14 ஆனது, ஏனைய பிரிவுகளை மட்டுப்படுத்துவதாகவே காணப்படுகின்றது.

எனினும் இதன் மறுபக்கத்தை பார்க்கும் பொழுது பிரிவு - 14 ஆனது சமூகத்தின் நலனை பாதுகாப்பதில் முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது. நீதித்துறையானது பிணைச் சட்டத்தை பிரயோகிக்கும் போது மிகவும் கவனமாக இருப்பதோடு, தற்துணிவு அதிகாரத்தை பயன்படுத்தும் போது இதற்கான சமநிலையை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டியதாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் நீதி

**அருட்பிரகாசம் நிறோஷன்**
முதல்நிலை ஆண்டு
இலங்கைச் சட்டக் கல்லூரி

தாழை நிழலும்
தலையசைப்பது
தராசு முள் போன்றுதான்
இது...
தமிழர் வரலாறு

வேல் கொண்டு வெற்றிகள் கண்டவனும்
வாள் கொண்டு வரம்புகள் தகர்த்தவனும் - செங்
கோல் கொண்டு வாழ்ந்தது சரித்திரம் - தமிழ்
நூல் கொண்டு சொல்வது சாட்சியம்.

பொதுமறை எழுந்தது
நெறிமுறை புலர்ந்தது
பாட்டளவில் இருந்தது
ஏட்டளவில் வளர்ந்தது
அது இலக்கிய வரலாற்றின்
இரண்டாம் காலம்
சங்கங்கள் மருவிப்போன காலம்

ஐம்பெரும் காப்பியம் சொல்வதும்
அடுத்துவரும் இலக்கியங்கள் சொல்வதும்
கோல் கொண்டால் வரும் பெருமையும்
கோல் கொன்றால் வரும் கொடுமையும்.

'நீதி பிழைத்தோனை அறம் கொல்லும்
நீதியில் நிலைத்தோனை எது வெல்லும்'
இது போன்ற நன்னெறிச் சொல்லும்
தவறாது வாழ்ந்ததாய் வரலாறு சொல்லும்.

தமிழுலகில்... நீதிநெறி
தழைத்ததும் நிலைத்ததும் எங்கே
சிறுபறவை...
எடைநிகரில் தொடை அரிந்த
சிபியின் போதா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைநகர்த்திப் படைநகர்த்திப்
போனபோதும் - எதிரிப்
படைகுறைந்த கோலம் கண்டு
"இன்று போய் நாளை வா" என்ற
இராமனிவன் காலத்திலோ.

சோழனவன்...
கங்கை கொண்டான்
கடாரம் வென்றான்
கவியும் காப்பியமும் கண்டான்
கண்ணிய நெறிதவறா நின்றான்.

பக்கம் சாராத ஆட்சிமுறையில்
பாண்டியனும் வேண்டியோனே
ஆனால்... அவன்
கண்ணியம் ஒருமுறை தவறியது - அவனவை
கண்ணகி கண்களால் கருகியது
"காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என்கணவன்" என்றாள்
கதறினாள் கலங்கினாள்
கதிரவனை நோக்கினாள்
கதிர் அவள் கண்ணுக்குள் எரிந்தது - அவள்
கண்களால் மதுரையே கரிந்தது.

ஆம்... தமிழர் மரபில்
நீதி...
முளைத்தது தளைத்தது
செழித்தது நிலைத்தது
பெருமையாய் மார்தட்டி
"நான் தமிழன்" என்ற நான்
சட்டெனப் பின்வாங்கித் தலை குனிந்தேன்
"நிலைத்ததை" தொலைத்தது நினைத்து!!!

********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சட்டக்கல்லூரி மட்டத்தில் நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றிவாகை சூடியோர் - 2015

## கட்டுரையாக்கம்

முதலாம் இடம் : S. கௌதமி

இரண்டாம் இடம் : S. புராதனி

மூன்றாம் இடம் : S. றொஷானி

## கவிதையாக்கம்

முதலாம் இடம் : S. கஸ்தூரி

இரண்டாம் இடம் : S. றொஷானி

மூன்றாம் இடம் : S. புராதனி

வெற்றியாளர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனிதர் திரு. ஜி. ஜி குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த தங்கப்பதக்கத்திற்கான பேச்சுப் போட்டி - 2015



''தோன்றின் புகழொடுதோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.''

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்குச் சான்றாக வாழ்ந்த மாமனிதர் அமரர் திரு.ஜி. ஜி. குமார் பொன்னம்பலம் அவர்கள் இலங்கைச் சட்ட வரலாற்றிலும், தமிழர்தம் மனங்களிலும் தமக்கெனத் தனியிடம் ஒன்றைப் பெற்றக்கொண்டவர். அவர்தம் நாமத்தில் சட்டக்கல்லூரியின் தமிழ் மாணவர்களின் பேச்சுத்திறனை வெளிக்கொணர்ந்து, அவர்களது ஆற்றலினை அங்கீகரிக்கும் வண்ணம் அமரர் திரு. ஜி. ஜி. குமார் பொன்னம்பலம் அவர்களின் ஞாபகார்த்தப் பேச்சுப் போட்டியானது இலங்கைச் சட்டக்கல்லூரி சட்ட மாணவர் இந்து மகாசபையால் ஆண்டுதோறும் நடாத்தப்படுகின்றது.

அந்தவகையில் இவ்வருடத்திற்கான (2015) பேச்சுப்போட்டியில் வெற்றிவாகைச் சூடிய பேச்சாளர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பெருமித மடைகின்றோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| தங்கப்பதக்கம் | 1ம் | இடம் | - | S. புராதனி |
| வெள்ளிப்பதக்கம் | 2ம் | இடம் | - | A. நிரோஷன் |
| வெண்கலப்பதக்கம் | 3ம் | இடம் | - | S. றொஷானி |
| வெண்கலப்பதக்கம் | 3ம் | இடம் | - | R. சஸ்மிதா |

இப்போட்டிக்கான உதவிகளையும், ஒத்துழைப்பினையும் தொடர்ந்து வழங்கி வருகின்ற Dr. திருமதி. யோ. பொன்னம்பலம் அவர்களுக்கு சட்ட மாணவர் இந்து மகாசபை சார்பாகவும், சட்டக்கல்லூரி மாணவர்கள் சார்பாகவும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனிதர் திரு. ஜி. ஜி குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த பயிலுனருக்கான புலமைப்பரிசில்

அமரர் திரு. ஜி. ஜி. குமார் பொன்னம்பலம் அவர்களின் ஞாபகார்த்த பயிலுனர் ஆண்டு மாணவனுக்கான உயர்கல்விப் புலமைப்பரிசில் 2014 ஆம் ஆண்டு முதல் சட்டமாணவர் இந்து மகா சபையினரால் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சட்டக்கல்லூரியின் மூண்றாண்டுப் பரீட்சையிலும் சிறந்த பெறுபேற்றைப் பெறும் மாணவர் ஒருவருக்கு பயிலுனர் ஆண்டில் உயர்கல்வியைத் தொடர்வதற்கு உதவும் வகையில் இப்புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது. இப்பரிசானது அவரது மனைவி Dr. திருமதி. யோ. பொன்னம்பலம் அவர்களால் வழங்கப்படும்.

## புலமைப்பரிசில் பெறுவதற்கான தகைமைகள்

- விண்ணப்பிப்பவர் இந்து சமயத்தவராய் இருத்தல் வேண்டும்.
- சட்டக்கல்லூரி மூன்றாண்டுப் பரீட்சையிலும் சிறந்த பெறுப்பேற்றினைப் பெற்றிருக்க வேண்டும் (Pass with class)

## புலமைப்பரிசில் தெரிவு

1. விண்ணப்பித்தவர்களில் மூன்று ஆண்டுகளின் சராசரிப்புள்ளிக் கூட்டுத்தொகையில் அதிகூடிய தொகை உடையவருக்கு இப்புலமைப்பரிசில் வழங்கப்படும்.
2. புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்கள் ஒவ்வொரு ஆண்டும் தலைவர் ஊடாக பெரும் பொருளாளர் அவர்களுக்கு சேர்க்கப்படுதல் வேண்டும். பெரும் பொருளாளரும் தலைவரும் சேர்ந்து வெற்றியாளரைத் தெரிவு செய்வர்.


இங்ஙனம்

**Dr. திருமதி. யோ. பொன்னம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. சு. சிறிஸ்கந்தராஜா அவர்களின் ஞாபகார்த்த தங்கப்பதக்கத்திற்கான எழுந்தமான பேச்சுப் போட்டி - 2015



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்கிற்கிணங்க நல் சட்டத்தரணியாய், நீதியரசராய், நானிலம் போற்றும் மாண்புடையவராய் வையத்துள் வாழ்ந்து காட்டிய பெருந்தகைகளில் ஒருவரான அமரர் திரு. சு, சிறிஸ்கந்தராஜா அவர்களின் ஞாபகார்த்தமாக சட்டக்கல்லூரி தமிழ் மாணவர்களின் பேச்சுத் திறனிற்கு மற்றொரு களம் அமைத்துக் கொடுக்கும் வகையில் அமரர் திரு. சு. சிறிஸ்கந்தராஜா அவர்களின் ஞாபகார்த்த எழுந்தமான பேச்சுப் போட்டி கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடமும் நடாத்தப்பட்டது. தொடர்ந்து வரும் காலங்களிலும் இப்பணி செவ்வனே நடைபெறும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில் இவ்வருடத்திற்கான அமரர் திரு. சு. சிறிஸ்கந்தராஜா அவர்களின் ஞாபகார்த்த எழுந்தமானப் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற பேச்சாளர்களுக்கு வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| தங்கப்பதக்கம் | 1ம் இடம் | - | சி. புராதனி |
| வெள்ளிப்பதக்கம் | 2ம் இடம் | - | செ. லலிதாதாஸ் |
| வெண்கலப்பதக்கம் | 3ம் இடம் | - | செ. றொஷானி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுப்பினர் பட்டியல் - 2015

**முதல் நிலையாண்டு**

01. R. மயூரி
02. S. மயூரா ராகவி
03. A. நிரோஷன்
04. N. வாகீசன்
05. T. தர்சிகா
06. A. மதுஞ்சலா
07. M. பிரியந்தி
08. C. சத்துரிகா

**இடைநிலையாண்டு**

09. J. மதுசூதனன்
10. R. தாட்ஷாயினி
11. P. இளமுருகன்
12. K. அஷோக்பரன்
13. T. கோகிலவாணி

**இறுதியாண்டு**

14. T. சந்திரசேகரன்
15. J. பாரதிராஜா
16. T. மதிவதன்
17. K. சதீஸ்வரன்
18. Y. குகதாஸ்
19. T. தர்மஜா
20. M. விந்தியா
21. U. ராகவன்
22. T. நிரோஜனி
23. K. நவநீதன்
24. K. பரமேஸ்வரன்
25. S. ஜனகன்
26. S. கஸ்தூரி
27. A. ராகவன்
28. N. நிரோஷா
29. S. சிவசூரியா
30. A. அருள்செல்வன்
31. S. தணிக்குமார்
32. S. புராதனி
33. S. கௌதமி
34. S. றொஷானி
35. K. உதயகுமார்
36. R. சிந்தூரி
37. S. லலிதாதாஸ் சர்மா
38. R. பிரமிளா
39. A. திவ்யா
40. R. சஸ்மிதா
41. S. கேதீஸ்வரன்
42. N. தயாசீலன்
43. N. மயூரா
44. N. கருணா
45. V. சுபாஸ்கரன்
46. N. நிரஞ்சித்குமார்
47. R. ரமணா
48. A. திலீப்காந்தன்
49. R. கீர்த்தனன்
50. R. ரஜிந்தன்

**பயிலுனர் ஆண்டு**

51. T. சுவஸ்திகா
52. K. ராஜசூரியர்
53. S. சோபிதன்
54. S. தேவகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மகா சபையின் வரலாற்றில் ....

| ஆண்டு | தலைவர் | செயலாளர் | இதழாசிரியர் |
|---|---|---|---|
| 1963 | ஏ.மயில்வாகனம் | ரீ.யோகநாதன் | ........................... |
| 1964 | என்.அருணாச்சலம் | எம்.இகாசி.விஸ்வநாதன் | ........................... |
| 1965 | ஆர்.ஸ்ரீநிவாசன் | பி. சிவலோகநாதன் | ........................... |
| 1966 | சிவா.பாலேந்திரன் | எஸ். என்.ஜீவலோகநாதன் | ........................... |
| 1967 | எம்.திருநாவுக்கரசு | ஏ.வி.கே.நீலகண்டன் | விமல் சொக்கநாதன் |
| 1968 | ஏ.வி.கே.நீலகண்டன் | ஏ.தம்பாபிள்ளை | சு.சி.தவராஜா |
| 1969 | கே.வி.மகாதேவன் | எஸ்.எம்.சண்முகநாதன் | ........................... |
| 1970 | கே.வெற்றிவேல் | கே.கணேசயோகன் | ........................... |
| 1971 | திருமதி.எம்.சின்னத்துரை | எஸ்.பகீரதன் | ........................... |
| 1972 | ஆர்.மாசிலாமணி | செல்வி.சி.சிங்காரம் | ........................... |
| 1973 | கே.ஜெயகிருஷ்ணன் | எஸ்.திருஞானம் | ........................... |
| 1974 | கே.ஜெயகிருஷ்ணன் | எஸ்.திருஞானம் | ........................... |
| 1975 | கே.ஜெயகிருஷ்ணன் | எஸ்.திருஞானம் | ........................... |
| 1976 | கே.நவேந்திரன் | என்.ரஞ்சிதகுமார் | ........................... |
| 1977 | ஆர்.ரீ.விக்னராஜா | வீ. ரீ.சித்தேஸ்வரன் | ........................... |
| 1978 | ........................... | ........................... | ........................... |
| 1979 | ஏ.தெய்வேந்திரன் | எம்.விமலேந்திரன் | ........................... |
| 1980 | எஸ்.விக்கேஸ்வரன் | எஸ்.செல்வமுருகானந்தன் | ........................... |
| 1981 | எஸ்.கணபதிப்பிள்ளை | செல்வி.எஸ்.விஜயரட்ணம் | ........................... |
| 1982 | ........................... | ........................... | ........................... |
| 1983 | ........................... | ........................... | ........................... |
| 1984 | ........................... | ........................... | ........................... |
| 1985 | எஸ்.முத்துலிங்கம் | செல்வி.எஸ்.செல்லையா | ........................... |
| 1986 | ந.ரவிராஜ் | எஸ்.ராஜரட்ணம் | ........................... |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 1987 | எஸ்.துரைராஜா | செல்வி.எஸ்.மாதவராஜா | ........................... |
| 1988 | பாலகுமார் | செல்வி.எஸ்.பாலச்சந்திரன் | ............................ |
| 1989 | என்.சுரேஸ்குமார் | செல்வி.ரீ.சம்பந்தப்பிள்ளை | ........................... |
| 1990 | செல்வி.ரீ.சம்பந்தப்பிள்ளை | ஏ.பிரேம்சங்கர் | ............................ |
| 1991 | செல்வி.எல்.காசிப்பிள்ளை | சி.சிவதாசன் | ............................ |
| 1992 | சி.சிவதாசன் | பெ.ரவீந்திரன் | ........................... |
| 1993 | வி.வி.தேவதாஸ் | எஸ்.குணநாதன் | ............................ |
| 1994 | செல்வி.வி.நடராஜா | சின்னத்துரை மயூரன் | ........................... |
| 1995 | செல்வி.சி.துரைராஜா | செல்வி.எஸ்.மாதவராஜா | ப.பா.கௌதமன் |
| 1996 | செல்வி.சீ.தாமோதிரம்பிள்ளை | செ.பிருந்தவன் | ............................ |
| 1997 | செ.பிருந்தவன் | மோகன் பாலேந்திரன் | ப.பா.கௌதமன் |
| 1998 | ............................ | ப.ச.மௌலீஸ்வரன் | ............................ |
| 1999 | அ.சந்திரவதனி | கு.செல்வேந்திரன் | ந.மதிவதனி |
| 2000 | கு.செல்வேந்திரன் | ந.காண்டீபன் | ............................ |
| 2001 | சி.ஶ்ரீஸ்கந்தராஜா | வா.ஹம்சனனாம்பிகா | பி.கதிர்காமநாதன் |
| 2002 | ரி.சரவணராஜா | ச.ஈசாந்தினி | சி.ஶ்ரீஸ்கந்தராஜா |
| 2003 | ஜெ.ஜெயரூபன் | செ.அனுறஜி | த.ஜனகன் |
| 2004 | செ.அனுறஜி | த.ஜனகன் | பா.பார்த்தீபன் |
| 2005 | வீ.சுபாஜினி | சி.ஜெயதேவி | இரா.அஜந்தினி |
| 2006/ 2007 | மா.தியாகராஜா | கே.மேனகா | செ.நிருஸ்யா<br>அ.வித்தியா |
| 2008 | கே.மேனகா | ந.செல்வரஞ்சனி | இ.பிரியதர்ஷினி<br>அ.சோபா |
| 2009 | சா.அன்புவதனி | க.கலைமதி | இரா.அனுசியா |
| 2010 | அ.சுவாஸ்திகா | த.ஸியாளினி | தே.சுபாஜினி |
| 2011 | இரா.எழில்மொழி | தே.ராதிகா | த.ஸியாளினி |
| 2012 | ந.சுஜீவன் | த.தனுஷன் | தே.ராதிகா |
| 2013 | தி.சுவஸ்திகா | வே.திஷாந்தினி | இ.நளனி |
| 2014 | சி.புராதனி | சி.ஐஸ்வர்யா | பு.கிரிசாந்தன் |
| 2015 | இ.கீர்த்தனன் | இ.ரஜிந்தன் | செ.றொஷானி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் ஆண்டறிக்கை

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் இந்து மகா சபையானது 1963 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு இன்று வரை பல்வேறு தடைகளையும் தாண்டி செயற்பட்டுக்குக் கொண்டிருக்கும் ஒரு தனித்துவமான மாணவ மன்றமாகும்.

அந்த வகையில் இம்மன்றத்தை தாபித்து சிறப்பாகச் செயற்பட வைத்த எமது முன்னோர்களுக்கு மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதோடு, எதிர்காலத்தில் இம்மன்றத்தைச் சிறப்பாக வழி நடத்துபவர்களுக்கும் எமது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சட்ட மாணவர் இந்து மகா சபையின் 2015ம் ஆண்டுக்கான புதிய நிர்வாக உறுப்பினர்களின் தெரிவு 12. 02. 2015 அன்று இடம்பெற்றதோடு 16. 02. 2015 அன்று முறைப்படி கடந்த மன்றத் தலைவரினால் புதிய நிர்வாகக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

எமது மன்றத்தின் வழமையான முதலாவது நிகழ்வான மகா சிவராத்திரி பூஜையானது இவ்வருடம் கொம்பனித் தெரு சிவசுப்பிரமணியம் சுவாமி கோவிலில் 17.02.2015 அன்று மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

இவ்வருடத்திற்கான முதலாவது செயற்குழு கூட்டமானது 24.02.2015 அன்று இடம் பெற்றதோடு கடந்த காலங்களைவிட மன்றத்தின் செயற்பாடுகளை விரிவாக்குவது தொடர்பாக பல்வேறு முடிவுகளும் எடுக்கப்பட்டது.

மேலும் 2015 ஆம் ஆண்டிற்கான முதலாவது வருடாந்த பொதுக்கூட்டமானது 02.03. 2015 அன்று இடம்பெற்றது. இக்கூட்டத்தில் இவ்வருடத்திற்கான செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. இக்கூட்டத்தின் விசேட அம்சம் என்னவெனில் இலங்கை சட்டக்கல்லூரியில் செயற்படும் மாணவ மன்றங்களின் தலைவர்களும், செயலாளர்களும், பிரதிநிதிகளும் கலந்து கொண்டமையாகும்.

சட்ட மாணவர் இந்து மகா சபையினர் 15.03.2015 அன்று இரத்மலானையில் அமைந்துள்ள சக்தி சிறுவர் இல்லத்திற்கு சென்று அங்குள்ள சிறுவர்களுக்கிடையிலான ஆளுமையை வளர்க்கும் நோக்குடன் "மழலைகளுடன் சில மணித்துளிகள்" என்ற தலைப்பில் பேச்சு, பாவோதல், கட்டுரை, கவிதை, சித்திரம், நாடகம் போன்ற பல்வேறு போட்டிகளை நடாத்தி அவர்களை ஊக்குவிக்கும் முகமாக அனைவருக்கும் பரிசில்களையும் வழங்கி மகிழ்வித்தனர்.

மேலும் 24.04.2015 அன்று இலங்கைச் சட்டக்கல்லூரியில் எமது மன்றத்தினால் தமிழ் சிங்கள புதுவருட நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. அத்தோடு எமது மன்றத்தினர் 16.05.2015 அன்று வத்தளையில் அமைந்துள்ள பிரீத்திபுர மாற்றுத் திறனாளிகளின் சிறுவர் இல்லத்திற்கு விஜயத்தை மேற்கொண்டு அங்குள்ள சிறுவர்களுக்குத் தேவையான பொருட்களையும் வழங்கினர்.

சட்டக் கல்லூரி மாணவர்களுக்கிடையிலான கட்டுரைப் போட்டியானது 13.05.2015 அன்றும் கவிதைப்போட்டி 18. 05. 2015 அன்றும் நடாத்தப்பட்டது. மேலும் 28. 05. 2015


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அமரர் திரு. சிறிஸ்கந்தராஜா அவர்களின் ஞாபகார்த்தமாக எழுந்தமானப் பேச்சுப் போட்டி நடாத்தப்பட்டதோடு 10.07.2015 அன்று மாமனிதர் திரு. ஜி. ஜி (குமார்) பொன்னம்பலம் ஞாபகார்த்தப் பேச்சுப் போட்டியும் நடாத்தப்பட்டது. இப்போட்டிகளைச் சிறப்புற நடாத்தி முடிப்பதற்கு நடுவர்களாக கடமையாற்றிய சட்டத்தரணிகள், வைத்தியர்கள், ஊடகவியலாளர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வருடம் எமது மன்றத்திற்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி மிகவும் சிறந்த முறையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 13.06.2015 அன்று நடாத்தி முடிக்கப்பட்ட இலவச சட்ட உதவி கருத்தரங்கைக் குறிப்பிட முடியும்.

மேலும் "நீர் பாய்ச்சும் குழாய்கள் உடுவில் மான்ஸ் த. க பாடசாலை அதிபரின் வேண்டுகோளின் பேரில் பாடசாலைக்கு" வழங்கப்படவுள்ளது. மேலும் வன்னேரிக்குளம் பிரதேசத்திலுள்ள வறிய மாணவர்களின் கல்வி நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்கில் அவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்குவதற்கும் எமது மன்றம் தீர்மானித்துள்ளது.

எமது வருடாந்த முக்கிய நிகழ்வான ''நக்கீரம்'' மலர் வெளியீட்டினை கொழும்பு தமிழ்ச் சங்கம் வெள்ளவத்தையில் மிகவும் எளிமையாக நடாத்துவதில் உவகையடைக்கின்றோம்.

இவ்விழாவினை சிறப்பிக்கும் முகமாக பிரதம விருந்தினராக வருகை தந்த கௌரவ அமைச்சர் திரு. டி. எம். சுவாமிநாதன் மீள்குடியேற்றம், புனர்நிர்மானம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் அவர்களுக்கும், கௌரவ அதிதியாக வருகை தந்த இலங்கைச் சட்டக் கல்லூரியின் அதிபரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான கலாநிதி ஜயதிஸ்ஸ டி. கொஸ்தா அவர்களுக்கும், சிறப்பு அதிதியாக வருகை தந்த ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களுக்கும் எமது இதயம்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இவ்வருடத்திற்கான எமது மன்றத்தின் அனைத்து செயற்பாடுகளுக்கும் ஆசியும் அருளும் வழங்கிய பரம்பொருளுக்கும், எங்களுடன் இவ்வருடம் முழுவதும் இணைந்து கொண்ட நீதிபதிகள், சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள், நடுவர்கள், மாணவர்கள், நண்பர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனுசரனையாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எதிர்காலங்களில் சட்ட மாணவர் இந்து மகா சபையின் செயற்பாடுகள் பல்வேறு வடிவங்களில் புதிய பரிமாணங்களை எடுக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதோடு இவ்வருட எமது வெற்றிக்கு பல வழிகளிலும் உறுதுணையாக இருந்த உங்கள் அனைவருக்கும் மீண்டுமொரு முறை எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி!

**இராமேஸ்வரன் ரஜிதரன்**

பொதுச்செயலாளர்

சட்டமாணவர் இந்து மகா சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ் வருடம் சட்டமாணவர் இந்து மகாசபையின் நிகழ்வுகள்



சிவராத்திரி பூஜையின் போது



சிங்கள தமிழ் புத்தாண்டு நிகழ்ச்சியின் போது



“மழலைகளுடன் சில மணித்துளிகள்”



சட்ட மாணவர்களுக்கிடையிலான போட்டியின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

**ARRUL'S (Pvt) Ltd**

*International Courier & Cargo Service*

அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை


இல. 10, மாநகரசபை புதிய கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P .021-222 3536
Email: arrulspvtltd@gmail.com

72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கலாம்.
தங்க, வைர நகைகள் (GEM & JEWELLERY) இரத்த மாதிரிகள் (Blood Samples) சகல நாடுகளுக்கும் 48 மணி நேரத்தில் ஒப்படைக்கப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*








# Ranga's Beach HUT

**Arugam Bay, Ulle, Pottuvil, Sri Lanka.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

- எம்மையும் சட்டமாணவர் இந்து மகாசபையினையும் நன்றே வழிநடத்திச் சென்ற எல்லாம்வல்ல இறைவனுக்கும்,
- கலைவிழாவும், நக்கீரம் இதழ் வெளியீடும் -2015 ற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு எம் மன்றத்தின் விழாவை சிறப்பித்த கௌரவ அமைச்சர் D.M சுவாமிநாதன் (மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர்) அவர்கட்கும்,
- கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு எம்மைக் கௌரவித்த சட்டக்கல்லூரி அதிபர் கலாநிதி. ஜயதிஸ்ஸ டி கொஸ்தா (ஜனாதிபதி சட்டத்தரணி) அவர்களுக்கும்,
- சிறப்பு அதிதியாய் வருகை தந்து எம்மைப் பெருமைப்படுத்திய கலாநிதி ஆறு திருமுருகன் (தலைவர், ஸ்ரீ துர்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பளை) அவர்கட்கும்,
- இம் மன்றத்தினையும் எம்மையும் சிறப்பாகவும் வழிநடத்திச் செல்கின்ற எம் மன்றத்தின் பெரும் பொருளாளர் திரு.வி.புவிதரன் (சட்டத்தரணி) அவர்களுக்கும்,
- நக்கீரம் இதழுக்கு தம் சீரிய படைப்புக்களைத்தந்துதவிய கட்டுரையாசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும்,
- நக்கீரம் 2015 இதழினை சீர்தூக்கி திறனாய்வினை சிறப்புடன் மேற்கொண்ட ஆய்வாளருக்கும்,
- நக்கீரம் இதழ் வெளியீடும் கலைவிழாவும் சிறப்பாக நடைபெறுவதற்கு நிதியுதியளித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும்,
- எம் விளம்பரதாரர்களுக்கும்,
- எம் மன்ற உறுப்பினர்களுக்கும்,
- இந்து மகாசபையால் நடாத்தப்பட்ட போட்டிகளுக்கு நடு நிலைமை வகித்த நடுவர்களுக்கும் மற்றும் பங்கு பற்றிய மாணவர்களுக்கும்,
- நக்கீரம் - 2015 இதழினை புதுப்பொலிவுடன் அச்சிட்டுத் தந்துதவிய Unie Arts நிறுவனத்தினருக்கும்,
- எங்கள் அழைப்பினை ஏற்று கலைவிழாவிற்கும், நக்கீரம் - 2015 இதழ் வெளியீட்டிற்கும் வருகை தந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும்,
- பல வழிகளிலும் உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும்,
- மற்றும் யாருக்காவது நன்றி கூறத்தவறியிருந்தால் அந்த நல் நெஞ்சத்தாருக்கும்,

சட்டமாணவர் இந்து மகாசபை - 2015 இன் இதயத்திலிருந்து பல கோடி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இந்துவாக வாழ்வோம்! இந்து தர்மம் காப்போம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

சங்கீதா
SANGEETHA AGENT ஏஜன்ட்

**Foriegn Money Transfer**
**World wide Express Courier Service**

வெளிநாட்டுப் பணப்பரிமாற்றம்
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

Tel : 021 222 2525


Fax : 021 222 8546

@ sangeethaagent@gmail.com
412, Hospital Road, Jaffna.


WESTERN UNION WU
பணப்பரிமாற்றம்

DHL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




The Law Students' Hindu Maha Sabha
Sri Lanka Law College

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org